# உலகைத் திருத்திய உத்தமர்கள்

# உலகைத் திருத்திய உத்தமர்கள்

சிந்தனைச் சிற்பி
சி. பி. சிற்றரசு

பூம்புகார் பிரசுரம்
15, மன்னார்சாமி கோவில் தெரு,
சென்னை-600 013.

விலை ரூ. 7-90

பூம்புகார் வெளியீடு எண் : 114.
முதல் பதிப்பு : ஜூன், 1979.
உரிமை : ஆசிரியருக்கே.

---

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600014.

## பதிப்புரை

'ஒருவனை ஞானியாக்குவது அப்புற மிருக்கட்டும், முதலில் அவனை மனிதனுக்க முயற்சிப்போமாக!' என்றார் பிரான்ஸ் நாட்டு சிந்தனையாளர் ரூசோ.

இளமைக் காலந்தொட்டு இந்நாட்டின் நல் வாழ்வுக்காக, மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதற்காக, நாடும் மொழியும் மறுமலர்ச்சிப் பெறவேண்டும் என்பதற் காகத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தவர் திரு சி. பி. சிற்றரசு அவர்கள் ஆவார்கள்.

திரு சி. பி. சி. அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல; மிகச் சிறந்த பேச் சாளரும் ஆவார். மணிக்கணக்கில் மடை திறந்தாற் போல பல கூட்டங்களில் பேசி யிருக்கிறார்.

உலகைத் திருத்திய உத்தமர்கள், உலக மதங்கள், புரட்சி செய்த பேனா வீரர்கள் என்னும் தலைப்புகளில் பல அரிய கருத் துக்களை வெளியிட்டுள்ளார்கள். இந்தக் கட்டுரைகள் நூலாக வெளியிடுவதற்காகவே

அவருடைய கடைசி காலத்தில் எழுதப் பட்டவைகளாகும். இக் கட்டுரைகள் அனைத்தும் இதுவரை பத்திரிகைகளிலோ அல்லது புத்தகமாகவோ வெளிவந்ததில்லை.

தலைப்புவாரியாக அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துள்ளோம். இந் நூல் முதல் தொகுதியாகும். இதைத் தொடர்ந்து இன்னும் சில தொகுதிகள் நூல்களாக வெளிவர உள்ளன.

தமிழக மக்கள் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்களின் நூல்களை எப்போதுமே விரும்பி வரவேற்றுள்ளனர். இந் நூலினை யும் மக்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

—பூம்புகார் பிரசுரம்

# உள்ளே........


| | | பக்கம் |
|---|---|---|
| **உலக மதங்கள்** | | |
| 1. இந்து மதம் | ... | 9 |
| 2. ஜைன மதம் | ... | 13 |
| 3. புத்த மதம் | ... | 24 |
| 4. சீக்கிய மதம் | ... | 39 |
| 5. சோரோஸ்டிரிய மதம் | ... | 43 |
| 6. கிருத்துவ மதம் | ... | 47 |
| 7. யூத மதம் | ... | 56 |
| **புரட்சி செய்த பேனு வீரர்கள்** | | |
| 1. ரூசோ | ... | 64 |
| 2. வால்டேர் | ... | 71 |
| 3. பிரான்சிஸ் பேகன் | ... | 84 |
| 4. எமிலி ஜோலா | ... | 97 |

## உலகைத் திருத்திய உத்தமர்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | சாணக்கியன் | ... | 107 |
| 2. | சன்யாட்சன் | ... | 112 |
| 3. | சாக்ரடீஸ் | ... | 141 |
| 4. | முகமது நபிகள் | ... | 166 |
| 5. | கார்ல் மார்க்ஸ் | ... | 179 |
| 6. | கரிபால்டி | ... | 196 |
| 7. | கலோனல் ஆர். ஜி. இங்கர்சால் | ... | 205 |

# அணிந்துரை

சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்கள் சிறந்த எழுத்தாளர்; சீரிய சொற்பொழிவாளர்; நேரிய அரசியல்வாதி; பழுத்த பட்டறிவாளர்; நல்ல நகைச்சுவையாளர்; வீரமிக்க அறப்போர் வீரர்; பாராட்டுக்குரிய பண்பாளர்; துணிவு மிக்க நிருவாகத் திறமையாளர்; இனிய நண்பர்.

இப்படிப்பட்ட பண்புகள் பலவும் நிரம்பிய நண்பர் சி. பி. சிற்றரசு அவர்களின் சிந்தனையிலிருந்து முகிழ்ந்த சிறந்த சிந்தனைக்கட்டுரைகளைத் தொகுத்துத்தரும் சீரிய பணியினைப் பூம்புகார் வெளியீட்டாளர்கள் மிகச் சிறப்பாகச் செய்துள்ளார்கள்.

சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு அவர்கள், சிந்தனையைத் தூண்டக்கூடிய ஏராளமான நூல்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்கு படித்துத் தேர்ந்தவராவார். சிந்தனையைத் தூண்டும் பேச்சுக்களைப் பேசுவதிலும், கட்டுரைகளை எழுதுவதிலும் அவர் எப்பொழுதுமே வல்லமைபெற்று விளங்கினார்.

சிந்தனைச்சிற்பியின் எழுத்தோவியம் இனிமையாகவும், எளிமையாகவும், அழகாகவும், அருமையாகவும், சுவை நிரம்பியதாகவும், பொருள் பொதிந்ததாகவும், உணர்ச்சி மிக்கதாகவும், எழுச்சியயப்பதாகவும் விளங்கும். அவர் எதையும் தெளிவாகவும் சொல்லுவார்; துணிவோடும் சொல்லுவார்; திட்டமாகவும் சொல்லுவார்.

சமயங்களைப் போற்றுபவராலும், புறக்கணிப்பவராலும், எதிர்ப்பவராலும் அவற்றைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். சிந்தனைச் சிற்பி அவர்கள் இந்துசமயம் - சமண

சமயம் - புத்தசமயம் - சீக்கிய சமயம் - சோரோத்திரிய சமயம் - கிருத்துவ சமயம் - யூத சமயம் ஆகிய ஏழு சமயங்களின் வரலாற்றையும், அவற்றின் கொள்கைக் கோட்பாடுகளையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார்.

உலகிலே புரட்சிசெய்த பேறு வீரர்களான ரூசோ - வால்டேர் - பிரான்ஸிஸ்பேகன் - எமிலிஜோலா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றினைத் தெளிவாகவும், எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய முறையிலும் எழுதியுள்ளார். அவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

உலகைத் திருத்திய உத்தமர்கள் என்ற பட்டியலில் சாணக்கியன் - சன்யாட்சன் - சாக்ரடீஸ் - முகம்மது நபிகள் - காரல்மார்க்ஸ் - கரிபால்டி - கலோனல் ஆர். ஜீ. இங்கர்சால் ஆகியோரை இணைத்து, அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களை விளக்கமாகத் தந்துள்ளார்.

பல அரிய உண்மைகளையும், சீரிய நிகழ்ச்சிகளையும், சிறந்த கொள்கைகளையும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் எல்லோர்க்கும் பெரிதும் பயன்படுவதாகும்.

நூலை அழகாகவும், நல்ல முறையிலும் வெளியிட்டுள்ள பூம்புகார் வெளியீட்டாளர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவர்களின் இப்படிப்பட்ட முயற்சிகள் மேலும் மேலும் வளர்வனவாக! பலரும் இந்த நூலைப் படித்தறிந்து பயன் பெறுவார்களாக!

சென்னை-18
6-4-'79

இரா. நெடுஞ்செழியன்

# 1

## இந்து மதம்

மிகப் பழைய நாகரிகம் இயற்கையின் உதவியால் அமைக்கப்பட்டது. நைல் நதிக்கரையில் மிக்க வல்லமை வாய்ந்த அரசு ஒன்று இருந்தது. யுப்ரடீஸ்—டைக்ரீஸ் என்ற இரு ஆற்றோரங்களில் செமிடிக் என்ற இனத்தார் வாழ்ந்தனர். சிந்து சமவெளியில் மிகப் புராதனமான நாகரிகம் ஒன்று வளர்க்கப் பட்டது. அதை வளர்த்தவர்கள் ஆரியர் எனப்பட்டனர்.

மிகப்பழைய இந்து மதக் கோட்பாடுகளும் கொள்கைகளும் எழுதி வைக்கப்படாமல் மக்களின் நினைவாற்றல் மூலமே தலை முறை தலைமுறையாகக் காப்பாற்றப்பட்டு வந்தன.

அவை கி. மு. 2900 மொஹஞ்சதாரோ காலம் முதல், இன்றைய காந்தியார் காலம் வரையில் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆரியர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள் என்று கேட்கலாம். காஸ்பியன் கடல் பகுதியிலிருந்து வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. பாபிலோனியர்களை முந்திக் கொண்டு வேத ஆரியர்கள் சிந்து சமவெளிக்கு வந்தார்கள். அவர்கள் குடியேறியவர்கள்; உடல் வன்மை பெற்றவர்கள். வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அனுபவித்துவிட வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள். முதலில் விவசாயம் செய்து, படிப்படியாக வட இந்தியாவில் சிறுசிறு ஆட்சியை அமைத்தார்கள். இவர்கள் ஆட்சி, பஞ்சாபிலிருந்து கங்கை சமவெளி வரையிலும் பரவி, பிறகு வடக்கே காசிமுதல் பீகா வரை ஆரியர்கள் ஆதிக்கத்தில் வந்தன.

வேத காலம் கி. மு. 2000–1000 இந்த காலத்தில்தான் அங்கு வாழ்ந்திருந்த ஆதி குடிகளை விரட்டியடித்தனர். பதினாலாவது நூற்றாண்டு வரை கங்கைக் கரையில் பல அரசுகளை நிறுவினார்கள்.

இந்துமதம் என்பது எந்தத் தனிமனிதனாலும் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. அதனுடைய கொள்கைகள் எந்த கூட்டத்தாலும் ஆராய்ந்து எழுதப்பட்டவை அல்ல. வேதங்கள் அதன் மையமாக இருந்தன. பழைய ரிஷிகள், உபநிஷத்துக்களைச் சொல்லி, அதுவே ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்று முடிவு செய்யப்பட்டது. இந்த மாதிரிதான் வழிபடவேண்டும் என்ற வரையறையுமில்லை. ருக் வேதம், 'உண்மை ஒன்றே—அது எந்த பெயராலும் அழைக்கலாம். பசுக்கள் எந்த நிறமாயிருந்தாலும் பால் வெள்ளையாக இருப்பதைப்போல்' என்கின்றது.

ஆறு தலைப்புக்களைக் கொண்டது:— 1. சுருதி, 2. சிமிரிதி, 3. இதிகாசம், 4. புராணம். 5. ஆகமம், 6. தரிசனம், ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கைத் தவிர வேறு எதனையும் அவர்கள் வாழ்ந்த பழைய இடத்திலிருந்துகொண்டு வரவில்லை. பிரம்மனின் முகத்திலே பிறந்தவன் பார்ப்பனன் என்றும், மார்பில் பிறந்தவன் சத்திரியன் என்றும், வயிற்றில் பிறந்தவன் வைசியன் என்றும், காலில் பிறந்தவன் சூத்திரன் என்றும், பார்ப்பனன் கூலி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் சூத்திரன் வேலை செய்யக் கடமைப்பட்டவன் என்றும், பிராம்மணப் பெண்ணை ஒரு சூத்திரன் கெடுத்துவிட்டால் அவன் உயிர் நிலையை அறுக்க வேண்டும் என்றும், ஒருசூத்திரப் பெண்ணை பிராமணன் கெடுத்துவிட்டால் அவன் உச்சிக் குடுமியை அறுத்துவிட்டால் போதும் என்றும் எழுதி வைத்துவிட்டார்கள். தீண்டாமையை நுழைத்தவர்கள்; கோயிலுக்குள் நுழையாதே என்றார்கள். பொதுக் குளங்களில், கிணறுகளில், தண்ணீர் எடுக்கக்கூடாதென்றார்கள். அக்ரகாரத்தில் நுழையும்போது மேல் வேட்டியோ காலணியோ இருக்கக் கூடாதென்றவர்கள் இந்த ஆரியர்கள்தான். இவர்களால்

உண்டாக்கப்பட்டதுதான் இந்து மதம் என்று திட்டவட்ட மாகச் சொல்லலாம்; இஸ்லாம் மதத்தைப் பலர் தழுவியதற் கும், கிருத்துவ மதத்தைத் தழுவியதற்கும் இவர்கள் செய்த கொடுமைதான் காரணம் என்றால் மிகையாகாது. இன்னும் இந்தக் கொடுமைகள் ஒழியாமல் தஞ்சை போன்ற சில மாவட்டங்களில் இருக்கக் காண்கிறோம்.

இந்து மதக் கடவுள் யார்? என்றால் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பெத்தெண்ணாயிரம் ரிஷிகள், பட்ச கின்னர' கிம்புருடர் என்கின்றனர். இந்து மதக் கடவுள் செய்த லீலைகளால் மக்களின் பொது ஒழுக்கம் வளரவில்லை; மாறாகக் கெட்டுவிட்டது. கோயில்களில் செதுக்கி வைத்திருக்கிற சிற்பங்கள் காணச் சகிக்கக்கூடியதாயில்லை. இதுதான் இந்து மதம்.

## கீதை

மகாபாரதத்தில் போர்க்காலத்தில் எதிரில் நிற்கும் பாட்டனையும், பங்காளியையும் கொல்ல அஞ்சுகிறான் அர்ச்சுனன். அவன் தேரை ஓட்டுகிறான் கண்ணன். "ஏன் மயங்குகிறாய் அர்ச்சுனா, வில்லை எடு, நாணேற்று, அம்பைத் தொடு, அவர்களைக் குறி வைத்துவிடு. நீ அவர்களைக் கொல்வ தாக நினைத்துப் பயப்படுகிறாய். நீ அவர்களைக் கொல்ல முடியாது. ஆன்மா அழிவற்றது. அவர்கள் உடலைத்தான் நீ வீழ்த்த முடியும், கொல்லு" என்றான். கண்ணன் சொன்னபடி அருச்சுனன் செய்தான்; பாரதப்போர் முடிந்தது.

இதையே உதாரணமாக வைத்துக் கொண்டு, ஒரு கொலைக்காரனுக்காக வாதாடும் வழக்கறிஞர், "நீதிபதியவர் களே, எவன் இந்த வழக்கில் கொலைகாரனாக நிற்கிறானோ அவனுக்காக ஆஜராயிருக்கின்றேன். தாங்கள் பகவத் கீதையைப் படித்திருப்பீர்கள். அதில் அர்ச்சுனனால் அம்பெய் யப்பட்ட எதிரிகளின் ஆன்மாவுக்கு அழிவில்லை. உடலுக்குத் தான் அழிவு என்று கண்ணன் சொன்னதைத் தாங்கள் படித்

திருப்பீர்கள். ஆகவே, அதை நாம் ஒப்புக் கொள்வதாக இருந்தால், என்கட்சிக்காரனால் கொலைசெய்யப்பட்டவனின் ஆன்மாவுக்கு அழிவில்லை. உடலுக்குத்தான் அழிவு. ஆகவே மன்னித்து விடுங்கள்" என்று கேட்கின்றார் வழக்கறிஞர்.

நீதிபதி, "வழக்கறிஞரே! உமது வாதத்தையும் மேற்கோளையும் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். ஆகவே இந்த கொலைகாரனைத் தூக்கில் போடுகிறேன். அவன் உடல்தான் அழியுமே தவிர அவன் ஆன்மாவுக்கு அழிவில்லை" என்று நீதிபதி தீர்ப்பு கூறினால், பகவத் கீதை என்னவாகும். தன் எதிரில் தன் மனைவியை மாற்றான் அவையில் மானபங்கம் செய்வதைப் பார்த்துப் பொறுமையாயிருப்பது என்ன பொறுமையோ? (பாரதம்)

★

# 2

## ஜைன மதம்

**கி. மு.** ஐந்தாம் நூற்றுண்டில் இந்தியாவில் நிலவிய பெரு மதங்களில் ஒன்றுகிய ஜைன மதம் விருஷபநாதர் அல்லது ஆதிநாதர் என்பவரால் உருவாக்கப்பட்டு, வர்த்தமானரால் வளர்க்கப்பட்டது.

இந்திய துணைக்கண்டம் பல ராஜ்யங்களாகப் பிரிந்து பல சிற்றரசர்கள் பேரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவற்றில் மகத ராஜ்ஜியம் ஒன்று. அதில் வைசாலி என்ற பகுதியில் வாழ்ந்த க்ஷத்திரியர் தலைவன் சித்தார்த்தன் என்பவனுக்கும், திரிசாலை என்பவளுக்கும் கி. மு. 599ல் பிறந்தவர் வர்த்தமானர். அவர் பிறந்த சமயம் நாட்டில் நல்ல மழை பெய்து, பயிர் பச்சைகள் செழித்து, விவசாயம், வியாபாரம் பெருகியதால் 'விருத்தி' அல்லது சுபிட்சத்தைக் கொண்டு வந்தவன் என்ற காரணத்தைக் கொண்டு வர்த்தமானன் என்று அவருக்குப் பெயரிட்டார்கள்.

நல்ல உடற்கட்டு, வீரம், தைரியம், கம்பீரம் ஆகிய லட்சணங்களுடன் வளர்ந்த வர்த்தமானன், 13வது வயதில் யசோதா என்ற பெண்ணை மணந்து பல ஆண்டுகள் இல்லறம் நடத்திய பின், பிரியதரிசினி என்ற பெண்ணுக்குத் தந்தை யானுர். அப் பெண்ணின் கணவன் பிற்காலத்தில் இவருடைய மதபோதனைகளைத் 'தொடர்ந்து செய்ததாகக் கூறப்படுகிறது.

இளமை முதல் உள்ளத்தில் உறுத்திக்கொண்டிருந்த ஆத்மீக உணர்வு பெருகி, உலக பந்தங்களிலிருந்து விடுதலை பெற வழிதேடி இல்லறத்தைத் துறந்து வெளியேறினுர்.

அவர் தோன்றிய நய வம்சத்தில் இவருக்கு முன்பு இரண்டு நூற்றாண்டுகளாக பல தீர்த்தங்கரர்கள்—தத்துவ போதகர்கள் வாழ்ந்ததாக வரலாறு இருக்கிறது. அவர்கள் போதனையின் வழியிலே வர்த்தமானர் தன் ஆன்மீக பயணத்தைத் தொடர்ந்தார்.

கடுமையான கட்டுப்பாட்டுடன் துறவி வாழ்க்கையை மேற்கொண்டு, ஊர் ஊராகவும், மலை காடுகளிலும் அலைந்து கடைசியில், தாம் புறப்பட்ட 13ம் ஆண்டில் ஒரு வைகாசிமாதம் ஆலமரத்தினடியில் அமர்ந்து, ஞானம் பெறுமல் எழமாட்டேன் என்ற வைராக்கியத்தோடு இருந்தபோது 'கேவல ஞானம்' என்ற மெய்ப்பொருள் உணர்வைப் பெற்றார்.

கர்ம வினையை வென்றவர் என்பதால் 'ஜைனர்' என்ற பெயர் பெற்றார். இவர் ஜைனரானபின் போதித்த கருத்துக்கள் மதக்கொள்கையானதால் அது ஜைன மதம் என்ற பெயர் பெற்றது.

இந்த மதக் கொள்கைகளை அவ்வப்போது உலகிலே பரவச் செய்யும் பொருட்டு, தீர்த்தங்கரர்கள் என்னும் வழிகாட்டும் பெரியோர்கள் தோன்றுகிறார்கள் என்று அவர்கள் கருத்து. இதுவரை இருபத்திநான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றியுள்ளதாகக் கூறினாலும், அது சர்ச்சைக்கிடமாகி கடைசியில் வந்த பார்சவநாதர், வர்த்தமானர்தான் இம் மதத்தை ஸ்தாபித்தவர்கள் என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.

23வது தீர்த்தங்கரர் பார்சுவநாதர் கி. மு. 8ம் நூற்றாண்டில் இருந்தவர். இவருக்குப் பின் 250 ஆண்டுகள் கழித்து வர்த்தமானர் வாழ்ந்திருக்கிறார். இவர் காலத்திலேயே புத்தரும் இருந்திருப்பதாகக் கொள்ளலாம். மகாவீரர் வயதில் மூத்தவர்.

வர்த்தமானர் 'கேவல ஞானம்' பெற்ற ஓராண்டு கழிந்து தீர்த்தங்கரர் ஆனார். இறுதியில் பாட்னா ஜில்லாவில் பாவபுரி என்ற கிராமத்தில் தனது 72வது வயதில் காலமானார். இறப்பதற்கு முன் 55 பேருரைகளை ஆற்றினார். கர்மா என்பதன் பொருளையும் அதன் விளைவுகளையும் விவரித்தார்.

வர்த்தமானர் தன் வைராக்கிய சித்தத்தால், பொறுமை குணத்தால், உற்ற நோய் பொறுத்து, உயிர்க்கு ஊறு செய்யாத தவத்தால் பல பெரும் சோதனைகளைக் கடந்து, ஐம்புலன்களையும் வென்று வாகைசூடியதால் 'மகா வீரர்' என்ற பெயர் பெற்றார்.

ஆண்களும் பெண்களும் அவருடைய கொள்கையைத் தழுவி ஒழுகினார்கள். ஜைன துறவிகளுக்கான நியதிகளில் விசித்திரமானது 'திகம்பர நிலை'என்ற நிர்வாணகோலத்தோடு உலவுவது. எந்த உடைமையிலும் அவா பிறக்காமல் இருப்பதற்காக இம்முறை கடைபிடிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள்.

புத்தம், ஜைனம் ஆகிய இரண்டிற்கும் அதிக வேறுபாடில்லையாயினும், புத்தமதம் மீண்டும் பிறவாமைக்கு வழி சொல்வதாகவும், ஜைனம் இந்த வாழ்வையே குறைத்துக் கொண்டு விடுதலை பெறவேண்டுமென்று கூறுவதாகவும் இருக்கின்றன. ஒருவன் ஆசையை—ஐம்புலன்களின் வேட்கையை அவித்து மதக் கட்டுப்பாட்டுடன் ஒழுக இயலாவிட்டால் தற்கொலை செய்துகொண்டு வாழ்வை முடித்துக்கொள்ள ஜைன மதம் அனுமதிக்கிறது.

ஜைன மதத்தின் அடிப்படைக் கொள்கைகள்:
1. அகிம்சை—'அகிம்சா பரமோ தர்ம'—இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல்.

2. வாய்மை—சத்தியம், பொய்யாமை, தீமை பயக்கும் சொற்களைச் சொல்லாமை.

3. கள்ளாமை (திருடாதிருத்தல்), எந்த அற்பமான பொருளாக இருந்தாலும் அதற்குரியவர் கொடுத்தாலன்றி எடுத்துக் கொள்ள மனதாலும் நினையாதிருப்பது.

4. பிரமசரியம்—அதாவது புணர்ச்சி விழையாமை, சிற்றின்பத்தை, மனம் வாக்கு காயங்களால் செய்யாதிருத்தல். (சிலர் சதிபதிகள் ஒழுங்கு மீறாமல் நேர்மையுடன் வாழ்தல் என்றும் கூறுகிறார்கள்)

5. அவா அறுத்தல், முற்றத் துறத்தல், தன்பொருளையும் பொருள்மேல் பற்றையும் துறத்தல். இதை பரிக்கிரக தியாகம் என்பர்.

"எஞ்ஞான்றும் அவா அப்பிறப்பீனும் வித்து"—குறள் 361

கடவுள்தான் இவ்வுலகைப் படைத்து ஆள்கிறார் என்ற கொள்கையை மறுப்பது ஜைனம். உலகம் அணுக்களின் சேர்க்கையால் தோன்றி, உழன்று வாழ்வதாகவும், அணுக்கள் உள்ளவரை உலகம் அழியாது என்பதும் அவர்கள் வாதம்.

ஆறு பொருள்களின் சேர்க்கை உலகம். காலம், இடம் பொருள், ஆன்மா, இயக்கம், இயக்கமின்மை என்பன அவை அவர்கள் கூற்றுப்படி உலகம் இரு பகுதியானது. உணர்வுள்ளன—உணர்வற்றவை.

வர்த்தமானரின் உபதேசம்:

"எல்லா ஜீவன்களும் கர்மம் அல்லது வினையின் பாரத்தோடு பிறக்கின்றன. ஆகவே பலமுறை பிறந்து, இறந்து அந்த வினையின் பயனை அனுபவித்துத் தீர்க்கவேண்டியதிருக்கிறது. சம்சாரம் அல்லது இந்த உலக வாழ்வு துன்பம் நிறைந்தது. கேவல ஞானம் எய்தினவர்க்கே பேரின்பம் சித்திக்கும். நல்லெண்ணம், நற்செயல், நற்சொல் இவையே மேலான நிலையை அளிக்கும். தீய எண்ணம், தீய சொல், தீய செயல் இவை இழி நிலைக்குக் கொண்டுவிடும். தன்னடக்கம் வாழ்வில் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதி அப்போதுதான் அரசனோ, தெய்வமோ, முந்திய வினையோ நம்மைப் பாதிக்க முடியாது. நிர்வாண நிலை எய்தினவர்க்கு மூப்பு, பிணி, சாவு எதுவும் இல்லை. என்னதான் வேண்டினாலும் சடங்குகளும், அர்த்தமற்ற யாக யக்ஞங்களும் செய்தாலும் இன்பத்தில் மூழ்கித் திளைத்தாலும் அந்த நிலையை அடைய முடியாது. அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், அபரிக்கிரகம் இவையே நிர்வாணம் எய்தும் சாதனங்கள், எல்லையற்ற பேரின்பமாகிய நிர்வாண நிலை அடையும் வழியைத்

துன்பம், கடுந்தவம் நிறைந்த கத்தியின் குறுகிய கூரி முனையில் நடப்பதாகவே கருதவேண்டும்.

எண்ண முடியாத அளவில் ஜீவராசிகள் உலகில் வாழ்கின்றன. அவை இரண்டாகும். 1. விடுதலை பெற்ற ஜீவன்கள். 2. விடுதலை பெறுமல் மீண்டும் மீண்டும் கர்ம வினைகளினுல் ஜனித்துக்கொண்டிருக்கும் ஜீவன்கள். கர்மவினைப் பயனோடு உள்ள ஜீவன்கள். ஜடம், ஜங்கமம், என்பன. ஜடப்பொருள்கள் ஸ்பரிச உணர்ச்சிக்காவன. நிலம், நீர், நெருப்பு, காற்று, தாவரங்கள் யாவும் ஆகும். ஓரறிவு முதல் ஐயறிவு வரை உள்ள உயிர்ப் பொருள்கள் அசைவனவற்றில் வரும்.

ஞான நிலையின் படிகள்: 1. மதி ஞானம்—ஐம்புலன்களைக் கொண்டு ஆராய்ந்து அறிதல் 2. சுருதி ஞானம்—கல்வி கேள்விகளால் தெளிவது 3. அவதி ஞானம்—குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை அனுபவித்த நிலையில் அறிவு பெறுவது. 4.. மனபர்யாய ஞானம் —அறிவு பெறத் தடையாக உள்ளன என்று மற்றவர்கள் கண்டதை உணர்தல். 5. கேவல ஞானம்—தூய்மையும் மேன்மையுமான நிர்வாண நிலைக்கு வழிகாட்டும் மெய்ஞானம்.

உண்மையான தத்துவத்தின் அடிப்படையாக ஒன்பது நிலைகளைச் சொல்கிறுர்கள். 1. ஆன்மா 2. ஆன்மா அற்றவை 3. தன்மை 4. தன்மையற்றவை 5. தன்மைக்கான காரணம் 6. புறப்பொருள் உட்புகாமை 7. கர்மாக்களால் கட்டுண்டல் 8. கர்மாவை அழித்தல் 9. சகல கர்மாவிலிருந்தும் ஆன்ம விடுதலை எய்துதல்.

ஆன்மா: பலதரப்பட்ட காரியங்களைச் செய்கிறது. அக்காரியங்களின் பலனை அடைகிறது. மாறிமாறி சுழன்று வருகிறது.

ஜீவனின் சாரம் சித்தத்தில் இருவகையாகப் பரிணமிப்பது. தரிசனம், புத்தி என்பவை அவை. ஆன்மா அற்றவை ரூபமுள்ளது, அரூபமானது ஆகும். அரூபமானவை நான்காகப் பிரிகிறது. புண்ணியம் என்பது நல்ல காரியங்களினுல் உண்

டாவது; நன்மை செய்வது. பாவம் என்பது ஒழுக்கமின்மை யின் மிகுதி.

வன்முறையை முக்கியக் குற்றமாகக் கருதினாலும் மேற் கொண்டு பதினேழு நியதிகள் கண்டிக்கப்படுகின்றன. 1. பொய்மை 2. ஒழுக்கின்மை 3. கற்பின்மை 4. ஏய்த்தல் 5. கோபம் 6. அகந்தை 7. கபடம் 8. லோபித்தனம் 9. பொறாமை 10. பிரியம் (பொருள் அல்லது மனிதரிடம்) 11. பகைமை, வெறுப்பு 12. கலவரத்தன்மை, அடாபிடித்தனம் 13. கோள் சொல்லுதல் 14. புறங்கூறல்—தந்திரமாகத் தாக்குதல் 15. குற்றஞ் சொல்லல் 16. தன்னடக்கமின்மை 17. தவறான கொள்கையில் நம்பிக்கை இவையாவும் பாவமாகக் கொள்ளப் படும்.

ஜைனர்கள் போற்றவேண்டிய மூன்று ரத்தினங்கள் என்று சொல்லப் படுபவையாவன: நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம்.

ஜைன மத நம்பிக்கையில் ஆர்வம் கொண்ட பிம்பிசாரன் என்ற மன்னன், 'ஜைன சங்கத்தில் சேர்ந்து ஒருவர் துறவறம் ஏற்றால், அவரின் உற்றார் உறவினரை ஆதரிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்' என்று பறை அறிவித்தான். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் குடும்பக் கவலை விட்ட தென்று ஜைன மதத்தில் சேர்ந்தார்கள் என்று வரலாறு கூறு கிறது. ஜைனமதம் விரிவடைந்ததற்கு இதுபோன்ற செயல் கள் ஊக்குவித்திருக்கின்றன.

பிம்பிசாரனும் ஜைனனாக விரும்பிக் கேட்டபோது, அவனுக்கு முதலில் ஐந்து குற்றங்களை நிக்கிவிட்டு வரும்படி சொல்கிறார். "என்னுடைய உபதேசங்களில் அவநம்பிக்கை கூடாது. கர்மம் அல்லது வினை, நிர்வாணத்தைப் பற்றிய சந்தேகம் கூடாது. தங்களைத் தெய்வமாகச் சொல்லிக் கொள்ளும் கள்ளத் துறவிகள், போலி மதாசாரியர்களைப் புகழக் கூடாது. தீயவர்களோடு பழகக் கூடாது. இத்துடன் பன்னிரண்டு விரதங்களை மேற்கொள்ளவும் சொல்

கிறார்கள். அவை: 1. ஓரறிவுக்கு மேற்பட்ட எந்த ஜீவனையும் அழிக்கக் கூடாது, அரசர்களைப் பொறுத்தமட்டில் மக்களைக் காக்கப் போர் செய்யலாம். 2. பொய் சொல்லக்கூடாது. 3. பிறர் பொருளை விரும்பக்கூடாது 4. விவாக காலத்தில் கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடாது 5. வீடு நிலபுலன், பொன் பொருள்களை நம் அந்தஸ்துக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது. 6. புலால், போதைப் பொருள்களை உண்ணக்கூடாது 7. பயனுள்ள ஆராய்ச்சியிலும் தியானத்தி லும் மனதைச் செலுத்தவேண்டும், தேவையான இடங்களுக் குப் பிரயாணம் செய்யலாம். 8. பிறருக்குத் தீங்கு நினைக்கக் கூடாது 9. தீய சொல், தீய எண்ணம் கூடாது 10. விஷம், போதைப் பொருள்களை பிறர் கைக்குக் கிடைக்கும்படி வைக்கக் கூடாது 11. சிரமணர்களுக்கு உணவும், நீரும், புத்தகமும் கொடுத்து உதவவேண்டும். 12. பிற எல்லா வழி களிலும் துணையாக இருக்கவேண்டும்.

வெளிவேஷங்களை வெறுத்த வர்த்தமானவர் கூறுகிறார்: தலையை மொட்டையாக்குவதால் சிரவணனாகிவிட முடியாது. பூணூல் போட்டவன் எல்லாம் பிராமணன் அல்லன், பேசா மல் இருந்தால் முனிவனாகிவிடமாட்டான். மரவுரி தரிப்ப தால் தவசியாகிவிட முடியாது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தினால்தான் சிரவணன் ஆவான். அகிம்சை, கல்வி, பிரம்மச்சரியம் இவைகளைக் கடைப்பிடிப்பதால் பிராமணன் ஆகிறான். ஞானம், கருணை இவற்றால் முனிவனா கிறான். பற்றை ஒழிப்பவன் தவசியாகிறான். ஆகவே ஜாதி பிறப்பினால் வருவதல்ல; செய்கைதான் காரணம்.

இயற்கை வாழ்வு வாழ்ந்த மகாவீரர், இயற்கை பொருள் களிலிருந்து தாம் அறிந்துகொண்டதாகக் கூறும் தத்துவங்கள் உணர்ந்து இன்புறத்தக்கவையாக உள்ளன.

"பூமியினிடமிருந்து பொறுமையும், மன்னிக்கும் இயல்பை யும் தெரிந்துகொண்டேன். காற்றிலிருந்து எல்லாப் பொருள் களோடும் அவைகளின் தன்மைக்கேற்றபடி கலந்து பழகக் கற்றுக்கொண்டேன். நெருப்பிலிருந்து பாவத்தையும், தீய

எண்ணங்களையும், சொல் செயல் ஆகியவற்றைப் போசுக்கக் கற்றேன். நீரிடமிருந்து அது சளைக்காமல் மெல்ல மெல்லக் கல்லையும் கரைத்துவிடுவது போல், விடா முயற்சியினால் பழையவினையை அற்றுப் போகும்படி செய்யத் தெரிந்து கொண்டேன். தன்னடியில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும் நிலையாக விளங்கும் ஆகாயத்திலிருந்து உலகம் மாறினாலும் கொண்ட கொள்கையை விடாமல் கடைப்பிடிக்கக் கற்றுக் கொண்டேன். சூரியனிடமிருந்து தீமைக்குப் பதில் நன்மை புரியவும், எல்லோரையும் சமமாகப் பாவிக்கும் தன்மையை உணர்ந்தேன். கடல் நீரை உறிஞ்சி மழை நீராகத் தரும் சூரியனின் தன்மை அதுவே. சந்திரன் தேய்ந்து வளர்ந்து கிரகணத்தில் மறைவதிலிருந்து செல்வம் வருவதையும் போவதையும், அவ்வப்போது வரும் இன்னல்களையும் பொருட்படுத்தாத தன்மையை அறிந்தேன். மேகத்திடமிருந்து கபடில்லாமல் மழை பொழிவதுபோல் தாராள மனத்தோடு இருக்கக் கற்றேன். நல்ல பாம்பிடமிருந்து சொந்த வீடு வாசல் இல்லாமல் எந்த இடம் கிடைத்தாலும் இருக்கப் பழகிக் கொண்டேன். மலைப் பாம்பிடமிருந்து உணவைத் தேடி அலையாமல் தானாகக் கைக்குக் கிடைத்ததைக் கொண்டு வாழத் தெரிந்துகொண்டேன். புறாவிடமிருந்து அதிகமாகப் பாசம் வைத்தால் சம்சார வலைக்குள்தான் சிக்குவோம்' ஆகவே அது கூடாது என்று தெரிந்துகொண்டேன். தண்ணீர் வற்றுவதைப் பற்றியோ வெளிநீர் வந்து நிரம்புவதைப் பற்றியோ கவலைப்படாத கடலிலிருந்தும் எதையும் பாராட்டாமல் இருக்கக் கற்றேன். லட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் போய்க்கொண்டேயிருக்கத்தான் வேண்டுமென்பதை நிற்காமல் ஓடிப்பாயும் ஆற்றிடம் தெரிந்துகொண்டேன். கானல் நீரிடமிருந்து வாழ்வு பொய்யானது என்பதையும், புல் பூண்டு வளர்ந்து அழிவதைப் பார்த்து வாழ்வு நிலையற்றது என்பதையும் அறிந்தேன். தன்னை வெட்டுபவனுக்கு நிழல் கொடுத்து உதவும் மரத்தைப் போல தன்னை வெட்ட உபயோகிக்கும் கோடலிக்குக் காம்பாகவும் உதவும் மரத்தைப் போல பெருந்தன்மையுடன் இருக்கத் தெரிந்துகொண்டேன்."

"விருப்பு என்பது நரகத்துக்கு விரைவாக இட்டுச் செல்லும் கப்பலின் பாய்மரச் சீலை. கோபமே அதை உந்தும் காற்று; பேராசையே அதனைச் செலுத்தும் சுக்கான்.

ஆத்மா : பொன், மண்ணில் கலந்து|சுரங்கத்தில் கிடப்பது போல ஆத்மா முதலில் மிகுதியாகவோ ஓரளவுக்கோ அசுத்த மானதாகவே இருக்கிறது. ஆனால் தவம், தியானம் நற் கொள்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் இவைகளை மேற்கொள் வதால் அசுத்தம் கலந்த பொன் உருகி தங்கமாவது போல் ஆத்மா பரிசுத்தமாகிறது.

நம் கையில் ஒன்றுமில்லை, விதிதான் நம்மை ஆட்டி வைக் கிறது என்ற வாதம் பொய்யானது.

உலகம் என்று ஒன்றிருக்கிறது என்று நம்புங்கள். மாயா வாதிகள் அது வெறும் மாயை என்று சொல்வதை நம்பாதீர் கள். ஜீவன், அஜீவன் இரண்டுமே உண்டு. தருமம், அதருமம் உண்டு. ஆனால் அவை நம்மை வெவ்வேறு வழிக்கு இட்டுச் செல்லும் என்பதை நம்புங்கள். தன் முயற்சியினால்தான் மனிதன் நிறைவு எய்த முடியும் என்பதை நம்புங்கள்.

பிரமசரியம் என்றால் சதிபதிகள் பரஸ்பரம் நெறி தவறா மல் நேர்மையாக நடந்து கொள்ளுதல் ஆகும்.

பெருவெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது இடையில் ஒரு திட்டு அழியாமல் இருந்து அடைக்கலம் அளிப்பது போல், நல்லவர்கள் துன்புற்ற ஜீவன்களுக்கு ஆதரவு அளிப்பவர்கள்.

மகாவீரரின் உபதேசங்கள் நூற்றுக்கணக்கான சீடர் களால் நாடெங்கும் பரவியது. அரசர்கள், பிரபுக்கள், குறுநில வேந்தர்கள் யாவரும் அம்மதத்தைப் பின்பற்றியதால் அரச அதிகார செல்வாக்குடன் அம் மதம் விரிந்தது. அப்படி வளர்த்த மதம் பிற்காலத்தில் அருகிக் குறுகியதற்குக் காரணம் பலவாக வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்: அம்மதத்தின் கோட்பாடுகள் பாமர மக்களினால் ஏற்று ஒழுக முடியாதபடி கடுமையாக இருப்பதையும், இல்வாழ்க்கை மேற்கொண்டு


வாழ விரும்பும் மக்கள், முழுத் துறவு நிலையை விரும்பாததாலும், அம்மதத்திற்கு எதிரான கொள்கைகளைக் கொண்ட இந்து மதத்தில் போதகர்கள் அதிகமாகி, அற்புதங்கள் என்ற பாமர மக்களை ஈர்க்கும் காரியங்களின் மூலமாக இந்து மதக் கொள்கைகளைப் பரப்பினார்கள். அத்துடன் பல நூற்றாண்டுகள் வளர்ந்த ஜைன மதத்தில் இடைச் செறுகல்கள் ஒழுக்க இழுக்கங்கள் தோன்றியிருக்கலாம்.

எப்படியும் ஜைனர்கள் ஒழுக்கத்தை அடிப்படையாக வைத்துத் தம் மதத்தைத் துவக்கி, அது பல்லாயிரக்கணக்கான மக்களால் தழுவப்பட்டு வாழ்ந்திருக்கிறது.

ஜைனர்கள் தம் மதத்தில் சேர வருகிறவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய விரதங்களைப் பற்றி, தமிழ் நூல் சிந்தாமணியில் கீழ்க்கண்டவாறு கூறப்படுகிறது.

"ஐவகைப் பொறியும் வாட்டி, ஆமையின் அடங்கி, ஐந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்கும் நின்றெரிய விட்டுப்
பொய் கொலை களவு காமம் அவா இருள் புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக் கனைகதிர்த் திங்கள் ஒப்பார்"
(சிந்தாமணி—2834)

கீழ்க்காணும் சித்திரம் ஜைன மதத் தத்துவத்தை விளக்குகிறது. இந்தச் சித்திரத்திற்கு 'சுவஸ்திகம்' என்று பெயர். பிறவிச் சக்கரம் என்று கூறப்படும். உயிர்கள் தாம் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி தேவகதி, விலங்குகதி, நரகதி, மனித கதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து உழல்வதைக் குறிக்கிறது இது.



பிறவிச் சக்கரத்திற்கு மேலே உள்ள மூன்று புள்ளிகள் மும்மணிகளைக் குறிக்கின்றன. அதாவது நன்ஞானம், நற்

காட்சி, நல்லொழுக்கம் என்பவை. மூன்று புள்ளிகளுக்கு மேலே பிறைபோன்ற ஒரு கோடும், அக் கோட்டில் மேலே ஒற்றை புள்ளியும் காணப்படுகின்றன. இந்த ஒற்றைப் புள்ளி வினைகளை நீக்கி, வீடுமோட்சம் அடைந்த உயிரைக் குறிக்கிறது, இந்தத் தத்துவக் குறியை ஜைனர் இல்லங்களிலும் கோவில் களிலும் காணலாம்.

★

# 3

# புத்த மதம்

**கி. மு.** 5ம் நூற்றாண்டு மத்தியில் இந்தியாவின் வட பகுதியில் சாக்கிய வம்ச அரசனாயிருந்த சுத்தோதனனுக்கு மகனாகத் தோன்றிய சித்தார்த்தன் என்பவரால் போதிக்கப்பட்ட தத்துவங்கள் உலகில் 15 கோடி மக்கள் தழுவி வாழும் புத்த மதம் என்ற பெயரில் நிலவுகிறது.

சுத்தோதனன் என்ற அரசனுக்கு இரு மனைவிகள். அவர்களில் மகாமாயா என்ற மனைவியின் நாற்பத்தைந்தாவது வயதில் கி. மு. 560ல், நேபாளத்தில் உள்ள கபிலவஸ்து என்ற நகருக்கு அருகில் உள்ள லும்பினித் தோட்டத்தில் புத்தன் பிறந்தான். அவனது இயற்பெயர் சித்தார்த்தன். குடும்பப் பெயர் கௌதமன். சித்தார்த்தன் பிறந்த ஏழாவது நாளில் தாய் இறந்துவிட்டதால், அவனுடைய சகோதரி பஜாபதி என்பவள் அவனை வளர்த்து, கல்வி கற்பித்து கடைசி காலத்தில் அவன் புத்தன் என்ற போதகனாக மாறியபோது அவனது முதல் சிஷ்யையாகவும் அவள் மாறிவிட்டாள்.

இளமையிலிருந்தே இளகிய மனமும் இரக்க குணமும் நிறைந்து விளங்கிய கௌதமன், அடிக்கடி ஆத்ம சிந்தனையில் ஈடுபடுவதை அறிந்த அரசன், இவன் முன்னே துன்பம், கவலை என்பவற்றின் நிழலே தோன்றாத வகையில் ஆடம்பரமான அரண்மனைகளை உருவாக்கி, அந்தக் காமக் கேளிக்கைக் கூடங்களில் சித்தார்த்தனை இன்பவாசமாக அடைத்து வைத்தான்.

அந்தக் காலத்தில் நாகரிக மேம்பாட்டில் விளங்கிய கிரேக்க நாட்டு அரசனுக்கு, சுத்தோதனன் ஒரு கடிதம்

எழுதியதாக வரலாறு இருக்கிறது. அக்கடிதத்தில் தன் மகனை சந்தோஷிக்கச் செய்வதற்காக கிரேக்க நாட்டிலிருந்து உயர்ந்த மதுபானங்களையும், நடன சிங்காரிகளையும், தத்துவ ஆசிரியர்களையும் அனுப்பித் தருமாறு வேண்டியிருக்கிறான். அதற்கு கிரேக்க நாட்டிலிருந்து வந்த பதிலில், 'தங்கள் விருப்பப்படி, உயர்ந்த மதுப்பொருள்களையும் ,நடனமாதர்களையும் அனுப்புகிறோம். ஆனால் கிரேக்க நாட்டு தத்துவபோதகர்களை வெளியில் அனுப்ப கிரேக்கம் தயாராக இல்லை'' என்று வரையப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இசை, நடன நிகழ்ச்சிகளிலே மூழ்கி இன்ப சல்லாபங்களிலே தன் மகன் திளைக்க வேண்டுமென்றும், உலகக் கவலையே அவன் மனதில் திரையிடக் கூடாதென்றும் சுத்தோதனன் முயன்றும், சித்தார்த்தனின் மனம் அவற்றில் திருப்தியடையவில்லை. வெளியுலகைக் காண ஆவல் பிறந்தது. ஒரு சமயம் அந்தக் கட்டுக்காவலை மீறி வெளியே கிளம்பி நகரை வலம் வந்த சித்தார்த்தன், நகர வீதிகளில் அதுவரை அவன் அறிந்திராத காட்சிகளைக் கண்டான். முதுமை அடைந்த முதியவர்கள் கோலூன்றி நடக்கும் நிலையைக் கண்டு, மனித ஜீவிதத்தில் முதுமை எல்லோர்க்கும் உரியது என்பதை அறிந்தான். மற்றொரு சமயம் நோயுற்ற மனிதர்களையும், பிறிதொரு நேரம் இறந்த மனிதர்களைச் சுமந்து செல்லும் காட்சிகளையும் கண்டு, பிணி, மூப்பு, சாக்காடு என்பவை மனிதனுடன் பிறந்தவை என்பதை உணர்ந்தான்.

ஒருநாள் வீதியில் வரும்போது மனதிற்கு அமைதியைத் தரும் அருள் வடிவமாக நின்றுகொண்டிருந்த ஒரு துறவியைக் கண்டான் சித்தார்த்தன். அருள் வடிவாய் நின்ற அப்பெரியவரின் பார்வையின் தீட்சண்யம் சித்தார்த்தனின். மனதில் ஊடுருவிப் பாய்ந்த மாத்திரத்தில், உலகில் துக்கங்களையும், துயரங்களையும் வெல்லும் வழி துறவு நிலையில் எய்தலாம் என்ற முடிவிற்கு வந்தான்.

சித்தார்த்தனின் ஒதுங்கி வாழும் தன்மையைக் கண்டு அஞ்சிய மன்னன், அவனுக்கு மணமுடித்து லௌகிக வழியில்

மனதைத் திருப்பலாம் என்ற முடிவில் யசோதா என்ற அழகிய பெண்ணை அவனுக்கு மனைவியாக்கினன். நாளடைவில் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்து, அவனுக்கு இராகுலன் அல்லது சோகமற்றவன் என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். ஆனல் சித்தார்த்தனின் அறிவுப் பசி அடங்கவில்லை.

முழு நிலவு நாள். அரண்மனையின் அந்தபுர மண்டபம். அம்சதூளிகா மஞ்சத்தில் பொன்மஞ்சத்தில் பொன்மலர்ப் பொலிவுடன் யசோதா துயில்கிருள். அவள் அருகிலே குழந்தை இராகுலன். உலகை மறந்து ஆனந்த நித்திரை செய்யும் அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தான் சித்தார்த்தன். ஆசையை அடக்கிய தவசீலர்களையும் தடுமாறச் செய்யும் அழகுப் பொலிவு, மனதை வென்ற மகான்களையும் மயங்கி விழச் செய்த புத்திர பாசம். ஒருமுறை, மலர்ச் செண்டாகத் தவழும் இராகுலனை கையிலேந்தி உச்சி மோந்து அணைத்து மகிழத் தூண்டியது மனம். பிள்ளை பாசம் விருவரூபமெடுத்துத் தன் முயற்சியை மூடி மறைத்துவிடுமோ என்று அஞ்சி விருட்டென்று வெளியேறினன். இளகிய மனம் இரும்பானது.

துன்பச் சாயலே படியாத இன்பப் போகங்களிலே வளைய வந்த அரச குமாரன், சுக சல்லாப கேளிக்கைகளின் நடுவே சிரித்து வளர்ந்த இளவரசன், செல்வச் செழிப்பிலே தவழ்ந்த உலகாளும் நாயகன், ஆடம்பரம், அரண்மனைவாசம், ஆள்–தேர்ப்–புரவி–அதிகாரம், அத்தனையும் விட அழகு மனைவி, அருமைக் குழந்தை எல்லாவற்றையும் துச்சமென மதித்து வெளியேறுகிருன்.

விரித்த உலகம் தன் இரு கரங்களால் அவனை வரவேற்கிறது. "கண்டகம்" என்ற தன் வெள்ளை நிறக் குதிரையிலேறி தட்டிவிட்டான். அறிவுப் பசிக்கு இறை தேடப் புறப்பட்டு விட்டான் சித்தார்த்தன். மனிதத் துயரங்களுக்கு முடிவு காணக் கிளம்பிவிட்டது அந்த இளஞ்சிங்கம். உலகிற்குப் புத்தொளியைப் பரப்ப உதித்துவிட்டது பௌத்த சூரியன்.*

---

*மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப் புத்த ஞாயிறு தோன்றும் காலை... (மணிமேகலை)

பசியறியாத அரசகோமான் கையிலே ஓடேந்தி தன் நாட்டு நகரவீதிகளிலே உணவுக்காக அலைந்தான்.

தத்துவ ஆராய்ச்சியின் மூலம் உண்மையை அறியலாம் என்று முதலில் சித்தார்த்தன் முயன்றான். ஊனினை உருக்கி, உடலை வருத்திக்கொண்டால் உள்ளம் உயரும் என்ற நம்பிக்கையில், தன்னையே தான் வருத்திக் கொண்டு வாடினான். உணவு உறக்கமின்றி உடல் மெலிந்து மயக்கமடைந்தான். ஓர் ஆயர்குலப் பெண் கொடுத்த பாலினால் மீண்டும் உயிர்த்தெழுந்த சித்தார்த்தன், உடலை வளர்ப்பதே உயிரை வளர்ப்பதாகும் என்ற முடிவுக்கு வந்தான். மீண்டும் மீண்டும் அறிவு வேட்கைக்கு ஆளாகித் திரிந்த சித்தார்த்தன், உண்மையைக் காணமல், இருந்த இடத்தைவிட்டு நகருவதில்லை என்ற வைராக்கியத்தோடு, போதி மரத்தின் கீழ் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தான். ஏழு வாரங்கள் அந்த நிலையிலேயே கழிந்தன.

கி. மு. 544ல் வைகாசித் திங்கள், பூர்ண நிலவு நாளில் உண்மை ஒளி மின்னலைப்போல் அவன் சிந்தனையில் தோன்றியது. உலகம் ஒரு ஞானியைப் பெற்றது. அவன் அமர்ந்திருந்த இடத்தை "அறிவின் பீடம்" என்று வரலாறு அழைக்கிறது.

உலகத் துயரங்களுக்கு விடிவைக் கண்டுவிட்ட ஆனந்தத்தில் சித்தார்த்தன் மூழ்கினான். சித்தார்த்தன் அன்றிலிருந்து 'புத்தன்' என்ற பெயர் பெற்றான். புத்தன் என்றால், அறிஞன் அல்லது ஒளிபெற்றவன் என்ற பொருள்படும்.

"ஓ! உலகமே! உண்மையைக் கண்டுகொண்டேன். துயரங்களுக்குக் காரணம் மனித ஆசைதான்; அதை அகற்றுங்கள்" என்று அறைகூவல் விடுத்தான்.

"மனிதர்கள் தாங்கள் செய்யும் தீய செயல்களின் விளைவுகள், தங்களை எப்படிப் பாதிக்கின்றன என்பதை உணர்ந்தால் எப்போதும் தீயதை நினைக்கவே மாட்டார்கள்." என்பது

புத்தரின் முதல் உபதேசம். "இன்பத்தைத் தேடி அலைகிறார்கள். அதனால் துன்ப வலையில் சிக்கித் தவிக்கிறார்கள்."

'மனிதனின் துயரங்களைப் போக்குவேன்' என்ற முழக்கத்தோடு புறப்படுகிறது புத்தநாதம். காசி நகருக்கு சில மைல் தொலைவில் உள்ள சாரநாத் என்ற ஊரில், முதலில் ஐந்து சீடர்களை அழைத்து, தான் அறிந்த உண்மைகளைப் புத்தர் போதித்தார். பிறகு கௌதமர் ஊர் ஊராக, நகரம் நகரமாக, நாடு நாடாகச் சுற்றி உலக போதகனாக உலவத் தொடங்கினான். 60க்கும் மேற்பட்ட சீடர்களை உலகின் பல பாகங்களுக்கும் தன் தத்துவ தூதர்களாக அனுப்பினான்.

வகுப்பு, இனம், சாதி, சமயம் என்ற பேதங்களைக் கொண்ட வர்ணாஸ்ரம தர்மம் நிலைபெற்றிருந்த அக்கால இந்தியாவில், பிறப்பால் எல்லோரும் சமமே என்ற புத்தரின் தத்துவம் இந்து மதத்திற்கு புரட்சிகரமான எதிர்ச் சவாலாகக் கிளம்பியது.

அரசர்கள், பிரபுக்கள், பிராமணர்கள், பெரு வணிகர்கள், தொழிலாளிகள், தீண்டத்தகாதவரென ஒதுக்கிவைக்கப் பட்ட குடிமக்கள் அனைவரும், புத்தன் ஒலித்த தர்ம பேரிகையின் ஒலியில் கட்டுண்டு பிட்சுக்களாக மாறினர்.

புத்தன் தன் கடைசி மூச்சுவரையிலே உலக உய்வுக்காகப் போதித்தான். தன் இறுதி நாள் நெருங்குவதைக் கண்டதும் அண்டியிருந்த சீடர்களை அழைத்து "பிட்சுக்களே, உங்களுக்கு நான் அறிவித்த தத்துவங்களில் ஐயம் இருந்தால், இப்போதே கேட்டுத் தெளிவு பெறுங்கள். என் உயிர் பிரிந்ததும் எதையும் கேட்காமல் விட்டோமே என்ற குறையில்லாமல் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். உங்கள் ஆத்ம விடுதலைக்குப் பிறரை நம்பியிருக்காதீர்கள். உங்கள் அறிவாலும் உழைப்பாலும் முயலுங்கள். நீங்கள்தான் உங்கள் விடுதலைக்குக் காரணமாவீர்கள்." என்றார்.

உலகில் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்தில் புதராக மண்டிக்கிடந்த மூடநம்பிக்கைகளைத் தகர்த்து, அறியாத்தனத்தை உணர்த்தி, அறிவின் மழுங்கலைக் கூர்மையாக்கி, சித்தத்தைத் தெளிவித்து, மனித சமுதாயத்தின் உயர்வுக்காக ஓய்வின்றி உழைத்த அந்த அரிய உயிர்—ஆத்ம ஒளி பரப்பிய அருள் சுடர்—புத்த ஞாயிறு, தன் வேலை முடிந்தது என்று கி.மு.480ல் ஒரு நாள் தனது 80வது வயதில் உலகப் பிணிப்பிலிருந்து விடை பெற்றுக் கொண்டது.

புத்தரின் வாழ்க்கையைப் பற்றிய விவரம் சரியாகக் கிடைக்கவில்லை. புத்தரே சொன்னதாகக் கூறப்படும் போதனை வாசகங்களிலிருந்து அவரது வாழ்க்கை வரலாற்றை அறிய முடியவில்லை. எந்த நேரமும் எங்கும் அவருடைய போதனைகள் மாறுபடாமலேயே இருந்தன.

புத்தரின் தோற்றப் பொலிவு அசாதாரணமான கவர்ச்சியுடன் இருந்திருக்கிறது. கோபுரக் கலசம் மின்னுவதைப் போன்ற ஒளி முகம், அகன்ற நெற்றி, வளைந்து கருத்த புருவங்களின் கீழே நீலம் பாய்ந்த ஆழ்ந்த கருவிழிகளின் குளுமை, புன்னகை சிந்தும் மலர் இதழ்கள், அகன்ற மார்பு, நீண்ட தளிர்க்கரங்கள், முத்துப் பற்கள், பவள வாய், தண்ணொளி பரப்பும் நிலா முகம், சீயம்போன்ற முன் தோற்றமும், பிடி களிறின் கம்பீர நடையும் அவருக்குண்டு. இத்தனைக்கும் மேலாகக் கேட்டாரைக் கவரும், கேளாரை ஈர்க்கும் இசைக் குரல்.

புத்தருடைய போதனைகளை அறியுமுன், அவர் காலத்தில் இந்த நாடு இருந்த நிலையை, கடைப்பிடித்து வந்த கொள்கைக் கோட்பாடுகளை, கொண்டாடிய பழக்க வழக்கங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாடு பல பிரிவுகளாகி சிற்றரசர்களாலும், பிரபுக்களாலும் ஆளப்பட்டு வந்தது. உயர்ந்த நாகரிகமும், பொருளாதார செழிப்பும் இருந்தது. முன்னேற்றமடைந்த வகுப்பினராக பிராமணர்களும் பிரபுக்களும் விளங்கினர். மத தத்துவ

விவாதங்களில் மக்கள் ஆர்வம் உள்ளவர்களாகவும், எந்த மதக் கொள்கையையும் வாதித்துப் பேசும் சுதந்திரம் பெற்றவர் களாகவும் இருந்தனர். தங்கள் தேவைகளுக்கேற்ப மனிதர்கள் விரும்பியபடியெல்லாம் கடவுள்களை உருவாக்கிக் கொண்டார் கள். அற்புதங்கள் நிகழ்த்தி ஆதரவு தேடுவது ஒரு மவுசாக அப்போது இருந்தது.

தன் உடலை வருத்திப் புழுதியில் அலைந்து, ஊன் உறக் கத்தைத் துறந்து பட்டினி கிடப்பதால் கடவுளைத் திருப்தி செய்யலாம் என்ற தவறான நம்பிக்கை நிலவியது. கர்ம நியதியை மட்டுமே அறிந்து, தங்கள் பாவங்களுக்கான காரணங்களை அறியமுடியாமல் வாழ்ந்தனர். இதனால் தனி மனித வாழ்வுக்கும் மதத்திற்கும் கடவுளுக்கும் தொடர் பில்லாமல் போய்விட்டது.

தெய்வ திருப்திக்காகச் செய்யும் கொடிய பாவங்களை புத்தர் வன்மையாகக் கண்டித்தார்.

'கடவுளைப் பற்றிய எந்தவித அச்சமுமின்றி தன் ஆத்ம விடுதலைக்காக எந்த மனிதனும் முயற்சி செய்யலாம், நமக்கு ஏற்படும் இன்ப துன்பங்களுக்குப் பிறர்தான் காரணம் என்பது மூடத்தனம்' என்றார்.

உலகம் பல பேதங்களாக இருப்பதற்குக் காரணம், மக்களின் விகல்பமான காரியங்களேயாகும் என்றும், வேதங் கள் என்ற போலித் தத்துவத்தின் சாயலையும் கடவுளின் பெயரில் நிலவிய மூட நம்பிக்கையையும் அடியோடு அகற்றுவ தில் புத்தர் தீவிரம் காட்டினார்.

மனிதன் தன் செயல்களின் மூலமே வாழ்கிறான். 'என் செயல் என்னுள்ளே இருக்கிறது. என்னுடனேயே பிறப்பது, இருப்பது, அழிவது. இதற்கு வேறு எதுவும் காரணமல்ல'.

'ஒரு தனித் தத்துவத்தைக் கொண்ட புது மதத்தை உருவாக்குவதில் நான் அக்கறை காட்டமாட்டேன். ஆனால் மக்களின் கடமையுணர்வை போதிப்பதுதான் என் வேலை.

வெளி வேஷம் மனதைத் தூய்மைப்படுத்தாது. மதத்தையும் வளர்க்காது. மனத் தூய்மையுடன் இருந்தால் துறவியும் பாமரனும் ஒன்றுதான். புத்த மதத்திற்கென்று தனி நியம நியதிகள் கிடையாது. புத்த மதத் தத்துவங்கள் எவற்றிலிருந்து தோன்றியவை என்பதை எந்த மனிதனும் ஆராயலாம்.' புத்தர் மனிதனுக்கு உலக விடுதலையை அளிக்கவில்லை; ஆனால் விடுதலை பெறும் வழியைத்தான் போதித்தார்.

புத்தரின் போதனைகளில் மக்கள் மனம் பறிகொடுத்ததற்கு முக்கிய காரணம், உயர்ந்த மனிதர் சொல்கிறாரே என்பதனால் அல்ல. அவரவர் சிந்தனையில் அலைமோதிய எண்ணங்களின் கேள்விகளுக்கு விடையாக, அவருடைய அறவுரைகள் இருந்ததுதான் காரணம்.

புத்தமதக் கொள்கைகளை 'பிதாகம்' என்ற அவர்களது சுவடிகளில் காணலாம். இந்தச் சுவடிகள் கிருஸ்து பிறப்பதற்கு 24 ஆண்டுகளுக்கு முன்பு தொகுக்கப்பட்டவை என்று தெரிகிறது. அவற்றில் புத்தரின் சொற்பொழிவுகளே அனேகமாக இருக்கின்றன. கி. மு. 80ல் அவை எழுத்துவடிவம் பெற்றன.

பாலி மொழியில் எழுதப்பட்டுள்ள அவருடைய போதனைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. சுல்தா (கதைகள்), 2. வினயம் (கட்டுப்பாடு) 3. ஆதி தர்மம் (நியமம்)

ரைஸ் டேவிட் என்ற ஆராய்ச்சியாளர், "இந்த போதனைகளின் கருத்துக்கள் உலக சிந்தனையாளன் பிளேட்டோவின் உரைகளை நினைவுபடுத்துவதாக உள்ளன" என்கிறார்.

புத்த தத்துவங்களின் வியாக்கியானத்தை முதலில் அளித்தவர் புத்த பிட்சுவாக மாறிய ஒரு பிராமணர். புத்தர் முதன் முதலில் தனது 5 சீடர்களுக்கு உபதேசித்ததை "தர்ம சக்ர பிரவர்த்தனு" என்பார்கள். அதாவது சக்ர நியதி. மனிதனின் செயல்களும் பலன்களும் ஒன்றன் பின் ஒன்றாகச் சுற்றுகின்றன.

புத்த தத்துவம் இரண்டு பகுதியானது. வாழ்வு துன்பமய மானது என்பதும், அதை நிவர்த்திக்க நேர்மையான வழியைக் கடைப்பிடிப்பதுமாகும். இவைதான் புத்தரின் நான்கு பேருண்மைகளாக விரிகின்றன. முதல் மூன்றும் போதனையின் தத்துவத்தை விளக்குவது, நான்காவது அத்தத்துவ போதனை யின் ஒழுக்கவிதி. இதில் ஒன்றில்லாமல் மற்றதை அறிய முடியாது.

இந்த நான்கு நியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென் றால் "ஓ பிட்சுக்களே; இரண்டு அதி தீவிர நிலையிலும் இருக்கக் கூடாது. அவை எவை? ஆசை, ஆடம்பரம், தாழ்வு, கொச்சை, உதவாக்கரை என்ற கீழ்மட்டம். தன்னைத் துன்புறுத்திக் கொள்வது, துயரை வரவழைத்துத் தாங்குவது என்ற உச்சக் கட்டம். இவற்றிற்கிடையே உள்ள மத்திய நிலையில் இருந்து தான் நீங்கள் புத்த தத்துவங்களை அறிந்து போதிக்க வேண்டும்."

ததாகதர் (புத்தர்) கடைப்பிடித்த எட்டு படிகள் எவை? நல்லதில் நோக்கம், நல்லதில் நாட்டம், நல்ல பேச்சு, நற் செயல், நல்வாழ்வு, நன்முயற்சி, நற்சிந்தை, நன்மையில் முயற்சி இவைதான் ததாகதர் கொண்ட இடைநிலை.

அவர் கூறிய நான்கு துன்பியல் நிலைகள் எவை?

பிறப்பு ஒரு துன்பம். முதுமைத் துன்பம், நோய்த் துன்பம், சாவுத் துன்பம், கவலைத் துன்பம், அன்பிலாருடன் கூடி வாழ்தலால் துன்பம், அன்புடையாரைப் பிரியும் துன்பம், விரும்புவதை அடைய முடியாதபோது துன்பம், சுருங்கச் சொன்னால் ஐம்புலன்கள் அவாவும் அத்தனையும் துன்பங்களே. மேற்சொன்ன நான்கு வகைத் துன்பங்களுக்கு மாற்று நல்லனவாய் உள்ள எட்டு படிகள்.

உலகில் மூன்று பொருள்களை மனிதன் காண முடியாது. உள் உணர்வு உள்ள அல்லது இல்லாத, அழியாமல் நிலைத்து நிற்கக் கூடியவை, அறியமுடியாத, நித்தியமில்லாத தன்மை

நிலைத்திருப்பதற்கான சக்தியைப் பெற்றிருக்கும் பொருள் எதுவுமே காண முடியாது.

உலகப் பொருள்கள் யாவும் உரு மாறி அழியக் கூடியது தான். நிலையாமையை உணர்த்த 'கோதமி' என்ற பெண்ணுக்கு புத்தர் செய்த உத்தியை கதையாகக் கூறுவர். தன் மகனை இழந்து துக்கித்த கோதமி என்ற பெண், புத்தரை தெய்வம் என்று எண்ணி, தன் மகனை மீண்டும் உயிர்பெற்றெழும்படிச் செய்ய வேண்டினாள். நிலையாமைத் தத்துவத்தை அறியாத அப் பெண்ணிடம் புத்தர், "ஏ பெண்ணே, உன் மகனுக்கு உயிர் தருகிறேன். நீ போய் எவருமே இறக்காத ஒரு வீட்டு குடும்பத் தில் ஒரு பிடி கடுகு வாங்கி வா" என்றார். அந்தப் பேதைப் பெண்ணும் ஊர் முழுதும் சுற்றினாள், இறந்த மகன் பிழைப் பான் என்ற நினைப்பில். "என்னடி நினைத்துக்கொண்டாய், இந்த உலகில் உயிரோடு இருப்பவர்களைவிட இறந்தவர்கள் தான் அதிகம் பேர். எங்கள் வீட்டிலும் அனேகம்பேர் இறந்து விட்டார்கள்" என்ற பதில்தான் கிடைத்ததே தவிர ஒரு பிடி கடுகு புத்தர் சொன்னபடி கிடைக்காமல் திரும்பினாள். அந்த நிகழ்ச்சி மூலமாக, புத்தர் பாமர மக்களுக்கு நிலையாமையை விளக்கியதாகக் கதை உண்டு. உலகில் தோன்றிய எந்தப் பொருளும் நிலையானதல்ல என்ற உண்மையோடு கூட, அந்தப் பொருள்களின் மீது வைக்கப்படும் பற்று, அந்தப் பொருள் அழியும்போது துன்பத்தைத் தருவதாக மாறிவிடுகிறது.

தீயவை எவை? களவு, காமம், பொய்மை, தூற்றுதல், கேடு செய்தல், தற்புகழ்ச்சி, பகை, வெறுப்பு, தவறான கொள்கையில் பிடிப்பு இவையாவும் தீயவைகளே.

நம்மை எரிக்கும் தீ எது? காமத்தீ, பகைமைத் தீ, முதுமைத் தீ, இறப்புத்தீ, துக்கத் தீ, ஏமாற்றத் தீ, கவலைத் தீ, ஏக்கத் தீ. இவற்றை அழிக்காவிட்டால் ஒன்றிலிருந்து ஒன்று பற்றிக் கொண்டு மீண்டும் மீண்டும் பிறப்பினைத் தந்து லௌகிக விடுதலை கிடைக்காமல் செய்துவிடும்.

புனித நதியில் நீராடினுல் மனிதனின் பாவங்கள் அழிகின்றன என்று ஒரு பிராமணர் சொன்னதைக் கேட்டு வெகுண்ட புத்தர், "ஓ பிராமணனே, நீர் உடலைத்தான் சுத்தமாக்கும்; உள்ளத்தை அல்ல. உள்ளம் உன் நன்முயற்சியால் சுத்தமாகும். நன் முயற்சி நற் செயலைத் தூண்டும். நற்செயல் நற்பலனைத் தரும். நற் சிந்தனையாளருக்கு எந்த நதியும் ஒன்றுதான்; புனிதமானதுதான்" என்றுர்.

புத்தர் மறைந்து ஒரு நூற்றுண்டுக்குப் பிறகு, இந்தியாவில் சக்ரவர்த்தி என்ற பட்டத்தோடு, அகண்ட எல்லைகொண்ட ராஜ்யத்தை ஸ்தாபித்து புகழோடு ஆண்டுவந்த அசோகன் என்ற மன்னன், புத்த தத்துவத்திற்கு அடிமையாகிஉலகெங்கும் அதைப் பரப்ப தன் அரசியலைப் பயன்படுத்தினுன். தன் மக்களை வெளிநாட்டுக்கு அனுப்பினுன். தர்மம் என்ன என்பதை அவன் சொல்கிறுன். "தமக்குக் கீழுள்ளவர்களிடம், பணியாளர்களிடம் தயாளமும், அன்பும், மரியாதைக் குரியவர்களிடம் மதிப்பும், உயிர் வாழ் ஜீவன்களிடத்தில் இரக்கமும் கொள்வது தான் உலகில் உயர்ந்த தர்மம்."

புத்தர் சொன்ன நிர்வாண நிலை அல்லது பூரண துறவிற்கு வழிகளாக சொல்லப்படுபவை சீலம் அல்லது ஒழுக்கமேயாகும். அகிம்சை, தர்மம், ஈகை, தன்னடக்கம், கீழுள்ளவர்களிடம் தயாளம், மேலானவர்களிடம் மரியாதை, இவைதான் புத்த மதச் சடங்குகள்; நியதிகள்.

"ஊரைவிட்டு ஓடிவிடுவது, நிர்வாணமாகத் திரிவது, தலையை மொட்டை அடித்துக்கொள்வது, முரட்டு உடையை உடுத்துவது, மத குருமார்களுக்குத் தானம் கொடுப்பது, தெய்வத்திற்கு பலி இடுவது, இவையாவும் அறிவழிந்த மனிதனைக் கடைத்தேற்றுது."

"ஆயிரம் போர்க் களங்களில் வெற்றி கண்ட வீரனைவிட தன்னை வென்றவனே மகாவீரனுவான்."

"ஆத்ம சுத்தி என்பது ஆசைகளையும் ஐம்புலன்களையும் ஒடுக்கிவிடுவதால் வருவதல்ல. மனதைப் பக்குவப் படுத்த வேண்டும். புலன் உணர்வுகளை தன் வயப்படுத்திப் பழக வேண்டும்."

மனித உள்ளத்தின் உயர்ந்த தன்மை என்பது "பிரக்ஞை" என்ற தன்னுணர்வு. அடுத்த நிலே தியானம். மன ஒருமைப்பாடு. தியானம் என்பதில் நான்குபடி. 1. இன்ப நிலே, தன்னை மறந்து உள் மனதை ஆராய்வது, புலன்களை நிலே நிறுத்துவது. தன்னையே பிரதிபலிப்பது ஆகியவற்றினுல் உண்டாகும் இன்ப நிலே. 2. ஆழ்ந்த மன அமைதி, உள் மன ஒடுக்கம். 3. எல்லா பற்றுதலும் பற்றற்ற நிலேயும் அகன்று விடுதல், அமிழ்ந்து போதல். 4. தன்னை அறிவது, உயர்ந்த மனச் சாந்தி, இன்ப துன்பமற்ற சூன்யநிலே.

"தன் சுய துக்கத்தில் மனம் செலுத்துபவன் பிறருடைய துன்பங்களை உணர்வதிலிருந்தும், தன் துக்கத்தை வெற்றி கொள்வதிலிருந்தும் தடுக்கப்படுகிருன்."

"சப்த சமுத்திரத்திற்கடியில் இருந்தாலும், விண்ணேக்கிச் சென்ருலும் உலகின் எந்த மலேக் குகைகளில் ஒண்டினுலும் மனிதா! உன்னை இறப்பு விட்டுவிடாது."

அக்கால இந்தியாவில் நிலேத்துப் பரவியிருந்த கடவுள் தத்துவத்தை ஆணித்தரமான வாதங்களினுல் முறியடித்த முதல் புரட்சி வீரர் புத்தர் எனலாம். ஈஸ்வரன்தான் உலகைப் படைத்தவன் என்ற கொள்கையை அவர் மறுத்தார். ஈஸ்வரன் உலகைப் படைத்தான் என்ருல், எல்லா உயிர்களும் அவனுடைய சக்தியில் அடைக்கலமாக வேண்டியதுதானே. குயவன் புனைந்த மண்பாண்டங்கள் போல அவை செயலற்றுக் கிடக்க வேண்டியதுதானே? அப்போது தர்மத்தை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? உலகம் ஈசனுல் படைக்கப்பட்டதென்ருல் துயரம், கலவரம் அல்லது பாவம், தூய்மை, அழுக்கு யாவும் அவனிடமிருந்தே வந்திருக்கவேண்டும். இல்லேயென்ருல் அவனுக்குப் பின்னே ஒரு காரண சக்தி இருக்கவேண்டும். அவன் தன்னிச்சையுடன் இல்லே என்ருகும். ஆகையால் அந்த நினேப்பை அகற்றுங்கள்.

அடுத்து,பூரணமாய் உள்ள பரம்பொருள் உலகை உருவாக்கியது என்பார்கள். பூரணமாய் உள்ளதென்ருல் அது ஒரு

காரண சக்தியாகாது. விதையிலிருந்து வளர்ந்து கிளைவிட்டுக் கிளம்பும் தாவரங்களைப் போன்றது படைப்பு என்றால், எல்லா காரியங்களும் ஏன் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆகவே அந்தக் கொள்கையும் தவறுகிறது.

மறுபடியும், 'தான்' என்ற சுயம்புத்துவம்தான் படைப்பின் மூலம் என்றால், ஏன் ஒருமித்த இதமான படைப்புகளை உருவாக்க முடியவில்லை? துயரத்தின் காரணங்கள் உண்மையானவை; செயலுக்குரியவை. அப்படியென்றால் 'தான்' சக்தியின் வேலை என்ன?

அடுத்து, படைப்பவன் ஒருவனுமில்லை, விதி என்ற ஒன்றே எல்லாவற்றிற்கும் காரணமாகிறது என்று வாதிட்டால் ஏன் ஒரு முடிவை நோக்கி குறிக்கோளுடன் நம் வாழ்க்கையை செம்மைப் படுத்திக் கொள்ளவேண்டும்? விதியின்படி எல்லாம் நடக்கட்டும் என்று இருக்க முடியவில்லையே ஏன்? அதனால் எந்தக் காரியமும் காரணமின்றித் தோன்றுவதில்லை என்கிறது. ஆகவே ஈஸ்வரனோ, பூரண சக்தியோ, தான் என்ற சுயம்புத்துவமோ, காரணமற்ற நிமித்தங்களோ படைப்புக்கு மூலமல்ல. அவரவர் செய்கைகளே நல்லவை அல்லவைகளுக்கு மூலமாகின்றன. மனதை ஒட்டாத செயலில்லை. தங்கத்தால் ஆன கோப்பை முழுவதும் தங்கமாகவே இருப்பதுபோல, மனதினால் நிகழும் செயல்கள் மனதின் தன்மையாகவே இருக்கும்.

புத்தர் 'ஆத்மா' என்பதைப் பற்றி எந்த இடத்திலும் விளக்கம் சொல்லவில்லை. அசாதாரண ஆத்மாவுக்குமேலே ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை மட்டும் கூறி, அது என்ன என்பதை விவரிக்காமல் இருந்துவிட்டார்.

மனதை ஒருமுகப்படுத்தி ஆராய்ந்தால் காரணத்துவத்தின் சங்கிலித் தொடர்பான செயலை அறிய முடியும்.

அறியாமையை அழித்தால் சமஸ்காரம் என்ற தன்மை அழிகிறது. சம்ஸ்கார அழிவினால் உள்ளுணர்வு மறைகிறது. உள்ளுணர்வு மறைந்தால் நாமரூபம் என்னும் பெயர், உருவம்

அற்றுவிடுகிறது. நாமரூபம் அற்ருல் ஆறு குணங்கள் அழி கின்றன. ஆறு குண அழிவிஞல் தொடர்பு உணர்ச்சி அகல் கிறது. தொடர்புணர்ச்சி அகன்ருல் புலனுணர்ச்சி மறை கிறது. புலனுணர்ச்சி மறைந்தால் அவா என்னும் தாகம் எழுவதில்லை. தாகமற்ற நிலையில் பற்று விட்டுப் போகிறது. பற்று விட்டதும் ஜீவ இருப்பு மறைகிறது. ஜீவிதம் ஒழிந் தால் பிறப்பு இல்லாமல் போகிறது. பிறப்பு இல்லையென்ருல் அதனுல் வரும் வயது, மூப்பு, இறப்பு, துக்கம், ஏமாற்றம், ஏக்கம் யாவும் தோன்றுவதில்லை. இந்தத் தொடர்ந்த கார ணத்துவத்தில் மக்கள் அவதியுறுகிருர்கள்.

செயலில், சொல்லில், நினைப்பில் நல்லதைப் பயிற்றுவிப் பதே துறவியின் நிலை. புத்தமதத்தைப் பின்பற்றுவோர் கொள்ளவேண்டிய நான்கு விரதங்கள்: 1. கொல்லாமை விரதம் 2. தாஞக வருவதைத் தவிர மற்றவைகளைப் பெற ஆசை வைக்காதிருத்தல் 3. தவருன காமச் செயலைச் செய்யா திருத்தல் 4. பொய்யாமை 5. மதி மயக்கும் போதை வஸ்துக் களை அருந்தாமை.

பரத்வாஜர் என்ற விவசாயி ஒரு சமயம் புத்தரைப் பார்த்து, ''இப்படி ஒரு உழைப்பில்லாத சோம்பேறியாக இராமல், எங்களைப் போல உழுது பயிரிட்டு உழைத்து வாழ்வதுதான் மேல்'' என்ருர். அதற்கு புத்தர் மறுமொழி யாக,

''நானும் ஒரு விவசாயிதான். நம்பிக்கைதான் என் விதை. என் உழைப்பின் வேதனைதான் மழை. அறிவுதான் உழுகின்ற ஏர், வெட்கம் ஏரின் நுகத்தடி, மனம்—நுகத்தடியை இணைக்கும் வார்ப்பூட்டு, சிந்தனையே தார்க்கோல் சாட்டைக் கழி, உடலில் செயலில் சிந்தனையில் வேலி போட்டிருக்கிறேன். உணவில் கட்டுப்பாடு, உண்மையிஞல் உணவைப் பக்குவப் படுத்து கிறேன். சாந்தமே என் கடைத்தோற்றம். ஏரில் பூட்டிய எருதுகளை என் சக்தியே ஆள்கிறது. அவை இணையில்லாத நிர்வாண நிலைக்கு என்னை அழைத்துச் செல்கின்றன. மீண்டும் திரும்பமுடியாத துன்பமற்ற இடத்திற்கு இட்டுச் செல்கின்

றன. இதுதான் என் விவசாயம். அழிவற்ற தன்மை எனக்கு அறுவடையாகக் கிடக்கிறது.'' என்று விளக்குகிறார்.

இப்படி புத்தர் தன் கொள்கைகளை பாமரர்களுக்குப் புரியும் கதைகளாகவும், உதாரணங்கள் மூலமும், உபமானங் கள் வாயிலாகவும் சொல்லி வந்திருக்கிறார்.

வாதத் திறமையினால் வேதாந்திகளின் மூடக் கொள்கை களை முறியடித்தார். நாடாண்ட மன்னர்களின் மணி முடி கள், அவர் தாமரைப் பாதங்களில் பூசை மலராகத் தூவப் பட்டன.

5000 சீடர் குழுவுடன் தான் அவர் யாத்திரை சென்றிருக்கி றார். அரசர்களும் பிரபுக்களும் வரவேற்று, தோட்டங்களை நந்த வனங்களைத் தோற்றுவித்து மரியாதை செய்திருக்கிறார்கள்.

உலக உய்வின் பொருட்டு, தான் கண்ட உண்மையை மக்களிடம் ஊர் ஊராகத் திரிந்து வலியச் சென்று வழங்கிய அம்மகானின் புனிதம், உலகம் உள்ளவரை என்றும் மறையா திருக்கும்.

"புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி"

அறிவைச் சரணடைவோம்
அறத்தைச் சரணடைவோம்
சான்றோரைச் சரணடைவோம்."

★

# 4

# சீக்கிய மதம்

**கி. பி.** 15ம் நூற்றுண்டில் அறிவியல், அரசியல் துறைகளில் சுறுசுறுப்பு ஏற்பட்டு இந்தியா, ஐரோப்பா கண்டங்களில் உள்ள மக்கள், அறியாமை அயர்ச்சியை உதறித் தள்ளிவிட்டு ஆன்மீக மெய்ஞான விழிப்புணர்ச்சியுடன் விளங்கினர். ஞானவழி நூல்கள், வேதங்கள் முதலானவை, மதகுருமார்களுக்கு ஏகபோகமாக்கப் பட்டிருந்ததால், பாமர மக்கள் மெய்ஞான விளக்கமில்லாமல் மூடக் கருத்துக்களில் மூழ்கிக் கிடந்தனர். இந்தக் காலத்தில்தான் ஐரோப்பாவில் மார்டின் லூதர், கால்பின் போன்ற சீர்திருத்தவாதிகள் தோன்றி மதச் சடங்கு சம்பிரதாயங்கள் என்ற போர்வையில் நடந்த அநீதிகளைத் தகர்க்க முற்பட்டனர்.

குருநானக் தோன்றும் வரையில், இங்குள்ள மக்கள் தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள் என்ற தவருன எண்ணத்தில் இருந்தனர். அற்புதங்களும், மாயவித்தைகளும், வசியம், மாந்திரிகம் என்பனவும் அதிகரித்து மக்களை ஏமாற்றி வந்தன. ஒரு கடவுளிலிருந்து பலவற்றை உருவாக்கி விட்டார்கள். வழிபாடுகள் பலவாகப் பிரிந்து நிலம், நீர், நெருப்பு, சூரியன், ஆகாயம், காற்று என்று பலவற்றையும் வணங்கினர்கள். மனிதர்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கற்பனை உதித்தது. இந்துக்களில் ஜாதிப் பிரிவினைகள் பெருகின. முகமதியர்களும் பல பிரிவினராகி தங்கள் வேதக் கருத்துக்களை மறந்துவிட்டனர்.

குருநானக் என்பவரால் உருவாக்கப்பட்ட சீக்கிய மதம் கடவுளின் ஒருமைப் பாட்டை வலியுறுத்தியது. ஆரம்பத்திலிருந்து இந்துக்களின் வழக்கங்களை எதிர்த்துத் தனித்த கொள்கையைச் சீக்கியவர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கினர். பஞ்சாபில்தான் இம்மதம் தோன்றி வளர்ந்தது.

சீக்கிய மத ஸ்தாபகரான குருநானக் என்பவர் கி. பி. 1469ல் ஏப்ரல்—மே மாதத்தில் தாளவந்தி என்ற இடத்தில் பிறந்தார். அவருடைய தந்தை காலு என்பவர். தாளவந்தியில் கணக்குப் பிள்ளையாக வேலை பார்த்து வந்தார். தாய் திரிபா என்பவள். குருநானக் தனது ஐந்தாவது வயதிலேயே தெய்வீக விஷயங்களைப் பேச ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது.

பள்ளிப் பருவத்தில் ஆசிரியரை மிஞ்சும் மாணவனாக விளங்கினாலும், அவருடைய தந்தை நானக்கை பைத்தியம் என்று கருதி, எருமை மாடுகளை மேய்க்கச் சொன்னார். 14—வது வயதில் சுலக்மி என்பவள் மனைவியானாள். உலக விவகாரங்களில் பற்றில்லாமல் மாடுகளை மேய்த்து வந்தார். பிழைப்புக்கான முயற்சி எதுவும் செய்யவில்லை. அவரை குதிரை வியாபாரியாக்க தந்தை செய்த முயற்சியும் பலிக்காமல், குருநானக் எப்போதும் பற்றற்ற உள்ளத்தோடு வாழ்ந்தார். அவருக்கு இரண்டு மகன்கள், ஸ்ரீசந்த், லட்சுமிதாஸ் என்பவர்கள்.

கடவுள் துதிப்பாடல்களைப் புனைவதும், பாடிப் பொழுதைக் கழிப்பதுமாக இருந்த குருநானக் மெய்ஞானம் பெற்றபின் 'மனிதர்களில் ஏற்றத்தாழ்வில்லை, இந்து—முஸ்லிம் என்ற பேதமில்லை. கடவுள் ஒன்றே என்ற முழக்கத்தோடு, நான்கு திக்குகளுக்கும் பிரயாணம் செய்து தன் கொள்கையைப் பரப்பினார்.

"சீக்கியர்" என்பது 'சிஷ்யர்' என்ற வட சொல்லின் மருவலாகும். இம் மதக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர் அனைவரும் சீடர்களாகவும், போதகர்களைக் குருவாகவும் கொள்கிறார்கள். மனிதன் திருவருள் பெறுவதற்குக் குரு அருள்

இன்றியமையாதது என்பது அவரது கோட்பாடு. குருவே தெய்வமாக மதிக்கப்படுகிறார். குரு நானக் கி. பி. 1595ல் இயற்கை எய்தினார்.

குருநானக்கின் வாழ்க்கை வரலாற்று விவரங்களை கி. பி. 1588ல் ஒரு சீக்கியர் எழுதிய 'ஜன்மசகி' என்ற நூலில் காண முடிகிறது. குருநானக்குக்குப் பிறகு அங்கதர், குருஅமர்தாஸ், குருராம்தாஸ், குருஅர்ஜுன், குருஹரிகோவிந்த், குருஹரி ராய், குருஹரிகிருஷ்ணன், குருதேஜ்பகதூர் கடைசியாக குருகோவிந்த்சிங் என்ற பத்து குருமார்கள் இம் மதக் குருக்களாக மதிக்கப்படுகிறார்கள்.

மனிதர்களில் ஜாதிமத பேதமில்லாமல் இம்மதம் ஏற்றுக்கொள்கிறது. கடவுள் பெயரை மந்திரமாகச் சொல்லப் படுகிறது. குருமார்கள் வாழ்க்கையும் போதனைகளும் பக்திப் பாடல்களாக உலவுகின்றன. உருவ வழிபாடு, கபடவேடம், மந்திரம், மாயம் யாவும் இவர்களுக்கு உடன்பாடல்ல. இந்துக்கள்—முஸ்லீம்கள் இரு சாராரும் இம்மதத்தில் சேர்ந்தனர்.

இம்மதத்தில் சேருகிறவர்கள் ஞானஸ்நானம் என்ற புனித நீராட்டுக்குப் பிறகு, ஐந்து வழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். 1. முடிவெட்டாமல் இருத்தல், 2. கச்சம் உடுத்தல், 3. இரும்பு வளையம் அணிதல் 4. குத்துவாள் தரித்தல் 5. சிறிய தலைவாரும் சீப்பு சூடிக்கொள்ளல் ஆகியவை.

சீக்கியர்கள் அதிகாலை மூன்று மணிக்கு எழவேண்டும். நீராடிய பின் இறைவனின் பெயரை தியானம் செய்யவேண்டும். குருமார்கள் புனைந்த பக்திப்பாடல்களைப் பாடவேண்டும். குருவைத் தெய்வமாக மதிக்கும் இவர்களுக்கு குரு சகலமும் ஆனவர். குருநானக் புனைந்த 'ஜாப்ஜி' என்ற பக்திப்பாடல்களின் கோர்வைதான் சீக்கியர்களின் கீதம்.

தத்துவம்: கடவுள் ஒன்றே அழிவில்லாதது. மனிதர்கள் தங்கள் செய்கைகளுக்கேற்ப பலன் அடைகிறார்கள். கடவுள்

பெயர்களே மனதைத் தூய்மைப்படுத்தும். மனிதர்களில் உயர்வுதாழ்வில்லை. தான் என்ற அகந்தை அகல வேண்டும். குருமார்கள் தெய்வ சக்திநிறைந்தவர்கள்—மனிதர்களைத் தெய்வ நிலைக்கு உயர்த்துவதும் அவர்களே. வாழ்வை செம்மைப்படுத்துவது குருக்களின் சக்தியே.

நீர் நீரோடு கலப்பதுபோல. இரண்டு ஆறுகள் ஒன்றாகச் சேர்வது போலக் கடவுளின் ஒளிப்பிழம்பில் ஆத்மாக்கள் ஒன்றிவிடுகின்றன.

இம்மதம் பஞ்சாப் மாநிலத்தில் நிலவுகிறது.

★

# 5

# சோரோஸ்டிரிய மதம்

கிருஸ்து காலத்திற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பு, ஆரியர்களின் புராதன பூமியில் தோன்றிய ஒரு தீர்க்கதரிசியைக் கிரேக்கர்கள் சோரோஸ்டிரிஸ் என்றும் அவருடனிருந்த மக்களை சாதுரஷ்டிரர் என்றும் அழைத்தனர். கிரேக்கர்கள், ரோமானியர்கள், மோசஸ், டேவிட் என்பவர்களை அறியுமுன்னரே சோரோஸ்டிரரை நன்கு தெரிந்திருந்தனர். பழம் நூல்கள் இந்த சோரோஸ்திரர் தெய்வாம்சம் பெருந்தியவர் என்று கூறுகின்றன. அவர் பிறந்த இடம், காலம் சரியாக நிர்ணயிக்க முடியவில்லை. இயேசுவுக்கு முன் 10 வது நூற்றுண்டில் புது போதனைகளைப் பரப்பியவர் சோரோஸ்திரர். அவருடைய நடவடிக்கைகள், பாக்தீரியா, கிழக்கு மீடியாவின் ஈரான், பர்சியா ஆகிய இடங்களில் பரவின. முதுமைப் பிராயத்தில் தன்னுடைய மதத்தைத் ஸ்தாபித்துவிட்ட பிறகு, துராமியான் ஒருவனுல் கொல்லப்பட்டு காலமானுர். அவருக்கு ஒரு மனைவி, மூன்று மகன்கள், மூன்று மகள்கள், இருந்ததாகக் கூறப்படுகிறது. தனிமையை நாடி மலைகளில் உள்ள கனி, காய்களையும், பால் பொருள்களையும் உண்டு வாழ்ந்தார்.

சிறுவயதிலிருந்தே எதையும், ஏன், எதற்கு எப்படி என்ற வினுக்குறியோடு ஆராயும் சிந்தனையோட்டம் அவருக்கு இருந்திருக்கிறது.

அவருடைய கருத்துக்களில் உள்ள ஆழ்ந்த தத்துவங்கள் தனித்தன்மை வாய்ந்தனவாகவும் அறிவு விளக்கம் தரும்

வகையிலும் அமைந்திருந்தது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சோரோஸ்திரர் இயற்கையே இறைவன் என்று வழி பட்டார். எப்போதும் "அஹுர மஸ்தா" என்னும் ஒளிமய மான இறைவனையே தேடிக்கொண்டிருப்பதாகக் கூறுவார். தன் மனத்தூய்மை, உயிர்களிடத்து அன்பு, இரக்கம், தயை, ஈகை முதலியவற்றை மனிதர்கள் கடைப் பிடிக்கவேண்டு மென்பார்.

இயேசு கிருஸ்துவிற்கு 10 நூற்றுண்டுகளுக்கு முன்பு, காயவிஷ்டஸ்பன் என்ற ஈரான் அரசன்தான் முதன்முதலில் சோரோஸ்திர மதத்தை ஏற்று, அவனது ராஜ்யத்தில் அதைப் பரப்பினுன். அவனுக்குப் பிறகு, அவன் மகள் சையாக்சரஸ் தன் ஆட்சியை விரிவுபடுத்தி ஈரானின் கிழக்குப்பகுதி, பாக்திரியா ஆகிய இடங்களில் பரப்பினுள்.

சோரோஸ்திரர் உருவ வழிபாட்டை அகற்றினுர். ஆயினும் இந்துமதக் கொள்கைகளுக்கும் சோரோஸ்திரர் கருத்துக்களுக் கும், சிலவற்றில் ஒற்றுமை காணப்படுகின்றது. இந்துக்கள் 'பிரமம்' என்பதை அக்னி அல்லது நெருப்புக் கோளமாகக் கருதுகின்றனர். சோரோஸ்திரர் "அஹுரமஸ்தா" என்ற தன் தெய்வத்தை ஒளிப்பிழம்பாகவே சொல்கிருர். இந்து மதம் எட்டு பிரதான கடவுள்களையும், சோரோஸ்திர மதம் ஏழு தெய்வங்களையும் கூறுகிறது. அஹுரமஸ்தா என்ற மெய்ப் பொருள் ஏழு தன்மைகளைப் பெற்றிருக்கிறது. 1. ஒளி, 2. நன்மை, 3. நேர்மை, உரிமை, 4. அதிகாரம், 5. பக்தி 6. க்ஷேமம், 7. அழியாத்தன்மை. சோரோஸ்திரர் லட்சக் கணக்கான பக்திப்பாடல்களையும் கருத்துக்களையும் எழுதியிருப் பதாகக் கூறுகிருர்கள். ஒளியை தெய்வசக்தி என்றும் இருளை தீயசக்தி என்றும் கருதுகிருர்கள்.

முதல் ஆர்தேஷிர் என்ற அரசன் கி. பி. 226–240ல் இந்த சோரோஸ்திர மதத்தைத் தழுவி விக்ரக உருவ வழிபாட்டை அகற்ற, தீவிரமாக நடவடிக்கை எடுத்தான். சிதறிக்கிடந்த மத நூல்களைச் சேர்த்து வைத்தான். அதற்கு "சேந்த் அவேஸ்தா" என்று பெயர். அதுதான் சோரோஸ்திர மத வேதநூல்.

அஹுரா மஸ்தா என்னும் அவர்கள் தெய்வத்தின் தன்மை— அஹுரா என்றால் தலைவன், 'மஸ்' என்றால் பெரிய 'தா' என்றால் அறிவு—பேரறிவு வடிவான தலைவன் என்பதாகக் கொள்கின் றனர். தலையில் தொப்பியும், மேல் உடம்பில் பைகள் உள்ள 'சாத்ரா'வும், முகத்தின் மேல் 'பேவனும்', இடுப்பரையில் நான்கு முடிச்சுகள் உள்ள 'குஷ்டி'யும் அணிந்து கொள்வார்கள்.

கொடிய, வெறுக்கத் தக்க ஜந்துக்கள், பூச்சிகள், மிருகங் கள் யாவற்றையும் கொன்று, அவற்றின் கெடுதிகளை அகற்று வது தர்மமாகவும், புனிதக் காரியமாகவும் கருதப்படுகிறது. மனிதன் நிலத்தைச் செப்பனிட்டு, உழுது, பயிர்செய்து வாழ்வதும் அறவழி என்று அவர்கள் வேதம் கூறுகிறது. காலமே வாழ்க்கை, காலத்தை வீணாக்குவது வாழ்வை வீணடிப்பதாகும். உலகில் உள்ள அரியவற்றிலெல்லாம் தலையாயது நேரம்தான். அதை விலை கொடுத்து வாங்க முடி யாது.

அவர்கள் மதத்தில் நாய் புனிதமானதாகக் கொண்டாடப் படுகிறது. மனிதனின் பாதுகாவலனாகிய நாய்க்கு, மனிதனுக்கு அடுத்த மரியாதையும், கவுரவமும் அளிக்கிறார்கள். இறந்தவர் களின் சடலம் உள்ள அறைக்கு நாயை அழைத்து வருகிறார் கள். 'சைதித்' என்ற சடங்கு நடக்கிறது. 'நாசு' என்ற தீய சக்தி சடலத்தை தூக்கிக் கொண்டு நரகத்திற்குச் செல்ல வந்திருப்பதாகவும், இந்த நாயைக் கண்டதும் பயந்து அது ஓடி விடுகிறதாகவும் சொல்கிறார்கள். நாயைக் கொல்வது, மனிதனைக் கொலை செய்வதை விட கொடுமையானது என்பது அவர்கள் கொள்கை. அடுத்து 'காகம்', 'எருது' புனிதமான வையாகக் கருதப்படுகிறது.

மாத விலக்கான பெண்கள், மரம் செடிகள் உள்ள இடங் களிலிருந்து, மலைப்பாறைக்கு அனுப்பப்பட வேண்டும். நீர் நெருப்பு, நல்லவர்களிடமிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். அவளுக்கு உணவு வெளியே தரவேண்டும். மூன்று நாட்களுக்கு மாமிச உணவு இல்லாமல் எளிய உணவே

கொள்ள வேண்டும். அவள் தீய சக்திகளுக்கு ஆட்பட்டுவிட்ட தால் தனிமைப் படுத்தவேண்டும்.

சோரோஸ்திர மதம், மனிதர்கள் பிறருக்கு நன்மைசெய்து நல்லவர்களாகவும், தூய்மையாகவும் நடக்கவேண்டும் என்றும் ஒளிப்பிழம்பை வணங்க வேண்டுமென்பதையும் வலி யுறுத்துகிறது.

★

# 6

# கிருத்துவ மதம்

கடவுளுக்கும் மனிதனுக்கும் தொடர்பு படுத்திய யூத மதக் கொள்கைகளை முதலில் கண்டோம். அதிலிருந்து கிளர்ந் ததுதான் இயேசுவின் கிருத்துவமதம்.

ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தார். (மத்தேயு 2:1) பெத்லகேமில் உள்ள ஒரு சத்திரத்துத் தொழுவத்தில் வைக்கோல் பரப்பின் மேல், புள்ளினங்கள் இசைபாட குதிரைகளின் காவலோடு எளிமையாக இயற்கையின் மடியில் அவதரித்தார் இயேசு. தேவகுமாரன் பூலோகத்தில் அவதரித்திருப்பதாக எண்ணங் கொண்ட வான நூலோர் மூவர் தேடிவந்ததாகவும், வரும் வழி யில் ரோடியா மன்னனைக் கண்டு, தலைவனுக்குத் தலைவன் அவதரித்ததை தரிசிக்கச் செல்கிறோம் என்று சொல்ல, தனக்கு மேலும் ஒருதலைவனா என்று பொறாமை கொண்டு, அவ்வரசன் பெத்லகேமிற்குச் சென்று, பல குழந்தைகளைக் கொன்றதாக வும் பைபிள் கதைகள் கூறுகின்றன. தச்சு வேலை செய்து எளிமை வாழ்வு நடத்திய ஜோசப் என்பவருக்கும் மேரி என்ற பெண்ணுக்கும் மகனாகப் பிறந்த இயேசு, தன் குடும்பத் தொழிலைத் தொடர்ந்து செய்து வந்தாலும், அந்த இளமை மனம் இறைவனின் அழைப்பிற்கு ஏங்கியதே தவிர, இல்லற சுகத்தை நாடவில்லை. எழுதவும் படிக்கவும் வாய்ப்பாடமாகவே கற்றார். சிறு பிராயத்திலிருந்தே ஜெருசலத்தில் வருடந் தோறும் நடைபெறும் விருந்து விழாவுக்குச் சென்று வந்த தால், பல தரப்பினர் குழுமி மதக் கருத்துக்களையும் உலக

அனுபவங்களையும் குறித்துப் பேசுகின்ற விவாதங்களை உன்னிப் பாகக் கேட்டும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அதனால் நாளடைவில் அங்கு நிலவி வந்த யூத மதக் கோட்பாடுகளில், அம்மத குருக்களின் போலித்தன்மையும் ஒரு வெறுப்பு உணர்ச்சியை அவருக்குள்ளே தோற்றுவித்ததால் உண்மை அறியும் வேட்கையோடு வீட்டைவிட்டு வெளியேறினர். ஹீப்ரு கலந்த சிரியன் மொழிதான் இயேசுவின் தாய் மொழி. பாலஸ்தீனம் முழுவதும் பிரபலமாகியிருந்த ஜான் என்ற இளைஞனின் உணர்ச்சிவேகமுள்ள எண்ணங்களும், அவருடைய தவக்கோலமும் இயேசுவை ஈர்த்ததனுல், அவர்பின்னே சென்று பல உண்மைகளைத் தெரிந்துகொண்டார்.

இயேசுவைப் பற்றியும், அவர் வாழ்ந்த கால நிலையையும் அறிய ஐந்து பெரிய தொகுப்புகள் உதவியாகின்றன. முதலாவது சுவிசேஷம் என்னும் கிருஸ்துவ மார்க்க உபதேசங்களும், புதிய ஏற்பாடு என்கிற மதநூல்களும், இரண்டாவது, அபோகிரைஃபி என்று சொல்லப்படும் கட்டுரைகள், மூன்றாவது, பிலோ எழுதியவை. மதவேட்கை கொண்ட மக்களுக்குப் பல கருத்துக்களை வழங்கும் தன்மை ஃபிலோவின் எழுத்துக்களில் காணப்படுகிறது. ஜோசப்பஸ் எழுதியவை சமயவாதத்தன்மை கொண்டவை. தேவபக்தர்கள் விரும்புபவை. யூதர்கள் கொண்டாடும் பழைய ஏற்பாட்டு தொகுப்புநூல் ஆரம்ப முக்கியத்துவம் வாய்ந்தவையாக, அக்கால நிலையைக் காட்டும் கண்ணாடியாக இருக்கிறது. கடவுளின் ராஜ்யம் என்று கூறும் சொர்க்கத்தைப் பற்றி முதலில் விளக்குவது பழைய ஏற்பாடு.

சுவிசேஷம் என்னும் கிருஸ்துவ மார்க்க உபதேசங்கள் கி. பி. முதல் நூற்ருண்டின் பிற்பகுதியில் தொகுக்கப்பட்டதாகும். அமானுஷ்ய சக்திகளைப் பற்றியும், அற்புத மாயங்களைப் பற்றியும் அதிகம் அவை விவரிக்கின்றன. சுவிசேஷங்களின் அதிகாரங்கள் அவற்றை உபதேசித்தவரின் பெயரில் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது, மத்தேயு, மார்க், லூயூக், ஜான் முதலிய பெயர்களில் உள்ளன. இவற்றில் லூயூக் உபதேசங்கள் என்பன பழைய நூல்களை ஆதாரமாக கொண்டவை.

மார்கிக்கின் எழுத்துக்கள் அபோஸ்தலர் பீடரின் வாதங்களை விளக்குகின்றன.

கிருஸ்துவன் என்ற சொல்லிலே எளிமை, மன்னிக்கும் குணம், ஈகை, பரோபகாரம் போன்ற தர்மங்கள் அடங்கியிருப்பதாகக் கூறுவர். "நீ எதை விரும்புகிறாயோ அதையே பிறருக்குச் செய்" என்பதுதான் அடிப்படை.

ஆன்மீக வேட்கையில் அலைந்து பல உரிய உண்மைகளை தனக்குள்ளேயே ஆராய்ந்து தெளிந்த இயேசு, அவற்றை மக்களுக்குச் சொல்ல ஊர் ஊராகச் சுற்றினார். மக்களை பொது இடங்களில் சந்தித்தார்; சொற்பொழிவு செய்தார்.

மோசசின் உபதேசங்களை ஆதாரமாகக் கொண்டு, யூதர்கள் கொண்டாடிய பழைய ஏற்பாடுகளில் உள்ள கருத்துக்களை மறுத்து பல வகையில் இயேசு, மாறுபாடான கருத்துக்களை, மக்களின் அறிவுத் தெளிவுறும் முறையில், புரட்சிகரமாகவே வலியுறுத்தி வந்திருக்கிறார். பழைய ஏற்பாடுகளில் 'அடுத்தவனை நேசி' ஆனால் எதிரியைப் பழிவாங்கு' என்ற தத்துவம் போதிக்கப்பட்டது. 'அன்பே அனைத்திற்கும் அடிப்படை' என்ற கொள்கையுடைய இயேசு அதை மாற்றினார். (மத்தேயு 43–48) 'அடுத்தவனை நேசி, எதிரிகளைப் பழி வாங்கு என்று சொன்னார்கள். ஆனால் நான் சொல்வேன், உன் எதிரியிடமும் அன்புகாட்டு—நேசி, உன்னைச் சபிப்பவர்களை ஆசீர்வாதம் செய். உன்னை வெறுப்பவர்களுக்கு உதவி செய். உன்னைத் தூற்றுபவர்களைப் போற்று' என்கிறார். மனிதன் வெளிக்கு நல்லவனாகத் தெரிந்தாலும், மனத்திலே தீயவனாகி விடுகிறான். மனத் தூய்மையையே பரமபிதா விரும்புகிறார் என்பார்.

ஒரு சமயம் வீதியில்செல்லும்போது ஒருஇளம்பெண்ணைச் சுற்றிச் சிலர் நின்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் ஓநாய்களின் மத்தியில் புள்ளிமான்போல மிரண்டுஅலறுவதைக் கண்ட இயேசு, அங்கே போய் விசாரித்தார். அவர்கள், 'பழைய ஏற்பாட்டில் கூறியுள்ளபடி

நடத்தை கெட்ட இந்தப் பெண்ணை நடுவீதியில் நிறுத்தி, ஒவ்வொருவரும் கல்லெறிந்து அவளைக் கொல்லப் போகிறோம்'' என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி, ''கனவான்களே, பழைய ஏற்பாட்டின்படியே செய்யுங்கள். (மத்தேயு 5-28) நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும், தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று. அப்படி செய்யாதவன் யாராவது இருந்தால் இவள்மீது கல்லெறியுங்கள்'' என்றார். கூடியிருந்த கூட்டத்தில் ஒவ்வொருவரும் அக்குற்றத்தைச் செய்தவர்கள் என்று எண்ணியதும் கலைந்தனர். அப்பெண் மன்னிக்கப்பட்டாள்.

தேவாலயங்கள் மக்களின் வழிபாட்டு இடமாக மட்டுமல்லாமல், காசு நடமாடும் வியாபார நிலையமாக மாறி, கறைப்பட்டுக் கிடப்பதைக் கண்டு இயேசு குமுறுகிறார். பலியிடுவதற்கான புள்ளினங்களும் அவற்றை விற்போரும் தரகர்களும் நிறைந்திருந்த ஆலயங்களில் புகுந்து இயேசு அவர்களை விரட்டுகிறார். (மத். 21–13) ''என்னுடைய வீடு ஜெப வீடு என்று எழுதியிருக்கிறது. நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்'' என்று வெகுண்டார். சமுதாயத்தில் நிலவியிருந்த ஏற்றத் தாழ்வுகளை அவர் வெறுத்துப் பேசினார், தாழ்ந்தவர்களை ஒதுக்கி வைத்த சமுகத்தைச் சாடினார். (மத்தேயு 9–11) உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன என்று கேட்டார்கள். (மத்.–12) இயேசு அதைக் கேட்டு பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு அல்ல என்று கூறுவதாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டின்படி ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நாள் என்றும் அன்று யாரும் எதுவும் செய்யக்கூடாது என்றும் ஒரு மூட நம்பிக்கை நிலவி வந்ததைக் கண்டிக்கிறார். ''ஒரு குழந்தை கிணற்றில் விழுந்து விட்டால் ஞாயிற்றுக்கிழமை என்று சும்மாயிருப்பீர்களா'' என்று கேட்டார். குழந்தைகளை அதிகமாக நேசித்து, ''குழந்தைகள் எல்லோரும் என் அரண்மனைவாசிகள். நீங்கள் அவர்களுடைய மனதைப் பெற்றால்தான் என் அருகில் அமர முடி

யும்'' என்று உபதேசித்தார். பழைய ஏற்பாட்டுக் கருத்துக் களையும் இவருடைய கொள்கைகளையும் ஒன்றாக்க முனைந்த போது, 'புதிய துணியும் பழைய கந்தலையும் சேர்த்து தைக்க எண்ணுகிறீர்கள். முழுத்துணியும் வீணாகும்' என்று மறுத்தார். கடவுளை நம்பிக்கொண்டிருங்கள் என்று சொன்ன இயேசு, 'எதற்கெடுத்தாலும் சோம்பேறியாக கடவுள் நம்பிக்கையே சோறுபோடும் என்று இருக்காதீர்கள்' என்கிறார். (ஜேம்ஸ் 14–22) ''அதனால் என்ன லாபம்? சகோதரனே அந்த நம்பிக்கை அவனைக் காப்பாற்றுமா? உன் சகோதரனோ, சகோதரியோ உடையின்றி நிர்வாணமாகவும் உணவின்றி பட்டினியோடும் இருக்கக்கண்டு, நீ தேவனின் மீது நம்பிக்கை வை என்று போதிப்பதால் அவர்கள் உடல் மறைக்கப்பட்டுவிடுமா? வயிறு நிரம்புமா? அவர்களுக்காக நீ வேலை செய்ய வேண்டாமா? உதவுவது அவசியமல்லவா; உழைப்பே கூலி கொடுக்கும்'' என்று கூறுகிறார்.

மனித வாழ்க்கைக்குத் தேவையான அவருடைய உபதேசங்கள் இன்று உலகில் பெரும்பகுதியில் பரவி வாழ்கின்றன.

''உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்'' (மத். 6-21)

''நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பை பார்க்கிறதென்ன?'' (மத். 7–3)

''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டு அடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.'' (மத். 7–7)

''தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' (மத். 23–12)

''மனிதர்களுக்குச் செய்யும் சேவையே பரமபிதாவுக்குச் செய்யும் தொண்டு''

"ஊசியின் துவாரத்தில் ஒரு ஒட்டகம் நுழையலாம்; ஆனால் தேவனின் பரமண்டல வாயிலில் ஒரு பணக்காரன் புக முடியாது"

இயேசு தன் சீடர்களுக்கு உபதேசித்த ஜெபம்:

(மத்: 6–9) "நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே." ஆமென் என்பதே.

இயேசுவின் சீடனாக விரும்புகிறவர்கள் முதலில் அவர்களது சொத்துக்களை விற்று ஏழை எளியோருக்கு தானம் செய்துவிட்டே வரவேண்டும். இயேசுவின் சீடர்கள் 12 பேரில் ஆண்ட்ரூ, பீட்டர், ஜேம்ஸ், ஜான் என்ற நால்வரும் மிகவும் பிரியமானவர்கள்.

நீண்டகாலமாக நிலவிவரும் மூடப்பழக்கங்களை சுட்டிக் காட்டி மக்களை சிந்திக்கத் தூண்டிய இயேசு, அக்காலத்தில் ஒரு புரட்சி வீரராக மக்களுக்குத் தென்பட்டார். யூதர்களுக்குத்தான் மதம், மற்றவர்களுக்கு இல்லை என்று சொன்னவர்களை மறுத்து, நான் மனித சமுதாயத்திற்கே உபதேசிக்கிறேன். யூதர்களுக்கு மட்டுமல்ல என்றார். மேல்மட்டத்தில் உள்ளவர்களே சொந்தம் கொண்டாடிய தேவாலயங்களைச் சமுதாயச் சொத்தாக்க வேண்டுமென்ற இயேசுவின் கருத்துக்

கள் யூதர்கள் மத்தியில் வெறுப்பைத் தோற்றுவித்தது. இயேசுவின் அருள் வடிவும், எளிமை வாழ்வும் அன்பு மனமும் மக்களை ஈர்க்கும் விதத்தைக் கண்ட சிலர் பொறுமை கொண்டு அவர், மீது அவதூறுகளைப் பரப்பினர்.

அழுக்காறு கொண்ட ஒரு யூதர்கள் கூட்டம் சதி செய்து அவரது முடிவுக்குக் காரணமாயிற்று. "ஒரு மனிதனின் சாவு, பல மக்களின் துன்பங்களிலும் மேலானது" என்று அடிக்கடி சொல்லி வந்த அன்னாஸ் என்பவன், அச்சதி நாடகத்தில் கதாநாயகனாக மாறினான். இயேசுவின் சீடர்களிலே ஒருவனான ஜூடாஸ் என்பவன் துரோகியாக மாறி ஒருசில வெள்ளிக் காசுகளுக்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.

ஒலிவ் மலையில் சீடர்கள் அயர்ந்த தூக்கத்தில் இருக்கும் இரவில், ஜெபம் செய்த வேளையில் காட்டிக்கொடுத்த ஜூடாசின் பின்னே ஆயுதம் தாங்கிய காவலர்கள் புகுந்து இயேசுவைச் சூழ்ந்தனர். அவரைக் கைது செய்து வழக்கு மன்றத்திற்கு இட்டுச் சென்று விசாரிப்பதுபோல நாடகம் நடத்தினர். 'கடவுளின் புனிதத்தைக் கெடுக்கவே நீ உபதேசம் செய்கிறாய். நீ கடவுளின் குமாரன் என்று பொய் சொல்கிறாய். தேவலயத்தை இடிப்பேன் என்று பாவ வார்த்தை பேசினாய் என்பதாக இப்படி அனேக குற்றங்களைச் சாட்டி விசாரித்து, மரண தண்டனை விதிப்பது என்று முடிவு செய்தனர். அம் முடிவை ஊர்ஜிதம் செய்யவேண்டியவன் பிலாத்து என்னும் மன்னன். அவன் முன்னே இயேசு இழுத்துவரப்பட்டார்' அவருடைய அருள் வடிவையும் சாந்தத் தன்மையையும் கண்ட பிலாத்தே அவருடைய கருத்து என்னவென்றான். "பரலோக ராஜ்யத்தை உருவாக்குவதே என் நோக்கம். என்னுடைய ராஜ்யம் பரமண்டலமே" என்றார் இயேசு. இவர் ஒரு கற்பனாவாதியே தவிர, குற்றவாளி அல்ல என்று முடிவு செய்த பிலாத்தே, அவரை வ்டுவிக்க எ்ண்ணி மக்களின் முன்னே சொன்னான்: திருவிழாக் காலத்தில் மக்கள் முன்னே குற்றவாளியை நிறுத்தி அவர்களை விடுவிக்கலாமா என்று கேட்டு, மக்கள் விடுவிக்கச் சொல்பவர்களை விடுதலை செய்யும் வழக்கம்

இருந்ததால், அப்படியே செய்ய நினைத்த பிலாத்தே இயேசுவைப் பற்றி கேட்டார். முன்பே அன்னாஸ் போன்ற சதிகாரர்களால் தூண்டிவிடப்பட்ட கூட்டம் 'அவனைக் கொலை செய், கொலை செய், என்று கூச்சலிட்டனர். (மத்தேயு 27–24) கலகம் அதிகமானதே அல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லை என்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, 'இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், என்று சொல்லிப் போய்விட்டான்.

தண்டனை ஊர்ஜிதமாகியது என்று கண்ட சதிக்குழு, அவரது மேலாடைகளை அவிழ்த்து, செந்நிற அங்கியை அணிவித்தனர். கசைவாரினால் இயேசுவின் பொன்னுடம்பு இரத்தமயமாகியது. முள்ளினால் பின்னிய முடியை அவர் தலைமீது சூடி மகிழ்ந்தனர் கொடுமையாளர்கள். அவருடைய அன்புக்குரியவர்கள் கண்ணீர் மல்கினர். அறிவு மழுங்கிய யூதர்கள் அவர் மீது எச்சிலைத் துப்பினர். (மத். 27–33) கபாஸ்தலம் என்று அர்த்தம் கொள்ளும் கொல்கொத்தா என்னுமிடத்திற்கு சிலுவையைச் சுமந்தவாறு இயேசு இழுத்துவரப்பட்டார். உலகின் இருளை போக்குவேன் என்று முழக்கமிட்ட அந்த அருள் ஜோதியின் உடல், மரச் சிலுவையிலே இருகைகளும் விரிய வைக்கப்பட்டு ஆணியால் அறையப்பட்டது. ஆத்மீக உலகம் அலறித் துடித்தது. ஆணவக்காரர்கள் ஆனந்தமடைந்தனர். மனிதனின் மன இருள் அகற்ற வந்த மனிதருள் மனிதர், மனிதனாலேயே தண்டிக்கப்பட்டார். அன்பு நிறைந்த உள்ளத்திலே ஆணி பாய்ந்தது. சுற்றி நின்று சிரிக்கின்ற கொடுமையாளர்களைக் கண்டபோதும் அவர் மனம் ஆத்திரப்படவில்லை. (லூக்கா "23-34) "கர்த்தரே, அவர்கள் அறியாமல் செய்யும் இக்குற்றத்திற்காக இவர்களை மன்னியுங்கள்" என்று வேண்டிக் கொண்டது அந்த அன்பு நெஞ்சம். சிலுவையின் பாதங்களைக் கண்ணீரால் கழுவியவாறு முடங்கிக்கிடக்கும் தன் அன்னை மேரியையும், சீடன் ஜானையும் ஒரு ஈனக்குரல் அழைத்தது. "ஜான்! உன் அன்னையைக் கவனித்துக்கொள். அம்மா! உன் மகனைப் பார்த்துக்கொள்"

(மத்தேயு 27–46) ஒன்பதாம் மணிநேரத்தில் இயேசு, "ஏலீ! ஏலீ!! லாமா சபக்தானி" என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு, "என் தேவனே! என் தேவனே!! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

கடவுள் கைகொடுக்கவில்லை என்ற ஏக்கத்துடனேயே இயேசு தன் உயிரை மாய்த்திருக்கிறார் என்பது தெரிகிறது. உலகில் தோன்றிய சிந்தனையாளர்கள், அறிஞர்கள், தத்துவ மேதைகள் எல்லோருக்கும் கிடைக்கிற, மனித சமுதாயம் அளிக்கின்ற பரிசுக்கு இயேசுவின் முடிவும் ஒரு சான்றாக சரித்திரத்தில் நிலைத்துவிட்டது. பழைமையைச் சாடி புதுமையைப் புகுத்த விரும்பும் எவருக்கும் உலகில் எதிர்ப்பு உண்டு என்பதைத்தான் வரலாறு நமக்குக் காட்டுகிறது.

இயேசுவின் மறைவிற்குப் பிறகு அவரது சீடர்கள் அக் கொள்கையை உலகெங்கும் சென்று பரப்பினார்கள். நாளடை வில் அதனுள்ளே பல கருத்து வேறுபாடுகள் தோன்றி கத்தோலிகர்கள் என்றும் பிரொட்டெஸ்டெண்ட் என்றும் பெந்தகோஸ்ட் என்றும் பல பிரிவுகள் ஏற்பட்டன. கான்ஸ்டன்டைன் என்ற ரோம ராஜ்யத்தின் சக்ரவர்த்தி கிருஸ்தவ மதத்தைத் தழுவிய பிறகு பிஷப்புகள் என்ற மதத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ரோம் நாட்டில் அவர் களது ஆட்சி நடைபெறுவதாக உள்ளது. மதத் தலைவர்கள் பிஷப்புகள் என்றும் போப் என்றும் பெயரிடப்படுகிறார்கள். கிருஸ்துவ மதம் ஒரு தனி மதமாகி உலகில் பரவியது என்றாலும் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் பாதிரி கள் செய்த மருத்துவ, கல்வித்தொண்டினை நாம் மறக்க இயலாது. ஆங்கிலேயர்களின் ஆட்சி கிருஸ்துவ மதம் இங்கே பரவுவதற்குத் துணை செய்தது என்றாலும், இயேசுவின் பெயரால் தோற்றுவிக்கப் பெற்று, இன்று மக்களுக்குத் தொண்டாற்றி வரும் எண்ணற்ற கல்வி நிலையங்களும் மருத்துவ மனைகளும் நம் மக்களுக்குப் பேருதவியாக விளங்கு கின்றன என்பதை நாம் நன்றியுணர்வோடு நோக்குவோமாக.

# 7

## யூத மதம்

சினய் மலைச் சிகரத்தில் அலைந்தபோது தனக்கு புலனான சில அரிய ஆத்மீக கருத்துக்களை 'மோசஸ்' யூதர்களுக்கு அறிவித்தான். முற்காலத்தில் எகிப்து நாட்டை ஆண்ட 'பரோ' மன்னன் ஒருவனுடைய மகளுக்கு வளர்ப்புப் பிள்ளையாக இருந்தவன் இந்த மோசஸ் என்கிறது பைபிள். ஒரு சமயம் இவருடைய தந்தை ஆப்ரகாம் சுதந்திர வேட்கை கொண்டு 'உரு' என்ற ராஜ்யத்தை விட்டு வெளியேறி, 'கேன்னன்' என்ற செழிப்பான பகுதிக்கு வந்தார். அவருடன் வந்த மக்களுக்கு வீரம் மிகுந்து வலிமை பெருகும் காலம் வரை அங்கேயே வாழ்ந்தார்கள். கடைசியில் 'பரோ'க்கள் வாழும் நாட்டிற்கு வந்து வறுமையை அனுபவித்தனர். இந்த மக்களின் வரலாறு மோசஸைக் கவர்ந்தது. ஒரு நாள் எகிப்தியன் ஒருவன் இந்தக் கூட்டத்தில் உள்ள யூதனை இரக்கமின்றிச் சாட்டையால் அடிப்பதைக் கண்டு ஆத்திரப்பட்ட மோசஸ் தன் ஈட்டியால் அந்த எகிப்தியனைக் கொன்றுவிட்டான். எதிர்பாராத இந்த நிகழ்ச்சி மோசசின் மனதை மிகவும் வாட்டியதால், மன அமைதி வேண்டி, பாலைவனத்திற்கு ஓடி, அங்கே சுற்றியலைந்தபோதுதான் மோசஸ் மெய்யறிவு பெற்றதாகக் கூறப்படுகிறது. தனித்துப் பாலைவன மணற்பரப்பிலே சுற்றிக்கொண்டிருந்தாலும் எகிப்து நாட்டில் கசையடி பட்டுக்கொண்டு வாழும் அடிமை யூதர்களை அவனால் மறக்க முடியவில்லை. அவர்களை அக் கொடுமையிலிருந்து மீட்டு ஒன்று சேர்த்து, சுதந்திர மனிதர்களாக்கி, அவர்களுக்கென்று

ஒரு தனி நாடும், தனி மதமும், கடவுளும் உருவாக்கத் திட்டமிட்டான் மோசஸ். அதன் விளைவாக மீண்டும் எகிப்தில் நுழைந்து, அங்குள்ள அடிமைகளைச் சந்தித்துப் புரட்சி செய்யுமாறு தூண்டினன். அதனுல் 'பரோக்கள் மனம் மேலும் கடுமையாகி அடிமைகளுக்கான தண்டனை மிகுதிப்பட்டது. பிறகு கொள்ளைநோய் வந்து பல அழிவுகளை எகிப்தில் உண்டாக்கிய சமயம், மோசஸ் யூதர்களை எகிப்தை விட்டு வெளியே அழைத்துச் சென்முன்.

யூதர்களுக்குப் புது ஆத்மீக பலத்தையும் ஒழுக்க நியதிகளையும் நிரந்தரமான வாழ்க்கையையும் அமைத்துத் தர வேண்டுமென்ற ஆசை மோசசின் மனதில் கொழுந்து விட்டெரிந்தது. இதற்காக சினுய் மலைக்குச் சென்று அங்கிருந்தபடி தன் மக்களுக்குப் பத்துக் கட்டளைகளைப் பிறப்பித்தான் அது தான் பிரபலமான 'பத்துக் கட்டளைகள்' என்பதாகும்.

1. நான்தான் தலைவன்—உங்களை எகிப்திலிருந்து அடிமைத் தளையை அகற்றி விடுதலை அளித்த கடவுள்.

2. எனக்கு முன்பு உங்களுக்குக் கடவுள் இல்லை. என்னைத் தவிர வேறு கடவுள்களை வணங்கவோ, சேவை செய்யவோ சொர்க்கத்திலும், பூமியிலும், நீருக்கடியிலும் தேடினுலும் கிடையாது. எனது பத்துக் கட்டளைகளைப் போற்றவேண்டும்.

3. தலைவனின்—கடவுளின் பெயரை வீணுக்குப் பயன் படுத்தினுல் அவனைக் கடவுள் மன்னிக்கமாட்டார்.

4. ஓய்வு நாளைப் புனிதமாகக் கொள்ளுங்கள். ஆறு நாட்கள் உங்கள் வேலையை, தொழிலை செய்யுங்கள். ஏழாவது நாள் கடவுள் சொர்க்கத்தையும், உலகையும், கடலையும் படைத்த களைப்புத் தீர ஓய்வெடுக்கும் நாள். அன்று ஓய்வெடுங்கள். கடவுள் ஆசீர்வதிப்பார்.

5. உங்கள் தந்தையை, தாயைக் கௌரவியுங்கள். கடவுள் உங்கள் ஆயுளை வளர்ப்பார்.

6. கொலையில் ஈடுபடாதீர்கள்.

7. கலப்படம் செய்யாதீர்கள்.

8. திருடாதீர்கள்.

9. அடுத்தவனுக்கு எதிராகப் பொய்சாட்சி சொல்லாதீர்கள்.

10. அடுத்தவனின் வீடு, மனைவி, பணியாள், பணிப் பெண், எருது, கழுதை எதிலும் ஆசை வைக்காதீர்கள்.

மோசசின் இந்தப் பத்துக் கட்டளைகள்தான் யூதர்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்ற வேதமாகும். தெய்வ காணிக்கை, சம்பிரதாயம், சடங்கு எதுவுமற்ற எளிமையான கடவுள் வழிபாடும், தொண்டும்தான் மோசசின் உபதேசம்.

தனி இனமாக, தலைமை வாரிசு முறையில் பலகாலம் வாழ்ந்த யூதர்களின் முதல் மன்னன் 'சாவுல்'. அவனுக்குப் பிறகு டேவிட்டும், அவன் மகன் சாலமனும் ஆண்டார்கள். சாலமன் காலத்தில் ஜெருசலத்தில் செல்வத்தைப் பெருக்கினன். யூதர்கள் போற்றும் தேவாலயம் சாலமனல் ஜெருசலத்தில் கட்டப்பட்டதாகும். அந்தக் கோயில் பாபிலோனியர்கள் படையெடுப்பினுல் எரித்துத் தரை மட்டமாக்கப்பட்டது. பர்சிய சக்கரவர்த்தி சைரஸ், பாபிலோனியாவில் வெற்றி முழக்கத்தோடு நுழைந்தபிறகு யூதர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டதால், மீண்டும் ஜெருசலம் புதுப் பொலிவு பெற்றது. கோவில் புதுப்பிக்கப்பட்டது. பழைய ஏற்பாடுகள் என்று கிருத்தவர்களால் சொல்லப்படும் வேதநூலின் முதல் ஐந்து புத்தகங்கள் யூதர்களின் ஆதிவழி நூலாகக் கருதப்படுகின்றன. யூதர்களின் மதக் கோட்பாட்டின் அடிப்படை பைபிள். மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பையும் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்களையும் அது கற்பிக்கிறது. பைபிள் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1. சட்டம் 2. தீர்க்க தரிசனம் 3. பிரபந்தம்.

சட்டம் என்பது மோசசின் 5 புத்தகங்கள். உலக உற்பத்தி பற்றிய கதைகளும், சட்டத்தை உருவாக்கியவரின்

கடைசி நாட்கள் பற்றியும் கூறுவது. எழுத்து வடிவில் உள்ள இச் சட்டம் மனித வாழ்க்கையைப் பற்றிக் கூறும் 163 அதிகாரங்களைக் கொண்டது.

தீர்க்க தரிசனம் என்பது சரித்திர புத்தகங்களும், தீர்க்க தரிசிகளில் உரைகளுமாகும். அவை இரண்டாகப் பிரிந்துள்ளன.

மூன்றாவதான பிரபந்தம் என்னும் மற்ற எழுத்துக் கோர்வையில் பிரசித்தி பெற்ற சாலமன் போன்ற மன்னர்களின் கதைகள், பழமொழிகள், அறவுரைகள் பாடல்கள் அடங்கியுள்ளன.

## யூதமதத் தத்துவம்

கடவுள் உலகத்தைப் படைத்தார். அதன் முன்னேற்றத்தை மனிதனிடம் ஒப்படைத்தார் என்பது. பைபிள் பொதுத் தொண்டு, இரக்கம், நல்லன செய்தல் ஆகியவை பொது நியதி. கடவுள் நல்லதே செய்வார், நியாயமே அவரது செய்கை. மனிதன் தன் நேர்மையான நடத்தையின் மூலம் கடவுளின் பிரியத்திற்குப் பாத்திரமாகி அவருடைய வேலைக்குத் துணையாகிறான். மனித வாழ்க்கையின் உண்மைக் காரணம், பலனை எதிர்பாராமல் தீய சக்திகளை அழித்து நன்மைகளைச் செய்யும் கடவுளுக்குத் துணையாக இருப்பதாகும். கறைபடாத கரங்களும், தூய இதயமும் உள்ளவர்கள் கடவுளின் அருகில் இருக்க அருகதையுடையவர்கள். அனாதைகளுக்கும் பலவீனர்களுக்கும் கடவுள் துணையாக இருக்கிறார். அடுத்தவனைத் தன்போல் நேசிக்கவேண்டும். யாரையும் வெறுக்காதிருக்க வேண்டும். பழிவாங்கும் நோக்கம் கூடாது. குரோதம் உதவாதது. அடுத்தவன் எல்லாம் சகோதரன், மனதாலும், வாக்காலும் யாருக்கும் தீங்கு எண்ணக்கூடாது.

சத்தியமே கடவுளின் முத்திரை. கிடைத்ததைக்கொண்டு திருப்தி கொள்பவனே செல்வந்தன். கடவுளின் தண்டனைக்கு அஞ்சாமல் அவரிடம் உள்ள பிரியத்தால் சரணடைந்தால் அடைக்கலம் உண்டு.

## யூதர்கள் கருதும் பாவங்கள்

ஆடம்பரம்; எளியோர், விதவை, அனாதைகளை வதைத்தல், மற்றவர் பொருளை நீதியற்ற முறையில் அபகரித்தல், வியாபாரத்தில் மோசடி செய்தல், லாபத்திற்காக பணத்தாசை கொள்ளல், கடன்காரர்களிடம் கொடுமையாக நடந்து கொள்ளுதல், இதுபோன்ற நன்மையல்லாதவை பாவம்.

யூதமதம், உலக வாழ்க்கையிலிருந்து விலகி ஓடி, சாமியாராவதை அனுமதிக்கவில்லை.

வாழ்க்கை என்பது சாபத்தால் வந்த பாவமல்ல. உலகம் வளரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் கடவுள் உலகைப் படைத்தார். தெய்வீக காரியங்களை ஒழுங்காக நடத்துவதற்குத் தனக்குத் துணையாக இருக்கும் வகையில்தான் மனிதர்களுக்கு நல்ல பண்புகளை இறைவன் அருளியிருக்கிறான்.

உபயோகமுள்ள இந்த உடலை வருத்திக்கொள்வதால் மேன்மையில்லை. பொறுமை, அன்பு ஆகியவற்றைப் பழக வேண்டும். தன்னை வென்றவனே—தன் ஆசைகளை அடக்கியவனே வீரன்.

சொர்க்கத்தின் ஆட்சியை உருவாக்கவும், இந்தப் பூவுலகில் தெய்வக் காரியங்களை நிறைவேற்றவும், தெய்வ நியதியை ஒழுங்குப்படுத்தவும் கடவுளின் விருப்பத்தில் தோன்றியது யூதமதம் என்பது அவர்கள் கொள்கை.

தன்னைக் காத்துக்கொள்; தன்னைத் திருத்திக்கொள்; தன்னை முழுமையாக்கிக்கொள்.

யூதர்கள் மறுபிறப்பிலும், தேவதைகளின் பேரிலும் நம்பிக்கை உள்ளவர்கள். ஒவ்வொரு மனிதனின் செய்கைகள் தீர்ப்புநாளில் முடிவெடுக்கப் படுவதாகவும், அதன்பிறகு அவர்கள் நரகத்தின் பாலத்தைக் கடக்க வேண்டுமென்பதும் அவர்கள் கருத்து. ஒரு விதை மரமாகி பல விதைகளைத் தருவது போல மனித உயிரையும் உவமிக்கிறார்கள்.

யூத மதம், சடங்குகள் நிறைந்ததாகவும் ஆத்மிக வலிமை குறைந்தது என்றும் ஒரு சாரார் கூறுவர். அப்படிச் சொல்வதற்கில்லை. அக்கால தீர்க்கதரிசிகள் சம்பிரதாய, சடங்குகளை அறவே வெறுத்தனர். தீர்க்கதரிசி ஐசய்யா பேசுகிறார்: "நான் இரக்கத்தைத்தான் விரும்புகிறேன், கடவுள் பெயரால் பலியிடுவதை அல்ல. கடவுளே கேட்கிறார். எதற்காக இப்படி பலியிடுகிறீர்கள்? எனக்குக் கொழுத்த விலங்குகளிலிருந்து ஆகாரம் கிடைக்கிறது. எருதுகளின் இரத்தமோ, ஆட்டுக்குட்டிகளின் சதையோ எனக்கு விருப்பமானதல்ல. உங்களைக் கழுவுங்கள், கரங்களைத் தூய்மை படுத்திக்கொள்ளுங்கள். என் கண்முன்னே இந்தக் கொடுமையைச் செய்யாதீர்கள். நியாயத்தைத் தேடுங்கள். ஒடுக்கப்பட்டவர்களை மீளுங்கள். தாய் தந்தையற்றவர்களை ஆதரியுங்கள். விதவைக்காக வாதிடுங்கள்."

யூதர்கள் வாழ்க்கையில் சடங்குகள் அதிகமாகக் காணப்பட்டாலும் பைபிளில் கூறப்பட்ட ஓய்வு நாள், திருவிழாக்கள், கணக்கற்ற பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் யாவும் மதத்தை வெளிவுப்படுத்தும் புறச் சின்னங்களாக கருதப்பட வேண்டியவையாகும். ஓய்வு நாள் என்பது 'சாபத்' என்கிறார்கள். புகழோடு வாழ்ந்த பெரிய மனிதர்களின் நினைவாகக் கொண்டாடப்படும் நாட்கள் திருவிழாக்களாகின்றன. நினைவு நாள் அல்லது புத்தாண்டு தினம் என்பது கழிந்த ஆண்டின் செய்கைகளை நினைவு கூறவும் புத்தாண்டுத் திட்டங்களை வகுக்கவும் கொண்டாடப்படுவதாகும். மன்னிப்புத் தேடும் நாள் என்பது, தான் செய்த தீய காரியங்களை எண்ணி பட்டினி கிடத்தலும் கடவுளை நினைத்து பிரார்த்திப்பதுமாகும்.

தீர்க்கதரிசிகள் அடிக்கடி சொன்னதைப்போல, 'சடங்கு சம்பிரதாய ஒழுங்குகள் மக்களை ஒன்றுசேர்க்கவும் தேசத்தை ஒன்றுபடுத்தவும் ஏற்படுத்தப்பட்டதே' என்பது யூதர்களின் மத நம்பிக்கையாகும்.

## புரட்சி செய்த பேனு வீரர்கள் ;

# 1. ரூசோ

"மனிதர்கள் எங்கும் சுதந்திரமாகவே பிறக்கிறார்கள். ஆனால் என்றும் தளைகளால் பூட்டப்பட்டிருக்கிறார்கள்." என்று சொன்னவன் ரூசோ. மன்பதையை தட்டி எழுப்பி மகத்தான பிரெஞ்சுப் புரட்சிக்கு, எழுத்துக்கள் என்ற வல்லமை மிக்க வெடி குண்டுகளால் சமுதாய ஒப்பந்தம் (Social contact) என்ற நூலை ஆக்கித் தந்தவன் ரூசோ. அவன் எழுதிய சமுதாய ஒப்பந்தம் என்ற நூலையும் எமிலி என்ற தலைப்பில் கல்வியைப் பற்றிய நூலையும், எதிர்மறைக் கருத்துக்களைப் பொறுக்காத பிரஞ்சு அரசாங்கம், பாரிஸ் நகரத்தின் உயர்நீதி மன்றத்தின் மூலம் கொளுத்த ஆணையிட்டும். அந்த நூல்களை யார் படித்தாலும் யார் வைத்துக்கொண்டிருந்தாலும் இந்தத் தீயில் கொண்டுவந்து போடவேண்டும் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் சொன்ன சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் என்ற குரல் வான்முட்ட வையமெல்லாம் கேட்ட வண்ணமுள்ளன.

அவனைச் சுதந்தரத் தந்தை என்றனர் அறிஞர்கள். மனித இனம் எங்கோ தொலைத்துவிட்டிருந்த சுதந்தரத்தைத் தேடித் தந்தவன் ரூசோ என்று பாராட்டினர் பல்லோர்.

"மனிதர்களைப் பற்றி சிந்திப்பது மனிதர்களின் கடமை" என்று சாக்ரடீஸ் சொல்லியதைப் போல மற்றெல்லாரையும் விட மனிதர்களைப் பற்றி அதிகம் சிந்தித்தவன் ரூசோ. சிந்தித்த

"தோடு நில்லாமல் மக்களைச் செயல்படத் தூண்டினான். மக்களுக்கு மதகுருக்கள் துணை; மதகுருக்கள் மன்னனுக்குத் துணை; மன்னனுக்கும் மதகுருக்களும், ஆண்டவனும் துணை; அப்படியென்றால் ஆண்டவனுக்கு யார் துணை? ஆண்டவனுக்கும் ஒரு துணையிருக்குமானால் இதோ இந்த சேரியிலும், சகதியிலும், நோயிலும், பசியிலும், வாடி வதங்கி எலும்பும் தோலுமாய் நடமாடும் பிரேதங்களாக இருக்கிறார்களே இந்த அவல நிலையை ஆண்டவன் ஒப்புக்கொள்ளுகிறாரா? ஒரு சிலரை பணக்காரர்களாகவும், மிகப்பலரை ஏழைகளாகவும் காலமெல்லாம் வைத்திருக்கும் அதிகாரத்தை ஆண்டவனுக்குத் தந்தவன் யார்? விதி என்பீர்களாயின் அதன்படியே நடக்கட்டும் என்று அனுமதித்த கயவன் யார்? உழைத்த மக்களைப் பட்டினிபோட்டு, உழைக்காத சோம்பேறிகளை உயர்த்தி உப்பரிகையிலே வாழவைத்த உலுத்தன் யார்? ஏன் இந்த நிலை என்று கேட்டால் பாஸ்டிலி என்ற பயங்கர சிறையைக் காட்டுவதா? இன்றில்லையாயினும் நாளை, நாளையில்லை யாயினும் மற்றோர் நாள், என் கண் முன்னாலேயோ நான் கண் மூடிய பிறகோ இந்தச் சிறை தூள் தூளாகும் பாருங்கள்" என்று பாருக்கு உணர்த்திவிட்டு அவன் கண் மூடிய பத்தாவது ஆண்டு, வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு, உள்ளே குற்றவாளிகள் என்ற பட்டத்தோடு சென்றவர்கள், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் வாழ்க! வாழ்க ரூசோ!! ஒழிக லூயி! என்ற கோஷத்தோடு வெளியே வந்தனர். ரூசோவே நேரடியாக நின்று இந்தப் போர் நடத்தவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவன் எழுத்துக்கள் உயிர்பெற்று இராணுவ உடையில் சென்று பாஸ்டிலி மேல் படையெடுத்து இடித்துத் தள்ளியது.

ரூசோவின் இளமை அவ்வளவு சுவையுள்ளதாகவோ, மேன்மை பொருந்தியதாகவோ, பெண்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய இங்கிதம் நிறைந்ததாகவோ, சிறந்த படிப்பாளி என்று சொல்லத் தக்க அளவிலோ இருந்ததில்லை. எந்த சீமாட்டியாவது இவனை விருந்துக்கழைத்தால், உணவை

சுவைப்பதைவிட உணவிட்டவளின் அங்க அசைவுகளையே பார்த்துக்கொண்டிருப்பானும். இதை அவனே ஒப்புக்கொள்கிருன். "நான் பதினைந்து பதினறு வயதிற்குள்ளாகவே கட்டுக்கடங்காத காமாந்தகாரனுய் விட்டேன்" என்கிருன் ஓரிடத்தில்.

அவனுக்கு ஒரு அண்ணன் இருந்தான். ஊருக்கடங்காத பிள்ளையாக இருந்து, தந்தையிடம் அடி வாங்கி வாங்கி எங்கோ ஓடிவிட்டான். தந்தை அவனைத் தேடவுமில்லை. அவனைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. ரூசோ மிகுந்த இசை ஞானம் பெற்றவன். அதுவும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் கை கொடுக்கவில்லை. பிளாட்டோவுக்கு அடுத்தாற்போல் அரசியலை இலக்கிய பாணியில் எழுதி, நமது நெஞ்சை அள்ளுபவர் ரூசோதான் என்று பல அறிஞர்கள் கூறுகிருர்கள். சிந்தனையாளர்களுள் டெக்கார்டேவுக்குப் (Deearta) பிறகு மனித அறிவை மிகப்பெரிய அளவில் இயக்கியவர் தத்துவ ஞானி ரூசோதான்.

இறந்தகாலம் தொடங்கி, நிகழ்காலத்தில் நடந்து, எதிர் காலத்தையும் கடந்து, எல்லாக் காலங்களின் நுழைவாயிலிலும் ரூசோவைக் காண்கிருேம்; காண்போம்.

## பிறப்பு

1712ல் ஜெனேவாவில் பிறந்தார். தந்தையின் பெயர் ஐசக் ரூசோ. கைக்கெடிகாரம் செய்யும் தொழிலை வெகு சிறப்பாக நடத்திவந்தார். தாயின் பெயர் சூசன் பெர்னர்ட். மிக அழகுள்ளவள். ஒரு மதகுருவின் மகள். ரூசோவைப் பெற்றெடுத்தவுடன் இறந்துவிட்டாள். தந்தை மறுமணம் செய்துகொண்டு நாற்பதாண்டுகளுக்குப் பிறகு அவரும் இறந்துவிட்டார். பாட்டனரிடத்திலே வளர்ந்தார். பிறகு அத்தையிடத்தில். இப்படி மாறி மாறித் தாய் தந்தையற்ற வாலிபனுய் இருந்தும்கூட நாவல் படிப்பதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். பிறகு நாவல்களைப் படிப்பதை விட்டு

கிரேக்க ரோமானிய வரலாறுகளைப் படிக்கத் தொடங்கி அவற்றிலேயே ஆழ்ந்துவிட்டார். அவரை மிகக் கவர்ந்த வரலாறு (Plutarch) புளுடார்ச் எழுதிய வாழ்க்கை வரலாறு என்பதுதான்.

## ரூசோவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி

அவருடைய தந்தை உயிரோடிருந்தபோது, அவருக்கும் ஒரு கப்பல் தலைவனுக்கும் ஏற்பட்ட கை கலப்பில், தன்னை வாள்கொண்டு தாக்கியதாகக் கப்பல் தலைவன் காதியர் வழக்கு தொடர்ந்திருந்தான். (குறிப்பு அப்போதிருந்த பிரெஞ்சு சட்டப்படி குற்றம் சாட்டியவர், குற்றம் சாட்டப்பட்டவர் இருவரையுமே வழக்கு முடியும் வரையில் சிறையில் வைக்க வேண்டும்.) ஆனால் கப்பல் தலைவனை சிறையில் வைக்க முடியாது என்று ஏதோ சாக்குப் போக்கு சொல்லிற்று அரசு. ஆனால் ஐசக் ரூசோ, அவனைச் சிறையிலே தள்ளுகிற வரையில் தான் சிறைக்குப் போக முடியாதென்று வெளியூருக்குத் தப்பி ஓடிவிட்டான். போன ஊரிலே இருந்துவிட்டான். அதற்குப் பிறகு ரூசோ படித்து வேலை தேடும் படலம் தொடங்கி, உலோக இயந்திர வேலைகளில் கொஞ்சம் கை தேர்ந்து டுக்கோமன் (Ducoman) என்பவனிடம் வேலைக்கமர்ந்தான். அவன் இவனை மிகக் கொடுமையாக நடத்தினான். திட்டுவான், அடிப்பான். சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது உதைத்து வெளியே விரட்டி விடுவான். ஜெனிவா நகரத்தைவிட்டு எங்காவது ஓடிவிட்டால்தான் நிம்மதி ஏற்படும் என்று நினைத்து, இரண்டு முறை நகரத்தைக் கடக்க எண்ணி தோல்வி கண்டான். கடைசியில் நண்பன் ஒருவன் சில பொருள்களை யும், கொஞ்சம் பணத்தையும், ஒரு வாளையும் கொடுத்தனுப்பி னான். மூன்றாவது முறை எப்படியோ நகரத்தைவிட்டு வெளியே வந்துவிட்டான். வழியில் நண்பன் கொடுத்த பணமும் செல வாகி, பொருள்கள் ஒவ்வொன்றையும் விற்று அதுவும் தீர்ந்து போய் கடைசியில் வாளையும் விற்று, அதுவும் தீர்ந்துபோய் பசி யால் பாரிஸ் நகரத் தெருக்களிலே திரியவேண்டியதாயிற்று.

பிறகு சேவாய் நகரையடைந்து, பாண்ட்வீர் என்ற

பாதிரியார் தயவில் அன்னெஸி நகரத்திலிருந்து, லாரன்ஸ் சீமாட்டியை அணுகி, பாதிரியார் கொடுத்த சிபாரிசு கடிதத்தைக் கொடுத்து அங்கு தங்கியிருந்தார். அப்போது ரூசோவுக்கு வயது பதினைந்து. அந்த சீமாட்டிக்கு வயது 28. அங்கேதான் தன்மேல் கருணை காட்டிய அவள், காதல் காட்ட மாட்டாளா என்று ஏங்கினார். இதை அவள் புரிந்துகொள்ளவு மில்லை; பொருட்படுத்தவுமில்லை. அந்த டூரின் நகரில் தன்னை வேலைக்கமர்த்திக் கொண்ட இரண்டொரு சீமாட்டிகளிடமும் இவர் ஒழுங்காக நடந்துகொள்ளவில்லை. இப்படியே அலைந்த இவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. ஒரு பிரவுவின் தயவால் ஒரு ஓட்டலில் தங்க வேண்டி வந்தது. அதில் வேலைக்காரி—ஒருத்தி தெரஸ் என்பவள் பணி புரிந்து வந்தாள். எழுதப் படிக்கத் தெரியாது. அழகானவள். ஒழுங் காக வேலைகளைச் செய்வாள். அவளிடம் ரூசோ கொண்ட நட்பு, நாளுக்கு நாள் காதலாக மாறி அவள் மூலம் இரண்டு குழந்தைகளைப் பெற்றார். அவை சட்டரீதியான மனைவிக்குப் பிறக்காத காரணத்தால் ஒரு அனாதை விடுதியில் விட்டு விட்டார். அதன் பிறகு வேறொரு காதலிக்குப் பிறந்த மூன்று குழந்தைகளையும் அதே அனாதை விடுதியில் விட்டு விட்டார். இவர்தான் பிளேட்டோ குழந்தைகளைப் பற்றி எழுதிய நூலைத் தழுவி (Emile) எமிலி என்ற நூலை எழுதினார். அதே ஆண்டு தான் (Social Contast) என்ற உலகப் புகழ் பெற்ற சமுதாய ஒப்பந்தம் என்ற நூலும் வந்தது. அதற்கு முன்னமேயே தான் களைத்தபோதெல்லாம் படிப்பதற்காக வாங்கிவைத்திருந்த மெக்யூர்—டி-பிரான்சு (Meeurc-D France) என்ற நூலைப் படிக் கும்போது உலகமே ஒளி மயமான ஒரு தோற்றத்தை யடைந்த தாகக் கண்டார். காரணம் டி ஜோன் பல்கலைக்கழகம் ஆண்டு தோறும் கட்டுரைப் போட்டி ஒன்று நடத்துவது வழக்கம். அந்த ஆண்டு விஞ்ஞானம், கலை இவற்றின் வளர்ச்சி மனிதனின் தார்மிகப் பண்பை வளர்த்து முன்னேற்றியிருக் கிறதா அல்லது அதைக் கெடுத்து மோசமாக்கியிருக்கிறதா? என்று எழுதினால் அவற்றில் சிறப்புடைய கட்டுரைக்கு பரிசு கிடைக்கும் என்று அறிவித்திருந்தது.

இது மிக சாதாரண தலைப்புதான், எனினும், சமுதாயத்தின் அடிப்படையையே தொடும் பண்பு ஒன்று இதில் அடங்கியிருப்பதாக ரூசோவுக்கு பட்டது. பலர் எழுதினார்கள் என்றாலும் ரூசோதான் அந்தப் பரிசைப் பெற்றார், ரூசோ அந்தப் பரிசைப் பெற்ற பிறகுதான் அவர் எழுதிய மற்ற நூல்களை மக்கள் படித்து, அதுவரை அவர்கள் கொண்டிருந்த அரச பக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொள்ளவும்—மன்னர்கள், மன்னர் பரம்பரையினர், மத குருமார்கள், பிரபுக்கள் அனைவரும், மக்கள் தாக்குதலுக்கும் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானார்கள். அப்படித் தாக்கியவர்களில் குறிப்பிடவேண்டிய மன்னன் ஒருவன்.

கிராமத்து ஜோசியன் என்ற ஒரு நாடகத்தையும், சிங்காரக் கலைவாணிகள் என்ற நாடகம் ஒன்றையும் வெளியிட்டுத் தன் புகழை மேலும் உயர்த்திக் கொண்டார். டி ஜோன் கலைக்கழகம் மற்றோர் கட்டுரைப் போட்டியை வெளியிட்டிருந்தது. மனிதகுலத்தின் ஏற்றத்தாழ்வுகள் என்பதே அதன் தலைப்பு. அதில் ரூசோ வெற்றி பெறவில்லை. எபினே சீமாட்டிக்குச் சொந்தமான ஒரு கானகத்தில் குடிசை அமைத்து, அதை ஆசிரமம் Hermitage என்றே அழைத்தார். பிறகு பல நாடுகளில் இயங்கும் அரசியல் முறைகளைப் பற்றி அரசியல் அமைப்புகள் என்ற நூலையும், வரலாற்றுப் படிப்பினைகள் என்ற நூலையும் எழுதி முடித்தார். மற்றொன்று ஜூலி என்பதாகும்.

இவருடைய புரட்சிகரமான எழுத்துக்களால் பெர்ன் நகரம் இவரை உடனே ஊரைவிட்டே வெளியேறுமாறு கட்டளையிட்டது எத்தனையோ புரட்சியாளருக்குப் புகலிடம் அளித்த பெர்ன் நகரம், தன்னைமட்டிலும் வெளியேற்ற நினைப்பது ஏன் என்று ரூசோவுக்குப் புரியவில்லை. இருந்தாலும் வெளியேற வேண்டிய கட்டாயம் வந்துவிட்டதால் அடுத்து பிரஷ்யா நாட்டு எல்லையிலே உள்ள மொத்தையாஸ் என்ற கிராமத்தில் தன் மகனுக்குச் சொந்தமான வீடொன்றில் தங்குமாறு ஒரு சீமாட்டி கேட்டுக்கொண்டாள். எனினும் அந்த

நாட்டுமன்னன் பிரடெரிக்கை ரூசோவுக்கு அறவே பிடிக்காது. அவனுடைய தார்மீக சக்தியில் காலூன்றுது அசுரபலத்தையே நம்பி வாழ்ந்த நாடு என்பது இவனுடைய கருத்து. அதனுல்தான் அம்மன்னனைப் பற்றி "அவன் தன்னை தத்துவ ஞானி என்று கூறுகிருன்; ஆனுல் அரசனைப் போன்று அரசோச்சுகிருன்" என்று குறிப்பிடுகிருர்.

அங்கேயும் இவன் நிம்மதியாக வாழமுடியவில்லை. இவனைக் கண்டால்போதும்; பெருங்கூட்டம் சேர்ந்துகொண்டு கேலியும், கிண்டலும், இழிமொழியும் சரமாரியாகப் பொழிவார்கள். அங்கிருந்து தப்பிச் செல்வதெங்கே என்ற கேள்வி? அந்த அரசர்கள் வேறு பல பயங்கரமான சட்டங்களைத் தீட்டியிருந்தனர். ஆனுல் அவ்வளவும் பலிக்காமல் போயின.

அதனுல் மொத்தியாஸ் கிராமத்தில் ரூசோவை பாராட்டி வந்தவர்களுள் வெர்டினல் சீமாட்டியும் ஒருத்தி. அவ்வட்டாரத்திலிருந்த மக்கள் அந்த அம்மையாரிடம் மிகுந்த அடக்கத்துடனும், பயத்துடனும் நடந்து வந்ததால், அந்த அம்மையாரோடு ரூசோ இருக்கும்வரை யாரும் ஒன்றும் செய்யமுடியவில்லை. அந்த அம்மையார் ரூசோவை இங்கிலாந்து சென்று தங்கும்படி யோசனை கூறினுர், ஸ்காட்லாந்து தேசத்தில் புகழ் வாய்ந்த தத்துவமேதையான டேவிட் ஹியூம் (Davide Hume) என்பவர் ரூசோவுக்கு நேரடியாகத் தெரியாது. ஆனுல் ரூசோவைப் பற்றியும், அவரின் ஆற்றலைப் பற்றியும் நிறைய கேள்விப்பட்டிருந்தார்—வெர்டினல் சீமாட்டியிடமிருந்த கடிதத்தின் மூலம் அறிமுகமாய் அவரிடமிருந்து பல உதவிகளைப் பெற்று மிக நிம்மதியாக வாழ்ந்து தன் அரசியல் இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து செய்யலாம் என்று, பிரஷ்ய நாட்டிலிருந்த ரூசோவுக்கு ஹியூம் அவர்களே ஒரு கடிதம் எழுதியிருந்தார். மேலும் மொதியாஸ் கிராமத்திலிருந்த மக்கள் ரூஸோவுக்கு எவ்வளவு இன்னல்கள் விளைவிக்க முடியுமோ அவ்வளவையும் நேரடியாகவே செய்யத் தொடங்கினர். இதையறிந்த பிரடெரிக் மன்னன். ரூசோவுக்கு எந்த

விதமான ஆபத்தும் இழைக்கக் கூடாதென்றும், அப்படி யாராவது பலாத்காரத்தில் இறங்கி அவரைத் தாக்கினுல், அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தன் அதிகாரிகள் மூலம் எச்சரிக்கை செய்திருந்தான். இதனுல் மக்கள் மன்னனுக்கு சரியான தகவல் தரவில்லையென்றும், அவன் ஒரு கிருஸ்துவின் விரோதி என்பதை மன்னனுக்குச் சுட்டிக் காட்டவில்லை. ஆகையால் எப்படியும் அவனை ஒழித்தே தீருவதென்று ஜன்னல்கள் வழியாகக் கற்களை எறிவதும், வசைபாடுவதுமாகவே இருந்தார்கள். மீண்டும் செயிண்ட் பியர்ஸ் தீவில் தங்க வேண்டி வந்தது. அத்தீவும் ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமானது. அங்கு மட்டும் நிம்மதியாக தங்கவிடுவார்களா? ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது, ரூசோவுக்கு. அதை பிரித்துப் பார்த்ததில், "இந்த கடிதம் கண்ட இருபத்து நான்கு மணி நேரத்தில் தீவிலிருந்து காலி செய்துவிட வேண்டும், இது அரசாங்க உத்திரவு" என்றிருந்தது. வேறு எங்கு செல்வதென்று தெரியாமல், தன்னைக் கைது செய்து நிரந்தரமாக ஒரு சிறையில் வைத்துவிடும்படி, அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனுல் அவர் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு பழைய உத்திரவையே வலியுறுத்திவிட்டது. வேறு வழியில்லை. நேராக பெர்லினுக்குக் கிளம்பி, சில சூழ்நிலையின் காரணமாக இங்கிலாந்துக்கு வரவேண்டியேற்பட்டது. அங்கே ஹியூம் என்பவரின் ஆதரவில் தங்கினுர் என்று முன்பு சொன்னேம். இங்கிலாந்து எதையும் தாங்கும் இதயம் படைத்தது என்று நாம் கூறியதற்கிணங்க, லண்டன் நகரம் முழுவதும் வளைவுகளும், தோரணங்களும் கட்டி, "மண் பொது தந்தையே வருக! வருக! மானிட வர்க்கத்தின் காப்பாளனே வருக! அடிமை சங்கிலியை சுக்கு நூருக்கிய தீரனே வருக! வருக! வாள் பெரிதென்றனர் மன்னர்கள், ஜெபமாலை சக்தி வாய்ந்தது என்றனர் குருமார்கள். அவற்றை எல்லாம் விட, 'இதோ என் பேனு சக்தி வாய்ந்தது' என மையிட்ட எழுதுகோலைக் காட்டி, மன்னர்களின் மடமையை, மதகுருமார்களின் ஆணவத்தை அடியோடு சாய்த்த செஞ்சொல் வீரனே வருக! காலமெல்

லாம் கண்ணீர்விட்ட மக்களுக்குச் சுதந்தர ஜோதியைக்காட்டி ஆர்ப்பரிக்க, கடலில் அரிமா ஒன்று தோன்றியதைப் போல் தோன்றி குளிர்தந்த தேவனே வருக! வருக! கடவுளைக் கருணை என்றனர். அதை நம்பாதவனுக்கு மரணமென்றனர். கடவுளுக்குக் கருணையுமில்லை. நம்பாதவனுக்கு மரணமுமில்லை. தரணியை ஆளப் பிறந்தவர்கள் மக்கள். தார் வேந்தனை வழியனுப்புங்கள் என்றும், மரணம் வருமே என்றும் அஞ்சாமல் மார்தட்டிச் சொன்ன மன்பதையின் பாதுகாவலனே வருக! வருக! என்று வாழ்த்தி வரவேற்றனர் மக்கள். எந்த பேரறிஞன் ரூசோவால் எழுதப்பட்ட 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலும், எமிலி என்ற நூலும், பிரஞ்சு அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டு, பாரீஸ் நகர உயர்நீதி மன்றத்தின் முன்னால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதோ, அதே நேரம் இங்கிலாந்தின் தலைநகரில் அந்த இரண்டு நூல்களையும் சாம்பிராணியில் காட்டி கண்களில் ஒத்திக்கொண்டு, அவற்றை எழுதிய ரூசோவின் கைகளை முத்தமிட்டனர். "காலத்தின்மேல் குற்றமில்லை. மக்கள் மனோ நிலைதான் காரணம்" என்று அறிஞன் ஷேக்ஸ்பியர் சொன்னபடி நமது நினைப்பே காலத்தின் நிலைக்களனாய் அமைந்துவிடுகிறது. இதைக் கண்ட பிரான்சு, அவரை அழைத்துச் சிறப்பிக்கலாமா என்றெண்ணியது. ரூசோவின் மனதில் விழுந்த பழைய வடு மறையவே இல்லை. அவர் திரும்பி வரவுமில்லை. இப்படி அண்டத்தையே கலக்கிய பேருருவம் 1778ம் ஆண்டு ஜூலை இரண்டாம் நாள், முகமெல்லாம் வீங்கி, தன் அறையில் மாண்டு கிடந்தார். அவர் மரணத்திற்கு உண்மையான காரணம் மறைக்கப்பட்டு, இயற்கையான மரணம் அல்லது கொல்லப்பட்டாரா என்ற உண்மையை சொல்லமுடியாமல் மருத்துவர்களையும் ஊமைகளாக்கி விட்டனர். ரூசோ மறையவில்லை.

அவர் உலகுக்களித்த விலைமதிக்க முடியாத சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் என்ற உரிமைக் குரலில் நடமாடிக்கொண்டிருக்கிறது.

## 2. வால்டேர்

"எனக்கு இரண்டு முட்டாள்கள் பிறந்திருக்கிறார்கள். ஒருவன் வசன முட்டாள். மற்றொருவன் கவிதை முட்டாள். அவர்களை எப்படியாவது திருத்துங்களேன்" என்று தன் நண்பர்களைக் கேட்டுக்கொண்டவரின் இரு மக்களில் இளையவன்தான் வால்டேர். அவர் இயற்பெயர் Francois Marie Arouet என்பதாகும். எண்பத்திநான்கு ஆண்டுகள் வாழ்ந்து, தான் வாழ்ந்த நூற்றாண்டுக்குப் புதியதோர் எழுச்சியைத் தந்தவர். மன்னாதி மன்னர்களெல்லாம் வால்டேர் என்ற பெருமகனைக் கண்டு, அவர் திருவடிகளைத் தொட்டு கண்களிலே ஒத்திக்கொண்டால் மோட்சம் என்ற நிலையில், நாள் கணக்காக அவர் இல்லத்தின் வெளியே காத்துக்கிடந்தார்கள். பிரடரிக் என்ற மன்னன் மாறு வேடமணிந்து வந்து அவரைக் கண்டு சென்றதுமான அத்தனை சிறப்புக்களைப் பெற்ற வால்டேரைப் பற்றி, அவர் பிறந்த போது என்ன கூறினார்கள். இந்தக் குழந்தை ஒருநாளைக்குமேல் உயிரோடு இருக்காது. அவ்வளவு நோஞ்சானாக எலும்பும் தோலுமாய் இருந்த குழந்தைதான் 84 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த பெரியார் வால்டேர். அவர் பாரிஸ் நகரத்தில் 1694ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21ம் நாள் பிறந்தார். சிறந்த செல்வந்தரின் குடும்பத்தில் பிறந்தவர். ஒரே ஒரு அண்ணன். அவர் பெயர் ஆர்மண்ட் (Armand) அவர் ஜேன்சனிசம் என்ற மத சீர்திருத்த இயக்கத்தில் சேர்ந்து அதன் கருத்துக்களை எழுதிக்

கொண்டிருந்தார். ஆகவேதான் இந்தச் சகோதரர்கள் இருவரையும் பற்றி தந்தையார் இப்படிச் சொல்ல நேர்ந்தது. அவர் ஒரு வழக்கறிஞராக இருந்ததால், கொள்கைவாதிகளைக் காட்டிலும் காரியவாதிகளே சிறந்தவர்கள் என்று அவர் கொண்டிருந்த கொள்கையை, இந்த ஒரு மகன்களும் சேர்ந்து தவிடு பொடியாக்கினார்கள். நுண் கலையில் (Fine arts) கைதேர்ந்த நினுன்டி எல்வென்கொல் என்பவர், வால்டேருக்கு நேர்த்தியாக எதிர்காலம் இருக்கிறதென்று உணர்ந்து, அவருக்குக் கல்வியும் போதித்து, சாகும்போது தனக்குத் தேவையான நூல்களை வாங்கிக்கொள்வதற்காக 2000 பிராங்குகளை வால்டேருக்கு எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டார்.

மதநம்பிக்கைகள் எங்கும் பரவியிருந்த காலம். சீமான்கள் தங்கள் குழந்தைகளுக்கு மதநம்பிக்கைக் குறையா வண்ணம் பார்த்துக்கொண்டனர். ஏனெனில் நாடாண்டவன் மன்னனுனாலும், அவனையும் சேர்த்து ஆண்டது மதமல்லவா? அதுவும் பாரிஸ்—அதனைத் தலைநகரமாகக் கொண்ட பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் ஏராளமான வித்தியாசமுண்டு. மதசம்பந்தமாக எழும் சிறிய எதிர்ப்பைக்கூட சகித்துக்கொள்ள முடியாத நாடு பிரான்சு. அதேசமயம் ஒருவன் எவ்வளவுதான் மதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும் காதாரக் கேட்டுச்சகித்துக்கொண்டு அவனை வரவேற்று உபசரிப்பது ஆங்கிலநாட்டின் பண்பு. அதை ரூசோவைப் பற்றி எழுதும்போது விவரிப்போம். அவர் மதகுருமார்களிடம் பாடம் கேட்டு, தர்க்க வாதத்தைக் கற்றுக்கொண்டு அதே தர்க்க வாதத்தைக் கொண்டே எந்த மதகுருவும் தன் முன்னால் நிற்கமுடியாமல் புறமுதுகிட்டு ஓடச் செய்தார்.

வால்டேர் வாலிபப் பருவம் அடைந்தவுடன் "என்ன தொழில் செய்யப் போகிறாய்?" என்று கேட்ட தந்தையிடம் "இலக்கியத் தொழிலைச் செய்யப் போகிறேன்" என்று வால்டேர் கூறினார். இதைக் கேட்ட தந்தையின் கண்கள் சிவந்தன; ஆத்திரப்பட்டார். இருந்தாலும் வால்டேர் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை சட்டத் தொழிலில் ஈடுபட்டார்

அதில் தோல்வி. பிறகு ஒரு வேலைத் தேடிக்கொள்ள ஹாலந்துக்கு அனுப்பி வைத்தார் தந்தை; அங்கேயும் தோல்வி. அந்த வேலையையும் விட்டுவிட்டு ஊர் சுற்றத் தொடங்கினுர்.

பதினுன்காம் லூயி இறந்து பதினைந்தாம் லூயி பட்டத்திற்கு வந்தநேரம். அவனுக்குத் தக்க வயது வராத காரணத்தால் ஒரு மடையனைக் கார்டியனுக்கி யிருந்தார்கள்; ஊரெல்லாம் சிரித்தது. அவன் அரசனுக்குத் தெரியாமல் லாயத்திலிருந்த குதிரைகளை விற்றுவிட்டான். இதையறிந்த வால்டேர் கிண்டலாக, "அரச சபையிலே அன்ருடம் கூடிக்கலையும் கழுதைகளிலே பாதியை விற்றிருந்தால்கூட எவ்வளவோ கண்ணியமாகவும் மேலாகவும் இருந்திருக்கும்" என்று சொன்ஞன். இதை கேட்ட கார்டியன் வால்டேரை பாஸ்டிலி சிறையிலடைத்து விட்டான்.

தான் சிரிப்பதும் பிறரை சிரிக்க வைப்பதும்தான் பொழுது போக்கு. "உலகத்தில் மனிதர்கள் சிரிக்கத் தெரியாமலும், சிரிக்க வைக்கத் தெரியாமலும் இருந்தால் பலபேர் தூக்குப் போட்டுக்கொண்டு மாண்டு போவார்கள்" என்கிருன் வால்டேர் ஓரிடத்தில்.

எந்த மன்னனுடைய கார்டியனுல் பாஸ்டிலி சிறையில் அடைக்கப்பட்டாரோ அவனுலேயே, அவனுடைய மனமாற்றத்தாலோ அல்லது வால்டேருடைய நண்பர்களின் வற்புறுத்தலாலோ, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான் வால்டேர். அதுமட்டுமல்ல அதே கார்டியனிடமிருந்து தேவையான பணமும் மற்ற உதவிகளும் கிடைத்தன.

சிறையைவிட்டு வெளிவந்தவுடன் ஒரு துன்ப இயல் (Tregedy) நாடகத்தையும் ஓடிப்பி (Oedipe) என்ற மற்ருெரு நாடகத்தையும் எழுதி அரங்கேற்றினுர். அந்த நாடகத்தை அரங்கேற்றியதுதான் தாமதம், நாடெல்லாம் இதே பேச்சு. 'இவன் ஒரு உதவாக்கரை' என்று எந்த தந்தை இவரை ஏசினுரோ, அவரே அந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு அதில் வந்த உரையாடல்களை இரவெல்லாம் பிதற்றிக்கொண்டிருந்தாராம்.

ஏராளமான பணமும் புகழும் சேர்ந்தது. மக்களேகூட அவர் நாடகத்தில் வரும் சில உரையாடல்களை மறந்துவிடா வண்ணம் ஏதாவதொன்றில் குறித்து வைத்துக்கொண்டனர். பணக்காரரான பிறகு, பிறருக்கு உதவ அவர் எப்போதும் தயங்கியதே இல்லை. பிறருக்குக் கொடுத்த கையைப் பார்த்து சிரித்துக்கொள்வார். ஒருவன் ஏழ்மையில் இருக்கக்கூடாது என்பதற்கு அவர் கீழ்வருமாறு காரணம் கூறுகிறார்.

"ஒருவன் தன்னை ஏழ்மையிலிருந்து மீட்டுக்கொண்டால் தான் அவனுக்கு மன நிம்மதி கிடைக்கும். மன நிம்மதியில்லா விடில் அறிவு வேலை செய்யாது. அறிவு வேலை செய்யாவிடில் அவனால் உலகிற்குப் புதிய தத்துவங்கள் எதையும் தரமுடியாது." பிரஞ்சு அரசாங்கத்தை நேரடியாகத் தாக்குவதை விடுத்து பெர்ஷியா, கிரீஸ், பெருசைஞ, ஃபார்னியோ, முதலான நாடுகளின் நடவடிக்கைகளை விமர்சித்து எழுதியிருந்தாலும், பிரெஞ்சு நாட்டு நடவடிக்கைகளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது அவரது பேனு.

இப்படி இவரால் எழுதப்பட்டு, சில நாடகங்கள் இவராலேயே நடிக்கப்பட்டு, அவற்றைப் பார்த்து பைத்தியங்களாய் விட்ட பிரபுக்கள் முதல் பாமரர்வரை எங்கும் இவரது கருத்துக்கள் பரவிவிருந்த நேரம் அது. அப்போது பிரெஞ்சு நாட்டின் நிலை என்ன என்பதைப் பார்ப்போம். அவரது நாடகத்தைப் பார்த்து ரசித்த மதகுருமார்கள் நாடக நடிகன் என்றால் வெறுத்தார்கள். அவர்களுக்குச் சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தும் தரப்படவில்லை. ஒருவன் நாடகத் தொழிலை விட்டுவிட்டேன் என்று சொன்னாலன்றி அவனைப் புதைக்க, கல்லறையில் இடம் தருவதில்லை; மத சடங்குகளும் இல்லை.

## வால்டேரின் மனத்தைப் புண்ணாக்கிய கோரக் காட்சி

பிரெஞ்சு நாட்டின் புகழ்வாய்ந்த நடிகை ஏட்ரியன் லெக்ருவியா என்பவள். நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையிலே கிடக்கிறாள். அருகில் வால்டேர் நின்று கண்ணீர் உகுத்துக்

கொண்டிருந்தார். மதகுருக்கள் வந்தனர். தான் செய்த நடிகை தொழிலுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டாலன்றி மதச் சடங்குகளோ, கல்லறையில் இடமோ கொடுக்க முடியாது என்று பயமுறுத்தினர். என்ருலும் அவள், "என்னை ஆளாக்கி, பெரும் பணமும் சம்பாதித்துக் கொடுத்த அந்தத் தொழிலுக்காக மன்னிப்புக் கேட்க முடியாது" என்று மறுத்துவிட்டாள். இறந்தும் போய்விட்டாள். உறவினர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடக்கம் செய்வதற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது, போலீஸ் புகுந்து தடியாலடித்து எல்லோரையும் விரட்டிவிட்டு பிணத்தை ஒரு குப்பை மேட்டில் போட்டு, சுண்ணும்புத் தண்ணீரை கொதிக்கக் கொதிக்க அந்த சடலத்தின் மேல் ஊற்றி அது பஞ்சு பஞ்சாகப் போகுமளவுக்குத் தடியால் அடித்துவிட்டுப் போய்விட்டனர்.

இதைக் கண்ட பிறகுதான் வால்டேர், இனி மதக் கொடுமைகளை ஒழித்தாலன்றி சமுதாயம் தன்மானத்தோடு வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்தார். அவர் எழுதிய நாடகங்கள் நடிக்கத் தொடங்கிய இரண்டொரு நாட்களிலேயே தடை போடப்படும். காரணம், முன்பு அந்த நடிகையின் மீது நடத்தப்பட்ட கோரக் கொடுமைக்குப் பிறகு சமுதாய மூடப் பழக்க வழக்கங்களைத் தாக்கி நாடகங்கள் அமைத்ததன் விளைவுதான்.

## நோகன் பிரபு

நோகன் பிரபு கலந்துகொண்ட ஒரு விருந்தில் வால்டேரும் கலந்துகொண்டு தன் நண்பர்களோடு உரக்கப் பேசிக்கொண்டிருந்தார். "யார் அவன், நான் இருக்கிறேன் என்று தெரியாமல் உரக்கப் பேசிக்கொண்டிருக்கிருன்" என்று அந்தப் பிரபு கேட்டார். உடனே வால்டேர் "பிரபு அவர்களே, ஏதோ ஒரு குடும்ப கவுரவத்திற்காக பிரபு பட்டம் பெற்றிருக்கிற தங்களைப் போலல்லாமல் சுயமாகவே சிந்தித்துச் சம்பாதித்து வாழ்க்கையை மேம்படுத்திக் கொண்ட ஒரு கனவான்" என்று சுடச்சுட பதிலளித்தார். இதனுல் ஆத்திரம் அடைந்த அந்த

சீமான், அடியாட்களை விட்டு அவரை நையப் புடைத்தானும். ஆனல் அப்போதும் அந்தச் சீமான், "எங்கு வேண்டுமானாலும் அடியுங்கள். தலையில் மாத்திரம் அடிக்காதீர்கள். ஏனென்றால் அந்தத் தலையிலிருந்து இன்னும் எவ்வளவோ வரவேண்டியிருக்கிறது" என்று சொன்னாராம். என்ன கருணை பாருங்கள்!

பிரஞ்சு எல்லையைவிட்டு வெளியேறி, ஆங்கிலநாட்டிற்குச் சென்று, அங்கு பல பெரியார்களை Lord Bolingbroke என்பவர் மூலம் சந்தித்து அந் நாட்டுச் சிறப்பையும், எந்த எதிர்மறையான கொள்கைகளையும் கண்டிக்காமல் அவற்றிலுள்ள சாதக பாதகங்களை அலசி ஆராயும் பெருந்தன்மை பெற்றிருந்த ஒரு நாகரிகமான நாட்டையடைந்துவிட்டோம் என்ற பெருமிதத்தோடு ஆங்கிலத்தையும் கற்றுக்கொண்டார். Comedy of manners என்ற சமூக கேளிக்கை நாடகத்தை எழுதிய காங்க்ரீவ் என்பவரையும் சந்தித்தார். அப்போது பிரெஞ்சுப் பொருளாதாரம் சீர்கெட்டிருந்ததால் லாட்டரிசீட்டு வெளியிட்டார்கள். அவை அவ்வளவையும் வால்டேர் வாங்கி பெரும் பணக்காரராய்விட்டார்.

ஆர்டெமைர் (Artemire) என்ற அவரது அடுத்த நாடகம் தோல்வியுற்றது. தான் முன்பு பாஸ்டிலி சிறையிலிருந்தபோது எழுதிய ஹின்றியேட் (Henriade) என்ற நாடகம் ஐரோப்பா முழுவதும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டிருந்ததோடு, இவரைப் பற்றி 'ஐரோப்பியப் பண்பின் சொரூபம்' Embodiment of European culture என்று அழைக்கும் அளவிற்குப் புகழை ஈட்டித் தந்தது. அப்போதுதான், டிடிராட் (Diderot) என்பவர் குருடர்கள் எழுத்துக்களைத் தொட்டுப் படிப்பதற்கான ஒரு முறையைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். பவ்வன் (Buffon) என்பவர், பூமியினுடைய ஆயுளையும் தொன்மையையும் கணக்கிட முயன்று சில கருத்துக்களை வெளியிட்டார் என்பதற்காக, அவற்றை அவர் பகிரங்கமாக வாபஸ் வாங்கவேண்டுமென்றும், மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் 1751ல் அரசாங்கம் கடுமையான உத்தரவொன்றை வெளியிட்டது.

பிரஞ்சு முடியாட்சியின் பாரம்பரியத்தையும், மூலங்களையும் அலசி ஆராய்ந்ததற்காக ஃபரேரட் (Freret) என்பவர் பாஸ்டிலியில் தள்ளப்பட்டார். 1757ல் இயற்றப்பட்ட ஒரு சட்டம், மதத்தைத் தாக்கும் எழுத்தாளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் மரண தண்டனை தவிர வேறு தண்டனையில்லை என்று அறிவித்தது. சகல கருணையோடு இயற்றியது அது!

"பரமண்டலத்திலுள்ள பரமபிதாவே, என்ன செய்கிறோம் என்று தெரியாமலே செய்துவிட்டான், என்னைக் காட்டிக் கொடுத்த ஜுடாஸ். அவனை எனக்காக மன்னித்தருளும்" என்று கேட்டுக்கொண்ட இயேசுபிரானின் நேரடியான வாரிசுகள் என்று சொல்லிக்கொண்ட குருமார்களின் செய்கைகள் இவை. அவரால் எழுதப்பட்ட நாடகங்கள், புதினங்கள், கட்டுரைகள், 99 பெரிய புத்தகங்களாக தொகுக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தில் பெரிய மனிதர்கள், விஞ்ஞானிகள், அரசியல் மேதைகள், அரசர்கள், அரசியர்கள் பலருடன் கடிதப் போக்குவரத்து இடைவிடாமல் நடத்திய வண்ணமிருந்தார். அவர் இங்கிலாந்தில் இருந்த போதுதான் விஞ்ஞான மேதை நியூட்டன் இறந்துவிட்டார். அந்தச் சவ ஊர்வலத்தில் வால்டேர் கலந்துகொண்டார்.

அங்கே அடிக்கடி விவாதங்கள் நடைபெறுவதுண்டு. அவற்றுள் முடிவு காண முடியாத சிக்கலான கேள்வி ஒன்று. அதாவது, "மனிதருக்குள்ளே மிகப் பெரியவர் யார்?" நியூட்டனா, சீசரா, அலெக்சாண்டரா, தைமூரா, கிராம்வெல்லா? இதுதான் கேள்வி. "ஐயமே வேண்டாம்; மனிதருள் மிகப்பெரியவர் சர் ஐசக் நியூட்டன்தான்" என்று பதில் கிடைத்தது.

சரி. இவ்வளவு எழுதிமுடித்த அவருடைய ஒட்டுமொத்தமான கருத்துக்கள் எவை? சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

"நீ சொல்லக் கூடிய ஒவ்வொரு வார்த்தையினின்றும் நான் வேறுபடுகிறேன். ஆனால் அதைச் சொல்வதற்கு உனக்கு இருக்கக் கூடிய உரிமையை என் கடைசி மூச்சுவரை காத்துக்

கொண்டிருப்பேன். பதினெட்டாம் நூற்றுண்டை அறிவு யுகமாக ஆக்கிக்கொடுத்தவர்களில் தலைசிறந்தவர் வால்டேர். அந்த நூற்றுண்டை வால்டேரின் நூற்றுண்டு என்று அழைத்தாலும் பொருந்தும்.

> If man is created free, he should govern himself alone,
> If man hastyrants over him, he should turn them from
> their throne.

ருஷ்ய அரசியான காதரின் அடிக்கடி வால்டேருக்குக் கடிதங்கள் எழுதி மனக்குறையைத் தெரிவித்துக் கொள்வாள். அவள் வருத்தப்படும் போதெல்லாம் வால்டேர் தனக்கு எழுதிய கடிதங்களைப் படித்து ஆறுதல் பெறுவாள். டென்மார்க் மன்னனை ஏழாவது கிரிஸ்டியன், கடிதங்கள் மூலமாகவே வால்டேரின் பிரதம சீடனுகிவிட்டான். ஸ்வீடன் நாட்டு மன்னன் மூன்றுவது கஸ்டவஸ் (Gustavus III) வால்டேரின் தார்மீகத் தத்துவங்களைத் தன் வாழ்வின் ஒளி விளக்காகக் கொண்டிருந்தான். பிரடிரிக் (Fraderick the Great) பட்டத்து இளவரசனுக இருந்தபொழுதே தனது மாளிகையின் குருவாக ஏற்றுக்கொண்டான்.

இங்கிலாந்து மக்களைப் பற்றி எழுதிய கடிதங்கள் (Letters on the English) மிகவும் புகழ் பெற்றவை. உண்மையான சுதந்திரத்தை அங்கே கண்டதன் விளைவாக எழுதியவை அவை. பிரெஞ்சு அரசாங்கம் தன்னை மறுபடியும் தண்டிக்கும் என்று தெரிந்தவுடனே தப்பி ஓடிவிட்டார். எவனும் தன்னை இன்பத்துக்குப் புறம்பாக்கிக் கொள்ளக் கூடாது என்பதே அவர்சிந்தனை. இன்பக் கேளிக்கையின் தெய்வீக உரு (Divinity of Gaiety) என்று முன்பு அவர் பிரான்சைவிட்டுப் புறப்பட்ட போது 25 வயதான எமிலி என்பவளை அழைத்துச் சென்று தங்கிவிருந்த இடம் சைரி (Cirey) என்பதாகும். இங்குத் தங்கியிருந்தபோதுதான் மிகவும் சக்தி வாய்ந்த கதைகளான கேண்டைட் (Candide), மிக்ரொமெகாஸ் (Micromcgas) முதலியவைகளை எழுதி முடித்தார். இவற்றுள் கேண்டைட் என்ற

சிறு கதைதான் உலகப் புகழ் வாய்ந்தது. கேண்டைட்டைப் பற்றி பிரான்சின் தலைசிறந்த மேதையும், எழுத்தாளருமான அணடோல் பிரான்சு "வால்டேரின் கரங்களிலே பேனு ஓடு கின்றது; சிரிக்கின்றது" என்று எழுதுகின்றார். வால்டேர் தெரு வழியே போய்க் கொண்டிருந்த பொழுது கடன்காரன் ஒருவன் இவரை வழி மறித்துக் கடனைக் கேட்டான். ஆத்திர மடைந்த வால்டேர் அவன் காதோடு சேர்த்து ஒரு அறை விட்டார். அவனை வால்டேரின் நண்பர் ஒருவர் சிறிது தூரம் அழைத்துக் கொண்டு போய் இவ்வளவு பெரிய மனிதரிடத்தில் நீ அடி வாங்கியதே நீ கொடுத்து வைத்த பாக்கியம். இது யாருக்குக் கிடைக்கும். போய்வா என்று அனுப்பி வைத்தார். அப்படி அவரிடம் அடி வாங்குவதுகூட ஒரு பெரும் பேருக கருதிய காலம்.

இந்தக் கதை எழுதுவதற்குக் காரணமாயிருந்தது லிஸ்பன் பூகம்பம். 1756, நவம்பர் திங்களில் ஏற்பட்ட இந்த பூகம்பத் தால் .0,000 பேர் உயிரிழந்தனர். கிருத்துவ மதத்தின் முக்கிய மான திருவிழாவான (All Saints Day) இந்த நாளில் இந்த பூகம்பம் நிகழ்ந்தது. லிஸ்பன் மக்கள் செய்த குற்றம் என்றனர் மத குருமார்கள். அதை எதிர்த்து தீப்பொறி பறக்க ஒரு கவிதை எழுதி, இது கடவுளின் குற்றம் என்று சுட்டிக் காட்டி ஞர் வால்டேர்.

பிரெடரிக் மன்னன் ஒரு முறை அழைத்தபோது போக இயலாத வால்டேர் இரண்டாவது அழைப்பை ஏற்றுக் கொண்டு, அந்த அழகும், ஆடம்பரமும் நிறைந்த மாளிகை யில் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் தங்கி, சகல சுதந்தரத்தோடு காலத்தைக் கழித்து வந்தார். அரசனுடைய ஆதரவிலே இருந்தாரேயன்றி, சட்டங்களை மதித்து நடக்க வில்லை. இது மன்னனுக்கு ஒருவாறுவெறுப்பையுண்டாக்கியது. காரணம் சாக்சன் பத்திரங்கள் விற்றுக்கொண்டிருந்தது. அதில் யாரும் தனிப்பட்டவர்கள் பணம் போடக் கூடாது என்பது சட்டம். அதை மீறி அரசனுக்குத் தெரியாமல் பணம் போட்டுவிட்டார் வால்டேர். நாட்டின் சட்டங்களைமீறலாமா?

இதில் வால்டேருக்கு மட்டும் விதிவிலக்கா என்ன என்று சீறினன் மன்னன். அந்த நேரம் லா மெட்ரி ('La Mettrie') என்பவர் நாத்திகத்தைத் தழுவி, ஆத்மாவின் இயற்கை சரிதம் (Natural History of the Soul) எழுதியதின் விளைவாக, அவர் தன் வேலையை இழக்க நேர்ந்தது. அதற்கடுத்தாற்போல், மனிதன் ஒரு யந்திரம்? (Man Machine) என்ற நூலையும் எழுதினர். இவனும் மன்னனுக்கு மிக வேண்டியவனுகையால் எப்படியும் வால்டேரை வெளியேற்றிவிடவேண்டும் என்று அடிக்கடி மன்னனுக்குத் தூபம் போட்டுக் கொண்டிருந்தான். அதற்கு பிரெடிரிக் மன்னன்: "அதிகமாகப் போனல் வால்டேர் இன்னும் ஒரு ஆண்டு இங்கு இருக்க வேண்டியிருக்கும். அவரிடம் நிறைய விஷயங்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதன் பிறகு ஆரஞ்சுப் பழத்தை பிழிந்த உடன் தோலை எரிந்துவிடுவதைப்போல் எரிந்துவிடலாம்," என்ருன். இது வால்டேருக்கு எட்டியது. இருந்தாலும் ஒருவருக்கொருவர் இதை அறிந்து கொள்ளாதவர்கள் போலவே நடந்துக்கொண்டனர். ஆனல் பகை மட்டும் வளர்ந்துகொண்டே வந்தது.

நியூட்டன் சித்தாந்தத்தின் மூலமாக எழுந்த சர்ச்சையில் தான் நியூட்டன் சித்தாந்தத்தின் பக்கமும், பிரட்ரிக் மன்னன் ஜெர்மன் மக்களுக்கு ஒரு அறிவு புரட்சியைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற காரணத்துக்காக தருவித்திருந்த மாபார்டி (Maupertuis) பக்கம் சேர்ந்து விவாதித்ததின் விளைவாகவும் மன்னனுக்கும் வால்டேருக்கும் இருந்த மனக்கசப்பு கொஞ்சம் அதிகமாயிற்று. தனக்கு ஈடான ஒரு அறிவாளியை தோற்றுவிக்க மன்னன் முயலுகிருன் என்ற ஐயமும் வால்டேருக்கு ஏற்பட்டது. டாக்டர் அகேகியாவின் எதிர்ப்பு முழக்கம் (Diatribe of Dr. Akakia) என்ற ஒரு நூலை எழுதினர். வால்டேர் முன்பு பிரான்சிலிருந்து நாடு கடத்தப்பட்டதற்குக் காரணம், சாலமோன் சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து பதின் மூன்ரும் லூயின் காலம் வரை என்ற ஒரு நூல் எழுதியிருந்தார். இதில் மதகுருமார்களை சந்திக்கிழுத்து வந்து மக்களின் முன்னே குற்ற விசாரணை நடத்துகிறர். மக்களைச் சிந்திக்க

வைக்கின்றார். ஆட்சியாளர்களின் மடமையை அம்பலப்படுத்து கிறார். அவர் எழுதிய நூல்கள் எல்லாவற்றினுள்ளும் இது தான் மிகப்பெரியது. (The most ambitious, the most voluminous, the most characteric and the most daring tallentyre). கிப்பன் (Gibbon), நீபர் (Niebuhar), பக்கிள் (Buckle), கிரோட் (Crote) ஆகிய புகழ்பெற்ற சரித்திர ஆசிரியர்கள் வால்டேரை பின்பற்றியே தமது நூல்களை எழுதி ஞர்கள். வால்டேரை காண்பதற்கு பாஸ்வெல் (Boswell)' கிப்பன்(Gibbon), டி. ஆலம்பர்ட் (D. Alembert), ஹெல்விடஸ் (Helvetius) போன்றவர்கள் அடிக்கடி வந்து போய்க்கொண் டிருந்தனர். அவர் சேர்த்த பணத்தையெல்லாம் கேட்டவர் களுக்கெல்லாம் வாரி வழ்ங்கினார்.

இதற்கிடையில் அதே பிரான்சில் டிரைபஸ் வழக்கு சம் மந்தமாக எமிலிஜோலாவுக்கு ஏற்பட்டதைப் போன்ற பொறுப்பு ஒன்று வால்டேர் மேல் விழுந்தது. பார்தலோமியா படுகொலையின் இருநூறுவது ஆண்டு விழா, 1762ல் கத் தோலிகர்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருந்த னர். அப்போது ஜீன் கலாஸ் (Jean Calas) என்ற புராடெஸ் டன்ட் ஒருவன், கத்தோலிக்க மார்க்கத்தில் சேரவிருந்த தன் மனைவியை கொலை செய்துவிட்டான். இந்நிகழ்ச்சி வழக்கு மன்றம் வந்தது.

அப்போதைய நீதியின் கதியைப் பாருங்கள். பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு முடிவில் மரண தண்டனை விதிக்கப்பட்டு மரணத்தை முத்தமிட்டான். அவனுக்காக வாதாட யாரும் முன்வரவில்லையா என்று கேட்கத்தோன்றும். "அங்கே இயற்றப்பட்ட கிரிமினல் சட்டம் நீதி வழங்குவதற் காக ஏற்பட்டதல்ல, நீதியைச் சாகடித்து, அநீதியை நிலை நாட்டவே இயற்றப்பட்டது", என்று வாதாடினார் வால்டேர். ஜூரிகளுக்கு இடம் கிடையாது. குற்றம் சாட்டப்பட்டவன் வழக்கறிஞர்களை வைத்து வாதாட முடியாது. அவன் தனக் குச் சாதகமான சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடி யாது. குற்றவாளிக் கூண்டில் நிற்பவனுக்கு எதிர் தரப்பில்

நிற்பவனை குறுக்குக். கேள்விகள் கேட்கக் கூடாது. ஆட்சி யாளர்களுக்கும், பிரபுகளுக்கும் மட்டிலும் விதிவிலக்கு. இப் போதுதான் மதத்துக்கெதிராக பலத்த குரலெழுப்பினர். அவர் குரல் நாடு பூராவிலும் எதிரொலித்தது.

"அழித்தொழியுங்கள் இத்தீமையை (Ecrasez L'infame Crush the vile things) தான் தொடங்கவிருக்கும் போரிலே கலந்து கொள்ளுமாறு: "வாருங்கள், தீரரான டிடாரெட் அவர்களே! அஞ்சாநெஞ்சரான டி–ஆலம்பர்ட் அவர்களே, மதவெறியர்களையும், துன்மார்க்கர்களையும் அழித்தொழியுங் கள். அறிவுள்ளவர்களை அறிவீனர்கள் அடிமைப்படுத்த அனுமதியாதீர். எதிர்கால சந்ததியார் தாம் அனுபவிக்கும் பகுத்தறிவையும், சுதந்திரத்தையும் நாமே அவர்களுக்கு அளித்தோம் என்பதை அவர்கள் உணரட்டும்.

டிரைபசுக்காக வாதாடி வெற்றிபெற்ற எமிலி ஜோலா வுக்கும், ஜீன்கலாசுக்காக வாதாடி வெற்றிபெற்ற வால்டேருக் கும் ஒரு வித்தியாசம். டிரைபசை மீட்டு ஹில்ஸ் தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட போது எமிலி ஜோலா உயிரோடில்லை, வால்டேர் வாதத்தால் ஜீன் கலாஸ் (Jean calas) குற்றமற்ற வன் என்று நிருபிக்கப்பட்ட போது ஜீன் கலாஸ் உயிரோ டில்லை.

"Come brave Diderot, intrepid D' Alembert, ally yourselves. Overwhelm the fanatics and the knaves, destroy the insipid declamations, the miserable sophi, stries, the lying history—the absurdities without number. do not let those who have sense be subjected to those; who have none, and the generation which is being born will owe to us its reason and liberty".

கலாஸ் வழக்கு முடிந்தது, வால்டேர் வெற்றி பெற்றார். அவர் எழுதிய சிறு நூல்கள் ஒரே நேரத்தில் 3 லட்சத்துக்கு மேல் விற்றிருக்கிறது. அப்போது வால்டேருக்கு வயது எண் பத்தி மூன்று.

கடைசியில் அவர் மக்களுக்கு சொன்னதெல்லாம் "என்னுடைய வணிகம் எல்லாம் என்னவென்றால், நான் என்ன நினைக்கிறேனே அதை மக்களுக்குச் சொல்வதுதான்" (My trade is to say what I thing) இந்தத் தள்ளாத வயதிலும் இரேனி (Irene) என்ற ஒரு நாடகத்தை எழுதி, அது நடிக்கப் படுவதைத் தானே உட்கார்ந்து பார்த்துவிட்டு படுக்கையில் படுத்துவிட்டார். மரணம் நெருங்குவதையும் அறிந்தார்.

இதையறிந்த ஒரு மதகுரு அருகில் வந்து, தங்களுக்கு ஆத்ம விடுதலையளிக்க வந்திருக்கிறேன் என்றார். தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டார் வால்டேர். கடவுளிடமிருந்து நேராக வருகிறேன் என்றார், மதகுரு. அதற்கான அத்தாட்சி காட்டுங்கள் பார்க்கலாம் என்று கேட்டார். வந்தவர் தலைகுனிந்தவாறு திரும்பிவிட்டார்.

அடுத்து ஒருவர் வந்தார். கத்தோலிக்க மதத்தில் தனக்கு முழு நம்பிக்கை இருக்கிறதென்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாலொழிய எந்தச் சடங்கும் செய்ய முடியாதென்றார். அதுவும் முடியாதென்றார் வால்டேர். "போய் வாருங்கள்" என்று அவரையும் திருப்பியனுப்பிவிட்டு, ஒரு காகிதத்தை எடுத்து "கடவுளை ஆராதித்தவண்ணமும், என் நண்பர்களை நேசித்தவாறும், என் எதிரிகள் எவருடனும் விரோதம் பாராட்டாமலும், மூட நம்பிக்கைகளை அடியோடு வெறுத்த வண்ணமும் நான் இறக்கிறேன்" என்று எழுதி, தன் செயலாளர் வாக்னரிடம் கொடுத்துவிட்டு உயிர் துறந்தார். நண்பர்கள் அவர் சடலத்தை பிரெஞ்சு எல்லைக்கப்பால் கொண்டுபோய் அடக்கம் செய்தார்கள். ஆனால் 1791ல் தேசிய மகாசபை கூடி, அவர் அஸ்திகளை ஆறு லட்சம் பேர் வணங்கி நிற்க, பிரெஞ்சு நாட்டின் பாரிசுக்குக் கொண்டு போய் தகனம் செய்தார்கள்.

வாழ்க வால்டேரின் புகழ்!

# 3. பிரான்ஸிஸ் பேகன்

நீதியா? நட்பா? நீதியை நோக்கினுல் நட்பில்லை. நட்பை நினைத்தால் நீதியில்லை. இந்தத் தத்துவத்தை அறிஞன் பேகன் வாழ்க்கை நெடுகிலும் காணலாம். எந்த எஸ்ஸெக்ஸ் (Earl of Essex) பிரபு தன்னை கடைசி வரையிலும் ஆதரித்தானே, தனது ஏற்றத் தாழ்வுகளில் எந்த எஸ்செக்ஸ் அக்கறை காட்டினுனே, ஒரு போரை நடத்த கப்பலில் காலடி வைக்கும் போது கூட தன் நண்பர்களிடம் 'பேகனை கவனித்துக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டு போர்க்களம் புறப்பட்டானே, தான் மணக்க சம்மதிக்காத எலிசபெத் அரசிக்கும் எஸ்செக்சுக்கும் கணக்கற்ற முறையில் சமாதானம் செய்து வைக்க எவன் முயன்றுனே, தனது ஏழ்மை நிலையறிந்து தனக்கு சொந்தமான விலையுயர்ந்த எஸ்டேட் ஒன்றை பேகனுக்கு எவன் ஒருவன் பரிசாக அளித்தானே, தனது பணம், பலம், அந்தஸ்து, செல்வாக்கு அவ்வளவையும் செலவிட்டு அட்டர்னி ஜெனரல் பதவியையோ, அதற்கடுத்தாற் போலிருந்த சொலிசிட்டர் ஜெனரல் (Solicitor General) பதவியையும் வாங்கித் தரமுடியாத சூழ்நிலையால் மேற்சொன்ன தன் எஸ்டேட்டை இனமாக வழங்கினுனே, அதே எஸ்செக்ஸ் என்ற பிரபுவை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரித்தான் பேகன், என்பதைப் படிக்கும்போது நமக்கே கூட ஒரு அதிர்ச்சி ஏற்படுகிறதல்லவா? இதனுல் அவனை நன்றிகெட்ட நயவஞ்சகன் என்றனர்

சிலர். நீதிமான் என்றனர் பலர். ஆனால் பேகனுக்குத் தாங்க முடியாத மனவேதனை ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் சூழ் நிலைகள், பேகனை அந்த இக்கட்டான மூலையில் தள்ளி விட்டது.

இந்தச் சமயம்தான், இப்போது நிலைத்த புகழ்பெற்று விளங்கும் இவனது கட்டுரைகள் (Essays) 1957ல் வெளியிடப் பட்டன. இந்தக் கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டிவிடும் நூல். ஷேக்ஸ்பியர், ஜான்சன். மார்லோ, போன்ஜரின் நாட கங்களும், ஸ்பென்சர், சிட்னி போன்றோரின் கவிதைகளும் வசனங்களும் இங்கிலாந்தில் புகழோடு நடமாடிக்கொண்டி ருந்த காலம் அது.

1583ல் டாண்டன் தொகுதியிலேயிருந்து பாராளுமன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கே இவர் நடத்திய விவாதங்களும், சொற்பொழிகளும் மிகப்புகழ் வாய்ந்தவை. இன்றும் இவை அழியாத இலக்கியங்களாகப் போற்றப்படு கின்றன.

மிகப் பெரிய இலக்கிய கர்த்தாவான பென்ஜான்சன், பேகனுடைய பேச்சுக்களைப் பற்றி கூறியிருப்பதைக் கேட் போம்:–

"என்னுடைய காலத்திலே நான் கண்ட கண்ணியமான பேச்சாளர் பேகன், அவருடைய பேச்சிலே ஆழ்ந்த விருப்பம் காணப்பட்டது. அவருடைய பேச்சின் ஒவ்வொரு பகுதி யிலும் அழகைக் கண்டதுபோல் நான் மற்றெவர் பேச்சிலும் கண்டதில்லை. பேகன் பாராளு மன்றத்தில் பேசிய பேச்சுக் களைவிட, நீதிமன்றத்தில் அவர் வாதாடிய விதம் மற்ற வழக்கறிஞர்களுக்கு வழி காட்டியாயமைந்தன. அவருக்குப் முன் 150 ஆண்டுகள் அப்படி பேசியவர்களைக் கண்டதில்லை என்றனர். தன்னுடைய பேச்சில் பிறரை லயிக்க வைத்து கட்டுப்படுத்திவிடும் சக்தி, அவருகிருந்ததைப் போல் வேறு எவருக்கும் இருந்ததில்லை. இதைக் கண்ட பர்லி பிரபுவும் மற்றவர்களும் இவருடைய செல்வாக்கைக் குறைத்துவிட

வேண்டுமெனக் கிளம்பினார்கள். "அது உங்களால் முடியாது, நான் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறேன். பாருங்கள்" என்று கிளம்பியவர்தான் மற்றொரு எஸ்செக்ஸ் பிரபு (Earl of Essex).

அவருடைய அன்பை பேகன் மேல் பொழிந்ததற்குக் காரணமாயிருந்தது, சிறப்பாக எழுதிய கட்டுரைகள் என்ற (Essays) நூல்தான். எத்தனையோ பதிப்புக்கள் வெளிவந்தது மட்டுமல்ல, இலத்தீன், பிரெஞ்சு, இத்தாலி முதலான மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. அந்த அளவுக்கு அவர் என்ன எழுதியிருந்தார் என்பதைப் பார்ப்போம். அவற்றின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. ஆங்கிலம் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பழிவாங்குதல் : ஒருவன் பழிக்குப்பழி வாங்கும்போது அவனுடைய எதிரிக்குச் சமமாக அவன் ஆகின்றான். ஆனால் தன் எதிரி செய்த குற்றத்தை அவன் பொருட்படுத்தாது விட்டுவிடும்பொழுது, அவனுடைய எதிரியைக் காட்டிலும் அவன் உயர்ந்தவனாகி விடுகிறான். ஏனெனில், மன்னிப்பதென்பது அரசனுக்குரிய தொழிலின்பாற்பட்டது. "ஒருவன் செய்த குற்றத்தை அலட்சியம் செய்துவிடுவது மனிதப் பண்பின் மகத்துவம்" என்று சாலமோன் கூறியுள்ளார். நடந்தது நடந்து விட்டது; கடந்துவிட்டது. அதைத் திருப்பி அழைத்தல் இயலாது. விவேகிகளுக்கு இப்பொழுதும் இனிமேலும் செய்யவேண்டிய எவ்வளவோ காரியங்கள் காத்துக் கிடக்கின்றன. எனவே, கடந்துபோன விஷயங்களிலே சிந்தையைச் செலுத்தி பொழுதைப் போக்குபவர்கள், தங்களைத் தாங்களே கேவலப்படுத்திச் சிறியவர்களாக்கிக் கொள்கிறார்கள். எவனும் தீமை செய்யவேண்டும் என்பதற்காகவே தீமை செய்வதில்லை. ஏதோ தனக்கென ஒரு இலாபத்தையோ, இன்பத்தையோ அல்லது ஒரு கௌரவத்தையோ அடைவதற்காகவே ஒருவன் பிறருக்குத் தீமை செய்கிறான். அப்படியிருக்க, ஒருவன் என்னைக்காட்டிலும் தன்னையே அதிகமாக நேசித்துக் கொள்வதற்காக நான் அவன்

மேல் ஏன் கோபப்பட வேண்டும்? இயல்பாகவே அமைந்து விட்ட அவனுடைய தீக்குணத்தால் அவன் அவ்வாறு பிறருக் குத் தீமை செய்வதாக வைத்துக்கொள்வோம். முட்புதர் களின் இயல்பு மனிதரைக் குத்துவதும் பிறண்டுவதும்தான். அதைத் தவிர, பாவம், அதற்கு வேறு என்ன செய்யத் தெரியும்?

(......Certainly, in taking revenge, a man is but even with his enemy; but in passing it over, he is superior; for it is a prince's part to pardon; and Solmon, I am sure, saith, 'It is the glory of a man to pass by an offence'. That which is past is gone and irrevocable, and wise men have enough to do with things present and to come; therefore they do but trifle with themselves that labour in past matters. There is no man that doth a wrong for the wrong's sake, but thereby to purchase himself profit, or pleasure, or honour, or the like; therefore why should I be angry with a man for loving himself better than me? And if any man should do wrong, merely out of ill-nature why, yet it is but like the thorn or briar which prick and scratch, because they can do no other...! OF REVENGE')

நட்பு : ஒருவன் தன் உள்ளத்தைத் தன் நண்பனுக்கு வெளிப்படுத்தும்பொழுது, இன்பம் இருமடங்காக அதிகரிக் கிறது. துன்பம் பாதியாகி விடுகின்றது. ரசவாதிகளின் செயல் போன்ற ஒரு செயல் இங்கே நிகழ்கின்றது. ரசவாதிகளின் கல், மனித உடம்பில் எதிர்மறையான நிகழ்ச்சிகளைத் தூண்டி விட்டாலும் கூட, அந் நிகழ்ச்சிகள் உடம்பிற்கு நல்லதையே பயக்கின்றன. ரசவாதிகளின் உதவியையே வேண்டாது, அவர்களின் கல்லுக்குச் சமமான ஒன்றை இயற்கையாகவே நட்பின் சிறப்பில் நாம் காண்கிறோம்...ஒரு மனிதன் தன் மகனிடம் தந்தையைப் போன்றுதான் பேசமுடியும்; தன் மனைவியிடம் கணவனைப் போன்றுதான் பேசமுடியும். ஆனால் எதிரிகளிடம் நிபந்தனைகளுடன்தான் பேசமுடியும்.

நண்பனிடம் ஒருவன் தேவைக்குத் தக்கபடி எப்படி வேண்டுமென்றாலும் பேசலாம். நட்பினால் ஏற்படும் பலன்களை சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு முடிவில்லை. நண்பனற்றவன் தனது ஆட்டத்தைச் சரிவர ஆடமுடியாது. அவன் அரங்கைக் காலிசெய்துவிட்டு அகன்று விடுவதே நல்லது.''

......That this communicating of a man's self to his friend works two contrary effects; for it redoubleth joys, and cutteth griefs in halves; for there is no man that imparteth his joys to his friend, but he joyeth the more; and no man that imparteth his griefs to his friend, but he grieveth the less. So that it is, truth, of operation upon a man's mind of like virtue as the alchymists used to attribute to their stone for a man's body, that it worketh all contrary effects, but still to the good and benefit of nature; but yet, without praying in ain of alchymists, thers is a manifest immage of this in the ordinary course of nature;......A man cannot speak to his son but as a father; to his wife but as a husband; to his enemy but upon terms; whereas a friend may speak as the case requires and not as it sorteth with the person; but to enumerate these things were endless; I have given the rule, where a man cannot fitly play his own part, if he have not a friend, he may quit the stage......'OF FRIEND-SHIP.'

கற்றல்: தனிமையிலும் ஓய்வு நேரத்தின் போதும் கற்றல் இன்பம் பயக்கிறது; உரையாடலின் போது, உரையாடலுக்கு அது ஆபரணமாக அமைந்து அதை அழகுபடுத்துகின்றது. அன்றாட வாழ்வின் பல்வேறு காரியங்களைத் திறம்பட நடத்துவதற்கு அது சக்தியையும் சாமர்த்தியத்தையும் அளிக்கின்றது...படிப்பிலேயே நேரத்தைப் போக்குவது சோம்பேறித்தனமாகும்; உரையாடலிலே நூலறிவை மிக அதிகமாக வெளிக்காட்டுவது ஆடம்பரப் பகட்டாகத் தோன்றிவிடும்;

அன்றாட லோகாதயப் பிரச்சினைகளில் நூலறிவைக் கொண்டே முடிவுக்கு வருவதென்பது மெத்தப் படித்தவர் களின் பைத்தியக்காரத்தனமான கூறும் இயல்பு ஆகும். கற்றல் நம் இயற்கையைப் பக்குவப்படுத்துகின்றது. நாம் கற்றதை உலக அனுபவம் பக்குவப்படுத்தவேண்டும்... தந்திரசாலிகள் நூலறிவை வெறுத்து ஒதுக்குகின்றனர்; சாதாரண பாமர மக்கள் அதை வியந்து பாராட்டுகின்றனர்; விவேகிகள் அதைப் பாராட்டுகின்றனர். பிறர் கூறுவதை மறுப்பதற்காகவும் அவர்களைத் திக்குமுக்காடச் செய்வதற் காகவும் படிக்கவேண்டாம்; 'ஆம்' என்று கூறி எதையும் அப்படியே ஒப்புக்கொள்வதற்காகப் படிக்கவேண்டாம், பேச் சுக்கும் உரை நிகழ்த்துவதற்கும் உபயோகப்படும் என நினைத் துப் படிக்கவேண்டாம்; எதையும் எடைபோட்டுப் பார்த்துச் சிந்திப்பதை நோக்கமாகக் கொண்டே படிக்க வேண்டும். சில புத்தகங்களைச் சுவைத்துப் படித்தாலே போதும். சிலவற்றில் உள்ள கருத்துக்களை அப்படியே விழுங்கிவிடவேண்டும். சில புத்தகங்களின் கருத்துக்களை நன்கு மனத்தாற் திரும்பத் திரும்பச் சிந்தித்து அசைபோட்டு நம் அறிவிலே செறிக்கச் செய்யவேண்டும்."

...Studies serve for delight, for ornament, and for ability; Their chief use for delight, is in privateness and retiring; for ornament, is in discourse; and for ability is in the judgment and disposition of business......; To spend too much time in studies, is sloth; to use them too much for ornament, is affectation; to make judgment wholly by their rules, is the humour of a scholar; they perfect nature, and are perfected by experience;...Read not to contradict and confute, nor to believe and take for granted, no to find talk and discourse, but to weigh and consider some books are to be tasted, others to be swallowed. and some few to be chewed and digested; .........'OF STUDIES'

பு. 102. உ.—6

பேகனுடைய எழுத்தாற்றலைப் பற்றி அறிந்தோம். இனி அவரது வாழ்க்கைக்கு வருவோம். எஸ்செக்ஸ் பிரபு மதிக்கத் தகுந்தவராயினும் அவர் அலட்சியம் செய்வதும் பழிவாங்கு வதுமாகவே இருந்தார். எலிசபெத்தை தான் காதலிக்காமல் விட்டதற்காக அவர்மீது கோபம் இருந்தது. எஸ்செக்ஸ் மிக துணிச்சல்காரர் என்பதும் மக்களுக்குத் தெரியும். இந்தப் பிரபுவை எப்படியாவது பழி தீர்த்துவிட வேண்டுமென்று எலிசபெத் திட்டமிட்டிருந்தாள். தான் வலிய காதலித்தும் வெறுக்கிறானே என்ற கோபம் அவளுக்கு.

இந்த நிலையில் நினைத்தபோதெல்லாம் தனக்கு உதவி செய்துவரும் எஸ்ஸெக்ஸ் பிரபுவுக்கு அடிக்கடி தொல்லை கொடுக்க மனமில்லாமல், எந்தச் சீமாட்டியையாவது திரு மணம்செய்துகொண்டால், அவள் கொண்டுவரும் சீதனத்தின் மூலம்நிம்மதியாக வாழலாம் என்று திட்டம் தீட்டிய பேகன் கண்களுக்கு, ஹாட்டன் என்ற ஒரு கிராதக விதவையைத் தவிர வேறு யாரும் புலப்படவில்லை. ஆனால் அவள் பேய்க்குணம் படைத்தவள் மட்டுமல்ல, அரைப் பைத்தி யமும் கூட, யாரையும் சத்தம் போட்டு அடக்கி ஒடுக்கிவிடு வாள். எப்படியோ அந்தத் திட்டம் மாறி எட்வர்ட் கோக் (Edward Coke) என்பவரை மணந்துகொண்டு அவருடைய வாழ்க்கையை சிதறடித்து சின்னாபின்னமாக்கி விட்டாள்.

எஸ்ஸெக்ஸ் பிரபு எப்படியாவது எலிசபெத்தை அடக்கி விட்டு, அல்லது சிறையிலடைத்துவிட்டு அவருக்குப் பதிலாக ஒரு வாரிசை நியமிக்க வேண்டுமென்ற சதித்திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார். இதை அறிந்த பேகன் எவ்வ ளவோ சொல்லிப் பார்த்தார். நட்பைவிட நாட்டையும் சட்டங்களையும் மதிக்கவேண்டிவரும் என்பதையும் எஸ்ஸெக்ஸ் பிரபுவுக்குக் கடைசியாக உணர்த்தி விட்டார். பேகனுடைய இந்தப் புத்திமதி மடத்தனமாகவும் கோழைத்தனமாகவும் பட்டது. எஸ்ஸெக்ஸ் பிரபுவின் முதல் திட்டமே தோல்வி யடைந்து கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். பேகன், எலிசபெத்திடம் எவ்வளவோ மன்றாடி எஸ்ஸெக்சுக்கு

விடுதலை வாங்கித் தந்தார். பிரபு அதோடு நின்றிருக்கலாம். ஆனால் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு, லண்டன் நகருக்குள் புகுந்து, ஒரு பெரும் புரட்சியைச் செய்யுமாறு மக்களைத் தூண்டினார். அப்போது பேகனுக்கு அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவி ஒன்று அளிக்கப்பட்டது. எஸ்ஸெக்ஸ் மீது சுமத்தப்பட்ட வாழ்க்கை விசாரிக்க பேகனையே அதிகாரியாக நியமித்தனர். தான் எவ்வளவு சொல்லியும் கேளாமல் இந்த ராஜத்துரோகக் குற்றத்தை செய்துவிட்டாரே என்ற வருத்தம் ஒரு பக்கம்; தான் ஏற்றிருக்கும் பதவி மூலமாக நீதியை நிலைநாட்டியே தீரவேண்டுமென்ற கடமை ஒருபக்கம். இந்த நிலையில் எஸ்ஸெக்ஸ் பிரபுவுக்கு மரண தண்டனை தரப் பட்டு அது உடனே நிறைவேற்றப்பட்டும்விட்டது.

சிறிது நாட்களுக்குப் பிறகு எலிசபெத் இறக்கவே, இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு லிட்டன் ஸ்ட்ரேச்சி (Lytton Stat-chy) என்பவர் 'எஸ்ஸெக்சும் எலிசபெத்தும்' என்ற நூலையும், ஆப்பட் (About) என்பவர் 'பிரான்சிஸ் பேகன்' (Francis Bacon) என்ற நூலையும், பேஸில் மாண்டேகு (BasilMontegue) என்பவர் பேகனுடைய வாழ்க்கை வரலாறுகளை 12 புத்தகங்களாகவும் எழுதியுள்ளனர். ஸ்பெட்டிங் (Speeding) என்பவர் 'பிரான்சிஸ் பேக்கனுடைய வாழ்வும் காலமும்'(Life and times of Francis Bacon) என்ற நூலையும், சொல்லின் செல்வரான மெக்காலே (Lord Macaulay) பேக்கனுடைய வாழ்க்கையை ரசமாகவும் எழுதியிருக்கின்றார்கள். கவிதை மேதை அலெக்சாண்டர் போப் (Alexander Pope) பேக்கனை மனித குலத்தின் மிகப்பெரிய அறிஞரென்றும், அதே நேரத்தில் மனித குலத்தின் மிகக் கீழ்த்தரமான கடையன் என்றும் சித்தரிக்கிறார்கள். (Wisest and meanest of mankind). பேகன் பெரிய செலவாளி. நிறைய பொருளீட்டத் தொடங்கிய பின்னர்கூட கடன் வாங்கிக்கொண்டிருந்தார். தனது நாற்பத்தி ஐந்தாவது வயதில் ஒரு பெண்ணை மணந்து அவள் கொண்டுவந்த சீதனச் சொத்தில் பாதியை அழித்து விட்டார்.

எலிசபெத்தின் ஆட்சிக்காலம் முழுவதும் பேகனுடைய முன்னேற்றம் தடைப்பட்டுக் கொண்டேயிருந்தது. அவள் இறந்தபிறகு, ஜேம்ஸ் மன்னனுடைய காலம் தொடங்கிய பிறகுதான் பேகன் படிப்படியாக உயர்ந்தார். 1606 ஆண்டு சொலிஸிடர்—ஜெனரல் (Solicitor—General) பதவி, 1918ல் அட்டார்னி ஜெனரல் (Attorney—General) பதவி, 1518ல் தனது ஐம்பத்தி ஏழாவது வயதிலே இங்கிலாந்து அரசிலே மிகப் பெரிய பதவிகளுள் ஒன்றான சான்ஸலர் (Chancellor) பதவி, 1917ல் முத்திராதிகாரப் மதவி Lord keeper of the Great Seal) இப்படி படிப்படியாக உயர்ந்தார். அப்போதும் அவர் தத்துவ ஆராய்ச்சி வேலையை மறக்கவில்லை. 1605ல் கல்வியறிவின் முன்னேற்றத்தைப் பற்றிய அவருடைய சிறந்த நூலான டி ஆக்மெண்டிஸ் (D' Agmentis) என்ற நூல் வெளியிடப்பட்டது. 1621ல் நோவல் ஆர்க்கேனம் (Novem Arganum) வெளிவந்தது.

எஸ்ஸெக்ஸ் பிரபுவின் மறைவுக்குப் பிறகு எஸ்ஸெக்ஸின் ஆதரவாளர்கள் பலம் வாய்ந்த பகைவர்களாயினர். எலிசபெத்தின் காலம் வரை தங்கள் சினத்தை வெளிக்காட்டாமல் இருந்தவர்கள், இப்போது வெளிப்படையாகவே கிளம்பிவிட்டனர். இதையறிந்த பேகன் தனக்கு ஒரு படை வேண்டுமென்று கருதி, தனக்கிருந்த பதவியின் செல்வாக்கால் பலருக்குப் பல உதவிகள் செய்து தன் பக்கம் வைத்துக்கொண்டார். ஆனால் அந்த கும்பலில் எஸ்ஸெக்ஸ் பிரபுவின் ஆதரவாளர்களும் இருந்தார்கள். இது பேகனுக்குத் தெரியாது. ஜேம்ஸ் மன்னன் காலத்தில் இந்தச் சதி அதிகமாக வளர்ந்தது. ரோஜர் அஸ்சாம்(Rojer Assam) என்பவர் அரசாங்கத்தில் இருக்க வேண்டியவர்களுக்கு என்னென்ன தகுதிகள் தேவை என்பதை நான்கு அடிகள் கொண்ட கவிதை ஒன்றில் விளக்குகிறார்.

Cog lie, flatter and face,
Four ways in Court to win men grace.
If thou be thrall to none of these,
Away, good Piers! Home John Cheese!

"சூழ்ச்சி, பொய், முகஸ்தி, பாவனை இவை நான்கில் ஏதாவ தொன்றில்லாதவர்கள் ஆட்சியாளர்கள் மத்தியிலோ, அவர் களைச் சுற்றியோ இடம் பெற முடியாது."

பேகனுக்கு எதிர்ப்புக்கள் நாளுக்கு நாள் வளர்ந்த வண்ண மிருந்தன. அதற்கேற்றாற் போல ஒரு சிக்கல் முளைத்தது. அக் காலத்தில் உயர் பதவிகளில் இருப்பவர்கள் நீதிபதிகளாக இருப்பவர்கள் பொது மக்களிடம் எந்தச் சன்மானமும் பெறக் கூடாதென்ற பொது விதி ஒன்றிருந்தது. அப்படியும் பலர் வாங்கிக்கொண்டிருந்தனர். பேகனும் சிலவற்றை வாங்கி யிருந்தார். அதைப் பெரிதாக்கி, கொடுக்காததையெல்லாம் கொடுத்ததாகக் கதைகட்டிவிட்டனர். என்றாலும் பொது மக்கள் கருத்து, பேகனைப் போன்ற பெரிய அறிஞர்கள் இத் தகைய செயலைச் செய்திருக்கக் கூடாதென்பதுதான். அதனால் அவர்மேல் வழக்கு தொடரப்பட்டு அது நிருபிக்கப்பட்டு, அவர் காலம் வரையில் அவர் நீதிமன்றங்களின் சுவர்களின் பக்கமே எட்டிப்பார்க்கக் கூடாதென்றும், ஆயுட்கால தண்டனையும், 40,000 பவுன் அபராதமும் விதிக்கப்பட்டது. பாராளுமன்றத்திடம் மன்னிப்பு கேட்டார். தரப்பட வில்லை.

ஆனால் ஜேம்ஸ் மன்னன் பேகனை இரண்டு நாட்கள் காவலில் வைத்திருந்து பிறகு விடுவித்து, அபராதத் தொகை 40,000 பவுன்களையும் தானே கட்டிவிட்டான். மனமுடைந்து போன பேகன், 1626ம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு நாள் லண்டனிலிருந்த ஹைகேட் (High Gate) என்ற இடத்திற்கு சவாரி செய்து கொண்டு போகும்போது, விஞ்ஞான பிரச்னை ஒன்றில் தீவிரமாகத் தன் கவனத்தை வைத்துக்கொண்டு சென்றார். பனிக்கட்டியினால் திணித்து வைக்கப்பட்ட மாமிசம் எந்த அளவுக்குக் கெட்டுப்போகாமல் இருக்கும் என்பதுவே அப்பிரச்னை. அதை சோதனை செய்து பார்த்து, விட வேண்டுமென்ற ஆவல் தூண்டியது. பக்கத்தில் உள்ள குடிசையில் ஒரு கோழியை வாங்கி அதை உடனே கொன்று, பனிக்கட்டியை இரு கரங்களாலும் எடுத்து அதைச் சுற்றி

நிறைய மூடினார். இதைச் செய்யும்போது அவருடைய கைகள் குளிர்ச்சியால் விறைத்துப்போயின. அந்தக் குளிர்ச்சி உடலிலே பரவியது. உடம்பு சக்தியிழந்தது. பக்கத்திலிருந்த நண்பர் அருண்டேல் பிரபுவின் (Earle Arundale) வீட்டிற்கு, அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் நண்பர்கள் அவரைக் கொண்டுபோய் கிடத்தினார்கள். அங்கே உயிர் துறந்தார்.

## பிரான்ஸிஸ் பேகனின் பிறப்பு-வளர்ப்பு

1561-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22ம் தேதி பிரான்சிஸ் பேகன் லண்டன் நகரிலே பிறந்தார். இவரது தந்தையின் பெயர் சர் நிக்கோலாஸ் பேகன் (Sir Nicholos Bagon.) மிகப் புகழும் செல்வாக்கும் பெற்றிருந்த நிக்கோலாஸ் பேகன் அரசாங்கத்திற்கு வெகு காலமாகச் சிறந்த சேவை செய்தவர். அரசாங்கத்தில் மிகப்பெரிய பதவிகளில் ஒன்றான முத்திராதிகாரப் பொறுப்பு (Lord keeper of the great Seal) ஏற்று இராணி எலிசபெத்தின் ஆட்சியிலே இருபதாண்டு காலம் அதை வகித்தார். செல்வமும் செல்வாக்கும் நிறைந்த குடும்பத்திலே பிறந்த பிரான்சிஸ் பேகனுக்கு அவர் அன்னையே ஆசிரியையாக அமர்ந்து, பிறகு அவர் கல்வியை வளர்க்கப் பாடுபட்டார். அன்னையின் பெயர் ஆன்கூக் (Lady Anne Cooke) அந்த அம்மையாரின் தந்தையார் ஆறும் எட்வர்ட் மன்னருக்கே பிரதம ஆசிரியராக இருந்தவர். அக்காலத்தில் கிரேக்க மொழி கல்லாதவர்களைக் கற்றவர்கள் வரிசையிலே வைத்து எண்ணுவதில்லை. அந்த அம்மையாருக்கு கிரேக்க மொழியிலே நல்ல பயிற்சியும், கடித போக்குவரத்துக்கள் கிரேக்கமொழியிலே நடத்தவுமாக இருந்ததால் நல்லசெல்வாக்கிருந்தது. சிறுவனுக்கு பத்து வயது ஆவதற்குள்ளாகவே அவனுடைய மதிநுட்பத்தைக் கண்டு பல பெரியவர்கள் வியந்து பாராட்டியிருக்கிறார்கள். ஒருநாள் சில இளைஞர்களோடு செயிண்ட் ஜேம்ஸ் பீல்டு என்ற இடத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது எதிரிலிருந்த சுவற்றிலிருந்து எதிரொளி வருவதைக் கண்டு அங்கேயே நெடுநேரம் நின்று

விட்டான். பேகனுடைய அறிவாற்றலைக் கண்டு அவனுடைய உறவினர்கள் மகிழ்ச்சி கொண்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக பொறுமைப்பட்டார்கள், பன்னிரண்டு வயதான போது பேகனை டிரிடினிடி கல்லூரியில் சேர்த்தார்கள். அங்கே சொல்லித்தரப்பட்ட முறை பேகனுக்கு அறவே பிடிக்கவில்லை. அரிஸ்டாட்டலின் தத்துவங்கள் எதுவும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அந்தக் கல்லூரியிலிருந்து விலகிவிட்டார்.

பதினாறு வயது ஆவதற்குள்ளாகவே பிரான்சு நாட்டிலிருந்த இங்கிலாந்து தூதுவராலயத்தின் ஒரு நல்லபதவியை ஏற்குமாறு அழைப்பு வந்தது. காரணம் அவர் தந்தையின் செல்வாக்கு அந்த அளவுக்கு வளர்ந்திருந்த காலம். அந்தப் பதவியை வேறு வழியில்லாமல் அறைகுறை மனதோடு ஒப்புக் கொண்டார். இதைப்பற்றி இயற்கையின் விளக்கம் 'The Interpretation of Nature' என்ற நூலில் விளக்கியிருக்கிறார்.

அதை மிக உருக்கமாக கூறியிருக்கிறார். அதன் சுருக்கம் வருமாறு :

"மனித குலத்தின் சேவைக்காகவே நான் பிறந்திருக்கிறேன் என்று மனதார நம்பினேன். மனித சமுதாயத்திற்கு மிக அதிகமான நன்மை பயப்பது எதுவென ஆராய்ந்தேன். அவனை மனிதனாக வாழவைப்பது அறிவின் எல்லைகள்தாம் என்பதை உணர்ந்தேன். தற்போதைய மனித சமுதாயத்தின் அறிவெல்லைகளை விளக்கப்படுவதுடன், மனித வாழ்வைச் சூழ்ந்துள்ள ஆத்மீக அந்தகாரத்தை எவன் அகற்றுகின்றானோ, அவன் மனித சுதந்திரத்தின் மாபெரும் காப்பாளனாகிறான். புவனத்தின்மேல் மனிதனுக்குள்ள ஆதீனத்தை அத்தகையோன் விரிவுபடுத்துகிறான். இப்பணிக்கு என்னுடையஇயல்பும் மனோ நிலையும் ஏற்றதாக இருந்ததை நான் கண்டேன். மெய்மையில் ஈடுபாடுற்று, அதைப்பற்றிச் சிந்திப்பதற்கு உகந்ததாயமைந்திருந்தது என் உள்ளம். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதிலே எனக்கு அளவற்ற மோகம் இருந்தது. தத்துவ

விஷயங்கள் எதிலும் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராது, பொறுமையுடன் காத்திருந்து மேலும் தொடர்ந்து அலசிப் பார்க்கும் சுபாவமும் எனக்கிருந்தது. இடையறாது சிந்திப்பதிலே இணையற்ற இன்பம் காணும் மனப்பாங்கை நான் பெற்றிருந்தேன். எனது தப்பான கருத்துக்களையும் எவ்வித தயக்கமுமின்றி திருத்திக்கொள்வேன். என் சிந்தனைகளை இடம் மாறாது வரிசையாக்கிக் கோப்பதிலே எவ்வித சிரமத்தையும் பொருட்படுத்தமாட்டேன். வெறும் புதுமையின் மேல் பைத்தியமோ அல்லது பழைமையின் மேல் கண் மூடித்தனமான பற்றோ எனக்குக் கிடையாது. ஏமாற்றல் என்பதை அடியோடு வெறுத்தேன். இக்காரணங்களால் மெய்மைக்கும் என் மனோ அமைப்புக்கும் இயல்பான தொடர்பு இருப்பதாக நான் கருதினேன்.''

''ஆனால் என்னுடைய பிறப்பும், வளர்ப்பும், என் கல்வியும் நான் விரும்பிய தத்துவத்திற்கு வழி காட்டாது, அரசியலுக்கு வழிகாட்டின. குழந்தை பருவத்திலிருந்தே என்னுடைய இயல்புக்கு அரசியல் வண்ணம் பூசப்பட்டது. இந்த நோக்கத்தினுடனேயே நான் அரசியலில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.''

## 4. எமிலிஜோலா

இவன் பிரான்சு நாட்டின் வழக்கறிஞன். சிறந்த எழுத்தாளன். பத்திரிகை ஆசிரியன். அரோரா, பிகாரோ என்ற பத்திரிக்கைகளை நடத்தி வந்தான் ஜோலா.

இவன் எழுத்துக்களும், வாதத்திறமையும் பிரான்சு நாட்டை ஒரு உலுக்கு உலுக்கியது. நாநா என்ற விலைமாது ஒருத்தியைப் பற்றி நாநா என்ற தலைப்பில் இவன் எழுதிய நூல் ஒன்று உலகில் சிறந்த இலக்கியமாகக் கருதப்பட்டது. நாநா எல்லோருடைய வீட்டிலும் நடமாட முடியவில்லையே தவிர, இவள் பேரால் வெளிவந்த நூல் சீமான்கள் வீடுகள் முதல் சிறு குடிசை வரையில் இருந்தது.

### நாநா

இவள் பிரெஞ்சு நாட்டில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருந்த ஒரு விபச்சாரி. செல்வச் சீமான்கள் முதல் சிறு தொழில் செய்வோர் வரை இவளை அறியாதார் யாருமில்லை. ஒரு நாள் உப்பரிக்கையில் உல்லாச வாழ்வு நடத்துவாள். மறுநாள் மண் குடிசையில் தரையில் படுத்து உறங்குவாள். நிலையில்லாத வாழ்க்கை, ஓயாத அலைபோல் அடித்துக்கொண்டிருந்தது. வாழ்க்கையின் கசப்பும், இனிப்பும் இவளுக்கு ஒன்று தான்.

விபச்சாரிகளை ஒழிக்க வேண்டுமென்று அந்த நாடு செய்த சட்டப்படி ஒரு நாள் திடீரென காவலர்கள், அந்தக் காய்ந்து போன கன்னியின் மேல் படையெடுத்தனர். கசையடிக்குப் பயந்து ஒரு உணவு விடுதிக்குள் நுழைந்தாள் நாநா. அங்கே எமிலிஜோலாவும், அவனுடைய இணை பிரியாத் தோழன் ஓவியன் செஸானேவும் அமர்ந்து சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஜோலா உண்டிக்குக் கஷ்டப்படும் போதெல்லாம் தன் ஓவியங்களை விற்று ஜோலாவுக்கு உதவி செய்துக் கொண்டிருப்பான். செஸானே ஓவியங்கள் விற்காத நாளில் கூரைமேல் உட்காரும் குருவிகளையும், புறுக்களையும் அடித்துப் பொசுக்கிச் சாப்பிடுவார்கள். இதுதான் அவர்கள் இருவரின் வாழ்க்கையாக இருந்தது. ஒரு நாள் கிடைத்த பணத்தைக்கொண்டு விடுதிக்குச் சிற்றுண்டி அருந்தச் சென்றூர்கள். அந்த நேரந்தான் போலீஸ்காரர்களால் விரட்டப் பட்ட நாநா அங்கு வந்து சேர்ந்தாள். அவள் அலறலைக் கண்டு ஜோலா தன் பக்கத்தில் உட்காரும்படி கேட்டுக்கொண்டதற் கிணங்க உட்கார்ந்தாள். இதற்குள் காவலர்கள் வந்து இழுத் தார்கள். "அவளைத் தொடாதீர்கள், அவள் என் அபிமான மனைவி" என்று சொல்லிக் காவலர்களை வெளியே அனுப்பி விட்டான்.

அவர்கள் போன பின்பு, அவளை அழைத்துக் கொண்டு அவளுடைய வீட்டிற்குப் போய், அங்கிருந்து ஒரு சிறிய புகைப்படத்தை எடுத்துக்கொண்டு அதை வைத்து 'நாநா' என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதினுன். "நாநாவைப் பற்றி நூலா?! எமிலி ஜோலா எழுதியிருக்கின்றுனு?!! வெறு வேலை யில்லையா அவனுக்கு?!!! என்று பேசினர் மக்கள். பர லோகத்தைப்பற்றி எழுதாமல், பரம பிதாவைப்பற்றி எழுதா மல், பாவ மன்னிப்பைப் பற்றி எழுதாமல், ஒரு பரத்தையைப் பற்றி எழுதியிருக்கின்றுனே, என்றெல்லாம் கேலி செய்தனர் மக்கள். நூல் அச்சாகி வெளியே வந்தது. மதிப்புரைகளும் வெளியே வந்தன. புத்தகக் கடைகளில் நாநா. அதில் என்ன தான் எழுதியிருக்கின்றுன். இப்படி ஒரு ஐயம்; ஐயம் தடித்து

ஆர்வமாயிற்று. எவ்வளவோ படித்திருக்கிறோம். இதையுந் தான் படித்தால் என்ன? இப்படி நினைத்தனர் சிலர். கணவன் மனைவி கடைக்குப் போவார்கள். கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும், இவர்கள் இருவருக்கும் தெரியாமல் வேலைக்காரனும், இந்த மூன்று பேருக்கும் தெரியாமல் டிரைவரும் வாங்கிவிடுவார்கள். இப்படி இல்லாத இடமே இல்லாமல் எங்கும் நிறைந்து விட்டாள் நாநா.

அப்படித்தான் அதில் அவன் என்ன எழுதியிருந்தான். "விபச்சாரத்தை ஒழிக்காமல் விபச்சாரியை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள். பிச்சையை ஒழிக்காமல் எப்படி பிச்சைக் காரர்களை ஒழிக்கப் போகிறீர்கள். குற்றம் இருப்பதால் குற்றவாளி தோன்றுகிறான். நிம்மதியாக வாழமுடியாதவன் திருடனாகிறான். கொள்ளைக்காரனாகிறான், கொலைக்காரனா கிறான்."

"விபச்சாரம் செய்தால்தான் வாழ்க்கை என்று ஒருத்தியை யாக்கிவிட்டு, அது ஒரு குற்றம் என்று சொல்வதில் பொருளில்லையே. முன்னே ஒழிக்கவேண்டியது விபச்சாரத் தையா, விபச்சாரியையா. அவளுக்கு நிரந்தரமான கணவன் யார்? அவள் உடலில் வனப்பு இருக்கின்ற வரையில் வாழ்ந்து, அது முதுமையடைந்த பின் வீழ்ந்து போகின்ற வாழ்க்கை தானே அவர்கள் வாழ்க்கை. ஒரு விபச்சாரியைப் பார்த்து 'யார்' உன் கணவன் என்று கேட்டால், காசைக் கொண்டு வந்து காட்டினளாம். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் யார் காரணம். நாட்டின் நல்லோரே, நமது சகோதரிகளின் நிலையை எண்ணித் துக்கப்படவேண்டும்" என்று கேட்டான். சிந்திக்கத் தெரிந்தவர்கள் சரி என்றனர். அன்புள்ளம் கொண்டோர், நாட்டின் மேல் படர்ந்திருக்கும் இந்த அவமான மேகத்தை ஓட்டியே தீரவேண்டுமென்றனர். தாயுள்ளம் துடித் தது. பிரெஞ்சு நாட்டில் மட்டிலுமல்லாமல் உலகின் பல பகுதிகளுக்கு நாநா சென்றது. உண்மையை ஒளிக்காமல் சொன்ன எழுத்து வேந்தன் எமிலிஜோலாவின் பேனுவுக்கு ஓர்

வாழ்த்தும், அவன் எழுதிய நாநாவுக்கு உலக இலக்கிய சிறப்பையும் தந்து போற்றினர்.

## டிரைபஸ்

டிரைபஸ், பிரெஞ்சு நாட்டின் திறமை வாய்ந்த தளபதி, அவன் செய்த தவறு, அவன் ஒரு யூதனுகப் பிறந்தான் என்பது தான். தான் பிறந்த சமூகத்தாலே அவன் தளபதியாகவில்லை. திறமையாலே தளபதியானுன். பிரெஞ்சு நாடு தொடுத்தப் பல போர்களில் வெற்றித் தேடித் தந்திருக்கிறுன். போர் மேகங்கள் சூழும்போதெல்லாம் டிரைபஸ் என்ற பெயர் எங்கும் ஒலிக்கும். டிரைபஸ் தளபதியாக இருக்கும் வரை பிரெஞ்சை எதிர்ப்பது கடினம் என்றிருந்த நாடுகள் பல.

ஜெர்மனிக்கும் பிரெஞ்சுக்கும் போர் மூண்டபோது இவன் தன் முழுத் திறமையைக் காட்டினுன். இவன் தளபதியா யிருந்த நேரம்தான், ஐரோப்பாவின் பெரும்பகுதி யூத எதிர்ப்பு இயக்கம் காட்டுத் தீப்போல் பரவியிருந்த நேரம். இந்த நிலை யில் பிரெஞ்சுப் படைகளுக்கு ஒரு யூத டிரைபஸ் தளபதியா யிருப்பதா, கூடாது, கூடாது, கூடவே கூடாது. இவனைத் தீர்த்துக் கட்டியே தீரவேண்டும் என்ற பொறுமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்துக் கொண்டிருந்தது. இவ்வளவு சிறந்த போர் வீரன் மேல் சாதாரண பழி சுமத்திவிட முடியாது. அவ்வளவு சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்தான். இவனுக்கு ஒரு மரண அடி தரவேண்டும். சாகவும் கூடாது, எழுந்திருக் கவும் கூடாது. இதுதான் அவர்கள் திட்டம். இவன் இருந்த இராணுவ முகாமலேயே எஸ்டரெஸ்' என்ற போர்வீரன் ஒருவன் இருந்தான். அவன் இவனுடைய கையெழுத்தை நன்குயுணர்ந்தவனுகையால், பிரெஞ்சின் பீரங்கிப் படைகளின் இரகசியங்களை எழுதி கீழே டிரைபஸ் என்று கையெழுத்துப் போட்டு, ஜெர்மன் இராணுவ முகாமுக்கு அனுப்பிவிட்டான். ஜெர்மன் சிப்பாய்கள் வெறிக்கக் குடித்திருந்ததால் அதைப் படித்து துண்டுதுண்டாகக் கிழித்து குப்பைக் கூடையில் போட்டுவிட்டார்கள். இதை குப்பைக் கூட்டும் கிழவிக்கு

அறைகுறை பிரெஞ்சு மொழி தெரியுமாகையால் அவள் படித்துவிட்டு அப்படியே வைத்திருந்தாள்.

எப்படியோ இதற்கு இரண்டு சாட்சிகளை தயார் செய்து இராணுவ நீதி மன்றத்தில் வழக்கைத் தொடுத்துவிட்டான். குற்றவாளிக் கூண்டிலே நிற்கிருன் டிரைபஸ். குற்றம் விசாரிக் கப்படுகிறது. டிரைபஸ் சொன்ன பதில் எனக்காக வாதாட இங்கு யாருமில்லை. நான் செய்த குற்றமெல்லாம் நான் ஒரு யூதனுகப் பிறந்தேனே அதுதான், என்று சொல்லி எவ்வளவோ மன்ருடினுன். கருணை மிகுந்த நீதிபதி, இவனுக்கு ஆயுள் தண்டனை கொடுத்து டெவில்ஸ் தீவுக்கு அனுப்ப வேண்டு மென தீர்ப்பளித்துவிட்டனர்.

இராணுவத்திடலிலே கொண்டு வந்து நிறுத்தினர். உடைகளைக் களைந்தனர், விலங்கிட்டு கப்பலேற்றி கொண்டு போகின்றனர். கறை மறையும் வரை கண்ணீர் சிந்திஞன். எந்தத் தாயகத்திற்காக நான் செந்நீர் சிந்தினேனே. அந்தத் தாயகமே! நான் செய்த குற்றமென்ன, விண் மீன்களே! நான் குற்றவாளியா? நிலவே நீயே சாட்சி, நான் செய்த குற்றமென்ன? இப்படி அழுது புலம்பினுன். டெவில்ஸ் தீவு நெருங்கிவிட்டது. இறங்கு என்றனர்; இறங்கினுன்.

ஏற்றிச் சென்ற கப்பல் திரும்பிவிட்டது. கப்பல் மறை யும் வரைப் பார்த்திருந்தான். தனது அருமை தம்பியும், அன்பான மனைவியும் கடற்கரையில். ஒரு குற்றமுமறியாத டிரைபஸ் டெவில்ஸ் தீவில். யூதன் ஒழிந்தான் என்று எக்காள மிட்டது இராணு முகாம். கபட நாடகம் முடிந்துவிட்டது என்று எக்களித்தனர் வஞ்சகர்கள். நாடகமே இனிதான் தொடங்குகிறது.

நீ எதுவும் உன் நாட்டிற்குச் சொல்ல விரும்புகிருயா என்று கேட்டனர். அதற்கு டிரைபஸ், "நான் குற்றமற்ற வன்" என்ற வார்த்தைகளை மட்டும் பதிலாகச் சொன்னுன்.

கணவனைக் கண்ணுக் காணு தீவுக்கனுப்பியதால் கண் கலங்கிய மனைவி, உடன் பிறந்தவனை வீண் பழி சுமத்தி ஆழி

யின் நடுவில் அனுப்பியதால் ஆராத் துயரடைந்த சகோதரன், என்ன செய்வதென்றே தெரியாமல் புலம்பினர். யூதர்கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதிய பிரெஞ்சு நாட்டில் இவர்கள் துக்கத்தைத் துடைக்க யார் முன்வருவார்கள். யாரிடம் குறைகளைச் சொல்வார்கள். ஒரு சக்தி வாய்ந்த இராணுவ மன்றம் கொடுத்த தீர்ப்பை எதிர்த்து வழக்காட எங்கு செல்வது என்ற நிலையில், தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில், ஒருநண்பன் சொன்ன யோசனையின் பேரில் ஒருவனே முன் வந்தான். தன் உயிர் போகுமே என்ற கவலைப் படாமல் முன் வந்தான். டிரைபஸ் யார் என்று அறிமுகமில்லாத ஒருவன் முன்வந்தான். விவகாரம் மனிதனைப் பற்றியதல்ல. தாய்நாட்டின் மேல் சுமத்தப்பட்டிருக்கும் துயரைத் துடைக்க முன் வந்தான். யாருக்காகவோ போராடுகிறோம் என்றில்லாமல், ஒரு உண்மைக்காக போராடுகிறோம் என்ற உறுதியில் கையில் பேனாவோடு முன் வந்தான். அவன்தான் எழுத்து வேந்தன் எமிலிஜோலா.

நடந்துவிட்ட விபரீதத்தைப் பொறுமையாகக் கேட்டான். தான் நடத்தி வந்த பிகாரோ பத்திரிக்கை அலுவலத்தில் உட்கார்ந்தான். குடியரசுத் தலைவருக்கு ஒரு கடிதம். இளைஞர்களுக்கு ஒரு கடிதம். மக்களுக்கு ஒரு கடிதம். ஆக மூன்று கடிதங்களை எழுதி வெளியிட்டான்.

## 1. குடியரசுத் தலைவருக்குக் கடிதம்

பெருந்தன்மை பொருந்திய குடியரசுத் தலைவர் அவர்களே!

உங்கள் கீழ்படிதலுள்ள எமிலிஜோலா மிகுந்த அடக்கமாக எழுதும் கடிதம்.

பல போர்களில் வெற்றிகண்ட இராணுவத் தலைவன் டிரைபஸ் பேரில் மிக கொடுமையிழைத்து விட்டிருக்கிறது இராணுவ நீதி மன்றம். அவன் தண்டனை அடையும் வரையில் ஒரு சிறிய குற்றத்தையும் செய்தறியாதவன். தான் பிறந்த நாட்டின் மேல் அவன் கொண்டிருந்த நட்பைவிட

தன்னையீன்ற தாய் எந்த வகுப்பைச் சேர்ந்தவள் என்று கவலைப்படாதவன். அவன் மிகப் பயங்கரமான சதி செய்தான் என்றும், குற்றம் செய்தான் என்றும் இராணுவ நீதி மன்றம் விசாரித்து ஒரு பொய் நாடகம் நடத்தியிருக்கிறது என்றால் அதை நிரூபிக்க முடியும். இராணுவ நீதி மன்றம் தீர்ப்புப்படி அவன் செய்திருப்பானுனால் டெவில்ஸ் தீவில் விட்டுவிட்டது மாத்திரம் போதாது. தூக்கிலேயே ஏற்றியிருக்க வேண்டும். ஆனால் உண்மை என்ன, அதை நான் அறிய விரும்புகிறேன். நீதியை நிலைநாட்ட விரும்புகிறேன். தாயகத்தின் மேல் தீராப் பழி சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த கோரும் பழியை துடைப்பது தங்கள் மேலான கருணையுள்ளம் அல்லவா. ஆகவே நான் நீதிமன்றத்தில் வாதாட வசதியாக மீண்டும் அதே நீதிமன்றம் இந்த வழக்கை மறுபரிசீலனை செய்ய உத்திரவிடுங்கள். தாங்களன்றி வேறு யாருக்கும் அந்த அதிகாரமில்லை. இதைத்தான் நான் வேண்டுகின்றேன்

அலுவலகம்,
பிகாரோ, பாரீஸ்.

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
**எமிலிஜோலா.**

## 2. இளைஞர்களுக்குக் கடிதம்

எதிர்காலத்தை இந்த நாட்டையாளப் பிறந்த இளைஞர்களே!

உங்கள் நூல்கள், வகுப்பறைகளோடு உங்கள் இளமை ஓடிவிடுவதால் பயனில்லை. எதையும் சாதிக்கவல்ல பருவம். உங்களுக்கென்று திறமை, நீதி, நேர்மை, உறுதி, உயர்ந்த எண்ணங்கள் ஆகியவைகளைத் தேக்கி வைக்கும் பருவம். நமது இராணுவ தளபதி டிரைபஸ். டிரைபஸ் ஒரு யூதனுகப் பிறந்தானும். அதனுலே அவனுக்குப் பயங்கரத் தண்டனையாம். சொல்லாமல் சொல்லுகிறது நமது இராணுவ நீதிமன்றம். அவனை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளும்போது அவன் யூதன் என்று தெரியவில்லையா. அந்த யூதனிடம் வெடி மருந்துச்சாலைகளின் சாவியைக் கொடுத்திருந்தோமே, அப்

போது அவன் யூதன் என்று தெரியவில்லையா? ஏன்? நகரமும், நமது நகர மக்களும் உயிரையே அவனிடம் ஒப்படைத்திருந் தோமே, அப்போது அவன் யூதனென்று தெரியவில்லையா. வேண்டத்தகாத யூத எதிர்ப்பு இயக்கம் தோன்றிய பிறகு தானே அவன் ஒரு யூதன் என்று தெரிகிறது. அவன் சாரத்தை யெல்லாம் உறிஞ்சி சக்கையாவதற்கு முன்னே அவன் ஒரு யூதன் என்று தூக்கி எறிந்துவிட்டோமே. இந்த நன்றிகெட்ட செயலுக்காக நாம் வெட்கப்படவேண்டாமா. கொஞ்சம் நடு நிலையோடு சிந்தித்துப் பாருங்கள். இந்த வழக்கை நான் நடத்துவதாக இருக்கிறேன். அன்பு கூர்ந்து எனக்கு உதவி செய்யுங்கள்.

அலுவலகம்
பிகாரோ, பாரீஸ்,

இங்ஙனம்,
உங்களன்புள்ள
எமிலிஜோலா.

## 3. நாட்டு மக்களுக்குக் கடிதம்

நமது தாயகத்தின் கௌரவமிக்க மக்களே! இளைஞர்களே!

அடிக்கடி அமைதி காணும் நமது நாடு ஏதாவது ஒரு நூற்றாண்டில் அமைதியுறுமா என்று பார்க்கிறேன். அது முடிய வில்லை. நாம் வாழும் இந்த நாட்டில் நீதியையே வெட்கி தலை குனியச் செய்யும் செயல் ஒன்று நடந்துகொண்டிருக்கிறது. அதுதான் இராணுவ தலைவன் டிரைபஸ் விவகாரம். அவன் குற்றவாளியா, அல்லவா என்று நிரூபிக்கும் பொறுப்பு இந்த நாட்டின் குடிமக்களாகிய நம்மைச் சார்கிறது. ஏனெனில் யூதரல்லாத ஒரு ஆயிரம் இராணுவ வீரர்களுக்கும் இராணுவத் தலைவனாகிய டிரைபக்கும் ஏற்பட்ட விரோதம் என்று நாம் கவலையற்று இருக்க முடியவில்லை வரிசெலுத்துகிற செலுத்தாத குடிமக்கள் அனைவரும் நாட்டின் பாதுகாப்புக்கு எந்த இராணு வத்தை நம்பி நிம்மதியாக இருக்கிறதோ. அந்த நாட்டில் வாழும் குடிகளாகிய நாம் வாளாயிருக்கமுடியாது. அவன் ஒரு

யூதனுகப் பிறந்துவிட்டான் என்பது தவிர அவன் வகிக்கும் பொறுப்பில் எவ்வித தவறும் இதுவரை ஏற்பட்டதில்லை என்றே அவன் இராணுவ வரலாறு கூறுகிறது. அவனைப்போல் ஒரு பிரெஞ்சுப் பிறவி நமக்குக் கிடைப்பாணுயின், அவனை இராணுவத் தலைவனுக ஏற்றுக்கொள்ளலாம் என்று நாம் நினைத்தால்கூட, ஏற்கெனவே தன் உயிரை திரணமாக மதித்து பீரங்கிகளின் எரிவாயின் முன் நின்ற ஒருவனைக் கண்ணியமாக வீட்டிற்கு அனுப்பி வைக்கலாம். அதைவிட்டு, இப்படி வீண் பழி சுமத்தி, அவனை அவமானப்படுத்தி, தீராப்பழிக்கு ஆளாக்கி, திசை தெரியாத டெவில்ஸ் தீவில் விடவேண்டிய தில்லை.

ஒரு இராணுவத் தலைவன் செய்யும் சிறிய தீங்குகூட ஒரு நாட்டின் எல்லையையே மாற்றி, ஆள்பவரை மாற்றி, சட்ட திட்டங்களை மாற்றி, பொருளாதார சீர்குலைவைத் தந்துவிடும் என்பதை நாம் அறியாதவர்களல்ல. ஆனுல். அத்தகு தீங்கை தளபதி டிரைபஸ் செய்தாளு என்பதுதான் கேள்வி. எனக்குக் கிடைத்திருக்கின்ற ஆதாரங்கள்படி அவன் குற்றமற்றவன். அவனை விடுவிக்கப் புறப்பட்டுவிட்டேன். நாட்டின்வாழ்விலும், தாழ்விலும் பங்கு பெற்றிருக்கும் இளைஞர்களே! என்னேடு வாருங்கள்.'' என்ற கடிதத்தை பிகாரோ பத்திரிக்கையில் எழுதிளுன். அவ்வளவுதான். வந்தது இராணுவத்திற்குக் கோபம். பிகாரோ பத்திரிக்கை அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது. ஜோலா அடித்து தெருவில் வீசி எறியப்பட்டான். இரத்தக் காயங்களோடு உருள்கிருன். செசானே அவனைத் தூக்க வந்தான். அவனுக்கும் விழுந்தது அடி.

ஜோலா இப்படி அடிபட வேண்டிய தேவை என்ன? டிரைபஸ் யூதன். இவன் பிரெஞ்சுக்காரன். அவனுக்காக இவன் வாதாடுவானேன். ஏதோ உண்மையிருக்கவேண்டும். இப்படிப் பேசினர் பலர். இந்தத் தண்டனை போதாது. இன்னமும் வேண்டும். இப்படி பேசினர் யூத எதிர்ப்பு இயக்கத்தார்.

புண்கள் ஆறியவுடன் மீண்டும் போர்த்தொடுத்தான், இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்துகிருன் என்று இவன்

மேல் வழக்குத் தொடுத்து இவனையே சிறைக்கனுப்பிவிட்டனர். டிரைபஸ் டெவில்ஸ் தீவிலும், ஜோலா மத்திய சிறையிலும் வைக்கப்பட்டனர்.

ஜோலா விடுதலையடைந்து வெளிவந்தவுடன், மீண்டும் எழுத்துப்போர் தொடுத்து, வழக்கை இராணுவ நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து, டிரைபஸ் குற்றமற்றவன் என்று நிருபித்து விடுதலை பெற்றுத்தந்தான். டெவில்ஸ் தீவிலிருந்து டிரைபசை பிரான்சுக்குக் கொண்டு வந்து, எந்தத் திடலில் அவனைக் குற்றவாளி என்று பறைசாற்றி அவனது உடுப்புக்களைக் களைந்து உடைவாளை உடைத்தெறிந்தார்களோ, அதே திடலில் நிறுத்தி இராணுவ உடைகளை அணிவித்து உடைவாளைத் தந்தனர்.

இந்த கோலாகலங்களிலெல்லாம் டிரைபசின் மனம் செல்லவில்லை. எந்த உத்தமன் நம் விடுதலைக்காகப் பாடுபட்டான்? யார் அந்த பொதுநலவாதி? எங்கிருக்கின்றான்? அவனை நேரில் கண்டு, தன் நெஞ்சு நிறைந்த நன்றியைச் சொன்னாலன்றி மனம் ஆறுதலடையாது என்று, ஜோலாவின் இருப்பிடத்தைத் தெரிந்துக் கொண்டு ஓடோடி வருகின்றான்.

அந்தோ! எழுத்து வேந்தன் எமிலிஜோலா பிணமாகக் கிடக்கிறான். பக்கத்தில் பேரறிஞன் அனதோல்பிரான்சு ஈமச் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருக்கிறார். கால வெள்ளத்தாலும் அந்த எழுத்து வேந்தன் திருநாமத்தை அழிக்க முடியாமல் அவன் என்றும் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றான்.

அழுதழுது புலம்பினான் ஆராத்துயரடைந்தான். "தலை போகுமே என்ற கவலையில்லாமல் எனக்காக வாதாடிய எழுத்து வேந்தனே" என்று எமிலி ஜோலாவைத் தன் கண்ணீரால் கழுவினான். எனினும், நேற்றிருந்தான் ஜோலா, இன்றில்லை அவன் — என்று காலம் சொல்லிற்று.

# 1

## சாணக்கியன்

மன்னர் மன்னன் இத்திக்கு சுநந்தா, என்னும் பட்டத்தரசியும், முரா என்னும் ஆசை நாயகியும் இருந்தனர் ஒரு சமயம் முனிவர் ஒருவர் அரசனைக் காண வந்தார். முனிவரின் திருவடிகளை அரசன் கழுவி, அந்தத் தண்ணீரைத் தன் மனைவிமார் இருவர் மேலும் தெளித்தான். அப்போது ஒன்பது துளிகள் மூத்தவள் சுநந்தா தலையிலும், ஒரு துளி முரா என்பவள் தலையிலும் விழுந்தன. சிறிது காலம் சென்றபின் இருவரும் கருத்தரித்தனர். உரிய காலத்தில் முரா என்பவள் ஓர் அழகிய ஆண் குழந்தையை ஈன்றாள். பட்டத்தரசியோ ஒன்பது பிண்டங்களைப் பெற்றாள். அந்த ஒன்பதின்மர்தான் நவ நந்தர்கள்.

முரா ஈன்ற மகன் நாளடைவில் நூறு மக்களைப் பெற்றான் அந்நூற்றுவரில் மூத்தவனே சந்திரகுப்தன். அந்த நூறு பேரிலும் சந்திரகுப்தன் அழகிலும், மதியிலும் சிறந்து விளங்கினான். இவர்கள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தமையாலும் பொறாமையுற்றனர் நவநந்தர்கள். இவ்விரு திறத்தாரிடையே மூண்ட பகைத் தீ மலையென வளர்ந்தது. நவ நந்தர்கள் அரச அவைக் கூட்டுவதற்காக பூமிக்குள் ஓர் அறையைக் கட்டுவித்தனர். சந்திரகுப்தன் முதலிய நூறு பேரையும் அங்கே அழைத்துப்போய் தந்திரமாய் உள்ளே தள்ளிப் பூட்டிவிட்டனர்.

சில நாட்கள் கழித்தபின் சீன நாட்டு அரசனிடமிருந்து நவநந்தர்களுக்கு ஒரு செய்தி வந்தது. அத்துடன் தேன் மெழுகினால் செய்யப்பட்டு, ஒரு கூண்டிலே அடைக்கப்பட்ட சிங்கம் ஒன்று வந்தது. "கூண்டைத் திறக்காமல் சிங்கத்தை வெளியேற்ற வேண்டும்" என்று அச்செய்தியில் கண்டிருந்தது.

நவநந்தர்கள் புத்திக்குச் சிங்கத்தை வெளியேற்றும் வழி தெரியவில்லை. சந்திரகுப்தன், கௌடில்யன் யோசனைப்படி ஒரு இரும்பைப் பழுக்கக் காய்ச்சி இழுத்தான். சிங்கம் உருகி வெளியே வந்துவிட்டது. சந்திரகுப்தன் தவிர மற்ற தொண்ணூற்று ஒன்பது பேரும் இருட்டறையிலேயே மாண்டனர்.

சனகன் மகன் சாணக்கியனைத் தனக்கு உதவியாகத் தேர்ந்தெடுத்ததே ஒரு வேடிக்கையான கதை: சாணக்கியன் நடந்து வரும்போது ஒரு கட்டைப் புல் அவன் காலைத் தடுக்கியது. அவ்வளவுதான், பெருஞ் சினம் கொண்டான். அக் கட்டைப் புல்லைப் பூமியிலிருந்து கல்லி எடுத்து, சின்னபின்னமாக்கி எரித்த பின்பே அவன் கோபம் தணிந்தது.

அவனால்தான் நம் காரியம் முடியுமென்று எண்ணி, அரசர்கள் உட்கார்ந்து உணவுண்ணும் ஆசனத்திலே அமரச் செய்து உண்ணச் செய்தான்.

திடீரென நந்தர்கள் அங்கே வந்தனர். அறிஞர்களுக்கும் அரசர்களுக்கும் உரிய இடத்தில் ஒரு பரதேசிப் பிராமணச் சிறுவன் உட்கார்ந்திருத்தலைக் கண்டு மிகவும் கோபமுற்றவராய், தலைமயிரைப் பிடித்துக் கீழே தள்ளினர். சாணக்கியன் வீராவேசத்துடன் எழுந்து நின்று, அவிழ்ந்த குடுமியை உருவிய வண்ணம் "இந்த நந்த வம்சத்தை அழிக்கும் வரையில் அவிழ்ந்திருக்கும் என் தலை முடியை முடிய மாட்டேன்" என்று உறுதி எடுத்துக்கொண்டான். அதன் பிறகுதான் அண்டை நாட்டு அரசனைக் கொண்டு நவநந்தர்களை அழித்தான்.

குடுமியை உருவியவாறே, "மதயானையின் உதிரத்தைப் பருகிப் பருகி, மாலை மதியின் கலையைப்போல் சிவந்து விளங்கும் சிங்கத்தின் கோரப் பல்லை, அது கொட்டாவி விடும் சமயம்

பார்த்து, அதன் வாயிலேயே கையை விட்டு பறிக்க நினைக்கிறவன் எவன்?

சினத் தீயின் கரிய பெரிய புகைக் கொடியான எனது சிகை, நந்தர்கள் மரபுக்குக் கருநாகம் போன்றது.

நந்தர் எனும் காட்டுக்குத் தூமகேது போன்று என் சினத் தீயின் கொழுந்து சுடர்விட்டு எரிகின்றது. அறிவற்ற எந்த மூடன் அதைக் கடந்து என் வெகுளி விளக்கில் விட்டில் போல் விழுந்து விநாசத்தைத் தேடிக்கொள்ள விரும்புகிறான்'' என்று சிகையைக் கட்டிக் கொண்டான்.

இவனை முதல் முதலில் அறிமுகப்படுத்திவிட்டு மேலே செல்வோம். கேரளத்திலிருந்து வடநாடு சென்ற ஒரு பார்ப்பனன் அவன் என்று தெரிகிறது. இவன் பல நூல்களை எழுதியிருந்தாலும், முத்ராராட்சசம் என்ற நூலே மிகச் சிறந்தது என்பது பொதுவான எண்ணம். அரசியல் தெளிவிலும் சூழ்ச்சியிலும் மன்னர்களை மயக்குவதிலும் கைதேர்ந்தவன்.

மௌரிய அரச பரம்பரையில் நவநந்தர்களுக்கு வரவேண்டிய அரசுரிமையைச் சந்திரகுப்தனுக்கு ஆக்கித் தந்தவன் இவன். இதற்காக இவன் கையாண்ட முறை வேடிக்கையானது.

சீனத்திலிருந்து கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கம் ஒன்றை அனுப்பியிருந்தனர். அதைக் காட்டிக் கூண்டின் கதவைத் திறக்காமல் எவன் சிங்கத்தை வெளியே கொண்டு வருகிறானோ அவனுக்கே அரசுரிமை என்றான். நந்தர்கள் திகைத்தனர். சந்திரகுப்தன் சிங்கத்தை வெளியே கொண்டு வந்துவிட்டான். சந்திரகுப்தனுக்கு எப்படி சிங்கத்தை வெளியே கொண்டு வருவது என்பதைச் சொல்லி வைத்திருந்தான் சாணக்கியன். அதாவது அந்தச் சிங்கம் உண்மையான சிங்கம் அல்ல. மெழுகால் செய்யப்பட்ட சிங்கம். ஒரு இரும்பைப் பழுக்கக் காய்ச்சி சிங்கத்தின் மேல் இழு. சிங்கம் கரைந்து வெளியே ஓடி வந்துவிடும் என்று சொல்லி வைத்திருந்தான். அதன்படி

சந்திரகுப்தன் செய்து அரசுரிமையைப் பெற்ருன். பிறகு நவநந்தர்கள் கொல்லப்பட்டார்கள். யாரால்?

மாசிடோனிய மாவீரன் அலெக்சாண்டர் தன் தாயகத்தி லிருந்து புறப்பட்டுப் பல நாடுகளை வென்று, இமயமலை யடிவாரம் வந்து, இந்தியாவின் உள்ளே நுழைய வழி தெரியாமல் காத்திருந்தான். அப்போது தட்சசீலத்தை அம்பி என்ற பார்ப்பன மன்னன் ஆண்டுக்கொண்டிருந்தான். அலெக்சாண்டர் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு ஒரு ஒற்றனை அனுப்பி, அலெக்சாண்டரோடு எத்தனை போர் வீரர்கள் வந்திருக்கிருர்கள் என்பதைத் தெரிந்து வரச் சொன்ஞன். போனவன் வீரர்களின் கணக்கை எடுத்துக்கொண்டு வந்து மூவாயிரம் வீரர்கள் வந்திருப்பதாகச் சொன்ஞன். அம்பி பூரண கும்பம் தயார் செய்தான். மூவாயிரம் பேருக்கு பசுங்கன்றின் இறைச்சியைப் பக்குவப்படுத்திக்கொண்டு போய் விருந்து நடத்தி, அலெக்சாண்டரையும் வீரர்களையும் கைபர் கணவாய் வழியாக உள்ளே அழைத்துக்கொண்டு வந்து விட்டான். 'ஓகோ! இங்கேயும் சொரணையற்ற அடிமைகள்தாஞ' என்று நினைத்துக்கொண்டே ஜீலம் ஆற்றங்கரைக்கு வந்தான் அலெக்சாண்டர். வீர புருஷோத்தமன் படைகளோடு நிற்கிருன். 'மாசிடோனியாவிலிருந்து இந்த மலையடிவாரம் வரையில் நம்மை எதிர்த்தவன் எவனும் இல்லை. நமது போர்முழக்கம் கேட்டவுடன் ஆயுதங்களைத் தரையில் போட்டு விட்டுத் தலைதெறிக்க ஓடிய தார்வேந்தர்கள் பலர். கப்பம் கட்டித் தங்கள் தலையை உடலோடு வைத்துக்கொண்டு உயிர் பிழைத்தவர்கள் பலர். கேட்டதைத் தந்து தங்கள் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டு, தாழ்வாரத்தில் நின்று உயிர்ப் பிச்சைக் கேட்டவர்கள் சிலர். நமது குதிரைகளின் குளம்படி சத்தம் கேட்டவுடன் குழம்பிப் போனவர்கள் சிலர். இங்கேயும் இந்த மலையடிவாரத்திலும் ஒரு நல்ல அடிமை கிடைத்தான் என்று இறுமாந்து எய்திஞேம். ஆஞல் புருடோத்தமஞம் —நம்மை எதிர்க்கிருன்' படைகளுக்குக் கட்டளையிட்டான். போர் மூண்டது. இறுதியில் புருடோத்தமன் தோற்ருன்,

அவன் தோற்றுவிட்டானே என்று சுத்த வீரன் அலெக்சாண்டர் கேலி செய்யவில்லை. அவன் வீரத்தைக் கண்டு பாராட்டினன். கை குலுக்கினன். "புருடோத்தமா! நீயே சுத்த வீரன். உன் தாயகம் அவமானம் அடைந்துவிடுமோ என்ற கவலையில், நீ உன் சொந்த அவமானத்தையும் பொருட்படுத்தவில்லை. நீயல்லவா தாய் நாட்டுப் பற்றுடையவன். உன் வீரத்தை மெச்சுகிறேன். உன்னிடம் நான் பெற்ற நாட்டை உன் வீரத்திற்குக் காணிக்கையாகத் திருப்பித் தந்துவிட்டேன். இனி நாம் வீர நண்பர்கள்" என்று வாழ்த்தினன். இந்த நேரம் சந்திரகுப்தனின் மௌரிய சாம்ராச்சியத்தைக் காண வாரீர் என்றழைத்தான் சாணக்கியன். சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது நவநந்தர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி வந்தது. இந்தச் சாணக்கியன்தான் அமைச்சர்களுக்கு முப்பத்திரெண்டு லட்சணங்கள் இருக்கவேண்டுமென்று கூறுகிறன். அவற்றில் முக்கியமானவை—அவன் அந்த நாட்டிலேயே பிறந்தவனுக இருக்கவேண்டும். அறிவு, ஊக்கம், திறமை, சீலம், அனுபவம் முதலியன உடையவனுயிருக்க வேண்டும் என்றும் கூறுகிறன்.

திருவள்ளுவர் அமைச்சர்களின் லட்சணங்களையும், அரசர்களின் லட்சணங்களையும், நல்ல நாடு எது என்பதையும் கீழ் வரும் குறள்களால் அழகாகக் குறிப்பிடுகிறர்.

"வண்கண் குடிகாத்தல், கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு."

என்றும்,

"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை"

என்றும் சொல்கிறர்.

# 2

## சன்யாட்சன்

ஒரு காலத்தில் அபினி போதைக்கு அடிமைப்பட்டிருந்த சீனம், அந்த நாட்டின் மக்கள் சமூகத்தையோ, அரசியலையோ கவனிக்காமல் இருக்கவேண்டுமென்றுதான் வாளாயிருந்து விட்டது. அதையடக்கி ஆண்டு கொண்டிருந்த மஞ்சு அரசாங்கம், சீனர்களை சீனர்களாகவே மதிக்காத ஒரு வல்லரசு. தனக்கு அடிமைப்பட்டிருக்கும் எந்த நாடும் விழித்தெழக் கூடாது என்பதுதான் அதன் எண்ணமாயிருந்திருக்கிறது. அதனால்தான் அந்த மக்கள் எக்கேடு கெட்டாலும் நாம் போடுகிற தீர்வையைச் செலுத்திக்கொண்டு, அடக்குமுறைகளைத் தாங்கிக்கொண்டு, எதிர்த்துப் பேச உரிமையில்லாமல் சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தும் கொடுங்கோன்மைதான் எந்த நாட்டிலும் நடந்தவண்ணமிருந்தது. அந்த அடிமைத்தளையை ஒடித்து, மக்களைத் தாங்கள் யார் என்று உணரச் செய்வதற்கு நெஞ்சுரம் பெற்ற சிலர் தேவைப்பட்டார்கள். சீனத்தின் விடுதலைக்காகப் போராட ஒரு சன்யாட்சன் தோன்றுவதற்கு முன்னால் அங்கே என்ன நடந்ததென்பதைப் பார்ப்போம்.

### Clippers of China

வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. நீதிமன்றங்கள் நடந்தாலும் நடக்கும்; நடக்காமலும் போகும். வழக்கறிஞர்

கள் வழக்குகளை ஒழுங்காக நடத்த நீதிமன்றங்களுக்கு வந்தாலும் வருவார்கள். இல்லையானாலும், வழக்குத் தொடுத்தவர்கள் வக்கீல்களை நீதிமன்றங்களுக்கு அழைத்து வருவார்களா? அதுவுமில்லை. வாணிபக் கடைகளில் சாக்குகள் இருக்கும்; முதலாளி தூங்குவான்—பணியாட்களும் அப்படியே. எங்கே படுப்பது என்றறியாமல், வீடுகள் இருந்தும் தெரு ஓரங்களிலே படுத்திருப்பார்கள். பெண்களும் அப்படியே. பள்ளியில் ஆசிரியர் நாற்காலியில் சாய்ந்தபடியே தூங்குவார். மாணவர்கள் இங்குமங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருப்பார்கள். பாடங்கள் நடைபெறாது. இவ்வளவும் எதனால்? அபினியின் போதையால்.

## அபினி எங்கே கிடைத்தது?

இந்த அபினி சீனத்தில் செய்யப்படவில்லை. இந்தியநாட்டு கல்கத்தாவிலிருந்து கிளிப்பர் ஆப் சைனா என்ற கப்பல்கள் புறப்படுகின்றன. அவற்றில்தான் இந்தப் பொல்லாத அபினி ஏற்றப்பட்டு புறப்படுகின்றன. இதையறிந்த மன்னன் சின்—யுவான்கே என்பவன்தான் இதைத் தடை செய்துவிட்டான். அதன் பிறகும் கள்ளத்தனமாக சென்றது. அப்படிச் சென்ற கப்பலிருந்து பெட்டிகளைக் கடலில் எறிந்தான். அன்றிலிருந்து தான் கறுப்பு வாணிபம், கள்ள வாணிபம் என்ற பெயர் பெற்றது. நாட்டையும் கவனிக்காமல், சொந்த வாழ்க்கை, வாணிபம் என்ற எதையும் கவனிக்காமல் சதா அபினியைத் தின்றுகொண்டிருந்த மக்களைத் தட்டியெழுப்புவதென்பது அவ்வளவு எளிதான செயலா?

மஞ்சு அரசாங்கத்தைக் கவிழ்த்து, குடியரசை நிறுவிய மாவீரன் சன்யாட்சன். மரணப்படுக்கையிலே சொன்ன சில வார்த்தைகள் நாமே நேரில் கேட்பதைப் போன்றிருக்கின்றன.

''நான் உடுத்துவதற்காக வைத்திருந்த இரண்டு அங்கிகளை என் மனைவிக்குத் தந்துவிட்டுச் செல்கின்றேன். இவை அவளுக்கு சொத்தாக அல்ல, என் நினைவுப்பொருளாக என்கிறான் சன். சீனத்தின் முதல் குடியரசுத்தலைவன் அவன் தான். அவன் நினைத்திருந்தால் எவ்வளவோ பொருள் சட்டி''

யிருக்க முடியும். எனினும் அவன் மரணப்படுக்கையின் பக்கத்திலே கிடந்தவை இரண்டு அங்கிகள். அதற்காக அவனுடைய மனைவி முணுமுணுத்துக் கொள்ளவில்லை. சீனக் குடியரசின் முதல் தலைவரின் மனைவி என்பதே ஒரு பெருமை தானே. மக்கள், இறந்து விட்டவரின் சொத்துக்கள் எவ்வளவு; அவன் வாழ்ந்த ஆடம்பர வாழ்க்கையின் உச்சநிலை என்னவென் பதையா பார்க்கிறார்கள்? இல்லையே! அவன் வாழ்ந்த ஆடம்பர மான வாழ்க்கையை எண்ணிப் பொறாமைப்படுகிறார்களே தவிர, சிறப்பாக எண்ணுவதில்லை. அவன் எவ்வளவு பணம் சம்பாதித்தானோ அவ்வளவு கெட்டப் பெயருமல்லவா சம்பாதித்தான்!

சீனத்தில் 1866 முதல் 1925 வரை வாழ்ந்து வந்து, பத்து புரட்சிகளிலே தோல்வியுற்று, பதினோராவது புரட்சியில் வெற்றிகண்டு, சீனத்தை மக்களாட்சியின் கீழ் கொண்டுவந்து, இறுதியில் இரண்டு அங்கிகளைத் தன் மனைவிக்கு நினைவுப் பொருளாக வைத்துச் சென்ற சன்யாட்சென்னை நினைத்துக் கண்ணீர் விடுகின்ற அளவுக்கு மாடமாளிகை, மணி மண்டபம் வைத்தாண்ட மஞ்சு மன்னனை யார் நினைக்கிறார்கள்? 1860 முதல் 1925வரை வாழ்ந்து, பலபுரட்சிகள் நடத்தி, ரஷ்யாவை பொதுவுடமை நாடாக்கிய நிகோலாய் லெனினை நினைக்கின்ற அளவுக்கு—ஆங்காங்கு சிலைகள் எழுப்பிய அளவுக்கு, இரண் டாவது நிக்கோலஸ் என்ற ஜார் மன்னனை யார் நினைக்கிறார் கள்? 1869 முதல் 1948 வரை வாழ்ந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்தின் முதுகெலும்பை முறிந்து, முழு விடுதலை பெற்றுத் தந்த உலக உத்தமர் காந்தியாரை நினைக்கின்ற அளவுக்கு, டாட்டாவையும் பிர்லாவையும் யார் நினைக்கிறார்கள்?

அவரவர்கள் வாழ்ந்த நாட்டின் விடுதலைக்காக அவர்கள் ஏற்றுக்கொண்ட தண்டனைகள், அனுபவித்த சிறைவாசம், பட்டஅடிகள், நாடுகடத்தல் ஆகிய கொடுமைகள் கொஞ்சமா? யாருக்காக? மக்களுக்காக. அவர்கள் தங்கள் மக்களைப்பற்றியே நினைக்காமல் நாட்டு மக்களைப்பற்றி நினைத்ததன் விளைவாக ஏற்றுக்கொண்ட தண்டனைகள் இவை. தன் நலத்திற்கு ஒரு

அங்குலம் கூட இடம் வைக்காமல் தன் முழு மனதையும் பொது நலத்தின் நுழைவிடமாய் வைத்ததாலே மக்களால் மகாத்மாக்கள் என்று பாராட்டப்பட்டார்கள். பெற்ற தாய் தந்தையர்களின் பேச்சைக் கேட்காதவர்கள்கூட இந்த விடு தலைவீரர்களின் பேச்சுக்கு அடிபணிந்தார்கள். அவர்கள் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு செல்லரித்த ஏகாதிபத்தியங் கள் இருந்த இடம் தெரியாமல் அந்தக் கோட்டைகளை மண் மேடாக்கிப் புல்பூண்டு முளைக்காமல் செய்துவிட்டார்கள்.

மகான் கன்பூஷியஸ் பிறந்த இடம்—கவி லீபோ பிறந்த இடம். மஞ்சு அரச பரம்பரையினரால் எதிரிகள் படை யெடுத்து வருவதைத் தடுக்கும் பொருட்டு 1400 மைல்கள் நெடுஞ்சுவர் கட்டிக் காத்த சீனம், உலக அதிசயங்களில் இதுவும் ஒன்றாக வைத்துப் பேசப்படுகிறது.

"அறிவுடையவர் எப்போதுமே தங்கள் அறிவுடையவர்கள் என்று சொல்லிக்கொள்ள மாட்டார்கள்"

"நான் ஒரு திறமைசாலி என்று நீ சொல்லிக்கொள்கிற போது, உனக்குப் பின்னாலேயே பத்து திறமைசாலிகள் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பது உன் நினைவிருக்கட்டும்"

எங்கோ ஒரு மூலையில் புரட்சி வாடை வீசினாலும், அரசர் கள் எவ்வளவு திடுக்கிடுகிறார்கள் என்பது சன்யாட்சன்னின் வாழ்க்கையில் எவ்வளவு உண்மையாயிருக்கிற தென்பதைக் கவனிப்போம்

"இவன் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு ஒரு லட்சம் பவுன் வெகுமதி" இப்படி மஞ்சு சர்க்காரின் அறிவிப்பு. சன்-யாட் சென் ஒரு கூலியின் மகன். இவனும் ஒரு கூலி. அவன் புரட்சியைத் தொடங்கும் போது கூலியாக இல்லை. படித்துப் பட்டம் பெற்ற, இரணசிகிச்சை செய்வதில் நிபுணன் என்ற பெயரெடுத்த உயர்ந்த மருத்துவனாக இருந்தான். மஞ்சு சர்க் காரின் அறிவிப்பைக் கண்டு பணத்துக்காசைப்பட்டு இவனைக் காட்டிக்கொடுக்க யாரும் முன்வரவில்லை. அவ்வளவு கேவல மான நிலையில் அன்றைய சீன மக்கள் தயாராயிருக்கவில்லை.

காரணம் சற்றேறப்ப இருநூற்றைம்பது ஆண்டுகள் மஞ்சு அரசாங்கம் நடைபெற்றது. சீனதிற்கு மஞ்சுக்கள் அந்நியர் கள். ஆனால் சொந்த நாட்டினரான சீனமக்களை அந்நிய நாட்டு அடிமைகள் போல் நடத்தினர் மஞ்சு அரசர்கள். அது எப்போது ஒழியும் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்த மக்கள், அதை ஒழிக்கத் தோன்றிய ஒருவனை எப்படிக் காட்டிக் கொடுப்பார்கள்? அதனால்தான் மஞ்சு அரசாங்கத்தின் இந்தப் பயங்கரமான அறிவிப்பு பயன்பெறவில்லை. எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அந்த நடுக்கத்தைத் தந்த மாவீரன் சன்–யாட் சன்னைப் பற்றித் தெரிந்துகொள்ளப் போகிறோம்.

யாரை எதிர்த்துப் புரட்சி செய்தான்? 1908 முதல் 1912 வரை சீனத்தையாண்ட கடைசி மன்னர், மன்னன் பூயி என்ற மஞ்சு அரசனை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தப்போகும் இந்த மாவீரனின் இளமைப் பருவத்தைப் பற்றி தெரிந்து கொண்டு மேலே செல்வது நல்லது.

''ஆசிரியர் நிழலிலும் நடக்காதே'' என்பது அன்றைய சீனத்தின் நடைமுறை. எவ்வளவு பெரிய மன்னர் மன்னர் களாயிருந்தாலும் ஆசிரியர்களுக்கு அவ்வளவு மரியாதை தந்தார்கள். இந்த நிலையில் இவன் தன் ஆசிரியரைப் பார்த்துக் கேட்டான்: ''ஆசிரியரே, நீங்கள் சொல்லிக்கொடுக்கும் பாடங்களில் எதையுமே நான் புரிந்து கொள்ள இயலவில்லை. பழைய புராணங்களையும், வெட்டி வேதாந்தங்களையும் சொல்லிக் கொடுப்பதால் என்ன பயன்?'' என்று கேட்டு விட்டான். ஆசிரியா திடுக்கிட்டார். ஏனெனில் இந்த விவாதம் ஆசிரியர் முன்னால் மாணவன் எவனும் கேட்டதில்லை; கேட்க முடியாது; கேட்கவும் கூடாது. ஊர் மக்கள் திடுக் கிட்டார்கள். ஒரு கூலியின் மகனா ஆசிரியரைப் பார்த்துக் கேட்டு விட்டான்? ஆசிரியர் தெய்வத்துக்கு சமமாயிற்றே! ''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' என்றல்லவா சொல் லப்பட்டிருக்கிறது? ''அட சண்டாளா, நீ ஒரு சாம்ராச்சிய மன்னன் மகனாயிருந்தால் கூட கேட்க முடியாதே. மன்னனே இப்படிச் செய்ய மாட்டானே. எவ்வளவு தைரியம் இந்தப் பையனுக்கு'' என்று ஊரார் அனைவருமே வியந்தனர். மாணவப்

பருவத்திலேயே இப்படி ஒரு துணிச்சல் ஏற்பட்டிருந்தது இவனுக்கு. சீனத்தில் அப்போது பெண்களின் பாதங்கள் குறுகியிருந்தால் பார்ப்பதற்கு அழகாயிருக்குமென்று கருதுவார்கள். அதன்படி இவனுடைய இளைய சகோதரின் பாதங்களை இறுக்கக் கட்டுகிறபோது கண்டிப்பான். இது இவன் சிறு வயதிலேயே புரட்சிக்காரன் என்பதைக் காட்டிற்று.

ஆசிரியர் பிரம்பால் அடித்துக்கொண்டே இருந்தார். இவன் கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருந்தான். பொதுவாகவே, சீனத்தின் தென்பகுதி வரண்ட பகுதி. எதுவும் சரியாக விளையாது. விளைந்தாலும் அடுத்த அறுவடை வரை குடும்பத்துக்குப் போதாது. இந்த நிலையில் அகப்பட்ட இவன் குடும்பத்தின் பெரிய பிள்ளை; வெளிநாடுகளிலாகிலும் போய்ப் பிழைக்கலாம் என்று கருதியிருந்தான்.

## ஹவாய் தீவு

பசிபிக் மாகடலின் மத்தியில் பல தீவுகளுக்கிடையே இந்தத் தீவு அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்தது. ஹவாய் தீவுக்கூட்டங்களின் தலைநகரம் ஹனலூலு. பெற்றோர்களைப் பிறந்த இடத்திலே விட்டு ஹவாய்க்குப் போய் ஏதாவது சம்பாதித்துப் பணம்அனுப்புவதாகச் சொல்லிவிட்டுமூத்தவன் ஆமி புறப்பட்டு அங்கு போய்ச் சேர்ந்தான். அங்கே இந்தத் தீவுகளுக்கு முன்பு சேன்ட்விச் தீவுகள் (Sandwich Islands) என்று பெயர். இந்தத் தீவுகளில் பெரியது ஹவாய். ஆகையால் இப்போது அதை ஹாவாய் தீவுகள் என்று அழைக்கிறார்கள். தீவுகளின் மொத்த நிலப்பரப்பு 4000 சதுர மைல். இந்த இருபது தீவுகளில் சிலவற்றில் எரிமலைகள் இருக்கின்றன. ஹனலூலு அழகிய துறைமுகப் பட்டினம். இங்கு கரும்பு, வாழை, அன்னசி, காபி முதலியன முக்கியமான விளைபொருள்கள்.

ஹவாய்க்குச் சென்ற ஆமி, சொந்தமாக நிலம் வாங்கிப் பயிரிடுகின்ற அளவுக்கு வளர்ந்துவிட்ட பிறகு, பெற்றோர்களைப் பார்க்கவும், தம்பியை அழைத்துச் செல்லலாம் என்ற எண்ணத்தோடும் ஊர் திரும்பினன்.

பெற்றோர்களுடன் சில நாட்கள் தங்கிவிட்டு, முன்பிருந்த வறுமை வாழ்க்கையிலிருந்து அவர்களை மீட்டு மீண்டும் ஹவாய்க்குப் புறப்படும்போது, தன் தம்பியை தன்னோடு அனுப்புமாறு கேட்டான். ஒரு பிள்ளையாவது தங்களோடு இருக்கட்டுமே என்று கருதி முதலில் அனுப்ப மறுத்தவர்கள், பிறகுஆமியின் இரண்டாவது வேண்டுகோள்படி கப்பலிலேற்றி விட்டு, ஆமிக்கு தகவல் தந்துவிட்டார்கள். சன் கப்பலில் பயணம் செய்துகொண்டே அதன் எந்திரங்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதையெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டு வந்தான். அப்போது இவனுக்கு வயது பதின் மூன்று. ஹனலூலு போய்ச் சேர்ந்த சன் தன் தமையனுக்கு உதவியாயிருந்தான். ஆமிக்கோ இவனை ஒரு ஆங்கிலப் பள்ளியில் சேர்த்துக் கல்வி கற்றுத் தந்தால் தன் தொழிலுக்கு உதவியாயிருக்குமென்று கருதி பக்கத்திலிருந்த அயாலோனி என்ற கல்லூரியில் சேர்த்துவிட்டான். அங்கும் சரி, இலங்கையிலும் சரி, கல்லூரி என்றால் பத்தாம் வகுப்பு வரைதான் இருக்கும்.

அங்கே ஆசிரியர்களின் அனைவரும் ஆங்கிலேயர்கள்— ஒருவரைத் தவிர. அவர் ஹவாய்த்தீவைச் சேர்ந்த சாலமென் மஹிபூலா என்பவர்தான் தலைமை ஆசிரியர். கிருஸ்துவ தலைமைப் பாதிரியாரும் அவர்தான். அங்கு கடைப்பிடித்து வந்த பழக்கவழக்கங்கள் இவனுக்கு திகைப்பையுண்டாக்கி விட்டது. எல்லாம் ஆங்கிலம்! வெகுவிரைவிலே ஆங்கிலம் பயின்று அந்த மொழியிலேயே, வரலாறு, கணிதம், பூகோளம் முதலியவற்றைப் படித்து முடித்தான். ஆசிரியர் இவனுடைய விடா முயற்சியைக் கண்டு பாராட்டினார்கள். இவன் படித்த பள்ளி கிருஸ்துவர்களுக்குச் சொந்தமானதாகையால்

(குறிப்பு : 1953ல் நான் இலங்கையில் ஆற்றிய பல சொற்பொழிவுகள் காலேஜ் — கல்லூரியில்தான் நடந்தது. அப்போதுதான் பத்தாம் வகுப்பு வரையிலும் இருக்கும் கல்விச்சாலைகளையும்கூட கல்லூரி என்றே அழைக்கிறார்கள் என்பது தெரிந்தது)

ஞாயிறு தோறும் தொழுகை நடக்கும். மாதாகோவிலுக்குச் சென்று வழிபாட்டிலே கலந்துகொள்வான். அவர்களோடு சேர்ந்து இசை பாடுவான். விடுமறை நாட்களில் தன் அண்ணன் ஆமியோடு தங்கி அவனுக்கு உதவியாயிருப்பான்.

## இவன் கண்டதென்ன?

ஹவாய் தீவுகளில் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருந்தாலும் நிறவேற்றுமை அதிகமாகக் காணப்பட்டது. ஒரு நாள் இவனை தற்செயலாகச் சந்தித்த ஒரு அமெரிக்கன் "ஏ சீனாக்காரனே" என்று வெறிக்கப் பார்த்தான். ஆமிக்கு வாணிபத்தில் கிடைத்த பணத்தில் ஒரு பகுதியை தம்பி சன்னுக்கு எழுதி வைத்தான். இலக்கணத்தில் நல்ல தேர்ச்சியடைந்ததற்காக இவனுக்கு ஒரு பரிசு கிடைத்தது. மூன்றாண்டுகள் படிப்பு. வயது பதினாறு. தன்னோடு படித்த சீனச் சிறுவர்கள் சிலர் கிருஸ்துவர்களாகிவிட்டார்கள். ஆகவே இவனும் கிருஸ்துவனாக வேண்டுமென்ற எண்ணத்தோடு ஆமியை ஒப்புதல் கேட்டான். ஆமி திடுக்கிட்டுப் போனான். கடுங்கோபங் கொண்டு தம்பியைக் கண்டித்துவிட்டு ஊருக்குத் தன் பெற்றோர்களுக்குத் தெரிவித்து விட்டான். "அவனை எவ்வளவு விரைவில் திருப்பியனுப்பிவிட முடியுமோ அவ்வளவு விரைவில்? அனுப்பிவிடு. ஏனெனில் அவனுக்கு பதினாறு வயது ஆகிவிட்டபடியால் திருமணம் செய்யவேண்டும் (சீனாவில் இந்த சிறு வயதிலேயே திருமணம் செய்து வைக்கின்ற வழக்கம் இருந்தது.) ஆகையாலே அனுப்பிவிடு" என்று பெற்றோரிடம் இருந்து கடிதம் வந்தது. பெற்றோர்களும் பெண்ணைப் பார்த்து வைத்துக்கொண்டு இவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வந்து சேர்ந்தான். என்றாலும் மனம் அவ்வளவு மகிழ்ச்சியாயில்லை. ஏனெனில் இவன் ஏதோ ஒரு இருட்டறைக்கு வந்தது போலவே எண்ணினான். இவன் வந்த பிறகு ஊர் மக்கள் பெரிய மாறுதலைக் கண்டார்கள். இவன் பேச்சிலும் நடை, நொடி, பாவனையிலும் முற்றிலும் மாறுபட்ட பையனாகவே காணப்பட்டான்.

இவனுடைய நண்பன் லூயியும் இவனும் அரசியல் முறைகளைப் பற்றி ஆங்கிலத்தில் பேசிக் கொள்வார்கள். இவர்கள் முந்திய தலைமுறையில் தைபிங்என்ற இடத்தில் ஹங்லியுசுவான் என்பவனால் தோற்றுவிக்கப்பட்ட கலகம் பதினைன்கு ஆண்டுகள் நடை பெற்றது. இறுதியில் அடக்கப்பட்டது. இதைப்பற்றி பெரியவர்கள் வெளிப்படையாகப் பேசிக்கொள்ள மாட்டார்கள். அவ்வளவு அச்சம் அவர்களுக்கு. காரணம் அதில் லட்சக் கணக்கான பேர் கொல்லப்பட்டார்கள். சில படித்த சிறுவர்கள் சன்னோடு சேர்ந்துகொண்டனர். ஒரு தெய்வ வழிபாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்ய, ஆண்டவனால் அனுப்பப்பட்டவன் என்றும், இயேசுவின் சகோதரன் என்றும் சொல்லிக்கொண்டதால் இவனோடு ஒரு கூட்டம் சேர்ந்தது. இந்தக் கூட்டத்தை பக்குவமாக ஒரு புரட்சிக் கூட்டமாக மாற்றிக் கொண்டான்.

உள் நாட்டிலுள்ள மூடநம்பிக்கைகளையும், அதே நேரத்தில் மஞ்சு ஆட்சியையும் ஒழித்துவிட வேண்டுமென்றும் முடிவு கட்டிக்கொண்டார்கள். முதல் வேலையாக கோயிலில் இருந்த மூன்று சிலைகளில் ஒன்றுக்குக் கைவிரல் ஒடிந்து கிடந்தது. மற்றோர் சிலைக்குத் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. இதைக் கண்ட ஊர் மக்கள் அலறியடித்துக்கொண்டு போய் பார்த்துவிட்டு 'ஐயோ, ஊருக்கு வந்துவிட்டது நாசம்'; தெய்வ கோபத்திற்கு ஆளாய்விட்டது ஊர். இனி என்ன நேருமோ? யார் செய்திருப்பார்கள் இந்த அடாத செயலை?'' என்று பேசிக்கொண்டிருந்தனர் அதை கேட்ட சிறுவர்கள் "லூயியும், சன்னும்தான் கோயிலிலிருந்து வெளிவந்தார்கள்." என்றனர். 'ஆம்! அவர்களுடைய வேலையாகத்தான் இருக்கும். லூயி கிருஸ்தவன். அவனை ஒன்றும் செய்வதற்கில்லை. சன்னைத்தான் தண்டிக்க வேண்டுமென, அவன் தந்தையை அழைத்து "ஒன்று, உன் மகன் செய்த குற்றத்திற்காகப் பழுது பட்டிருக்கும் சிலைகளைச் சரிசெய்தாக வேண்டும். மற்றொன்று உன் மகனை ஊரைவிட்டு ஓட்டவேண்டும்!! வேறு வழியில்லாமல் சென்னின் தந்தை, இரண்டையும் செய்து முடித்தான்.

சன்னும் ஊரைவிட்டு வெளியேறி ஹாங்காங் வந்து சேர்ந்தான். அங்கே ஒரு சிறிய பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படித்தான். பின்பு கிவீன்ஸ் கல்லூரியில் சேர்ந்துகொண்டான். ஹாக்கர் என்ற கிருஸ்தவரே முதல்வராக இருந்தார். அவருக்கு அறைகுறை சீனமொழி தெரியும். ஏனெனில் சீனமொழி கட்டாயப் பாடமாக்கப் பட்டிருந்தது. சன்னும் சீன மொழியில் தேர்ச்சிப் பெற்றவனுகையால் இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசியதன் விளைவாக, தன் பதினெட்டாவது வயதில் கிருஸ்தவனுக ஞானஸ்நானம் செய்து கொண்டான் சன்.

## தந்தையின் பிரிவு

தந்தை இறந்துவிட்டதால் சன் ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. ஒருவர் இறந்தால் மூன்று திங்கள்கள் சடங்குகள் செய்ய வேண்டியிருப்பதால், ஆமி ஊருக்கு வரவில்லை. இவனே எல்லா சடங்குகளையும் செய்து முடித்தான். மீண்டும் க்வின்ஸ் கல்லூரியில் சேர்ந்து மூன்ருண்டுகள் படித்து தேர்ச்சி பெற்ருன். அந்தக் கல்லூரியில் ஒரு விதி இருந்தது. அதாவது ஒரு மாணவன் மற்ற மொழிகளில் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தாலும் சீன மொழியில் தேர்ச்சி பெறவில்லையாஞல் அவனை மேல் வகுப்புக்கு அனுப்புவதில்லை என்பதுதான் அது.

அடுத்து இவனுக்குத் திருமணம். தந்தை இவனுக்காக முன்பு பார்த்திருந்த பெண்ணையே திருமணம் செய்து வைத்தார்கள். இதுவும் ஒரு கலப்பு மணந்தான் எப்படி? சன் ஒரு கிருஸ்தவன். பெண் சீனத்துக்காரி. என்ருலும் உறவினர்கள் கவலை கொள்ளாமல் திருமணத்தை முடித்து வைத்தார்கள். சீனர்களிலே ஒரு பழக்கமிருந்தது. திருமணமானவுடனே பெயரை மாற்றிக்கொள்வது. அந்தப் பெண்ணின் பெயர் லூசி என்றிருந்ததை டக்மங் என்று மாற்றப்பட்டது. ஆனல்,

இவன் பெயர் மாற்றமடையாமலே ஊர் மக்கள் பழையபடி இவனை சன்வென் என்றே அழைத்தார்கள்.

மீண்டும் மனைவியோடு ஹாங்காங் போய் ஹாக்கரோடு சேர்ந்து கொண்டு ஊர்ஊராக, கிராமம் கிராமமாக மதப் பிரசாரத்துக்குப் போய்க் கொண்டேயிருந்தான். அவர்களை யெல்லாம் அழைத்துக்கொண்டு தன் ஊருக்கே வந்து தன் வீட்டிலேயே தங்கவைத்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான். இவனுடைய பணிவையும் அன்பையும் கண்டு இவன் போகின்ற வரையில் யாரும் எதுவும் பேச வில்லை.

## தாயார் கவலை

இதையெல்லாம் கண்ட தாய் நடந்தவைகளையெல்லாம் பெரிய மகன் ஆமிக்கு எழுதிவிட்டாள். கடுங்கோபங் கொண்டான் ஆமி. அவன் கிருஸ்துவ மதத்திலிருந்து திரும்பா விட்டால் குடும்பச் செலவுக்குப் பணம் அனுப்புவதை நிறுத்தி விடுவேன் என்று பயமுறுத்திப் பார்த்தான் ஆமி. ஆனாலும் சன் அசையவில்லை. கடைசியில் தன் சொத்துக்கள் சில வற்றை விற்கவேண்டும். அதற்கு சன்னின் கையெழுத்துத் தேவைப்படுகிறது. ஆகவே, அவனை உடனே ஹனலூலுவுக்கு அனுப்புங்கள் என்றெழுதினான். சன் அனுப்பப்பட்டான். ஆமி எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். கேட்கவில்லை. கடைசியில், ஊர் போய்ச்சேர கப்பல் கட்டணமும் தரமுடியா தென்று சொல்லி, வெறுங்கையோடு அனுப்பிவிட்டான். அங் கிருந்த சில கிருஸ்தவ நண்பர்கள் உதவி பெற்று ஊர் வந்து சேர்ந்தான். மீண்டும் க்வீன்ஸ் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. ஏனெனில் இடையிலே பல திங்கள்கள் நின்று விட்டதால் ஏற்பட்ட கதி.

அப்போது சீனத்தில் மருத்துவத் தொழிலுக்கு நல்ல வாய்ப்பிருந்தது. ஆகையால் டாக்டர் கெர் என்பவரின் யோசனைப்படி மருத்துவத் தொழிலுக்குப் படிப்பதற்காக ஹாக்கரின் அறிமுகக் கடிதத்தோடு காண்டனிலிருந்து

டாக்டர் கௌரைச் சந்தித்தான். அவர் சில சீன மாணவர்களுக்கு மருத்துவத் தொழிலுக்கேற்ற பாடத்தை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அங்கே போய்ச் சேர்ந்தான் சன்.

இந்த நேரம் ஹாங்காங்கில் ஒரு மருத்துவக் கல்லூரி சர் பாட்ரிக் மான்சன் என்பவனால் திறக்கப்பட்டது. டாக்டர் காண்ட்லின் உதவியால் சன் அதில் ஒரு மாணுக்கனுகச் சேர்ந்துகொண்டான்.

கல்லூரியில் சேர்ந்த இருபத்திநான்கு பேரில் சன் நல்ல திறமைசாலி. இனிய சுபாவம். படிப்பில் அவன் காட்டிய ஆர்வம் வாழ்க்கையில் காட்டிய பெருந்தன்மை ஆகிய குணங்கள் காண்ட்லியைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. காண்ட்லி மருத்துவக் கல்லூரியின் ஆசிரியர். 1891ம் ஆண்டு இவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு சன்போ என்று பெயரிட்டார்கள். பிற்காலத்தில் அவன் காண்டன் மேயராகவும், சியாங்–கே–ஷேக் அமைச்சரவையில் ஒரு அமைச்சராகவும் பணி புரிந்திருக்கின்முன். சன் மருத்துவக் கல்லூரியில் படுத்துக்கொண்டே பிற நாட்டு வரலாறுகளைப் படித்துக்கொண்டு வந்ததில், அந்நாடுகள் சிலவற்றைப் பற்றிப் படித்ததின் விளைவாக, மஞ்சு சர்க்காரைப் பகிரங்கமாக தாக்கிப் பேசவும் அறிக்கைகள் விடவும் செய்தான்.

1892ல் சன் டாக்டர் பட்டம் பெற்றுவிட்டான். இனி தொழில் நடத்துவது எங்கே என்று எண்ணி தன் சொந்த ஊருக்கருகாமையிலிருப்பது நல்லதென்று மாக்கோ என்ற சிறிய தீவைத் தேர்ந்தெடுத்து அங்கு தொழிலைத் தொடங்கினுன். ஆனுல், அந்தத் தீவு போர்ச்சுகீசியருக்குச் சொந்தமாயிருந்ததால் இவன் வளர்ச்சியை ஒப்புக்கொள்ளாமல், போர்சுகீசிய டாக்டர்கள் தவிர வேறு யாரும் இங்கே தொழில் செய்யக்கூடாதென்று அரசாங்கஉத்திரவைக் காட்டித் தடுத்து விட்டார்கள். எப்படியும் சன் மாக்கோ தீவை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. எங்கே செல்வது? போர்ச்சுகீசிய

ஆதிக்கத்திருந்த தீவை விட்டு மீண்டும் மஞ்சு சர்க்காரின் கீழ் வர வேண்டியதாயிற்று. பிறகு வெகுதூரத்திலுள் டீன்ஸ்டின் நகர மருத்துமனையில் வேலை செய்யலாம் என்று கருதி, தன் நண்பனையும் அழைத்துக் கொண்டு செல்லவேண்டியதாயிற்று. போகவேண்டிய பாதை கரடுமுரடாகவும் போக்குவரத்து வசதியில்லாமலுமிருந்தது. கால்நடையாகவே வெகுதூரமும் படகில் சிறிது தூரமும் சென்ருன். வழியில் சீனமக்கள் பட்டுக் கொண்டிருக்கிற துன்பத்தையெல்லாம் கண்டு, அவற்றைச் சீர் செய்யவேண்டும் என்று கோரி ஒரு விண்ணப்பத்தை அனுப்பிஞன். அது போய்ச் சேரவே இல்லை. இடையிலிருந்தவர்கள் அரசப் பிரதிநிதிக்கு அனுப்பவே இல்லை.

பிறகு, இவன் தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் மருத்துவம் செய்துவந்தான். இவன் கொடுத்த அறிக்கை ஓராண்டு கழித்து ஒரு பத்திரிக்கையில் வெளியாயிற்று. இந்த அறிக்கை வெளிவந்த பிறகு தன் கொள்கையை ஒளித்துப் பயனில்லை என்று கருதி, முழுநேர அரசியல்வாதியாய் மஞ்சு சர்க்காரை பகிரங்கமாகத் தாக்கிப் பேசத் தொடங்கிஞன். சீஞவில் எங்கேயும் அரசாங்கத்திற்கு எதிராகவோ, மதத்திற்கு எதிராகவோ பேசக்கூடாது. அந்த அளவுக்கு மஞ்சு அரசாங்கம் பயமுறுத்தி வைத்திருந்தது. என்ருலும், சுமார் 20 முதல் 30 லட்சம் வரை உறுப்பினர்களைக் கொண்ட இரகசிய சங்கங்கள் இயங்கின. சீனர்கள் பொதுவாகவே பத்திரிக்கையில் வருகின்ற செய்திகளை மதிப்பதுமில்லை. அந்த அளவுக்கு பயமுறுத்தப்பட்டிருந்தனர்.

## முதற் புரட்சி

சீனத்தில் ஆயுத கிடங்குகளில் தவிர, பொறுப்பு வாய்ந்த சீன அதிகாரிகள் மாளிகைகளிலும் ஆயுதங்களை சேர்த்து வைத்திருப்பார்கள். ஆகையால் முதலில் மக்களின் துணை கொண்டு அந்த ஆயுதங்களை கைப்பற்றுவது, அவையும் போதவில்லையாஞல் ஆயுதக்கிடங்கை கைப்பற்றி ஒவ்வொரு ஊராக இப்படியே செய்துகொண்டுபோய், இறுதியில் பீகிங்

நகரத்தைப் பிடித்து விட்டோமானால் மஞ்சு ஆட்சி ஒழிந்தது என்று பெருள். இப்படி ஒரு திட்டம் வகுத்தான் சன். இதற்காக இவன் முதலில் பத்து இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு சீன முற்போக்கு சங்கம் என்ற பெயரால் ஒரு சங்கத்தைத் தொடங்கினான். அதில் ஒவ்வொரு உறுப்பினரும் பத்து டாலர்கள் செலுத்தி விவிலியத்தை கையில் வைத்துக் கொண்டு உறுதி சொல்லி புத்தகத்தில் கையெழுத்திட வேண்டும்.

அதன் குறிக்கோளானது: "சீனத்தை மேன்மையடையச் செய்வதை குறிக்கோளாகக் கொண்டு பாடுபடுவது" என்பதாகும். 'சீனர்கள் முற்போக்குசங்கம்' என்ற ஒன்றை இரகசியமாகத் தொடங்கினான். சீன இளைஞர்களுக்கு சமுதாய மாற்றம் தேவை என்பதையும் வலியுறுத்தப்பட்டது. வெளிநாடுகளிலுள்ள சீனர்கள் இதன் கருத்தைப் புரிந்துகொண்டால் போதும் என்ற எண்ணத்தில் இப்படி ஒரு கருத்தை வெளியிட்டான். அடுத்து வேறோர் அறிக்கையையும் வெளியிட்டான்.

"இன்றைய சீனத்தின் போக்கு தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கின்றது. பழைய உறவு முறைகள் நற்பண்புகள் யாவும் சீரழிக்கப்பட்டு வருகின்றன. பெரிய அளவில் கவனிக்க வேண்டியவற்றைப் புறக்கணித்து விடுகிறார்கள். மற்ற வல்லரசுகள் சீனத்தைத் துண்டு போட்டுக்கொண்டு விட்டால் தங்கள் சந்ததிகள் நாளடைவில் என்னவாகும்?"

"ஐரோப்பாவிலுள்ள தலைவர்கள் சிலர் சீனாவையும், துருக்கியையும் குறிப்பிட்டுப் பேசுகிறபோது சாகும் தருவாயில் உள்ள நாடுகள் என்று பேசுவார்கள். இந்த அவமானத்தை, நாம் சகித்துக்கொண்டுதானிருக்கவேண்டுமா?"

---

(குறிப்பு : பல ஆண்டுகளாகவே தெற்கு சீனத்தை பிரான்சும், மத்திய சீனாவை பிரிட்டனும், வடகிழக்கு சீனாவை ஜெர்மனியும், மஞ்சூரியாவை ருஷ்யாவும், செல்வாக்கான பகுதிகளென்று பங்கு போட்டுக் கொண்டன.)

ஹவாய்தீவில் இந்த சங்கத்தை நிறுவிவிட்டு, மற்றப்பகுதி களிலும் இதையே செய்துவிட்டு, அமெரிக்கா செல்லத் திட்ட மிட்டிருந்தான். இதற்குள் இவனோடு படித்த மாணவன் சார்லஸ் ஜோன்ஸ் சூங் என்பவனிடமிருந்து 'உடனே திரும்பி ஹாங்காங் வா' என்று அவசர அழைப்பு ஒன்று வந்தது.

கொரியா சம்பந்தமாக ஜப்பானுக்கும் சீனாவுக்கும் சண்டை மூண்டது. இறுதியில் ஜப்பான் வென்றது. இவ்வளவு பெரிய சீனா, ஒரு சிறியநாடான ஜப்பானிடம்தோற்றது சீனர்களுக்குச் சகிக்கமுடியாத களங்கமாகப் பட்டது. ஒப்பந்தமும் ஏற் பட்டது. ஒப்பந்தப்படி சீனா சில பகுதிகளை விட்டுக்கொடுத்து ஒரு தொகையை நட்ட ஈடாகத் தரவேண்டி வந்தது. இந்த ஒப்பந்தத்தை ஷிமோரஸ்கி ஒப்பந்தம் என்றழைக்கிறார்கள். மக்களுக்கு மஞ்சு அரசாங்கத்தின் மேல் அடங்காத கோபம். இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு புரட்சியைத் தொடங் கலாம் என்பதற்கும், அதற்குத் தலைமையேற்கும் பொறுப்பு சன்யாட் சென் ஒருவனுக்கே உண்டு என்பதால்தான் சூங் இவனை வரும்படி அழைத்திருந்தான்.

அங்கு போய்ச் சேர்ந்த சன். விஞ்ஞான விவசாய சங்கம் என்ற ஒன்றைத் தொடங்கி, ஒரு பழைய சாமான்கள் விற்கும் கடையில் அந்த நிறுவனத்தை நடத்துவதென்றும், அதன் கிளை ஒன்று ஹாங்காங்கில் நிறுவுவதென்றும் அதற்கு பொருள் திரட்டும் வேலையில் ஈடுபட்டுப் பொருள் திரட்டி, சில பெரிய துப்பாக்கிகள், அறுநூறு கைத்துப்பாக்கிகள், ரவைகள், வெடி மருந்து, சில கத்திரிக்கோல்கள் ஆகியவை வாங்கப்பட்டன. இங்கே கத்திரிக்கோல்கள் எதற்கு என்றால்—மஞ்சு ஆட்சி

---

(குறிப்பு: ஹாங்காங்கிலிருந்து காண்டன் வெகு தூரமில்லை. ரயில் பாதையும் இருக்கிறது. ஹாங்காங் மலையிலிருந்து பைனுகுலர் மூலம் பார்த்தால் சீனக்குடியானவர்கள் வயல் களில் வேலை செய்வதைக் காணலாம். நான் இதை 1970ல் ஆஸ்திரேலியா மாநாட்டுக்குப் போகும் வழியில் ஹாங்காங்கில் தங்கிய இரண்டு நாட்களிலும் பார்த்தேன்

தொடங்கிய காலத்திலிருந்து சீனர்கள் ஆளப்படும் வகுப்பினர் என்ற அடையாளத்தைக் குறிக்க தலையின் முன்பக்கத்தை கொஞ்சம் சிரைத்துக்கொண்டு பின்பக்கம் நீண்ட பின்னலைப் பின்னி தொங்கவிடப்படவேண்டுமென கட்டளையிட்டிருந்தார்கள். மஞ்சு சர்க்காரை வீழ்த்துவதில் தாங்கள் வெற்றி பெற்றால், அதன் அறிகுறியாக பின்னலை வெட்டிவிடுவதற்காக கத்திரிக்கோல் வாங்கிருந்தார்கள். இப்படி வாங்கிய சில பொருட்களை ஹாங்காங் கிளைச் சங்கத்தினர் சில பீப்பாய்களில் அடைத்து கப்பல் மூலம் காண்டன் நகரத்துக்கு அனுப்பினார்கள். பீப்பாய்களின் மேலே சிமெண்டு என்று எழுதினார்கள்.

காண்டனில் இந்த பீப்பாய்களை இறக்கும்போது ஒரு பீப்பாய் விழுந்து வெடித்தது. விடுவார்களா அதிகாரிகள்? ஹாங்காங்கில்தான் இந்த சதி நடைபெறுகிறது என்று அறிந்து ஓடி வந்தார்கள். செய்தியறிந்ததும் சன்னை வெளியேற்றிவிட்டார்கள். மற்ற நால்வரும் அகப்பட்டுக்கொண்டார்கள். இப்போது மஞ்சு அரசாங்கத்தில் ஒரு சட்டம் இருந்தது. குற்றவாளிகள் அகப்படாவிட்டால் அவர்கள் தாய்தந்தையர்களை, உற்றாரைப் பிடித்து சிறையிலடைத்து சித்திரவதை செய்வது, அல்லது சிரச்சேதம் செய்வது. அதனால், பெற்றோர்கள் ஹனலூலுவுக்கு ஓடிவிட்டார்கள். சன்னின் பெரிய தந்தை அகப்பட்டுக்கொண்டான். இவனை காண்டனுக்கு அழைத்துப் போய் சிறையில் தள்ளிவிட்டார்கள். மஞ்சு சர்க்கார் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தால் எதையும் சாதிக்கலாம். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ஆறாயிரம் பவுன் லஞ்சம் கொடுத்து விடுதலை பெற்றார்கள். அவர்களில் ஒருவன் சிறைக் கொடுமை தாளமுடியாமல் சிறையிலே இறந்துவிட்டான்.

## சன்னின் கதி என்ன?

சன் முதலில் காண்டன் நகரத்திற்கு ஓடினான். பிறகு, மாக்கோ தீவுக்கு ஓடினான். "அங்கே சன் தலையைக் கொண்டு வந்தால் பத்தாயிரம் பவுன் வெகுமதி"—இப்படி சுவரொட்டி

கள். இதைக் கண்டதும் சில நண்பர்களின் உதவியால் ஹாங்காங் வந்து சேர்ந்தான். இவன் இங்கே இருப்பது சரியல்ல என்று நண்பன் காண்டலிமூலம் தெரிந்துகொண்டு, அங்கிருந்து ஜப்பானிலுள்ள கோப் நகரமடைந்தான். ஜப்பான் சென்றதும் தலைமயிரை நீக்கிவிட்டு ஒரு ஜப்பானியனைப் போல் உடை உடுத்திக்கொண்டான். அங்கேயும் அதிக நாட்கள் தங்கவில்லை. சீன அரசாங்க ஒற்றர்கள் இவனைக் கண்டுபிடித்துத் தன் நாட்டுக்கு அனுப்பும்படிக் கேட்டால், சர்வதேச ஒப்பந்தப்படி இவனை அனுப்பித் தீரவேண்டும். ஆகையால் முன்பு இவன் நினைத்திருந்தபடியே அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ நகரத்துக்குச் சென்றான் அங்கிருந்த சில சீனர்களைச் சந்தித்து தன் இலட்சியங்களைச் சொல்லி அவன் வசம் திருப்பப் பார்த்தான். நினைத்தபடி பலன் ஏதும் கிடைக்கவில்லை. மறுபடியும் அங்கிருந்து புறப்பட்டு வழி நெடுகிலுமிருந்த பல ஊர்களைப் பார்த்துக்கொண்டே நியூயார்க் நகரம் வந்து சேர்ந்தான். இவன் சான்பிரான்சிஸ்கோ நகரத்தில் இருந்தபோது புகைப் படம் எடுத்துக்கொண்டான் இது எப்படியோ வாஷிங்டனிலிருந்த சீனப் பிரதிநிதி கையில் கிடைத்தது. இதனால் இந்த புகைப்படத்தைக் கொண்டு இவனை தீவிரமாகத் தேடத் தொடங்கினர். இதற்குள் இவன் அமெரிக்காவை விட்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த லிவர்பூலுக்கு வந்துவிட்டான். இங்கே இரண்டு நாட்கள் தங்கி, நேராக லண்டனுக்கு வந்து சேர்ந்தான். ஓய்வு பெற்று அங்கே தங்கியிருந்த இவனுடைய தோழன் காண்டலியைக் கண்டுபிடித்து அங்கு போவதும் வருவதுமாக இருந்தான். ஒருநாள் அகப்பட்டுக்கொண்டான். சிறையில் தள்ளிவிட்டனர். இதைக் காண்ட்லிக்குத் தெரிவிக்க வேண்டுமென விரும்பி ஒரு சீட்டெழுதி, அதில் தங்க நாணயத்தை வைத்து தெருவில் வீசினான்.

இவனைச் சிறையில் பாதுகாத்த கோல் என்ற வெள்ளையன் தன் மனைவி ஹோவ் என்பவள் மூலம் காண்டலி தம்பதிகளிடம் சேர்த்துவிட்டான். இதைக் கண்டதும் காண்ட்லி தம்பதிகளுக்கு என்ன செய்வதென்றே புரியாமல் திகைத்தனர்.

லண்டனில் சீனப் பிரதிநிதியாக இருந்தவனும் ஒரு வெள்ளைக்காரன்தான். இவனை என்ன செய்யலாம் என்று மஞ்சு சர்க்காரைக் கேட்டிருந்தான். "இவன் ஒரு பைத்தியக் காரன் என்று சொல்லி தனியாக ஒரு கப்பலை வாடகைக்கு அமர்த்தி அனுப்பிவிடுங்கள்" என்று மஞ்சு அரசாங்கத்திட மிருந்து பதில் கிடைத்தது ஒரு பக்கம் இவனைக் கப்பலிலேற்ற முயற்சி. மறுபக்கம் இவனை விடுவிக்க காண்ட்லியின் முயற்சி, இந்த நிலையில் காண்ட்லி பல வழக்கறிஞர்களை, நீதிபதிகளை சந்தித்து வாதித்தார். பிரிட்டிஷ் பிரதிநிதியையும் சந்தித்தார். கடைசியில் சீனப் பிரதிநிதியைச் சந்தித்து சன்னைக் கடத்திக் கொண்டு போனால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்துவிட்டு நேர் போனா ஏடான London Times அலுவலகம் சென்று செய்திகளை விபரமாகக் கூறி வெளியிடும் படி ஏற்பாடு செய்துவிட்டு வந்து, "தைரியமாயிரு; கவலைப் படாதே; முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்" என்று ஒரு சீட்டெழுதி சிறையிலுள்ள சன்னுக்கு அனுப்பிவிட்டான்.

ஆங்கில பத்திரிக்கைகள் சன்னைப் பற்றி எழுதத் தொடங் கின. குறிப்பாக லண்டன் டைம்ஸ், இவனைச் சிறையில் வைத் தது சட்ட விரோதமென்றும், விடுதலை செய்வதுதான் நீதி யென்றும் எழுதியது. இதன் பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கத்திற் கும் சீனாவுக்கும் அப்போது லண்டனுக்குத் தப்பி ஓடி வருபவர் களை ஒப்படைக்கவேண்டுமென்ற ஒப்பந்தம் ஒன்றுமில்லை. ஆகவே, சன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான். பல செய்தித்தாட்களில் இவன் பெயர் வெளிவந்த காரணத்தால் இவனைப்பற்றித் தெரிந்துகொள்ளவும், நோக்கம் சரியானதாயி ருந்தால் இவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் சீர்திருத்த நோக்கங்கொண்ட பல சீனர்கள் உதவிசெய்ய முன் வந்தனர். இவன் காலத்தில் மஞ்சு அரசுபீடத்திலிருந்திருந் தவன் வாங்ஷு. இவன் ஆறு வயது சிறுவனாயிருந்தபடியால் இவனை ஒப்புக்கு அரியாசனத்தில் அமர்த்தி, 18 வயது ஆகின்ற வரையில் த்ஸூஹஸி என்ற அடங்காப்பிடாரி ரீஜண்டாக இருந்து ஆண்டு வந்தாள். 'சீர்திருத்தம்' என்று காதில் விழுந்

தாலே பாம்பெனச் சீறுவாள். ஆனால் சீர்திருத்தக் கருத்துக்கள் மெதுவாக அரச அதிகாரிகளால் இவன் உள்ளத்தில் புகுத்தப் பட்டன. ஆகையால், தொழில்களையெல்லாம் விஞ்ஞான ரீதியில் அமைக்கவேண்டுமென்றும், கோயில்கள் இருக்கின்ற இடங்களிலே எல்லாம் பள்ளிகள் அமைக்கவேண்டுமென்றும் மாற்றங்கள் செய்யத் தொடங்கினான். இதையறிந்த ரீஜண்டா யிருந்தவள் மன்னனுக்கு ஓய்வு தேவை என்று மெதுவாக அவனை ஒரு கப்பலிலேற்றி அனுப்பிவிட்டு, மீண்டும் ஆட்சிக்கு வந்து பலரைச் சிறைப் பிடித்தாள். சிரச்சேதம் செய்தாள். தன்னுடைய எழுபதாவது நாளைக் கொண்டாட வேண்டு மென்று நாட்டுக்கு உத்திரவிட்டு, அதன் நினைவாகச் சிறையி லிருந்த பலரை விடுதலை செய்தாள். இன்னும் சன் சிறையில் தான் இருந்தான். அவனை விடுவிக்கவே இல்லை. ஆனால் என்றா வது ஒரு நாள் இந்த முற்போக்கு சக்திகள் தன்னைத் தாக்கும் என்று இவள் அறியாதவளல்ல. அதனால் கொஞ்சம் நிதான மாகப் போனாளென்றாலும், மன்னனை பாதுகாப்புக் கைதியாகத் தான் நடத்தி வந்தாள். பாக்சர்கள் என்றழைக்கப்பட்டவர் களால் உலகப் புகழ் பெற்ற மார்ஸ் கலகம் நடந்தது. இப்போதெல்லாம் சன் இங்கே இல்லை.

லண்டன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான். இரு வல்லரசுகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பேரில், அதாவது சன் விடுதலைபெற்றபின், பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்டிருக்கும் எந்த பகுதியிலேயும் சன்னுக்கு இடந் தரக்கூடாது என்பது தான் அந்த ஒப்பந்தம். ஆகவே, லண்டனிலேயே சில நாட்கள் தங்கி, அன்றாடம் நூல் நிலையத்துக்குப் போய் புரட்சிக்கான திட்டங்களையெல்லாம் தெரிந்துகொண்டு, எந்த லண்டனில் ஏழைகள் பணக்காரர்கள் என்ற பேதங்கள் இருக்காதென்று நினைத்தானோ, அதே பேதாபேதங்கள் அங்கேயும் இருப்பதைத் தெரிந்துகொண்டு, வெதும்பிய மனதோடு ஹாங்காங் செல்வ தற்குக் கப்பலேறினான். அங்கே இவனை கப்பலிலிருந்து இறங்க அனுமதிக்கவில்லை, ஏற்கெனவே இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி. ஆகையால் கப்பல் ஜப்பானுக்கு

திருப்பிவிடப்பட்டது. அங்கு வருவதும் சன்னுக்கு ஆறுதலா யிருந்தது. ஏனெனில், ஏற்கெனவே கொரியா சம்பந்தமாக ஏற்பட்ட போரின் விளைவாக இரு நாடுகளுக்கும் இப்படி ஒரு ஒப்பந்தமுமில்லை. ஆகவே, சன் ஜப்பான் போவது நன்மை யாயிற்று. நேராக பார்மோசா தீவுக்குப் போனான். இது முன்பு சீனாவிடமிருந்தது. ஒரு போர் ஒப்பந்தத்தின் மூலம் இது ஜப்பான் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. சன் அங்கு வந்ததை யறிந்த அதிகாரிகள், இவனுக்கு வேண்டிய உதவிகளை அளிப்ப தாக வாக்குறுதியளித்திருந்தார்கள். அதன்படியே செய்தும் வந்தார்கள். பார்மோசா 13,900 சதுர மைல் கொண்டது. இங்கே கற்பூரம் உற்பத்தி. இதற்கு தைவான் என்று மற்றொரு பெயரும் உண்டு. இதனால் ஜப்பானியர் கொடுத்த உதவியைக் கொண்டு சீனத்தின் கடலோரப் பகுதிகளில் தாக்கிக் கொண் டிருந்தார்கள். பொருளுதவியும் வந்துகொண்டிருந்தது. ஆனால் அந்த உதவிகள் எல்லாம் திடீரென நின்றுவிட்டது. காரணம் இதுவரை ஆண்டுகொண்டிருந்த லிபரல் கட்சி தேர்தலில் தோல்வியுற்று கன்ஸர்வேடிவ் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன். சென்னுக்கோ அவர் நடத்தவிருக்கும் புரட்சிக்கோ எந்தவித மான ஆதரவும் தரக்கூடாது என்று கட்டளையிட்டதால் எல்லாம் நிறுத்தப்பட்டது. ஆகையால் சன் தொடங்கிய இரண்டாவது புரட்சியும் தோல்வியுற்றது. இந்த செய்தியை யாமோடா மூலம் சொல்லியனுப்பினான். இவன் மூலம் செய்தி யறிந்த செங்ஹியாங் படைகளைக் கலைத்துவிட்டான். ஆனால் மஞ்சு அரசாங்கம் யமொடாவைக் கண்டுபிடித்து சிரச்சேதம் செய்துவிட்டனர். புரட்சிக்கு முதல் பலியானவன் இவன்தான், பியாங்ஹோ என்பவனும் புரட்சி நடத்த மற்றொரு பகுதிக்கு அனுப்பப்பட்டவன். அவனும் ஏமாற்றமடைந்து, ஏதாவது ஒரு அதிர்ச்சியையாவது தரவேண்டுமென்று கருதி, காண்டனி லிருந்த மஞ்சு அரசப் பிரதிநிதி இருந்த மாளிகை மேல் குண்டு வைத்துத் தாக்க எண்ணினான் அந்த முயற்சி கைகூடு முன்னே கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டான். இவன் புரட்சிக்கு இரண்டாவது பலி. சன் துக்கித்தான். இந்த இரண்டாவது தோல்விக்குப் பிறகு எங்கெங்கோ சுற்றி கடைசி

யில் ஜப்பான் வந்து சேர்ந்தான். அதுதான் இவனுக்கு அடைக்கலம் தந்தது. யோகஹாமா என்ற நகரத்தில் ஓர் இடத்தைப் பிடித்து அதைத் தன் இருப்பிடம் ஆகவும் அலுவலகமாகவும் அமைத்துக்கொண்டான். 1895ல் ஒரு முறை, 1900ல் ஒரு முறை, 1907ல் நான்கு தடவைகள், 1908ல் இரண்டு தடவைகள், 1910ல் ஒரு தடவை, 1911 மார்ச்சு திங்களில் ஒரு தடவை ஆக தோல்வியடைந்த புரட்சிகள் பத்து. பதினோ ராவது புரட்சிதான் வெற்றியடையப் போகிறது. அங்கே இவன் தன் பெயரை நகயாமா என்று வைத்துக்கொண்டு, தன்னை யாரும் கண்டுகொள்ளாதபடி பல இருட்டறைகளுக்கு அப்பால் ஒரு இருட்டறையில் வசித்தான்.

இவனைக் காண ஒரு அமெரிக்கன் வந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, "புரட்சி செய்ய வேண்டியது தேவை தானா? படிப்படியாக சீர்திருத்திப் பிறகு இந்த முடிவுக்கு வரலாமே? என்றான். அப்படி செய்ய மஞ்சு மன்னனுக்கு சக்தி யில்லை. நீங்கள் கொண்டிருக்கிற ஆசை மிகப்பெரியது" என்றான் அமெரிக்கன். "ஆம். மகத்தானதுதான்; அதை நிறைவேற்று வதற்கு உயிரையும் கொடுக்கலாமே" என்றான் சன். அங்கிருந்து கொண்டே பிரிட்டிஷ் அரசாங்க ஆளுகைக்கு உட்பட்ட லேயா தீபகற்பம், ஜோஹோர், கெட்டா, கெலாண்டான், நெங்ரி செம்பியான், மஹாங், பேராக், பேரீஸ், கொங்கோர், டிரெங்கானு, மலாக்கா, பினங்கு போன்ற சிறுசிறு நாடுகள், 1957ம் ஆண்டு ஆகஸ்டு 31ம் நாள் சுதந்திர நாடுகளாய் விட்டன. மலேயாவை ஒட்டியுள்ள சிங்கப்பூர் தீவு, 1946ல்தனி நாடாய் விட்டது.

இந்தோ சீனா, கம்போடியா, லாவோஸ், தெற்கு வியட்னாம், வட வியட்நாம் என்ற தனித்தனி நாடுகளே முன்பு இந்தோ-சீனா என்று பொதுவாக அழைக்கப்பட்டது. இவற்றைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இங்கெல்லாம்சுற்றி தன் நோக்கத்திற்கு ஆட்களைத் திரட்டினான். சீனாவுக்குள்ளே மூக்குக் கண்ணாடி அணிந்துகொண்டு இலங்கைச் சாமான்களை விற்பவன்போல், ஏழைக் குடியானவனைப்போல், ஜப்பானியனை

போல், அடிக்கடி சென்று வந்தான். என்றாலும் இவன் உயிர் மயிரிழையில் தப்பிக்கொண்டேயிருந்தது. இறுதியாக ஹவாய் தீவில் தன் குடும்பத்தோடு, ஆறு மாதங்கள் தங்கி அங்கும் ஹனலூலுவிலும் பல சொற்பொழிவுகளை ஆற்றித் துண்டு அறிக்கைகளையும் வெளியிட்டான். அது அமெரிக்கர் வசம் அப்போதிருந்ததால் தன்னை ஒரு அமெரிக்கக் குடிமகன் என்பதற்கான அத்தாட்சிப் பத்திரத்தை ஏற்கெனவே வாங்கி வைத்திருந்தான். அது பல நேரங்களில் வசதியாயிருந்தது.

## இவன் ஆற்றிய உருக்கமான சொற்பொழிவு

ஹனலூலுவில் உள்ள ஓர் நாடக அரங்கில் சீன மொழியில் ஒரு உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினான். அதை ஆங்கிலப் படுத்தி Honololu Advertiser என்ற செய்தித்தாள் அருமையான தலைப்பு கொடுத்து வெளியிட்டது. அதன் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

"மஞ்சுக்களல்லாத சீனர்களிடையே நாம் தேசிய உணர்ச்சியை வளர்க்க வேண்டும். அதைச் செய்வதை என் ஆயுட்காலப் பணியாகக் கொண்டிருக்கிறேன். அதை நாம் செய்தோமானால் நாற்பது கோடி மக்களும் ஒருமுகமாக எழுந்து மஞ்சு அரசாங்கத்தை ஒழித்து விடுவர்.

இங்போது சீனர்களாகிய நாம் நாடில்லாத மனிதர்கள் போல் இருக்கிறோம். வெளியிலுள்ளவர்கள் யாராவது நம்மைத் தாக்கினால் அரசாங்கம் கவலைப்படுவதே இல்லை. நீங்கள் ஏன் தலைமயிரைப் பின்னல் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் தெரியுமா? மஞ்சு ஆதிக்கத்துக்குட்பட்டவர்கள் என்பதைக் காட்டத்தான். சீனாவில் நீங்கள் இப்படி பின்னல் போட்டுக் கொள்ள மறுத்தீர்களானால் உடனே சிரச்சேதம் செய்யப் படுவீர்கள்."

இப்படி உணர்ச்சி மிகுந்த சொற்பொழிவாற்றினான். பலரை காந்தம் போல் இழுத்தது இந்தச் சொற்பொழிவு. இதைக் கேட்ட பலர் பணமும் ஆதரவும் தர முன் வந்தனர்.

ஐரோப்பாவில் பல நகரங்களில் கிளைகளை அமைத்து, போதிய பணமும் சேர்த்துக்கொண்டு சூயஸ் கால்வாய் வழியாக சிங்கப்பூர் வந்து சேர்ந்தான். இவன் நிகழ்த்திய எல்லா சொற்பொழிவுகளுக்கும் அதிகமான கூட்டம் சேர்ந்தது டோக்கியோவில்தான்! அங்கே டுங் மெய்யூவி என்ற சங்கத்தை நிறுவினுன். அதில் சேருகிறவர்கள் மரண தண்டனையென்றாலும் ஏற்றுக்கொள்கிறேன் என்று கடவுளறியச் சொல்ல வேண்டும். அந்த சங்கத்தின்குறிக்கோள்களாவன:

1. ஊழல் நிறைந்த மஞ்சு ஆட்சியை விழுத்துவது:

2. குடியரசு நிறுவுவது;

3. உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவது;

4. விவசாய நிலங்களை நியாயமான முறையில் பங்கிடுவது;

5. சீனுவும் ஜப்பானும் ஒத்துழைக்க வேண்டுமென்ற கொள்கையை ஆதரிப்பது.

6. சீனுவின் மேம்பாட்டுக்காக உலகத்திலுள்ள எல்லா நாடுகளின் உதவியையும் நாடுவது.

சீனுவில் எப்போதுமே நாடகங்களுக்கு அதிக மதிப்பு. அந்த முறையிலும் கொள்கைகளைப் பரப்பினுன். பிறகு ரகசியமாக சன்போ என்ற பத்திரிகை தொடங்கப்பட்டது. இரண்டாயிரம் பிரதிகள் சீனுவிலும், ஆயிரம் பிரதிகள் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டன.

## கன்வென்ஷன்கள்

சீனுவின் பல நகரங்களில் வேறு நாட்டார் வாழ்வதுண்டு. அவர்களை சீன சட்டம் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் தன்னிஷ்டையாக வாழலாம். காரணம், அவர்கள் தாய்நாட்டு பாங்கிகளிலிருந்து மஞ்சு அரசாங்கம் ஏராளமான பணம் கடனுகப்பெற்றிருந்தது. இந்த மாதிரியான மாகாணங்களில் ஒன்று ஹுப்போவில் உள்ள ஹாங்கோ. அங்கே புரட்சிவாதிகள்

ஒரு இடத்தைப் பிடித்து, வெடிகுண்டுகள், இரகசிய தஸ்தாவேஜுகள், உறுப்பினர் பட்டியல் ஆகியவை வைத்திருந்தார்கள். தற்செயலாக அவற்றை ரஷ்ய போலீஸார் கைப்பற்றினர். இவற்றை பக்கத்து மஞ்சு அரசாங்கப் பிரதிநிதிக்கு அனுப்புவதற்குள்ளாக புரட்சிப்படையினர் அரசப் பிரதிநிதியின் மாளிகையைத் தாக்கினார்கள். அதிலிருந்தவர்கள் ஊவுசுங்க் நகரத்திற்குள் தப்பியோடி விட்டனர். அந்த மாளிகையிலிருந்த யுத்த தளவாடங்கள் முதலியவை புரட்சிப்படையிடம் சிக்கின. இப்படி நகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக புரட்சிப் படையிடம் விழுவதை வெளிநாடுகளில் தலைமறைவாகத் திரிந்துகொண்டிருக்கும் சன்னுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் சன் போட்ட மாறுவேடங்கள் எத்தனை! ஒரு ஆற்றின் இந்தப் பகுதி கன்வென்ஷன் வசம். எதிர்க் கரையிலுள்ள பகுதி மஞ்சு அரசாங்கத்துடையது. ஓடத்தில் கடக்கவேண்டும். சன்னும் தோழனும் படகில் ஏறிக்கொண்டார்கள். அங்கே பெண்களே படகோட்டிகளாக இருந்தார்கள். அவர்கள் மாற்றியணிவதற்காக வைத்திருந்த உடைகளை பணம் கொடுத்து வாங்கி, படகு அந்தக் கரை சேருவதற்குள்ளாக பெண் வேடம் போட்டுக் கொண்டு, ஜெபம் நடந்து கொண்டிருந்த மாதா கோயிலில் பெண்கள் பகுதியில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். இப்படியே பல வேடங்களில் பல ஊர்களில் சுற்றிக்கொண்டிருந்தான். கடைசியில் லண்டன் நகரம் வந்தான். அங்கே இவன் நண்பன் காண்ட்லியின் வீட்டுக்குப் போனான். அங்கே ஏராளமான தந்திகள் இவன் பேருக்கு வந்திருந்தன. அதில் ஒரு தந்தி "நீ குடியரசுத் தலைவனாவதற்குத் தயாராயிரு" என்பது. பல ஊர்களில், நகரங்களில் புரட்சிப்படையும் இராணுவப் படையும் ஒன்றாய் சேர்ந்தன. அதற்குக் காரணமே மஞ்சுப் படையின் தலைவனை, நள்ளிரவில் அவனைத் தேடும்போது, தன்னைக் கொல்லத்தான் வருகிறார்கள் என்று பயந்து கட்டிலுக்கடியில் ஒளிந்துகொண்டவனை வெளியே

இழுத்து, மிகப் பணிவோடு, ''இராணுவத் தலைவனே! உம்மை ஒன்றும் செய்ய மாட்டோம்! எங்கள் புரட்சிப் படைக்குத் தலைமை தாங்கும். சீனு குடியரசு நாடாகிறது என்ற பிரகடனத்தை வெளியிடும்'' என்று கேட்டுக்கொண்ட தற்கிணங்க, உடைகளைப் போட்டுக்கொண்டு வெளியே வந்து ''மஞ்சு அரசாங்கம் ஒழிந்தது. விரைவில் குடியரசாகும். அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் சன்யாட்சென் திரும்பியவுடன் அவரைக் குடியரசுத் தலைவராக்கப் போகிறோம். இப்படிக்கு— மஞ்சு அரசாங்கத்தின் இராணுவத் தலைவன்'' என்று வெளியிட்டான். அப்படியானால் அரசன் எங்கே? அவனுடைய பிரதிநிதிகள் எங்கே என்று கூட மக்கள் கேட்கவில்லை. ''ஒழிந்தது பீடை'' என்றிருந்துவிட்டனர். தலைவன் சன்னும் ஊரிலில்லை. அவன் பிரதிநதிகளும் ஊரிலில்லை. சன் லண்டனில் இருக்கும்போதே, மஞ்சு இராணுவத்தலைவனும் புரட்சிப்படையின் தலைவனும் சேர்ந்து, சீனு குடியரசு என்று அறிவித்துவிட்டார்கள். மற்றப் பகுதிகளிலிருந்த மஞ்சு சர்க்காரின் இராணுவப் படைகள் ஆயுதங்களை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டன. சில படைகள் புரட்சிப் படைகளோடு சேர்ந்துகொண்டன.

1911ல் சீனுவில் மொத்தம் இருபத்தெட்டு மாநிலங்கள் இருந்தன. அவற்றுள் தெற்கே இருந்த பதினுன்கு மாநிலங்கள் புரட்சிப்படையின் கீழே வந்துவிட்டன. வடக்கே பெரிய பெரிய பணக்காரர்கள். செல்வான்களுக்கு பயமேற்படாதபடி ''வெளிநாட்டுச் சீமான்களே! வணிகர்களே! உங்கள் மூலதனத்திற்கும் தொழிலுக்கும் எந்தவிதமான ஆபத்தும் சீனக் குடியரசால் ஏற்படாது'' என்று முதலிலேயே அறிவித்துவிட்டபடியால், புரட்சிப் படைகளுக்கு பண உதவி முதற்கொண்டு மற்ற உதவிகளும் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இந்த அமளியில் குலை நடுங்கிப் போய் பீகிங் நகரத்திலிருந்து மட்டும் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தங்கள் வீடு வாசல்களைத் துறந்து மஞ்சூரியாவுக்கு ஓடிவிட்டார்கள். (மஞ்சூரியாவைத்தான் மஞ்சுகோ என்றழைக்கிறோம். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற முறையில் ரீஜண்டாயிருந்

தவன் அறிக்கை மேல் அறிக்கைகள் விட்டான். என்ருலும் அது மக்களிடையே எடுபடவில்லை.

யுவான் ஷிகாய் என்பவன் ஒரு சுயநலவாதி. இவன் மஞ்சு அரசாங்கத்தையும் விரும்பவில்லை. புரட்சி அரசாங் கத்தையும் விரும்பவில்லை. தானே தலைவன் ஆகவேண்டு மென்ற எண்ணத்தில் புரட்சிவாதிகளை சமரசம் செய்வதாகச் சாக்கு சொல்லி பலரைக் கொன்ருன். அதுவும் பயனற்றுப் போய்விட்டது.

இதற்கிடையில் தெற்கு சீனத்தில் தலைநகரம் நான்சிங் நகரத்தில் புரட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி தற்காலிக சர்க் காரை நிறுவி, சன் தாயகம் திரும்புகிறவரையிலும் இராணுவ மன்றமும், அதன் பிறகு குடியரசு முறையில் அமைப்ப தென்றும் தற்காலிகத் தலைவனுக சன்-யாட்-சென் நியமிப்ப தென்றும் அறிக்கை வெளியிட்டார்கள்.

இதை உலகுக்கெல்லாம் அறிவித்துவிட்டார்கள்.

## சன் திரும்புகிருன்

சன் லண்டனிலிருந்து புறப்பட்டு சிங்கப்பூர் வந்ததும், மக்கள் மலர் தூவி வரவேற்ருர்கள். அங்கு இரண்டு நாட்கள் தங்கிவிட்டு ஷாங்காய் நகரம் வந்து சேர்ந்தான் சன். கோலா கலமாக வரவேற்கப்பட்டான். எத்தனையோ முறை மயிரிழை யில் தப்பி, உயிரோடு வந்து சேர்ந்தானே தலைவன் என்று மக்கள் மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தனர். பிறகு நான்சிங் நகரம் வந்தான். இருபத்தியொரு குண்டுகள் முழங்க வரவேற்கப் பட்டான்.

1913 ஜனவரி திங்கள் குடியரசு நிறுவப்பட்டதென்றும், அதற்குத் தற்காலிகத் தலைவன் சன்-யாட்-சன் என்றும் பிரகடனம் வெளியாயிற்று.

துரோகி யுவான் ஷிகாய் நல்லவன் போல் நடித்தான். மஞ்சு அரசாங்கமும் வேண்டாம், குடியரசு முறையும் வேண் டாம். தானே ஒரு சர்வாதிகாரியாக வேண்டுமென்ற உள்

நோக்கத்தால் குடியரசு முறையை ஆதரிப்பதாகவும் சன்னோடு ஒத்துழைப்பதாகவும் ஒரு அறிக்கையை வெளியிட்டான். இதை வெள்ளையுள்ளம் படைத்த சன்னால் நம்பாமல் இருக்க முடியவில்லை.

ஆகையால் சன் வகித்தருந்த தலைவன் பதவியை 1912ம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், இருபத்தி மூன்றும் நாள் ராஜினாமா செய்து, ஷன்யுவான்கே என்பவனைத் தலைவனாக்கினான். இப்படி பதவியை விட்டுக்கொடுத்தது ஓய்வு எடுப்பதற்காக அல்ல. சீனாவை சீர்திருத்தியமைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான். ஆனால் இவனை ரயில்வே டைரக்டராக நியமித்தான் ஷன்யுவான்கே. அந்த வேலையாக நாட்டைச் சுற்றிவரும் போதுதான் யுவான்கேயின் துரோகத்தை தெரிந்துகொண் டான். மேலும் சன்னுக்கு மிகவும் வேண்டியவர்களை அழைத்து சிரச்சேதம் செய்துவிட்டான். பிறகு சன்னையும் ஹுவாங் சிங்கையும் கொன்றுவிட திட்டமிட்டு அழைத்தான். போக வேண்டாமென நண்பர்கள் தடுத்தனர். என்றாலும் பொருட்படுத்தாமல் பீகிங் நகரம் போய்ச் சேர்ந்தான். நகர மக்கள் இவனுக்குக் கொடுத்த வரவேற்பைக் கண்டு யுவான் குலைநடுங்கிப் போனான். யுவான் போக்கைக் சன் மனம் வெதும்பி நினைத்து ஒரு தந்தியைக் கொடுத்தான்.

அதில், "நாட்டின் கடினமான பொறுப்பை நிறைவேற்ற நீங்கள் முந்தி அழைக்கப்பட்டீர்கள் தலைவராக. இப்போது நாடு தொல்லையில் அகப்பட்டுக் கொள்ளாதிருக்கும் பொருட்டு பதவியிலிருந்து நீங்கள் விலகவேண்டும். என்னுடைய ஆலோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்வதாயிருந்தால், நாட்டின் தெற்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் போர்வீரர்களுக் கும் பொதுமக்களுக்கும் ஆயுதங்களைக் கீழே வையுங்கள் என்று என்னால் சொல்ல முடியும், என்னுடைய இந்த ஆலோசனையை நீங்கள் கேட்காவிட்டால், குடியாட்சிக்கு அதாவது மஞ்சு ஆட்சிக்கு விரோதமாக நான் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கும்படி நேர்ந்ததோ அதே நடவடிக்கைகளை உங்கள் பேரிலும் எடுக்க நேரிடும்."

என்றாலும். அபாயம் சூழ்ந்துவிடுமோ என்று கருதி சன்னும், ஷியாங்கேஷேக்கும், நண்பனும் ஜப்பானுக்குப்போய் அங்கிருந்த கொமிண்டாங் கட்சியை புரட்சிக் கட்சியாக மாற்றியமைத்தனர். யுவான் ஷிகேயின் கொடுங்கோன்மை யால் அமைச்சர்கள் சிலர் விலகிக்கொண்டானர். ஆறு மாநிலங் கள் எதிர்ப்புத் தெரிவித்தன. 1916ம் ஆண்டு யுவான்ஷிகே மாண்டு போனான்.

## மணவிலக்கு, மறுமணம்

சன்னுடைய முற்போக்குக் கருத்துக்கள் முதல் மனைவி லூாசுக்குப் பிடிக்காமலேயே வாழ்ந்து வந்தாள். என்றாலும் அவள் விருப்பத்தைப் பெறாமல் சிவ்லிங்கை மறுமணம் செய்து கொள்ளக்கூடாதென்று கருதி, லூாசுவை ஜப்பானுக்கு வர வழைத்து இருவரும் கலந்து பேசி மணமுறிவு செய்து கொண்ட பிறகு, டோக்கியோவில் மிக எளிய முறையில் சிவ்லிங்கை திருமணம் செய்துகொண்டு, அவளோடு பத்தாண்டுகள் வாழ முடிந்தது.

நெடுநாட்களாக இவனைத் தொல்லைப்படுத்திக் கொண் டிருந்த புற்றுநோய் இவனைச் செயலற்றவனாக ஆக்கிவிட்டது. ஆறு வாரங்கள் படுக்கையிலே கிடந்து, இனி தேறமாட்டோம் என்ற முடிவுக்கு வந்த பிறகு, இரண்டு உயில்களை எழுதச் செய்தான். அதில் சீனத்தின் எதிர்காலத்தைப் பற்றி எழுதியது ஒன்று. குடும்பத்தைப் பற்றி எழுதிய இரண்டாவது உயில் வருமாறு:

"மக்களுக்குத் தொண்டு செய்வதிலேயே என் வாழ்க்கை முழுவதையும் செலவழித்துவிட்டபடியால், என் சொந்தத்திற் கென்று ஒன்றையும் சேர்த்து வைக்க நான் விரும்பவுமில்லை; நேரமுமில்லை. எனக்கென்று சொல்லக் கூடிய, அதாவது நூல்கள், துணிமணிகள், வீடு இவற்றை என் மனைவிக்குச் சொந்தமாக்கி விட்டுப் போகிறேன். என் பிள்ளைகள் பெரியவர் களாய்விட்ட படியால், அவர்களை உழைத்து வாழட்டும்"

என்று உயிர் பிரிவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் கையெழுத்திட்டு விட்டு, கலங்கிய கண்களோடு சுற்றி நின்று கொண்டிருந்த மக்களைப் பார்த்து 'சீனத்தின் ஒற்றுமைக்கு, உயர்வுக்கு நீங்கள் உண்மையாகவே உழைப்பீர்களா?'' என்று கடைசியாகச் சொல்லி கண்களை மூடிவிட்டான். கவலையெனும் பாதையில் கண்ணீர் வழிகாட்ட நடந்தன மக்கள்.

# 3

## சாக்ரடீஸ்

ஏதன்ஸ் நகரின் கலைக்கோயிலின் தலை வாயிலிலே கம்பீர மாக நிற்கின்றான் ஒரு தத்துவ ஞானி சிலை உருவில். தலை சிறந்த தர்க்கவாதி. தன்னைத்தானே அறிந்து, தான் அறிந் ததை அகில உலக மக்களறிய ஆவல்கொண்டு, அறிவு தாகத் தால் அலைந்து கொண்டிருந்த இளைஞர்களின் இதயத்தைத் தொட்டு, அவர்கள் மன இருளை நீக்கி, ஒளி பரப்பிய அறிஞன். அவனுக்கு முன்னும் பின்னும் அவனைப் போல் ஒருவன் இருந்த தில்லை.

ஏதென்ஸ் நகர மக்களைப் பற்றி மெகாலே பின்வருமாறு கூறுகிறான்: "ஏதென்ஸ் நகர மக்கள் பிற நாட்டு மக்களைக் காட்டிலும் பன்மடங்கு அறிவிற் சிறந்தவர்கள். ஏதென்சில் கிரேக்க நாடுகளில் ஏன், உலகத்தில் எவ்வளவோ மாற்றங்கள் தோன்றின. ஆனால்சாக்ரடீஸ் அன்று தோன்றியவன் இன்றும் எழுத்துருவில்—கருத்துக்களில் தோன்றுகிறான். அறிவுலகில் அழியாமல் நிலவுகிறான்".

வாலிபத்தில் ஆர்கோஸ் என்ற பண்டிதருடன் ஒரு முறை சாமாஸ் நகருக்குச் சென்று, அந்தநாட்டில் புகழோடு வாழ்ந்த பேரறிஞர் சீனோ (zeno) என்பவரிடம் எதிர்மறை முகத்தான் வாதாடுவது எப்படி என்பதைக் கற்று வந்தான்,

ஜெகத்தை சிந்தனைக்கூடமாக எண்ணிய இவன் மேல் 'சீரழிக்க வந்தவன்' கிரேக்கர்கள் தொழுதுவரும் கடவுள்களைப் பொய்யென்று தூற்றி, தான் ஒரு புதுக் கடவுளை உண்டாக்கு கிறான். இளைஞர்களைக் கெடுத்துவிடுகிறான், என்ற தன் குற்றச்சாட்டை மெலிடஸ் என்பவன் பின்வருமாறு படிக்கி றான் நீதிமன்றத்தில்:

## குற்றச்சாட்டு

"பித்தஸ்பேட்டையில் இருக்கும் மெலிடஸ் என்பவரின் மகன் (மெலிடஸ்) என்பவன், அலோபேக் பேட்டையில் வசிக் கும், காலஞ்சென்ற சோப்ரோனிஸ்கஸ் மகன் சாக்ரடீஸ் மீது பின்வருமாறு குற்றஞ்சாட்டுகிறேன்.

ஏதென்ஸ் நாட்டு மக்களும் அரசாங்கமும் எந்தக் கடவு ளர்களைத் தொழுகிறார்களோ, அந்தக் கடவுளர்களைத் தொழுவ தில்லை. அதற்குப் பதிலாக இவன், இதற்கு முன்பில்லாத புதிய கடவுள்களைப் புகுத்துகிறான். வானத்தைப் பற்றியும் நிலத்தைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றான், சந்திரனை மண் என்றும், சூரியனைக் கல்லென்றும் சொல்கிறான். புதிய மதக்கோட்பாடுகளைப் புகுத்துகிறான். சாக்ரடீஸ் மிகவும் தீயவன். கடவுளால் விவரிக்கப்படாத மறைபொருள்களைத் துருவியறிவது இவனுக்கு எப்போதும் பொழுதுபோக்காக உள்ளது. இவன் கெட்டதை நல்லதைப்போல் நாட்டவல்ல வன், நல்லதைக் கெட்டதைப் போல் நாட்டவல்லவன். மற்றும், இளைஞர்களைத் தன்பேச்சின் வன்மையால் கெடுத்து விடுகிறான். ஆதலின் மெலிடஸ் என்ற வாதியாகிய நான் இவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று நீதி மன்றத்தை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,<br>
மெ. மெலிடஸ்<br>
பித்தஸ்பேட்டை, ஏதென்ஸ்,

இவனுக்கு முன் டையகோரஸ் இதையே பேசினுன். முக்கியமாகக் கடவுளர்களைப்பற்றிப் பேசினுன். சிறப்பாகச் சில ஆபாசக் கருத்துக்களடங்கிய, அதாவது தாயையே தாரமாக்கிக்கொண்ட ஏராஸ், தங்கையைத் தாரமாக்கிக் கொண்ட ஜுவெஸ் போன்ற கிரேக்கக் கடவுள்களைப் பற்றியும், பிறவற்றைப்பற்றியும், கருத்தில்லா பூசாரிகளும் மதத் தலைவர்களும் கட்டிவிட்ட பொய்க்கதைகளைப் போருக்கழைத்தான் டையகோரஸ். சிரித்தனர் சிலர். சீறினர் பலர். ஒளியில்லாத காலத்தில் வாழ்ந்த அந்த மக்களால், சிந்தைக்குச் செயல் கொடுக்க எண்ணுத அந்தக் கிரேக்கத்தின் பெருங்குடி மக்களால் 'டையகோரஸ் அழிக்கப்பட வேண்டியவன்'. அந்தக் கொக்கரிப்பை கண்டு பயந்த டையாகோரஸ் கோரிந்த் என்னும் நகருக்குள் ஓடி ஒளிந்து கொண்டான்.

டையகோரஸ் உயிரை நேசித்தான். ஓடி ஒளிந்தான். சாக்ரடீஸ் கொள்கையை நீதியை, நாட்டை நேசித்தான். அநீதியை எதிர்த்து நின்ருன்.

சாக்ரடீசின் காலம் இன்றைக்கு ஏறத்தாழ 2450 ஆண்டுகளுக்கு முன்பாகும். இயேசு தோன்ருத காலம். நபிகள் பிறக்காத காலம். சமணம், புத்தம், டாயஸ், சீக்கியம், ஜைனம் போன்ற மதங்கள் தோன்ருத காலம்.

இளமையில் இயற்கை நூல், பௌதிகம், வானநூல், நிலநூல் ஆகியவைகளைப் பற்றி நன்கு படித்துணர்ந்து, முதல் முதல் மனைவி இறக்க, தனது 40வது வயதில் இரண்டாவது மனம் செய்துகொண்டு, பிலிப்போனேஷிய யுத்தத்தில் காலாட்படையில் போர் வீரனுகச் சேர்ந்த, போட்டீடோ என்ற ரணகளத்தில் தன் படைத் தலைவனுடைய தலையைக் காப்பாற்றி, அதற்குச் சன்மானமாகத் தான் பெற வேண்டிய இராணுவ கௌரவத்தைத் தன் படைத்தலைவன் ஆல்கிபிடியாஸ் என்பவனே அடையும்படிச் செய்த பொதுநலவாதி சாக்ரடீஸ்.

டேலியம், அம்பிபோலீஸ் என்ற இரு பயங்கரமான போர்க்களத்தில், தன் நாட்டுப் போர் வீரர்கள் சலித்துப்

பின்வாங்கியபோது உற்சாகமூட்டி வெற்றி கண்ட சுத்த வீரன் சாக்ரடீஸ்.

நீதிமன்றத்தில் சாக்ரடீஸ் பேசிய பேச்சுக்கள் இறவா நிலைபெற்றவை. அவற்றை அப்படியே இங்கே குறிப்பிட வேண்டுமென்றால் இயலாது. அதன் சுருக்கத்தை, முக்கிய மான பகுதிகளை மட்டும் பார்ப்போம்.

"எழில் கொழிக்கும் ஏதென்ஸ் நகர நீதிமான்களே! இந்த என்னுடைய எழுபத்திரண்டாவது வயதில் முதன்முதலாக இப்போதுதான் நான் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறேன். பழக்கமில்லாத காரணத்தால் நான் ஏதாவது தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி விட்டால் நீதிமன்றத்தில் இது வரை நிற்காத ஒரு ஏழை, அதுவும் பழக்கமில்லாதவன் என்ற காரணத்தால், என்னை உங்கள் காருண்ய உள்ளத்தால் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் குழந்தைப் பருவம் முதல் இந்த என் வயோதிகப் பருவம்வரை பார்த்தால், நான் வாழ்ந்த இந்த எழுபத்திரண்டு ஆண்டுகள் மிகப்பெரிய காலமாகும். ஆனால் நித்திய தத்து வத்தோடும், அழிவில்லாத காலத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது காலவேகத்தில் அடித்துக்கொண்டு போகும் அணுவுக்குள் அணு என் வாழ்நாள்.

நான் என் தத்துவத்தை மக்களிடையே சொல்ல ஆரம்பிக் கும்போது இங்கே நீதிமான்களாக வீற்றிருக்கும் உங்களில் மிகப் பலர் சிறுபிள்ளைகளாக இருந்தீர்கள். என்றாலும், அந்த ஒரு காரணத்திற்காகவே இந்தக் குற்றமற்றவனுக்கு நீதி வழங்கும் பெருமைக்குரிய மக்களாக வீற்றிருக்கும் உங்களை நான் அவமதிக்கமாட்டேன். நான் அப்படி செய்வேனானால், என் தாய் நாட்டின் சட்டத்தையும், நீதியையும் அவமதித்தவ னாவேன்.

நான் தவறுடையவனா இல்லையா என்று நிரூபிக்கப் பட்டால் அதனால் வரும் தண்டனை, அல்லது மன்னிப்பு ஆகிய வைகளுக்கு நானே நேரடியான பொறுப்பாளி, என்மேல்

குற்றம் சுமத்தியிருக்கிற எதிரிகளே கூட அதற்குக் கட்டுப் பட்டவர்களல்ல. ஏனென்ருல் பொய்க்குற்றம் நிரூபிக்கப் பட்டு, நான் அடையப் போகும் தண்டனையைப் பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டுமென்று நாக்கில் நீர் ஊறிக்கொண்டிருக்கும் அவர்களை ஏன் துக்கத்தில் துணை சேர்க்க வேண்டும் என்பதிஞல்தான்!

நண்பர்கள், சுற்றத்தார், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், உள்நாட்டார், அயல்நாட்டார், அரசாங்க ஊழியர்கள், அல்லாதவர்கள், என்ற பாகுபாடில்லாமல் நியாயத்தை வழங்க வாள்முனையில் உறுதிசெய்துகொண்ட உத்தமர்களாகிய உங்கள் முன்னிலையில் நிற்கிறேன், குற்றவாளி என்ற பேரால்!

ஒரு மனிதன் தான்அடைந்திருக்கும் வயோதிகத்துக்காகக் கவலைப்படக் கூடாது. வயதானதால் இறந்துவிடுவோம் என்ற எண்ணம் வந்துவிடுவதால் அச்சம் பலருக்கு ஏற்படுகிறது. இளமையில் கற்ற தத்துவம், கெட்ட காரியங்களைச் செய்கிறவர்கள் மறு உலகத்தில் ஆண்டவஞல் தண்டிக்கப்படுவார்கள் என்ற தத்துவம் நினைவுக்கு வருகிறது. தூங்கிக்கொண்டிருக்கிற குழந்தை பயத்திஞல் விழித்துக்கொள்வதைப்போல தன் பழைய காரியங்களைப் பற்றி நினைத்துக்கொண்டு, என்ன தண்டனை கிடைக்குமோ என்று பயப்படுகிருன். எவன் ஒருவன் தன் மனப்பூர்வமாக யாருக்கும் எந்தவிதமான தீங்கும் செய்யவில்லை என்று உணர்கிருஞே அவன் வயோதிக காலத்தில் நம்பிக்கையோடு வாழ்கிருன். இந்த நம்பிக்கைதான் தள்ளாத வயதில் தாதி போல இருந்து உதவுகிறது.

நெறியுடையோனை, தூயவாழ்வினனை, நம்பிக்கை எனும் மாதேவியே நடத்திச் செல்கிருள். வயோதிகத்தில் தாதியாய், வழிநடையில் துணைவியாய் இருக்குமவள். அலையுறும் ஆத்மாவுக்கு ஆறுதலளிக்கின்ருள்'' என்று கூறிய பிண்டார் என்ற நமது கவிஞன் வார்த்தைகளை இங்கே நினைவுபடுத்துகிறேன். ஆகவே நான் எவ்வித அபாயங்களுக்கும் அநியாயங்களுக்கும் சோர்ந்துவிடுவதில்லை.

என்மேல் என் நண்பர் மெலிடஸ் அவர்கள் சுமத்திய குற்றங்களில் முதன்மையானது, நான் சாமர்த்தியமான பேச்சாளி என்பது. அதுதான் அவர் சொல்லிய பொய்களில் மிகப் பெரிய பொய்யாகும். நல்ல பேச்சாளி என்று குறிப்பிடுவது, உண்மை பேசுவதையே குறிக்கும் என்றால் அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

இரண்டாவதாக என் மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றம் நான் ஆகாயத்தைப் பற்றியும், நிலத்தின் அடிவாரத்தைப் பற்றியும் ஆராய்வதால் நான் கடவுள் நம்பிக்கை அற்றவன் என்பது. தனக்கு விருப்பமான ஒன்றில் உள்ளத்தைச் செலுத்தி உண்மையைக் கண்டுபிடிக்க விரும்புகின்ற ஒருவனை நாத்திகன் என்று எப்படிக் குற்றம் சாட்டமுடியும்? கண் இருப்பதால் பார்க்கிறேன். கால்கள் இருப்பதால் நடக்கிறேன். கைகள் இருப்பதால் வேலை செய்கிறேன். காதுகள் இருப்பதால் கேட்கிறேன். வாய் இருப்பதால் பேசுகிறேன். அதேபோல் உள்ளம் இருப்பதால் சிந்திக்கிறேன். இது எப்படித் தவறாகும்?

என்னை வழக்கு மன்றத்தில் நிறுத்திய என் எதிரிகள் யாரையும் உங்கள் முன் நிறுத்தி நான் குறுக்கு விசாரணை செய்ய விரும்பவில்லை. என்னுடைய நியாயமான எதிரிகள் அநீதியும், அறிவின்மையும்தான். இவர்களெல்லாம் அவை களின் நிழல்கள்.

மூன்றாவது குற்றச்சாட்டு, நான் இளைஞர்களைக் கெடுத்து விட்டேன் என்பது. நான் எந்த வகையில் அவர்களைக் கெடுத்து விட்டேன் என்பது எனக்கே புரியவில்லை. ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல, முப்பது ஆண்டுகளாக நான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். ஒருவனுக்கு, பிறர் சொல்வதைப் புரிந்து கொள்கிற வயது 10 என்று வைத்தால் 40 வயதுடைய மனிதனுக்கும் வரையிலாவது நான் சொல்லியதை அவன் கேட்கும் வயதடைந்திருப்பான். இந்த முப்பதாண்டுகளாக வராத ஆபத்து இப்போது எப்படி வந்தது? சூரியனைக் கல் என்றும் சந்திரனை மண் என்றும் நான் சொன்னேன் என்று குற்றமாகச் சொல்கிறார். இந்த உதாரணங்கள் மூலம் மெலிடஸ் என்னை

மாத்திரம் குற்றவாளியாக்கவில்லை. இதே கருத்துக்களைச் சொன்னஅறிஞர் அனெக்ஸகோரஸ் என்பவரையும் குற்றவாளியாக்கி, அவர் கூறியதைப் படித்து உணர்ந்திருக்கிற உங்களையும் இழிவு படுத்தும் வகையில் இதைக் கூறுகிறார். குழந்தையைத் தாய் ஈன்றாள்; தந்தை படிக்கவைத்தான். ஆசான் கல்வி போதித்தான். அரசாங்கம் மனிதனாக்கியது. நண்பர்கள் நல்லவனாக்கினார்கள். நீதிமான்கள் நீதியையும் நேர்மையையும் போதித்தார்கள். இவ்வளவு பேர்கள் சேர்ந்து கூடி நல்லவனாக்கிய ஒருவனை நான் கெடுத்துவிட்டேன் என்றால் இவ்வளவு பேர்களுடைய சக்தியைக் காட்டிலும் என் சக்தி மேலானது என்பதற்காகப் பெருமைப்படுகிறேன்.

குதிரை மேல் ஏறாமல் எப்படி குதிரை ஏற்றம் கற்றுக் கொள்ள முடியும்? புல்லாங்குழலைத் தொடாமல் எப்படி அதை இசைக்கக் கற்றுக் கொள்ளமுடியும்? நீரில் இறங்காமல் எப்படி நீந்தக் கற்றுக்கொள்ள முடியுமா? அதைப்போலவே நான் ஆராய்ச்சியில் இறங்காமல் எப்படி ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள முடியும்?

நான் தெய்வீகத்தை நம்புகிறேன் என்று என் நண்பர் மெலிடஸ் ஒப்புக்கொள்கிறபோது, நான் எப்படி நாத்திகனாக முடியும்? படையை ஒப்புக்கொள்ளுகிற நான் படைத்தலைவனை மறுக்க முடியுமா? ஆனால், நான் கல்லையும் மண்ணையும் ஆண்டவன் என்று ஒப்புக்கொள்ள மறுக்கிறேன். நான் மாத்திரம் அல்ல, சாமாஸ் நகரத்தில் வாழ்ந்த ஜினோஎன்பவர், "நான் கல்லுக்கும் மண்ணுக்கும் பிறக்கவில்லை, ஒரு பெண்ணுக்குத்தான் பிறந்தேன்" என்று சொன்னதையே நான் இங்கு வலியுறுத்துகிறேன். ஆண்டவனைப் பற்றியும் அவனுடைய படைப்பைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வது நாத்திகம் என்றால் ஆண்டவனை ஒப்புக்கொள்ள எங்கே மறுத்துவிடுவார்களோ என்று பயப்படுவது அதைவிட நாத்திகம்.

"உலகில் நிலைத்துள்ள பொருள் யாதொன்றுமில்லை. யாதேனுமிருப்பின் அதை நாம் உணர முடியாது. அவ்வா

றென்றிருந்து அதனை நாம் உணர்ந்தாலும், பிறர்க்கு அதைத் தெரிவிப்பது இயலாத காரியம்.'' என்று அறிஞர் ஜார்ஜியாஸ் என்பவர் வெளியிட்ட கருத்துக்களை இதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்கிறேன். மேலும், "தெய்வங்கள் உண்டென் பதும் தெய்வத்தின் குணம், ஆற்றல் முதலியன இவை என்பதும், நாம் ஒரு முடிவாகக் கூறக்கூடியதல்ல. நமது வாழ் நாள் அதற்குப் போதாது. மனிதனின் ஐம்புல உணர்ச்சிக்கும் மனதிற்கும் எட்டாத பொருள்களே உலகிலில்லை.'' என்று பித கோரஸ் என்ற ஆதிதத்துவ ஞானி உரைத்ததையும் உங்க ளுக்கு நினைவு படுத்தவிரும்புகிறேன்.

மக்களுக்கு விருப்பமானதைச் சொல்லி நான் பெருமை யடையவோ, வெறுப்பானதைச் சொல்லி சிறுமையடையவோ எண்ணவில்லை. நான் அப்படி செய்தால் மிருகங்களைப் பழக்குபவனுக் கொப்பாவேன். ஏனெனில், மிருகங்களுக்கு வெறுப்பானதைச் செய்தால் தன்னைக் கொன்றுவிடும் என்று பயந்து, அவைகளுக்கு உவப்பானதையே செய்து உயிர் வாழ எண்ணும் ஒரு காட்டு மனிதனுக்கு ஒப்பாவேன். மேலும் அந்த முறையைக் கையாண்டால் பகுத்தறிவு உள்ள மக்களை மிருகங் களாக்குகிறேன் என்று என் மனமே என்னை வாட்டுகிறது.

ஒரு நண்பன் என்னிடம், 'நேர்மை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினான். நேர்மை என்றால் என்ன என்று அவனைக் கேட்டேன். வாங்கியதைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். அதுதான் நேர்மை என்றான். அப்படியானால் ஒருவன் நல்ல சுபாவத்தோடு இருக்கும்போது ஒரு கூரிய வாளை நம்மிடம் கொடுத்துவைத்தான் என்று வைத்துக்கொள்வோம். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவன் பைத்தியம் பிடித்தவனாய் விட்டான். அப்படி பைத்தியமாய்விட்ட அவன், நம்மிடம் வந்து முன்பு அவன் நம்மிடம் கொடுத்த வாளைத் திருப்பித் தரும்படி கேட்டால் கொடுத்து விடலாமா? அதுதான் நேர்மையா? என்று கேட்டேன். நண்பன் ஒன்றும் பேசாமல் திரும்பிவிட்டான். அது மாத்திரமல்ல, அன்றுமுதல் அவன் என் மோசமான எதிரியாகவும் மாறிவிட்டான்.

அடுத்து ஒருவன் வந்தான். நீதி, நட்பு இவை என்ன வென்று கேட்டேன். இரண்டும் ஒன்றுதான் என்றான். இல்லை என்றேன். தம்பி கொலைகாரன், அண்ணன் நீதிபதி, நீதிபதி யாக இருக்கும் நீதிமன்றத்திலேயே தம்பி கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு குற்றக் கூண்டிலே நிற்கிறான். அந்த நீதிபதி—குற்றவாளி தம்பி என்பதற்காக உறவைப் பார்ப்பதா? குற்றவாளி தன் சொந்தத் தம்பியாயிருந்தாலும் நீதியை நிலை நாட்டுவதா? ஆகையால் நீதியும் நட்பும் ஒன்றல்ல என்றேன். அதுமுதல் அந்த நண்பன் எதிரியாகிவிட்டான்.

மூன்றாவதாக ஒருவன் வந்தான். அவனிடம் அழகு என்றால் என்ன என்று கேட்டேன். பார்ப்பதற்கு அழகாக கவர்ச்சியாக இருப்பது அழகு என்றான். உடலைப்பற்றிச் சொல்கிறீரா—உள்ளத்தைப் பற்றிச் சொல்கிறீரா என்று கேட்டேன். உடலைப் பற்றித்தான் என்றான். நாம் திருமணம் செய்து கொள்ளும் போது மனைவி அழகாயிருந்தாள். சில நாட்களுக்குப் பிறகு ஏதோ ஒரு விபத்தில் சிக்கி முகமெல்லாம் கருகருத்து அங்கஈனமாய் விட்டாள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது கணவன் அவளைக் கவனிக்காமலிருக்க முடியுமா? உடல் அழகுபோனாலும் உள்ளத்தின் அழகு இருக்குமே, இதைக் கொண்டு ஆறுதல் அடையலாமல்லவா? ஆகையால் உடல் அழகைவிட உள்ளத்தின் அழகைக் கண்டோமானால் இந்தச் சிக்கலுக்கே இடமில்லை என்றேன். இதை ஒப்புக்கொள்வதும் இல்லாததும் அவன் விருப்பம்தான் என்றாலும் அவனும் பகை யாகிவிட்டான். இப்படி வீணாக நாற்பதாண்டுகளாக மக்களைத் திருத்தவேண்டுமென்று எண்ணித்தான் என் சொந்தவாழ்வை சுருக்கிவிட்டு பொதுநலத்திற்காகச் சுற்றிவருகிறேன்.

நான் எப்போதும் யாருக்கும் ஆசிரியனாக இருந்து போதித்ததில்லை. என்னை யாரும் குருவெனக் கொண்டாடியது மில்லை. எனக்கென்று ஒரு சங்கமோ அமைப்போ இல்லை. என்னை நானே கேட்டுக்கொண்டேன். அதன் எதிரொலி தான் மக்களின் உள்ளத்தில் ஒலித்தது.

என்னை மன்னித்து வெளியே அனுப்பினாலும் என் தர்க்க வாதத்தை மீண்டும் என் உயிர் உள்ளவும் செய்தே தீருவேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மையில் எனக்கு அறிவில்லை. மற்றவர்களுக்கும் இல்லை. மற்றவர்கள் உணரவில்லை. நான் என் அறிவீனத்தை உணர்ந்தேன். அவ்வளவுதான் வேற்றுமை,

நான் சாவிற்கு அஞ்சவில்லை. அநீதிக்குத்தான் அஞ்சுகிறேன். எனக்கும் உங்களுக்கும் பொதுவாக இருக்கும் ஆண்டவன் பேரால் நீதி கேட்கிறேன்."

அந்தத் தள்ளாத வயதினன் தன் வாதத்தைச் சொல்லி முடித்தான்.

## பயங்கரத் தீர்ப்பு

மரணம்—மன்னிப்பு என்ற இரண்டு பெட்டிகள் வைக்கப் பட்டிருக்கின்றன. நீதிக் குழுவின் உறுப்பினர்கள் 501 பேர் தங்கள் வாக்குகளைப் (ஓட்) பதிவு செய்கின்றனர். எந்தப் பெட்டியின் அருகில் ஆட்கள் அதிகமாகக் கூடுகின்றார்கள் என்று சொல்ல முடியவில்லை. ஏறக்குறையச் சமமாகவே தெரிகின்றது. 'என்ன ஆகுமோ' என்ற ஆவலோடு நீதிமன்றத்தின் முன்பு ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கின்றனர். அறிஞன் வாழ்வில் பற்றுக் கொண்டவர்கள் வாடிய முகத்தோடும், தாழ்வில் பெருமை கொண்டவர்கள் தன்னடக்கமில்லாமல் ஆரவாரம் செய்துகொண்டும் இருந்தனர். 'ஒழிந்தான் சாக்ரடீஸ்' என்று எக்காளமிடுவோரும், அவர்களை நெரித்த புருவத்தோடு பார்க்கும் நியாய சிந்தையிலிருப்போருமாக, பெரிய பரபரப்புக்கிடையே அனைவருடைய வாக்குகளும் பதிவாய்விட்டன. அவை எண்ணப்பட்டன. (220 பேர்கள் சாக்ரடீசை மன்னித்துவிட வேண்டுமென்றும். 281 பேர்கள் மரண தண்டனையளிக்க வேண்டுமென்றும் தங்கள் வாக்குகளை வழங்கியிருந்தனர்.) 61 ஓட்டுகள் அறிஞரின் உயிரைக் குடிக்க முன்வந்துவிட்டன. ஒரு பக்கம் எக்காளம். மற்றோர் பக்கம் ஏக்கம். கருத்துள்ளோர் கவலைக் கண்ணீர் சொரிந்தனர். அடக்கமற்ற அநியாயக்காரர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்

தனர். பெருமூச்சுக்கிடையே பெட்டிகளைத் தூக்கிச்சென்றனர் பணியாட்கள்.

அவன்பால் அன்புள்ளம் கொண்டவர்கள் அனைவருமே, அவன் மன்னிப்புக்காக வாக்களித்தவர்கள். ஆனால் அவர்கள் தோல்வியுற்றனர். அதில் குறிப்பிடவேண்டியவன் பிளாட்டோ உலக மேதை, வாதகேசரி, அறிவின் வற்றாத ஊற்று. சொற் செல்வன் சாக்ரடீஸ்மேல் வழக்குத் தொடுத்த மெலிட்டஸ் என்ற மாபாதகன் அவனுக்கு விரோதியாகத் தோன்றவில்லை. 61 ஓட்டுக்களில், 31 ஓட்டுக்களைத்தான் மூர்க்கத்தனமான எதிரிகளாகக் கருதினான். ஏனென்றால், 31 ஓட்டுகள், இதுவரை சாதகமாகக் கிடைத்த 220 ஓட்டுக்களோடு சேர்த்திருந்தால் மொத்தம் 251 ஓட்டுகள் ஆகி இருக்கும். சிந்தனையாளன் தப்பி யிருப்பான். அநீதிக்கே வன்மையதிகம். நல்லவன் அவமதிக் கபப்படுவதும், நயவஞ்சகன் நாட்டாண்மை கொள்வதும் நானிலத்தில் என்றுதான் மாறுமோ?

"சாக்ரடீசுக்கு மரண தண்டனை" என்றவுடன், அதுவரை அப்பேரறிஞனுடைய அறிவாற்றலை அறிந்து கொள்ளாமல், சதா அவனோடு சண்டையிட்டுக்கொண்டிருந்த மனைவி சாந்திபே, இடியைக் கேட்ட அரவம் போலானாள். சுற்றத்தார் சோகமுற்றனர். மக்கள் மூவரில் இருவர் மனம்வெம்பி வாய் விட்டுக் கோவெனக் கதறினர். மற்றொருவன் கைக்குழந்தை. தாயின் கண்ணீரைத் தன் மலர்க்கரத்தால் தடவியது.

## அறிவிப்பு

"உனக்கு மரண தண்டனையளிக்க வேண்டுமென்று நீதியின் பிரதிநிதிகள் தங்கள் அதிகப்படியான வாக்குகளால் அறிவித்து விட்டனர். சாக்ரடீஸ், மரணத்திலிருந்து நீ தப்புவதற்கு மார்க்கமில்லை. இறுதியாக நீ ஏதாவது சொல்லிக் கொள்வதா யிருந்தால், அல்லது உன் தண்டனையில் நீ ஏதாவது மாற்றம் விரும்பினால், அதை உனக்கு ஏற்கனவே அளித்திருக்கும் பரிபூரண சுயஉரிமைப்படி நீ கேட்டுக்கொள்ளலாம்." இது நீதிமன்றத்தார் அறிவிப்பு.

## இறுதி எச்சரிக்கை

"நீதிதிமான்களே! நீங்கள் எனக்களித்த விடுதலைக்காக நான் நன்றி செலுத்துகின்றேன். எனக்கு இந்தத் தீர்ப்பை யளிக்க நீங்கள் அதிக நேரத்தை வீணுக்கவில்லை. ஆனால் எனக்கு மரண தண்டனையளித்ததின் மூலம் நகரத்தின் நன்மையில் நாட்டங் கொண்டுள்ள பலருடைய பழிச்சொல்லுக்கு ஆளாய்விட்டீர்கள். நான் அறிஞனுயிருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னை அவர்கள் என் இறப்புக்குப்பின் அறிஞன் என்று ஒப்புக்கொள்வது திண்ணம்.

நான், உங்களிடத்திலே அகப்பட்டுக் கொண்டிருக்கும் என் உயிரைக் கேட்கவில்லை, நீதியையே வேண்டுகிறேன்.

தவறு செய்த ஒருவன், அதை மறக்கக் கண்ணீரும் கதறலுமாக் நீதி மன்றத்தில் நிற்க வேண்டிய பழக்கத்துக்கு மாருக, நான் ஒரு புது மாதிரியிலே நின்றேன் என்பதால்,நான் உங்களிடம் என் வாதத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த போது, மனிதத்தன்மையல்லாத ஒன்றுக்காக வாதாட வேண்டுமென்று நினைத்து, அதனுல் வரப்போகும் ஆபத்தையும் எண்ணுமல் தைரியமாக நின்றேனே அதையேதான் இப்போதும் செய்ய நினைக்கின்றேன்.

நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ளவும், நீங்கள் உங்கள் நீதியை நிலைநாட்டவும் எடுத்துக்கொண்ட முயற்சியில், நீதியை நிலை நாட்டிவிட்டதாக எண்ணி நீங்கள் தற்காலிக வெற்றி பெற்றுவிட்டீர்கள். மனக் கசப்புக்கும் மாளாத சூழ்ச்சிக்கும் இடையே வாழ்வதைவிட மறிப்பதே மேல். ஆகவே நான் சுத்த வீரன் என்ற முறையில் என் உயிரையே உங்கள் வெற்றிக்காகப் பரிசளிக்கின்றேன்.

என் அருமை நண்பர்களே! ஏதென்ஸ் நகரப் பெருமக்களே! என்ருவது ஓர் நாள் இந்த நீதியின் நெடும் பயணத்தை நியாய சிந்தனையுள்ளவர்கள் அளந்து பார்த்துவிடுவார்கள். அதுவரை இந்த சாக்ரடீஸ் உயிரோடிருக்கப் போவதில்லை. அதற்குள் அகில முழுதும் அழிந்துவிடப் போவதில்லை. சாக்ரடீஸ் சாக

வேண்டிய நாட்களுக்கு முன்பு சாகடிக்கப்பட்டால், அவன் வாழ்வில் மிகுதியான நாட்கள் வேறு யாருடைய வாழ்விலும் ஒட்டிக்கொள்ளப் போவதில்லை.

பல்லக்கு ஏறுபவனை உயர்ந்தவனென்றும், அவனையும் அவன் ஏறியிருக்கும் பல்லக்கையும் சுமந்து செல்பவனைத் தாழ்ந்தவனென்றும் நெடுநாட்களாக உலகம் கொண்டிருக்கின்ற எண்ணத்துக்கு நான் முற்றிலும் மாறுபட்டவன்.

நமது முன்னோர்களான பலாமிடஸ், அஜக்ஸ், டெலெமோன் என்பவர்கள் எல்லாங்கூட அநியாயமான தீர்ப்பால் இறந்துவிட்டவர்கள்தான். சோலன், கைலோ, பிட்டேயியஸ், பியஸ், பெரியாண்டர், எபிமினிட்ஸ், க்ளிடேபாபூலஸ் என்பவர்களெல்லாங்கூட, "உன்னை அறிவினையை நினை, சமயமறி, உலகில் அனேகர் தீயோர்கள், உழைப்பினுல் ஆகாத தொன்றுமில்லை, அமிதம் விலக்கு" என்ற பொன் மொழிகளைச் சொல்லிச் சொல்லி மாண்டு போனவர்கள்தான்.

இன்னும் சிறிது காலம் இவர்கள் காத்துக் கொண்டிருக்கக் கூடாதா. வயதான நான் இயல்பாகவே மாண்டு விடுவேன். என் விடுதலைக்காகப் பக்குவமாகப் பேச எனக்கு நாவண்மை இல்லை. அதனுலேயே நான் மரண தண்டனையடைந்தேன் என்பதும் உண்மையல்ல. நீங்கள் நினைப்பதுபோல் அழுதுக் கதறி புலம்பி உங்களை வேண்டிக்கொள்ளும் துணிவு எனக்கில்லை. சாவுக்கு அஞ்சி யாரும் ஓடக் கூடாது.

நமது ஆவி இவ்வுலகத்திலிருந்து மறு உலகத்திற்குச் செல்வதாகவும் இருக்கலாம். நினைவே இல்லாத—கனவிலும் கலையாத ஒருவித தூக்கநிலை அது என்றுல், அதைவிட நன்மை எது என்பதை எண்ணிப்பாருங்கள். அந்த ஓர் இரவு. ஒரு பேரரசன்கூட அந்த ஓர் இரவுக்கு ஈடில்லை. இறந்தவர்கள் எல்லோரும் அங்கேதான் இருக்கிறுர்கள் என்றுல் அதைவிட இன்பம் வேறு ஏது? ஆகவே மனிதன் அந்த மறு உலகத்துக்கு போய்ச் சேரும்போது இந்த உலகத்தில் நீதிபதிகள் என்று சொல்லிக்கொள்பவர்களிடமிருந்து மீண்டுவிடுகிறுன். அங்கே

உண்மையிலேயே நீதி வழங்கும் மைனூஸ், ராடமாந்தஸ், டிரிப்டோலெமஸ் போன்றவர்களும் மற்றத் தெய்வப்பிறவி களும் இருக்கிறார்கள். அங்கே போவது நல்லதுதான். மேலும் அங்கே ஆர்க்மிடிஸ், மியு ஆயஸ், ஹெஸியாட், ஹோமர் ஆகிய வர்களோடு அளவளாவுவதென்றால் எதையும் கொடுக்கலாமே. அது உண்மையாக இருந்தால் நான் மீண்டும் மீண்டும் சாகத் தயார். அங்கே பாலமீடஸ், டெல்மான் மகன் அஜாக்ஸ் இன்னும் அநீதி காரணமாக மடிந்த பழைய வீரர்கள் எவர் களிருந்தாலும் அவர்களைக் கண்டு பேசுவது எவ்வளவு இன்ப மாக இருக்கும் தெரியுமா?

இவ்வாறு சாக்ரடீஸ் கூறியதைக் கேட்டு, சபையோர்கள், உயிரையும், தங்களையும், நீதி மன்றத்தையும் துச்சமென மதித் தான் என்று தவறாக நினைத்துக்கொண்டு, மரண தண்டனையை மீண்டுமோர் முறை உறுதிப்படுத்தி விட்டார்கள்.

மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டிய விதம் விஷங் கொடுத்துக் கொல்லவேண்டும் என்றும், அதுவும் இப்போது நகரத்தில் விழாவொன்று நடந்து கொண்டிருப்பதால் அதை முன்னிட்டு டிலோசுக்குச் சென்ற கப்பல் திரும்பி வந்ததும், அதாவது இன்றைக்குச் சரியாக 30–ஆவது நாள் விழா முடிந்து கப்பல் வந்து சேர்ந்ததும், அதற்கடுத்த நாள் மாலை 6மணிக்குச் சாக்ரடீசுக்கு விஷங் கொடுத்துவிடவேண்டுமென்றும் அது வரையில் குற்றவாளி தப்பித்தோடாமல் தற்காப்புக்காக காலில் விலங்கிட்டுச் சிறையில் காவலில் வைக்கவேண்டு மென்றும் நீதி மன்றம் தனது முடிவான தீர்ப்பை அறிவித்து விட்டது.

உள்நாட்டில் குழப்பஞ் செய்துகொண்டிருப்பவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல நேர்ந்தால், அங்கே அவர்களையு மறியாமல் ஓர் ஒற்றுமையுண்டாவதைப் போலச் சாக்ரடீசின் கொள்கை பிடிக்காதவர்கள்கூட, சிறையிலே நட்புக்கொள்ள ஆரம்பித்தனர்—நாள் நெருங்க நெருங்க நண்பர்களின் துக்க மும் நெருங்க ஆரம்பித்தது. நகரப் பொது மாளிகையில்

வைத்து நகரப் பொதுச் செலவில் காப்பாற்றப் படவேண்டியவன், இருட்குகையில் கம்பிகளுக்குள்ளே, கள்ளர்கள் மத்தியிலே தள்ளப்பட்டான். இது ஏதன்ஸ் நகருக்கே சகிக்க முடியாத அவமானம்.

"எத்தனையோ பேர்கள் அவரது உரையாடலைக் கேட்டு உயர்நிலை அடைந்திருந்தும், அதைச் சற்றும் பாராட்டாமல் இவருக்குக் கொலைத் தண்டனையை விதித்துத் தீராப் பழியைத் தேடிக் கொண்ட சிறியோர்" என செஞபோன் என்ற அவரது நண்பன் கண்ணீர் மல்கினன்.

"மிக்கோரே! மாண்டு யோங்கள், என்று துணிந்து சொல்லி விட்டோம். நமது கண்ணீர் வெள்ளத்தாலும் கால வெள்ளத்தாலும் துடைக்க முடியாத கறை" என்று அவனது அருமை நண்பன் பிளாட்டோ மனம் கசிந்துருகி வாழ்க்கையையே வெறுத்து விட்டான்.

சாக்ரடீஸ் சிறையிலும் ஓய்ந்திருக்கவில்லை. ஈஸாப்ஸ் எழுதிய கற்பனைக் கதைகளைச் செய்யுட்படுத்தினர். இடை இடையே சிம்மியாஸ், கெபெஸ், பியோடன் முதலானவர்கள் அடிக்கடிச் சந்தித்து இன்னும் தெரிந்துகொள்ள வேண்டுவதைப் பற்றி உரையாடிச் சென்றார்கள்.

நகரில் அபோலோ என்ற தெய்வத்திற்குச் சிறப்பாக விழா நடந்துகொண்டிருந்தது. மக்கள் குதூகலக் கடலில் ஆழ்ந்திருக்கின்றார்கள். ஆனல் சாக்ரடீஸ் மன்னிக்கப்படவேண்டுமென்று வாக்களித்தவர்கள் வீடுகளில் துக்கங்கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். சாக்ரடீஸ் வீட்டில் ஒரே அழுகுரல். திருவிழாவில் எங்கு பார்த்தாலும் உரையாடிக் கொண்டிருக்க வேண்டிய சாக்ரடீஸ் இல்லை. அது அந்த விழாவுக்கு பெருங் குறைதான்.

சாக்ரடீசை எப்படியாகிலும் தப்பிக்க வைக்கவேண்டு என்று நண்பன் கிரீட்டோ 30–ஆவது நாள் விடிவதற்குள்ளே சிறைச்சாலைக்குள் நுழைந்துவிட்டான். ஆனல், கொஞ்சமும்

துக்க ரேகைகள் முகத்தில் தோன்றுமல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கின்றுன் சாக்ரடீஸ். அவனே விழிக்கட்டும் என்று எழுப்பாமல் பக்கத்தில் சந்தடியின்றி அமர்ந்துவிட்டான் கிரீடோ.

எழுந்த சாக்ரடீஸ் 'இவ்வளவு இருட்டில் ஏன் வந்தாய்?' என்று கேட்டதற்கு கிரீடோ மௌனம் சாதிக்கிறுன்.

சாக்ரடீஸ் : இப்பொது என்ன நேரமிருக்கும்?

கிரீடோ : பொழுது புலரும் நேரம்.

சாக்ரடீஸ் : இவ்வளவு சீக்கிரமாகச் சிறைக்காப்போன் உன்னே அனுப்பியதற்காக வியப்படைகிறேன்.

கிரீடோ : அவன் எனக்கு நன்முகத் தெரிந்தவன்; அவனுக்கு பல உதவிகள் செய்திருக்கின்றேன்.

சாக்ரடீஸ் : நெடு நேரமாகக் காத்துக்கொண்டிருக் கின்முயா?

கிரீடோ : இல்லே, கொஞ்ச நேரமாக.

சாக்ரடீஸ் : அப்படியாளுல் ஏன் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கின்முய்? ஏன் என்னே எழுப்பக்கூடாது?

கிரீடோ: உண்மைதான். நான் கொண்ட வருத்தத்தின் காரணமாக எனக்குத் தூக்கம் வரவில்லே. ஆனுல் தாங்கள் ஆனந்தமாகத் தூங்குகின்றீர்கள். உங்களுடைய இந்த அருமை யான தூக்கத்தைக் கலேக்கக் கூடாது என்று விரும்பினேன். உங்கள் வாழ்நாள் முழுதுமே நீங்கள் சந்தோஷமாக இருக் கின்றீர்கள் என்பதை நான் பல முறை பார்த்திருக்கின்றேன். ஆனுல், நீங்கள் இன்று கொண்டிருக்கின்ற மகிழ்ச்சியை காணும்போது அவையெல்லாம் பின் தங்கிப் போய்விடு கின்றன. இப்போது வந்திருக்கும் பேராபத்தை எவ்வளவு புன்சிரிப்போடு ஏற்றுக்கொள்ளுகின்றீர்கள்.

சாக்ரடீஸ் : இல்லே கிரீடோ. இந்த தள்ளாத வயதில் நான் சாகப் பயப்படுவது மிகக் கொடுமை.

கிரீடோ: உண்மைதான். இதைவிடக் குறைந்த இம்சைகளை அனுபவித்தவர்களெல்லாம் விதியை வெறுத்து ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாக்ரடீஸ்: போகட்டும் எதற்காக இங்கே வந்தாய்?

கிரீடோ: நாளை மாலை உங்கள் முடிவு......

சாக்ரடீஸ்: ஏன் விழா முடிந்து டிலேசிலிருந்து கப்பல் வந்துவிட்டதா?

கிரீடோ: இல்லை, இன்னும் வரவில்லை. இன்று நிச்சயம் வந்துவிடும். அது வந்த மறுநாள்தானே உங்கள் கடைசி நாள். நாளை நீங்கள் முடிந்துவிடப் போகின்றீர்கள்.

சாக்ரடீஸ்: முடியட்டும் ஆனால் கப்பல் இன்று வராது.

கிரீடோ: ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்?

சாக்ரடீஸ்: கப்பல் வந்து சேர்ந்த அடுத்த நாளே நான் இறக்கவேண்டும் அல்லவா?

கிரீடோ: ஆம். அதிகாரிகளும் நீதி மன்றத்தார்களும் அப்படித்தான் சொன்னார்கள்.

சாக்ரடீஸ்: இல்லை. இன்றைய மூன்றாம் நாள்தான் நான் இறப்பேன். இது என் மனம் எனக்களித்த கட்டளை.

கிரீடோ: என் அருமை நண்பனே! கடைசி முறையாக வேண்டுகிறேன். நீங்கள் எப்படியும் தப்பித்துக்கொள்ள வேண்டும். உங்கள் பிரிவினால் மீண்டும் பெறமுடியாத ஓர் அருமையான நண்பனை, தத்துவ ஞானியை உலகமே இழந்துவிடும். வருங்கால தலைமுறையினர் இழந்துவிடுவர். ஏன்? கிரேக்க நாடே இழந்துவிடும். நான் உங்களைக் காப்பாற்ற முயன்றேன் என்பதை உலகம் நம்பாது.

சாக்ரடீஸ்: நாம் ஏன் உலகத்தின் கருத்துக்களுக்கு காத்துக் கொண்டிருக்கவேண்டும்? நாம் எது சரியென்று நினைத்தோமோ அதையே செய்கிறோம். மருத்துவன் நோயாளியின்

பன வேதனையை எண்ணினால் வியாதியைக் குணப்படுத்த முடியாது. கேவலம் வாழ்க்கையை மட்டும் நாம் கவனிக்கக் கூடாது. நல் வாழ்க்கையையே மதிக்கவேண்டும். அதனால் நீங்கள் துன்பத்தில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது.

கிரீடோ : உங்களைத் தப்புவிப்பதன் மூலம் நாங்கள் அரசாங்க தண்டனை பெற்றுவிடுவோம் என்றும், பெரும் நஷ்டத்தை அடைவோம் என்று தாங்கள் எண்ணவேண்டாம். அதற்காக நாங்கள் கவலைப்படவேயில்லை. தாங்கள் எப்படியும் உயிர் பிழைக்கவேண்டும்.

சாக்ரடீஸ் : ஆம். நான் அதை ஆழ்ந்து சிந்திக்கிறேன்.

கிரீடோ : சிந்திக்க ஒன்றுமேயில்லை. உங்களை வெளியேற்ற சம்பந்தப்பட்டவர்கள் தயாராக இருக்கிறார்கள். என் பொருள் மாத்திரமல்ல. என் உயிரே உங்கள் விடுதலைக்காக. கிளம்புங்கள். வெளி நாடு செல்ல ஏற்பாடு செய்துவிட்டோம். அங்கே தங்களுக்கு எவ்விதத் தொல்லையுமின்றி பாதுகாக்க ஆட்கள் இருக்கிறார்கள்.

நீங்கள் சாவதன் மூலம் உங்கள் குழந்தைகளை நிர்க்கதியாக்குகிறீர்கள். அனாதைக் குழந்தைகளின் நிலைக்கு அக் குழந்தைகளைக் கொண்டுவராதீர்கள். எதிரிகளைக் கொழுக்க விட்டுவிட்டுத் தாங்கள் உயிர் விடத் துணிந்ததை நான் மிகமிக அவமானமாகக் கருதுகிறேன். தப்பித்துக்கொள்ள வாய்ப்பிருந்தும் அப்படிச் செய்யாமல் போவது, நாம் எந்த நன்மைக்குமே தகுதியற்றவர்கள் என்பதைத்தான் காட்டும்.

சாக்ரடீஸ் : அன்புள்ள கிரீட்டோ, உங்கள் முடிவைப் பாராட்டுகிறேன். ஆனால், நாம் எது சரி என்பதற்காக வாழ்நாள் முழுவதும் போராடினோமோ அந்த நிலையே நம்மை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. வருங்காலம் நிச்சயம் தான் கடந்து வந்த இறந்த காலத்தை எண்ணி வருந்தவே செய்யும். போர்முனைகளில் ஆயுதத்தையும், அஞ்சாமையையும் துணை வைத்துப் போராடினோம். பிறகு

நீதிமன்றத்தில் அறிவைத் துணைக்கழைத்தோம். இன்று சிறையிலிருந்து ஓடக் கோழைத்தனத்தைத் துணைக்கழைக்கச் சொல்கிறீர்கள். நமக்குக் கெடுதல் செய்த ஒருவனுக்கு பதில் கெடுதல் செய்து, பழிக்குப்பழி வாங்குவது சரியல்ல என்ற கொள்கையில் நின்று, நாம் நமது ஆராய்ச்சியை ஆரம்ப முதல் செய்து வந்திருக்கிறோம். இப்போது ஏதன்ஸ் நீதிமன்றம் நமக்குக் கெடுதல் செய்யும் நோக்கத்தோடு மரண தண்டனை விதித்திருந்தால் அதைக் கண்டு நான் தப்பியோடுவது அதைப் பழிவாங்குவதாகாதா? அப்படிச் செய்து நீதிமன்றத்தைத் தலைகுனியச் செய்யலாமா? நம்மால் கண்ணியப்படுத்தப்பட வேண்டிய நீதிமன்றத்தை நாமே சிதைத்துவிடலாமா? தாயே தான் ஈன்ற சேயைக் கொல்வதைப் போன்றதல்லவா இந்தச் செய்கை.

கிரீடோ : அதைப் புரிந்துகொள்ளாத மனிதர்களிடம் நாம் சரணாகதி அடைவதா?

சாக்ரடீஸ் : தோல்வியை ஒப்புக்கொள்ள பெரும் பண்பு வேண்டும். இது சரணாகதியல்ல; வீரம். தோல்வி வெற்றியின் முதல்படி. எவன் தைரியமாகத் தன் தவறுகளை ஒப்புக் கொள்ள முன்வருகிறானோ அவனே நல்லவர்களின் முன்னோன். நீர் நினைப்பதைப் போல் நான் ஓடிவிட்டால், நீதிமன்றத்தில் நான் பேசிய அறம், நேர்மை எல்லாம் காட்டில் காய்ந்த நிலா வாகிவிடும்.

கிரீடோ : நீதி எங்கே இருக்கிறது? அநீதிதானே நீதி மன்றத்தில் கோலோச்சுகிறது? அந்த அநீதியை எதிர்த்துப் போராட உங்களை விட்டால் கிரேக்கம் இன்னொரு மேதையை எங்கே காணப்போகிறது? உலகம் ஒரு அறிஞரை இழந்து விடுமே. என் நாடு ஒரு மேதையை அநியாயமாகக் கொன்று, பழிச் சொல்லை வரலாற்றில் ஏற்று, களங்கப்பட்டுப் போகுமே என்பதற்காக அஞ்சுகிறேன். ஆற்றலின் குன்றே! தர்க்கவாத கேசரியே! கிரேக்கத்தின் ஞானக் களஞ்சியமே! இன்றே சிறைச்சாலையை விட்டு வெளியேறுங்கள். நீங்கள் மறைந்தால் மானிட வர்க்கத்தின் விலை மதிக்க முடியாத மாணிக்கமாகிற

தங்களைப் பெறும் ஆற்றல் இவ்வையகத்திற்கில்லை உலகத்தில் ஒரே சூரியன், ஒரே சந்திரன், ஒரே சாக்ரடீஸ். (கதறினன் கிரீடோ)

சாக் : (கிரீடோவின் கண்களைத் துடைத்துவிடுகிருர்) அன்புள்ள கிரிடோ! தாங்கள் என்மேல் கொண்டுள்ள மெய்யன்புக்காக என் மனமார்ந்த நன்றி. உமது சொற்படி வெளியேறினல் நான் கொலைகாரனைப்போல தலைமறைவாய் திரிய வேண்டும். அப்போது என் மனம் என்ன சொல்லும்? நீதி மன்றம் தனக்களித்த மரண தண்டனையை, மாற்ருரின் வாளை மார்பில் தாங்கிய வீரனைப்போல தாங்கிக் கொண்டு வெளியே வந்தான். இன்று உயிருக்குப் பயந்து சிறையிலிருந்து தப்பியோடிவிட்டான். மக்கள் நடமாட்டமில்லாத கானகங்களில் வேடுவர்களுக்குப் பயந்து திரியும் விலங்குபோலத் திரிகிருன். சட்டங்களை எதிர்த்துப் போராடினன். அந்த சட்டங்கள் தன்னை அடையாளங் கண்டுகொள்ளாமலிருக்க உருமாறித் திரிகிருன் என்று என் மனம் என்னை ஏளனம் செய்யும். அந்த சட்டம் பரிகாசம் செய்யும். அந்தச் சட்டத்தின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட அயல் நாடுகளுக்குச் சென்றுவிட்டால் அங்கும் வல்லூறுக்குப் பயந்து திரியும் புருவைப்போல்தான் வாழவேண்டும். என்னை அனுப்பும்படி இந்த நாடு அந்த நாட்டைக் கேட்கும். அப்போது என் மீது இரக்கம்கொண்டு அந்த நாடு அனுப்ப மறுத்தால் போர் வரும். அதனல் மக்கள் மடிவார்கள். ' மனைவிகள் விதவையாவார்கள். குழந்தைகள் அனதையாவார்கள். அதற்கு இந்த உயிர் காரணமாக வேண்டுமா? சிந்தித்துப்பாருங்கள். யாருமே என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்ருல் நான் மதித்து வளர்த்த சட்டம் என்னைப் பார்த்துக் கேட்காதா? 'ஏசாக்ரடீஸ்! எங்கே ஓடுகிருய்? நீ பிறப்பதற்கு முன் உன் தாய் தந்தையர் என் முன்னல்தான் மணவினை ஏற்ருர்கள். நீ பிறந்தாய், உன்னை வளர்த்ததும் படிக்க வைத்ததும், ஆளாக்கியதும் நாங்கள் தாமே. உனக்கு தாயக உரிமை வழங்கியதும் நாங்கள்தான். உன் பெற்றோரைவிட, பிறந்த நாட்டைவிட சட்டமாகிய

எங்களை மதித்தாய். அதிகமாக நேசித்தாய். எங்களுக்குக் கட்டுப்படவேண்டுமென்று உன் நாட்டு இளஞ்சிறுர்கள் முதல் வயோதிகர்கள் வரைக்கும் நீயே புகட்டினுய். ஏன், உன்னைக் குற்றக்கூண்டிலே நிறுத்தி, உன் குற்றம் நிரூபிக்கப்பட்டபின் நீ விரும்பினுல் தாயக உரிமையை இழந்து வேற்றூர் செல்லலாம் என்று நீதிமன்றம் உன்னைக் கேட்டபோது, 'என் உயிருக்கு மேலாக, நான் பிறந்த தாயக மண்ணுக்கு மேலாக என்னை வளர்த்து ஆளாக்கிய சட்டங்களை மதிக்கிறேன், போற்றுகிறேன் என்று மார்தட்டிக் கூறிய நீயா கோழைபோல ஓடுகிருய்? எங்களைக் குறைகூற உனக்கு உரிமை அளித்திருக்கிறோம். ஆனுல் கீழ்ப்படியாமல் இருக்க உரிமையில்லை. எப்படி பெற்றோர்கள் பிள்ளைகளைத் தண்டித்தால் பிள்ளைகளுக்குப் பெற்றோரை திருப்பித் தண்டிக்க உரிமையில்லையோ, அதே போல நாங்கள் உனக்குத் தீமையே செய்திருந்தாலும் நீ திருப்பி எங்களுக்குத் தீமை செய்ய உரிமை இல்லை. இதை நீ நன்கு அறிந்தவனுயிற்றே. நீயா ஓடுகிருய்?' என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன் கிரிடோ?

கிரிடோ. எப்படியிருந்தாலும் இதை சகிக்க முடியாத அவமானம் என்று கருதுகிறேன். வெளிநாடு சென்றுவிட்டால் இந்த நிலை இருக்காது.

சாக் : அங்கே சென்றதும் எதற்காக நாடுவிட்டு ஓடி வந்தாய் என்று கேட்டால் என்ன சொல்வது? அறம் தவறி விட்டது நம் தாயகத்தில் அதனுல் வந்துவிட்டேன் என்று சொல்லவேண்டும். அறம் தவறிய நாட்டில் பிறந்தவனுடைய கடமை என்ன? தவறிய அறத்தை நேர்படுத்துவதுதானே? கோழைபோல ஓடிவிட்டால் அந்த கடமையை யார் செய்வது? தன் நாட்டு குடியுரிமையை இழந்து வேற்று நாடு சென்ருல் அங்கே இரண்டாம் தர குடிமகனுகத்தானே வாழ முடியும்? தாய்நாட்டிலே வாழ்கிறவன் கடமையைச் செய்து உரிமையைப் பெறமுடியும். பிறநாட்டிலே வாழ்பவன் கடமையைச் செய்யலாம். உரிமையைப் பெறமுடியாது. அது நல்லதா? கிரிடோ நீ சொல்வதைப் போல் செய்தால், நானே எனக்கு

வேண்டியவர்களோ இம்மையிலும் சரி, மறுமையிலும் சரி' சிறந்தவர்களாகவோ. நேர்மையுள்ளவர்களாகவோ, நியாயம் உள்ளவர்களாகவோ இருக்க முடியாது. இப்படியே நிரபராதியாக, துன்பம் அனுபவிப்பஞக, நீதியை நேசித்தவஞக, நேர்மையாளன் என்ற நற்பெயரோடு, அஞ்சா நெஞ்சன் என்ற கௌரவத்தோடு இறந்துவிடுறேன். யாரும் கவலைப் படாதீர்கள்.

சாக்ரடீசின் ஆணித்தரமான விளக்கங்கள் கிரிடோ அவருடைய நண்பர்கள் மனதைக் கரைத்தன.

ஒவ்வொரு நாளும் காலையில் சிறைக்கதவு திறக்கும் போது சாக்ரடீசின் நண்பர்கள் கூட்டமாகக் காத்திருந்து உள்ளே நுழைந்து அவருடன் பேசுவார்கள். தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள் அவருடைய கால்களில் இடப்பட்டிருந்த தளைகள் அவிழ்க்கப்பட்டன. அவருடைய மனைவி சாந்திபே குழந்தையைக் கையில் எடுத்துவைத்துக் கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். கூடியிருந்த நண்பர்களைப் பார்த்து, சகோதரர்களே! இன்றுதான் கடைசி முறையாக உமது நண்பரிடம் பேசப் போகிறீர்கள், என்று கதறினுள். சாக்ரடீஸ், கிரிடோவிடம் சொல்லி அவர் மனைவி சாந்திபேயையும் குழந்தையையும் வீட்டிற்கு அழைத்துப் போகச் சொன்ஞர்.

சாக்ரடீஸ் உயிரைவிடத் துணிந்துவிட்டார் என்ற உண்மை, நண்பர்களை உலுக்கியது. "ஐயோ, உயிரைவிடத் தயாராய்விட்டீர்களே'' என்று புலம்பினர். அதற்கு சாக்ரடீஸ், ஞானமடைந்தவன் ஒவ்வொருவனும் இந்த உடலைவிட்டுப் போகவே விரும்புவான். ஆனுல், அவனே வலிய சாவைத் தேடிக்கொள்ள மாட்டான். அது தவறு. உடலானது கடவுள் நமக்குத் தந்த ஒரு சிறைச்சாலை. அதிலிருந்து நாமாகத் தப்பிப் போகக் கூடாது. அவரே விடுதலை செய்யவேண்டும். ஏனென்ருல் நாம் அனைவரும் ஆண்டவனுடைய பாதுகாப்பிலிருக்கிருேம். நாம் அவருடைய

சொத்து. நம்மை நாமே வதை செய்துகொள்ள நமக்கு உரிமை கிடையாது. ஆண்டவன் நமக்கு விடுதலை கொடுக்கும் வரை காத்திருக்க வேண்டும்.'' என்று பதில் சொன்னார்.

அவருடைய நண்பர்கள் "தங்களை எப்படி அடக்கம் செய்யவேண்டும்'' என்று கேட்டபோது, "இறந்த பிறகும் நான் அந்த உடலில் இருப்பதாகத் தவறாக எண்ணிவிட்டீர்களே. இறந்தபிறகு அந்த உடலில் நான் ஏது? உங்கள் சாக்ரடீஸ் ஆவியாகிச் சென்றுவிட்டபின் கிடப்பது உணர்வற்ற சடலம் தானே? அதை எப்படிச் செய்தால் என்ன? ஏன் என்னை, சாக்ரடீஸை புதைக்கிறோம் அல்லது எரிக்கிறோம் என்று நினைக்கிறீர்கள். என்னிடம் இவ்வளவு நாள் பழகியும் உண்மையை மறந்துவிட்டீர்களே'' என்று சொன்னார். அவரது தத்துவ விளக்கங்கள் கேட்கக் கேட்க, இந்த அருமையான ஒளி உமிழும் கருத்துக்கள் மறையப் போகிறதே இன்னும் சில மணி நேரங்களில் என்ற நினைப்பு மேலெழும்போது அனைவரும் அழுது புலம்பினர்.

சிறை அதிகாரி விஷக்கோப்பையுடன் வந்து ."பெரியவரே இங்கே வந்த கைதிகளில் மிகவும் பெருந்தன்மையுடனும் அறிவுத் தெளிவுடனும் இருக்கும் தங்களுக்கு விஷம் கொடுக்க வேண்டும்என்ற நினைப்பே என்னை வருத்துகிறது.இருந்தாலும் சட்டங்களின் தீர்ப்பின்படி இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டியவன் நான்'' என்று கண்ணீரோடு விஷக்கோப்பையை தந்தான். சிறிதுகூட முகம் சுளிக்காமல் கைகள் நடுங்காமல் சிரித்த முகத்தோடு, "நண்பரே இதை எப்படி சாப்பிட வேண்டும். என்ன செய்ய வேண்டுமென்று முறையாகச் சொல்லுங்கள். உங்களுக்கு எந்தச் சிரமும் இன்றி நான் அதைச் செய்கிறேன் "என்றார் சாக்ரடீஸ. "ஐயா, இதை சாப்பிட்டு விட்டு நடந்துகொண்டே இருக்கவேண்டும். கால்கள் மரத்துப் போனதும் படுக்கவேண்டும். காலிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உணர்வற்றுப் போகும். இறுதியில் மரணம் சம்பவிக்கும்'' என்றான்.

"அப்படியே செய்கிறேன், நண்பரே" என்று சொல்லிக் கொண்டே, கோப்பை நஞ்சை மடமடவென்று குடித்து விட்டார். கூடியிருந்த நண்பர் குழாம் வேதனைக் குரலோடு கதறியது. சிறைக்கு வெளியே சாக்ரடீசின் நண்பர்களும் மக்களும் விஷம் அருந்திவிட்டார் என்ற செய்தி எட்டியதும் அடித்து மோதிக்கொண்டனர். கூடவே இருந்த இளைஞர்கள் சாக்ரடீஸ் என்ற தத்துவ ஆசான் மறைவை எண்ணி மனம் பொறுக்காமல் தற்கொலை செய்துகொண்டனர் பலர். ஏதென்ஸ் நகரம் கொந்தளித்தது. எங்கும் தீக்காடு. குற்றம் சுமத்தியவர்கள் பாதுகாப்பை நாடி ஓடினர். சிறைக்கதவுகளை நோக்கி மக்கள் வெள்ளம் படையெடுத்தது. நீதிமன்றம் தாக்கப்பட்டது. எத்தனையோ போர்க்களங்களைக் கண்ட ஏதென்ஸ் நகரம், தனக்குள்ளேயே ஏற்பட்ட எரிமலையைத் தாங்க முடியுமா என்று திணறியது. இறுதியில் சாக்ரடீசின் சவ ஊர்வலம், பெரும் திரளான மக்கள் வெள்ளம் கரைபுரண் டோட பவனிவந்து கல்லறையை அடைந்தது. அங்கே அறிஞனும் சாக்ரடீசின் முதல் மாணாக்கனுமான பிளேட்டோ உரையாற்றினான். கண்ணீர் பெருகியது. கல்லறை நனைந்தது.

## பிளேட்டோ பேசுகிறான்

"எனது ஏதென்ஸ் நாட்டு அருமை நண்பர்களே! அறிஞனை எரித்த கைகளோடு நிற்கிறோம். ஒரு நல்லவரை வீண்பழி சுமத்திக் கொன்றுவிட்ட குறைமதி படைத்த நாடு ஏதென்ஸ் என்ற சாபக் கேட்டை நம் தாயகம் பெற்றுவிட்டது. இனி அந்தச் சாபக்கேட்டைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல வழி பிறக்கும் என்ற நம்பிக்கையே நமது அறிவுக்கெட்டியவரை புலப்பட வில்லை. நாம் சாவோம். சாகடிக்கப்பட மாட்டோம் என்ற துணிவில் யாருமே ஏதென்சில் வாழமாட்டார்கள் என்ற அறிவிப்பைத் தந்து சென்றவனின் கல்லறை முன்னே நிற்கிறோம். நேற்றிருந்தான். இன்று வெந்து நீரானான், நாளை யாரோ என்ற அச்சத்துக்கிடையிலே வாழுங்கள் என்று சொல் லாமல் சொல்லிச் சென்று விட்டான், சொற்செல்வன்,

நாமறிந்த மட்டில் உலகில் தோன்றிய தத்துவ ஞானிகள் மிகச் சிலரில் தலை சிறந்தவன் சாக்ரடீஸ். செடியில் மலர்ந்த மலர் கொய்வாரின்றி உதிர்ந்து உலர்ந்துவிடும் தன்மைப் போன்ற தல்ல சாக்ரடீஸ் உயிர். அவனுடைய ஒரே உயிர் எத்தனையோ உயிர்களை மேம்பாடடையச் செய்திருக்கிறது. அந்த மேன் மக்களை இனி காலந்தான் காப்பாற்றவேண்டும். இறந்தவன் மேல் ஆணையாக அவன் விட்டுச் சென்ற அறிவாலயத்தைக் காப்போமாக. அவன் பொன்னடிகளைப் போற்றுவோமாக!!

வாழ்க சாக்ரடீஸ் !

வளர்க அறிவாலயம்!!

★

## 4

## முகமது நபிகள்

''ஏகி குதா—ஏகி பந்தா'' 'ஒன்றே குலம், ஒருவனே தெய்வம்' என்ற கொள்கை, போரில் அடிபட்டு கால்கள் கைகளில் இரத்தஞ்சிந்தி, ஆண்டவன் ஒருவனே என்ற கொள்கையை நிலைநாட்டி, இன்று சுமார் பத்து கோடி பேர்கள் பின்பற்றக்கூடிய அளவுக்கு அரும்பாடுபட்டவர் நபிகள் பிரான் அவர்கள்.

தாய் ஆமீனு பிராட்டியர், தந்தை அப்துல்லா. நபிகள் கர்பகத்திலிருக்கும்போதே தந்தையை இழந்துவிட்டவர். பிறந்த ஆருவது ஆண்டில் தாயை இழந்து விட்டவர். தன்னைப் பாசமோடு வளர்த்த பாட்டனூர் அப்துல் முத்தலீப் என்பவரை எட்டாவது வயதில் இழந்து, பிறகு சிறிய தந்தை யாரிடம் வளர்ந்து பனிரெண்டாவது வயதிலேயே வியாபாரத் தொடர்பாக தன் சிறிய தந்தையாரோடு சிரியாவுக்குச் சென்றவர்.

இவருடைய தந்தையார் அப்துல்லா என்பவர் எப்படி உயிர் பிழைத்தார் என்பதை சுருக்கமாகப் பார்ப்போம். அரேபியாவில் கடுமையான தண்ணீர் பஞ்சம். அரேபியா என்ற சொல்லுக்கு 'ஆரப்' என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டதால் அரேபியா என்றும், ஆரப் என்ருல் கருநிறமணல் நிறைந்த பகுதி; ஆகையாலே அரேபியா என்கிருர்கள். எது எப்படிபிருந்

தாலும் நாம் அரேபியா என்றே சொல்லிக்கொண்டுபோவோம் இதில் நாம் அரேபியா என்ற நாட்டை பற்றி தனியாக எழுதித் யிருப்பதால், இதில் நபிகள் பிறந்த மெக்கா நகரம், அவர் முதன்முதல் மஜீத் கட்டிய மெடினு நகரம், அவர் சிறப்பைப் பற்றி அறிந்து பேசிய சிரியா—அபிசீனியா போன்ற நகரங்கள், அவர் தற்காப்புக்காக நடத்திய போர் என்பவைகளைப்பற்றி மட்டிலும் குறிப்பிட்டால் போதும் என நினைக்கிறோம். முன்பு தண்ணீர் பஞ்சம் என்று குறிப்பிட்டோம். மூவாயிரம் ஆண்டு களுக்கு முன் ஆப்ரகாம் இஸ்மெயில் என்பவரால் கட்டப்பட்டு 365 சிலைகளை வணங்கி வந்த அந்த காபா என்ற இடத்திலிருந்த ஜம்ஜம் என்ற கிணற்றிலும் தண்ணீர் வற்றிவிட்டது.

ஊர் மக்கள் நரபலியிட்டால் தண்ணீர் கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்தனர். நரபலி கொடுக்க யார் முன் வருவார்கள் ஆனாலும் அப்துல்லா என்பவரின் தந்தை அப்துல்லாவை ஒரு கையிலும், அவனை வெட்டுவதற்கு வாளை ஒரு கையிலும் ஏந்தி காபாவுக்கு புறப்பட்டார். மக்கள் எவ்வளவு கொடியவர்களாக இருந்தாலும் அழகான சிறுவன்.*

கூடியிருந்த ஊர் மக்கள் ஒரு கருத்தைச் சொன்னார் கள். அதாவது பத்து ஒட்டகங்கள் என்று எழுதிய சீட்டு ஒன்றையும், அப்துல்லா என்ற ஒரு சீட்டு ஒன்றையும் குலுக்கிப் போட்டு இரண்டில் ஒன்றை எடுப்போம் என்றனர். அதன்படி செய்து பார்த்ததில் அப்துல்லா என்ற பெயர் வந்தது. இப்படி

---

குறிப்பு: இங்கே நான் அப்துல்லாவை அழகானசிறுவன் என்று குறிப்பிடுவதற்குக் காரணம், அப்துல்லாவின் திருமணம் நடந்த இரவு இருநூறு பெண்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். அவர்கள் எல்லாம் நம்மைதான் திரு மணம் செய்துக் கொள்வார் எனக் காலமெல்லாம் காத்திருந்து கடைசியில் ஆமீனு என்றவர்களை திருமணம் செய்துக் கொண்டதால்தான்.

Two hundred virgins committed suicide on the night of Abdullah's matrimonial என்று எழுதுகிறார் வரலாற் றாசிரியர்.

பத்து பத்தாகக் கட்டி நூறு ஒட்டகங்கள் வரை போட்டத்தில் நூறு ஒட்ட கங்கள் என்று வந்தது அதன்படியே நூறு ஒட்டகங் களைப் பலி கொடுத்தவுடன் ஜம்ஜம் என்ற கிணற்றில் தண்ணீர் வந்தது. தண்ணீர் பஞ்சம் தீர்ந்தது. அப்படிப் பிழைத்த அப்துல்லா என்பவருக்கும் ஆமீனு என்ற அம்மையாருக்கும் கி. பி. 570 ஏப்ரல் திங்களில்பிறந்தவர்தான் நபிகள் பெருமான். நபிகள் படிக்கவில்லை. அதனாலே அவரை உம்மி நபி என்றழைத் தார்கள். படிக்க வைக்கத் தந்தையுமில்லை. பாட்டனாரும், சிறிய தந்தையும் செல்லமாக வளர்த்தனர். மேலும் அன்று மெக்கா வில் படித்த குடும்பங்களே பதின்மூன்றுதான் என்று சொல்லப் படுகிறது. தெய்வ பக்தி மிகுந்தவர். ஒரு நாளாவது தொழுகைக்குப் போகாமலிருக்கமாட்டார். மூன்று கல் தொலை வில் உள்ள ஹிரா என்ற மலைக்கும் அடிக்கடி சென்று வருவார். இவர் குரைஷி குடும்பத்தில் பிறந்திருந்தாலும், இவர்காலத்து குரைஷிகள் எவ்வளவு கொடியவர்களாயிருந்தார்கள். பெண்கள் பிறந்தால் கொன்று விடுவார்கள். பசுவின் வாலில் தீ வைத்து அது துடிப்பதைப் பார்த்து சிரிப்பார்கள். ஒட்டகத் தின் வாலை அறுத்துவிட்டுவிடுவார்கள். பெண்ணின் ஒரு காலை ஒரு ஒட்டகத்தின் காலிலும், மற்றொரு காலை இன்னொரு ஒட்டகத்தின் காலிலும் கட்டிவிட்டு ஒட்டகங்களை எதிரும் புதிருமாக ஓட்டிவிடுவார்கள். பெண்ணின் உடல் இரண்டாகக் கிழிவதை கண்டு மகிழ்வார்கள். குடி, சூதாட்டம் இதே பொழுதுபோக்கு. இந்த கொடுமை கோரத் தாண்டவம் புரிந்துக்கொண்டிருந்த காலத்தில் பிறந்தவர்தான் நபிகள். இவருக்கு இவருடைய பாட்டன் முகம்மத் என்று பெயர் வைத்ததைக் கேட்டு யாரும் இந்த பெயர் வைப்பதில்லையே என்று கேட்டதற்கு, முகம்மத் என்றால் புகழுக்குரியவன் என்று பொருள். எப்படியும் இவர்களைத் திருத்தி தீரவேண்டும் என்று தீர்மானித்தார். ஒரு நாள் ஹிரா மலையில்தான் திடீரென ஒளி தோன்றி குர்ஆன் ஓதப்பட்டது. குர்ஆன் என்றால் ஒலியைஓதக் கூடியது, ஓதப்படுவது என்று பொருள். இவருடைய இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவ மக்கள் அவ்வளவாக முன் வரவில்லை. ஆனால் இவருக்கு 25 வயதிருக்கும்போது நாற்பது வயதான

எந்த கதீஜா அம்மையாரிடம் வேலைக்கு இருந்தாரோ அவரையே மணந்து கொண்டார். இவர் மிக நாணயமாக நடந்துக்கொண்ட காரணத்தால் அல் அமீன் என்ற பட்டமும் இவரையடைந்தது. கதீஜா அம்மையார் ஒரு விதவை. வயது நாற்பது இவருடைய நாணயத்தையும் தோற்றத்தையும் கண்டு இருபத்தி ஐந்தே வயதான இவரைத் திருமணம் செய்துக்கொண்டார். ஒரு நாள் தொழுகைக்குப் போய் பத்திரமாக வீடு திரும்புவது என்பது உயிருக்கு ஆபத்தான வேலை. தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது இமதா பென்சைனு என்ற பெண் குப்பையெல்லாம் சேர்த்து இவர்தலை மேல் கொட்டுவாள். இரண்டு நாட்களாக இது நடக்கவில்லை. எங்கே அந்தப் பெண் என்று கேட்டார். உடல் நலமில்லை அவளுக்கு என்றனர். உடனே அவள் வீடு தேடிப்போய் அவளை நலம் விசாரித்து வந்தார். கதீஜா அம்மையாரை திருமணம் செய்து கொண்டபின் காபாவை புதுப்பிக்க எண்ணினார். அதிலும் ஒரு சிக்கல், அதாவது அதற்கு முன் கொண்டுபோக வேண்டிய கல்லை யார் கொண்டுபோவது என்பதில் குரைஷிகளுக்கும் பனி வகுப்பாருக்கும் போட்டி. அந்த காபாவை புதுப்பிக்க கல்லை முதலில் யார் எடுத்து வைப்பது என்ற போட்டியில் அந்த கருப்புக் கல்லை ஒரு துப்பட்டியில் போட்டு நான்கு பேரையும் நான்கு மூலையிலும் பிடித்துக்கொண்டு போகும்படிச்செய்து சண்டையைத் தீர்த்து வைத்தார்; இப்படிப் பல.

இஸ்லாத்தை முதலில் தழுவியது இவரது மனைவி கதீஜா அம்மையார். பிறகு மெல்ல மெல்ல நாற்பது பேர்கள் தழுவினார்கள். எதிர்ப்பு குறைந்தபாடில்லை. 'மோட்சம்' எங்கே இருக்கிறது என்று கேட்டதற்கு உன் தாயின் காலடியில் என்றார்.

நாம் இறந்த பிறகு என்ன ஆவோம். நான் இறந்த பிறகோ நீங்கள் இறந்த பிறகோ என்னஆவோம் என்று தெரியாது. இந்த வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறீர் என்று கேட்டதற்கு, குதிரைச் சவாரி செய்கின்ற ஒருவன் கொஞ்ச நேரம் மரத்தின் நிழலில் இளைப்பாறுவதைப் போன்றதுதான் இந்த வாழ்க்கை என்றார்.

அவர் சொல்லியவை :

1. தேவைக்கு மேல் எப்பொருள் இருப்பினும் அதைப் பெற்றில்லாதவர்களுக்குக் கொடுங்கள். ஏனெனில் தேவைக்கு மேல் எதையும் வைத்துக்கொள்ள நமக்கு உரிமையில்லை.

2. ஈமானில் எழுபதுக்கு மேற்பட்டவைகள் உண்டு. மிக உயர்ந்தது, ஆண்டவன் ஒருவனே என்பது. சிறியது பாதையில் உள்ள கல்லையும் முள்ளையும் அகற்றுவது.

3. நீங்கள் விரும்புவதை, உண்ணுங்கள், உடுத்துங்கள். அவை இரண்டும் பாவமில்லாத வரையிலும் குற்றமில்லை.

4. கர்வம், மிதமிஞ்சியது, இவை இரண்டும் பாவம்.

5. பெற்றோரிடம் கருணையுடன் நடந்துகொள்வதே இறைவனுக்கு இன்பம் தரும் இரண்டாவது நற்செயல்.

6. பொன்னும் பட்டும் என்னைப் பின்பற்றுகிற பெண்களுக்கு சட்டப்படி உரிமையுண்டு. ஆண்களுக்கு ஆகாதவை.

7. என்னைப் பின்பற்றுகிறவர்கள் நிச்சயம் மது அருந்ததாவர்கள்; அதற்கு உரியதல்லாத பெயரைச் சொல்லுவார்கள்

8. உங்களை ஒருவர் உபசரிக்கத் தவறினாலும், அவர்கள் உங்கள் இல்லம் தேடிவருகிறபோது உணவளித்து உபசரியுங்கள்.

9. ஒருவரிடம் விருந்தினராகத் தங்கியிருக்க மூன்று நாட்கள் உரிமையுண்டு. அதற்கு மேல் தானம் பெறுவதற்கொப்பாகும்.

10. ஒருவருக்கு தொல்லை தருகின்ற வரையில் தங்குவது சரியன்று.

11. மனிதர்களை மல்யுத்தத்தில் தோற்கடிப்பவன் வீரனல்லன்; கோபத்தை அடக்கியாள்பவனே வீரன்.

12. விருந்தினர் விடைபெற்றுச் செல்லும்போது வீட்டின் கதவு வரையிலும் அவருடன் செல்வது என் வழக்கம்.

13. பசித்தவனுக்கு புசிக்கக் கொடுப்பது தானத்திலெல்லாம் சிறந்த தானம்.

14. நின்றுகொண்டு தொழுங்கள். முடியாவிட்டால் உட்கார்ந்துக்கொண்டு தொழுங்கள். அதுவும் முடியாவிட்டால் படுத்துக்கொண்டு தொழுங்கள்.

15. உண்மை பேசுவது கசப்பாயிருப்பினும் அதுவே சிறந்தது.

16. என்னை மிக உயர்ந்த நிலையில் வைத்துவிடாதீர்கள். நான் அல்லாவின் ஊழியனுகவும், தூதுவனுகவும் இருக்கிறேன்

17. முஸ்லீம் அல்லாத குடிமக்களைக் கொடுமைப்படுத்துகிறவர்கள் யாராயிருந்தாலும் என்னுடைய (கியாமத்) கடைசி நாளில் வாதாடுவேன்.

18. இறைவனை நம்புங்கள்; ஆனுல் ஒட்டகத்தைக் கட்டி வையுங்கள்.

19. முஸ்லீம் அல்லாத குடிமக்களுக்கு நான் அளித்து வந்த பாதுகாப்பை நீங்கள் ஜாக்கிரதையாகக் கடைபிடிக்க வேண்டும்.

20. இலஞ்சம் கொடுப்பவன், வாங்குபவன் இருவரையுமே இறைவன் சபிப்பார்.

21. நீதிபதி கோபமாயிருக்கும்போது வாதி, பிரதிவாதி இருவருக்குமிடையே நீதி வழங்குதல் கூடாது.

22. தனக்காகவேனும், பிறருக்காகவேனும் உழைக்காதவன் இறைவனுடைய சன்மானத்தைப் பெறுவதில்லை.

23. சாட்சிகளைக்கொண்டு நிரூபித்தல் வாதியின் கடமை, பிரதிவாதி சத்தியம் செய்துதான் தீரவேண்டும்.

24. பொறாமையினின்று விலகி இரு, ஏனெனில் நெருப்பு மரக்கட்டையை எரித்து சாம்பலாக்கிவிடுவதைப் போல் பொறாமை உன் நற்குணத்தை எரித்துவிடும்.

25. இறந்தவர்களுடன் மூன்று பொருட்கள் வரும்; குடும்பம், பொருள்கள், செயல்கள், குடும்பம், பொருள்கள் திரும்பி விடும். செயல்கள் மட்டிலுமே கூடவரும்.

26. மூன்று காரியங்களில் பொய்ச் சொல்வது சட்ட விரோத மில்லை. மனைவியை மகிழ்விப்பதற்காக, போரில், சண்டை யிடுகின்றவர்களை சமாதானம் செய்து வைப்பதற்காக.

27. கஞ்சத்தனமுள்ள தொழுகையாளனைவிட, அறிவற்ற தாராள குணமுடையவனையே இறைவன் நேசிக்கின்றான்.

28. வசிக்க ஒரு வீடு, மறைவான உறுப்புகளை மறைக்க ஒரு துணி, துண்டு ரொட்டி, கொஞ்சம் நீர், இந்த பொருள் களைத் தவிர வேறு எப்பொருளையும் வைத்திருக்க மக்களுக்கு உரிமையில்லை.

29. இந்த பூமியே ஒரு மஜீத். தொழுகை நேரம் எங்கே வந்தா லும் தொழுதுகொள்ளுங்கள்.

30. நோயாளிகள், பிராயணம் செய்துக்கொண்டிருப்போர் தொழவேண்டியதில்லை.

ஒருவர் பின் ஒருவராக நூற்றுக் கணக்கானோர் இஸ்லாத்தைத் தழுவுவதைக் கண்ட குரைஷிகளுக்கு கோபத்தை அடக்க முடியவில்லை. அவர்களில் உத்பா என் பவன், முகம்மதுவின் தலையைக் கொண்டு வருபவனுக்கு ஆயிரம் சென்னிற ஒட்டகங்களைப் பரிசளிப்பேன் என்றான்.

இந்த ஆசை வார்த்தையைக் கேட்ட 30 வயதுடைய உமர் என்பவன் கத்தியும் கையுமாக நபிகள் வீட்டுக்கு ஓடிக்கொண் டிருப்பவனை, அபிசுபியான் என்பவன் தடுத்து காரணத்தைக் கேட்டான். உமர் சொன்ன காரணத்தைக் கேட்டு கலகல வென சிரித்த சுபியான் சொன்னான், 'அட பைத்தியக்காரா, உன் தங்கையும் மைத்துனனும் இஸ்லாத்தைத் தழுவிவிட்டார்

குறிப்பு: முக்கியமானவற்றை மட்டிலும் மேலே குறிப்பிட் டிருக்கின்றேன்.

களே, உனக்கு தெரியாதா என்றான். அவன் சொன்னதைக் கேட்ட உமர் ஓடிவந்து பார்க்கிறான். அவன் தங்கையும், மைத்துனனும் குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பதைப் பார்த்து உமரும் இஸ்லாத்தைத் தழுவிவிட்டான்.

சில பெண்கள் நபிகளைப் பார்த்து, "ஒரு ஆண் நான்கு பெண்களைத் திருமணம் செய்துகொள்ளலாம் என்கிறீர்களே, அதேபோல் ஒரு பெண் நான்கு ஆண்களைத் திருமணம் செய்து கொண்டால் என்ன?" என்று கேட்டார்கள். "நீங்கள் நாளைக்கு வருகிறபோது ஒருவர் ஒரு குவளை ஒட்டகத்தின் பாலையும், ஒருவர் பசும்பாலையும், ஒருவர் ஆட்டுப்பாலையும் ஒருவர் கழுதைப்பாலையும் கொண்டுவாருங்கள்" என்றார். அதன் படியே கொண்டு வந்தார்கள். அந்தப் பாலை எல்லாம் ஒரு சட்டியில் கொட்டச் சொன்னார். அதைப் போல் கொட்டினார்கள். அவரவர்கள், கொட்டிய பாலை அவரவர்கள் கொண்டு போங்கள் என்றார். எப்படி முடியும்? அதாவது ஒரு ஆண் நான்கு பெண்களைக் கட்டிக் கொண்டால் ஒரே தந்தையாகையால் சொத்துரிமையில் சிக்கல் வராது. ஒரு பெண் நான்கு ஆண்களைக் கட்டிக் கொண்டால், குழந்தை இந்த நான்கு ஆண்களிலே எந்த ஆணுக்குப் பிறந்தது என்று எப்படிக் கண்டுபிடிப்பது? இதைத் தான் இவ்வளவு அழகாக விளக்கினார்கள் நபி.

(இஸ்லாம் என்றால் அமைதி, முஸ்லிம் என்றால் உறுதி). நபிகளுக்கு நாற்பது ஆண்டுகள் ஆகின்ற வரையில் இவர் கொண்டிருந்த கொள்கைகள், நோக்கங்கள் அவ்வளவாக சூடு பிடிக்கவில்லை. உலகத்தின் மையத்திலிருப்பதும், பன்னீராயிரம் சதுர மைல்களைக் கொண்டதும், முஸ்லீம் பாஷாக்களின் ஆளுகைக்குட்பட்டதுமான அரேபியாவின் ஒரு பகுதியாகிய மெக்காவில் தோன்றிய சீர்திருத்தப் புரட்சி, அவர் காலத்தில் எளிதாகப் பரவிவிடவில்லை, ஒரு பக்கம் கிருஸ்துவர்கள். ஒருபக்கம் யூதகள். இன்னொரு பக்கம் குரைஷிகள். ஒரு பக்கம் பெனிஹவா வம்சத்தினர் ஆகியவர்கள். அவ்வளவு பேர்களையும். தான் ஒருவரே நின்றுசமாளிக்க வேண்டி வந்தது.

போர்கள் வேறு நடத்த வேண்டிவந்தது. இந்த நெருக்கடியில் சிலர் அபிசீனியாவுக்கு ஓடி தஞ்சம் புகுந்தனர். அவர்களை அபிசீனிய அரசாங்கம் அன்போடு வரவேற்று உபசரித்தது. இரண்டாவது கட்டமும் அபிசினியா மன்னன் நெரு என்பவரிம் தஞ்சம் புகுந்தது. இப்படிப் பயந்தவர்கள் நாலா பக்கங்களுக்கும் ஓடினர். ஆனல் இவ்வளவுக்கும் அசையாது நபிகள் மெக்காவிலேயே இருந்தார்கள், அபுதாலிப் என்பவரைக் கண்டு 'முகம்மதுவுக்கு நீ பாதுகாப்பு கொடுத்தால் கொன்றுவிடுவோம்' என்று பயமுறுத்தினர் என்ருலும் 'நீங்கள் எவ்வளவுதான் பயமுறுத்தினுலும் நான் அவருக்குப் பாதுகாப்புத் தருவதை நிறுத்த மாட்டேன்' ன்எறு கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பிறகு, 'முகம்மதுவே', நீர் இந்தக் கொள்கையை விட்டுவிட்டால் உம்மை அரசனுக்குகிறோம்' என்று சொன்னதற்கு 'ஒரு கையில் சந்திரனையும், மற்ெருரு கையில் சூரியனைத் தருவதாயினும் என் கொள்கையை விடமாட்டேன்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார் நபிகள். இதனுல் மேலும் ஆத்திரமடைந்த குரைஷிகள் முகம்மதத்தையும் அவர் குடும்பத்தையும் குலத்திலிருந்து விலக்கி வைக்கிறோம் என்றறிவித்தார்கள். அதற்கும் அஞ்சவில்லை அவர். 619ல் நீக்கப்பட்டனர். மெக்காவிலிருந்து அறுபடி கல் தொலைவிலுள்ள டாயிப் நகரத்தில் கொள்கை சொல்ல நபிகள் புறப்பட்ட முதல் நகரமாகும். அந்நகர மக்கள் உருவ வழிபாட்டில் அசையா நம்பிக்கைக் கொண்டவர்களாகையால் நபிகளைக் கல்லாலும், கட்டையாலும் அடித்து, கால்கள் இரண்டிலும் இரத்தம் கசிய கசிய துரத்தப்பட்டார். இவர் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள மனமிருந்தும், குரைஷிகளுக்குப் பயந்து சிலர் அபிசீனியாவுக்கு ஓடிவிட்டதால் இவரைக் காப்பாற்றம் போதுமான் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது.

இதையெல்லாம் கேள்வியுற்ற சில மெதினு மக்கள், 6 1ல் அகாபா என்ற இடத்தில் கூடி "நாங்கள் இஸ்லாத்தைத் தழுவி விட்டோம். இறை தூதரின் ஆணைப்படி இனி ஒரே ஆண்டவனைத் தவிர வேறொரு கடவுளைத் தொழமாட்டோம்,

திருடமாட்டோம், எங்கள் குழந்தைகளைக் கொல்லமாட்டோம், பிறர்மேல் பொய்க்குற்றம் சுமத்தமாட்டோம், நபிகளுக்கு கீழ்ப்படியாமாலிருக்கமாட்டோம்'' என்றுறுதி எடுத்துக் கொண்டு ஆண்டுக்காண்டு மெதினு மக்கள், கூட்டம் கூட்டமாக வந்து இஸ்லாத்தைத் தழுவத் தொடங்கினர். இரண்டாவது முறையாக எழுபத்தி மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் சேர்ந்தார்கள். இப்படி மெதினு மக்கள் சிறுகச்சிறுக பெருமளவு சேர்ந்ததாலும், பலர் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டதாலும், மெக்கா மக்கள் தொகை குறையத் தொடங்கியது. அதன் பிறகுதான் நபிகள், அபூபகர் என்பவரையும், அலி என்பவரையும் அழைத்துக்கொண்டு மெக்காவை விட்டு மெதினுவுக்கு புறப்பட்டார்கள். இதையறிந்த குரைஷிகள் வெளியே போகவிடக்கூடாதென்றும், கொன்றுவிட வேண்டுமென்றும் சதி செய்த செய்தியை முன்னதாகவே அறிந்த நபிகள், இரவோடு இரவாக அபுபகர் என்பவரை அழைத்துக்கொண்டு, மூன்று கல்தொலைவிலுள்ள தபுர் என்ற குகையில் ஒளிந்துகொண்டார். அதையும் கண்டுபிடித்து அந்த குகைவாயிலை போய்ப்பார்த்தபோது முகப்பில் சிலந்தி கூடு கட்டியிருந்தது. ஆகையால் மனிதர்கள் யாரும் போயிருக்க முடியாது என்று திரும்பிவிட்டனர். மூன்று நாட்கள் அந்த குகையிலேயிருந்து ஜூன் திங்கள் 22ம் நாள் கி. பி. 622ல் மெதினுவுக்கு புறப்பட்டார். இந்த நாள் முதற்கொண்டு தான் ஹிஜிரா என்ற ஆண்டு தொடங்குகிறது. இப்போது மெதினு ஒரு இஸ்லாம் நகரமாயிற்று.

இருந்தாலும் தொடர்ந்து பத்து ஆண்டுகள் மெக்காவிலிருந்த முஸ்லீம்கள் தொடர்ந்து போர் நடத்திய வண்ணமிருந்தனர்.

பாதர் போரில் மெக்காவாசிகளும் அவர்களின் தலைவர்களும் பலர் கொல்லப்பட்டனர். தோல்வியுற்றவர்கள் அடுத்த ஆண்டு மூவாயிரம் வீரர்களோடு உஹுத் என்றவிடத்திலே போர் தொடுத்தார்கள். இந்த முறை மூன்றில் ஒரு பகுதி முஸ்லீம்கள் உயிரிழந்து, நபிகளும் எழுநூறு பேர்களும்தான்

மிச்சமானுர்கள். அதன் பிறகும் இருபத்திநாலாயிரம் பேரோடு வந்து முற்றுகையிட்டார்கள். என்ருலும் அவர்களால் சமாளிக்க முடியவில்லை. அவர்களுடைய தலைவன் அபுசுபஹான் என்பவன் படைகளைப் பின்னடையக் கட்டளையிட்டான். போர் ஓய்ந்து நபிகள் தான் பிறந்த பூமியும், புண்ணிய நகருமுமான மெக்கா நகருக்குத் திரும்பினுர்கள். அதன் பிறகும் இங்குமங்கு மாகச் சிலகலகங்கள் நேர்ந்தன என்ருலும் இறுதியில் முஸ்லீம் மக்களே வெற்றிபெற்ருர்கள். இதுதான் கடைசி வெற்றி.

காபா மஜீத்தை புனிதப்படுத்த வேண்டிய பணியைத் தொடங்கி, 365 சிலைகளையும் அப்புறப்படுத்தி 'ஒருவனே இறைவன், ஒன்றே குலம்' என்பதை அண்டையிலிருந்த நாடு களுக்கு மட்டிலுமல்ல, உலகத்துக்கும் அறிவித்துவிட்டார்கள்.

"இன்று முதல் உங்கள் மதத்தைப் புனிதப்படுத்துகிறேன்; என் அன்பையும் உங்கள் மேல் சொரிகிறேன். இஸ்லாம் தான் நமது மதம் என்பதையும் சொல்லுகிறேன்" என்ருர். அதோடு எதிரிகளை எல்லாம் அழைத்து, 'நீங்கள் எனக்கு எவ்வளவு தீங்கிழைத்திருந்தாலும்கூட அல்லாவின் திருநாமத்தால் உங் களனைவரையும் மன்னித்துவிட்டேன்' என்ருர். பதினுன்கு நூற்ருண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட குர்ஆன் இன்னும் அப்படியே அதன் எழில் குன்ருமல் ஒரு வார்த்தையும் மாற்றத் தேவையில்லாமல் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

திருநபிகள் சிறையிலிருந்த போர்க் கைதிகளுக்கு ஒரு நிபந் தனையிட்டிருந்தார். அதாவது, எந்த கைதி பத்துபேருக்கு எழு தப் படிக்கக் கற்றுத்தருகிருனே, அவன் விடுதலையடையலாம் என்றிருந்தது. இப்போது எல்லாரும் விடுதலையடைந்ததோடு மன்னிக்கப்பட்டு இஸ்லாத்தையும் தழுவி விட்டனர். இதை யெல்லாம் கண்டு களிப்படைந்து தனது அறுபத்தி இரண்

---

குறிப்பு : பின்னுல் வந்த அக்பர் என்ற மன்னர் அபுல் பாசில் என் பவரை அழைத்து போட்டி குர்—ஆன் ஒன்றை எழுதச் சொல்லி அதற்கு தீனே இலாஹி என்று பெயர் வைத்தார். என்ருலும் அது தீயிலிட்ட சருகுபோல்கருகிபோயிற்று.

டாவது வயதில் தன் மனைவி ஆயிஷா உடனிருக்க உயிர் துறந்தார். ஒரு பேரியக்கத்தின் தோன்றலாகவும், இடி மின்னல் பூகம்பம் போன்றவற்றையெல்லாம் எதிர்த்து நின்ற பேருருவம் இன்று உலகமெல்லாம் பரவியிருக்கிறது.

## குற்றமும் தண்டனையும்

மெக்கா, மெதீனா—இந்த இடங்களில் நடக்கும் குற்றங்களும் தண்டனைகளையும் கேட்டால் மெய் சிலிர்க்கும்.

ஒருவன் திருடிவிட்டான் என்று நான்கு சாட்சிகளைக் கொண்டு நிரூபித்தால் அவன் கைகள் வெட்டப்படும்.

ஒருத்தி விபசாரம் செய்துவிட்டாள் என்று நான்கு சாட்சிகளைக் கொண்டு நிரூபித்துவிட்டால் அந்தப் பெண்ணைக் கும்பலில் விட்டுக் கல்லாலடித்துக் கொன்று விடுவார்கள்.

இதனால் அங்குத் திருட்டோ, விபசாரமோ நடப்பதில்லை. வேறு மதத்தினரை அங்கு அனுமதிப்பதில்லை. அவர்கள் அங்கு போவதுமில்லை. தொழுகை நேரத்தை அறிவிக்கும் பாங்கர் ஊதியவுடன் கடைகளை அப்படி அப்படியே திறந்தபடியே விட்டுச் சென்று விடுவார்கள். ஒரு துரும்பும் அசைவதில்லை. கீழே கிடந்து எடுத்தேன் என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் அதை நிரூபிப்பதற்கும் நான்கு சாட்சிகள் வேண்டும்.

கப்பலில் போனால் ஐந்து நாட்களும், விமானத்தில் போனால் ஐந்துமணி நேரமும் பிடிக்கிறது அங்கே போவதற்கு. மெக்காவில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு அலுவலகம் உண்டு. அதில் தங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். ஹஜ் யாத்திரை அதாவது மெக்கா மெதீனாவுக்குப் போய் வந்தவர்களைத்தான் ஹாஜியார் என்று மரியாதையோடு அழைக்கிறார்கள். உலக முழுவதிலிருந்தும் முஸ்லீம் மக்கள் வந்து கூடுவதால் எப்போதும் அவ்வூர் திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். தொழுகைக்குப் போகின்றவர்கள் ஆண்டியாயிருந்தாலும் அரசனாயிருந்தாலும்

இடுப்பில் ஒரு துண்டும், மேலே ஒரு வெள்ளைத் தூண்டும்தான் அணிந்து கொள்ளவேண்டும். அந்தத் துண்டுகளில் கரையோ சரிகை வேலைப்பாடோ ஒன்றும் இருக்கக்கூடாது. ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ளக் கூடாது. 'இதோ அரசர் வந்துவிட்டார். வழிவிடுங்கள்' என்று சொல்வாருமில்லை. அரசரும் அப்படி முந்திக்கொள்ள விரும்புவதில்லை.

பயணிகள் போக வர பெரிய கார்கள்தான் பயன்படுகின்றன. ஏனெனில் பெட்ரோல் காலன் ஆறணு என்கிருர்கள்.

★

# 4

# கார்ல் மார்க்ஸ்

எவன் வெகு நேரம் உழைத்து உணவுக்கும், உடைக்கும், இடத்திற்கு போதாமல் தவித்தானே, எவனுடைய உழைப்பின் மூலம் உப்பரிகையில் வாழ்ந்துக்கொண்டு, உழைத்தவனுக்கு ஓட்டைக் குடிசையும் இல்லாமல் ஆக்கினானே, எவன் பழம் போன்ற தொழிலாளியின் சாரத்தைப் பிழிந்து தோலை தூர எறிந்தானே, எவன் ஓடும் இயந்திரத்திற்கும் ஓய்வுண்டு, எங்களுக்கு ஓய்வில்லையா என்று கேட்டவனைத் தன் செல்வாக்கின் மூலம் அந்த உரிமை, ஊதியம் இரண்டையும் கேட்ட தொழிலாளியை குண்டாந்தடி, குத்தீட்டி, தீ கக்கிய துப்பாக்கி குண்டுகளால் தாக்கித் துரத்தினானே, வாயிருந்தும் ஊமையராய், வயிறிருந்தும் பட்டினியாய்க் கிடந்தவர்களைக் கண்டு, இது உன் தலைவிதி என்று மதத் தலைவர்களைவிட்டு உபதேசம் செய்ய வைத்தானே, 'உற்பத்தி செய்வது நாங்கள், விநியோகம் செய்வது நீங்கள்; மூலதனம் ஒன்றினாலேயே இயந்திரம் இயங்காமலும், எங்கள் உடல் உழைக்காமலும் இருந்தால் எப்படி எல்லா இலாபத்தையும் நீங்களே அடைய முடியும்' என்று தோல் உரிந்த எலும்புகளை எண்ணிக்காட்டினானே, எவன் வேலைக்கும் ஓய்வுக்கும் வித்தியாசம் தெரியாமல் உழைத்தானே அந்த உழைப்பாளியைக் கண்டு, 'எட்டு மணி நேரம் வேலை செய், எட்டு மணி நேரம் களியாட்டம் ஆடு, எட்டுமணி நேரம் ஓய்வெடுத்துக் கொள்' ஒரு நாளைக்கு

மூன்று கூறுக்கி அந்தப் பொன்னுளை மேதினியெங்கும் மேதின மாகக் கொண்டாடச் செய்தவனுக்குக் காரணமாயிருந்த பொதுவுடைமைத் தந்தை காரல் மார்க்ஸ் பிறந்த மாதம் மே மாதம். ஆகையால் அந்த மே மாதத்தை உலக உழைப்பாளி கள் ஒன்று கூடி முதலாளிக்கும் தங்களுக்கும் இருந்த கணக்கை நேர்படுத்திச் சரிபடுத்திய நாள் மே திங்கள். ஆகவேதான் அறிஞன் கார்ல் மார்க்ஸ் பிறந்த மாதத்தைத் தேர்ந்தெடுத் தார்கள்.

அந்தப் பேரறிஞன் எழுதிய காபிடல் Capital என்ற நூல், தலைவிதி என்றவர்களை ஒரேயடியாக மிக வேகமாகச் சாடியது. மன்னனை ஏவி அவர்களை அடக்கப் பார்த்ததின் விளைவாக எந்த இரண்டாவது நிக்கோலஸ் ஜார் மன்னனை முடிதுறக்கச் செய் ததோ, எந்த சிறைச்சாலையில் உழைப்பாளிகள் அடைப்பட்டார் களோ அதே சிறைச்சாலைகள் இன்றுஅடையாளம் தெரியாமல் இடித்துத் தள்ளி அதன் கடைசி கல்லையும் பெயர்த்தெடுத்து அங்கெல்லாம் உழைப்பாளிகள் ஓய்வெடுக்கும் உல்லாச பூங்காவாக்கிஞர்களோ, அந்தத் தொழிலாளிகளின் கண்ணீ ரைத்துடைக்க, தன் மனைவி மக்கள் கண்ணீர் சிந்த வறுமை யில் வாழ்ந்தான். அந்தப் பெருமகன் வாழ்ந்தான் என்றுகூட நம்மால் சொல்ல முடியவில்லை. விழுந்தான், எழுந்தான், மெல்ல நடந்தான். அதுவும் தன் அருமை நண்பன் ஏஞ்சில்ஸ் என்பவனுல் கொடுக்கப்பட்டுவந்த உதவியெனும் கைத்தடி யைப் பிடித்துக்கொண்டு நகர்ந்தான் என்று சொல்வதே பொருத்தமாயிருக்கும்.

பொதுவாக மனித இயல்புகளை ஆராய்பவர்களில் சிலர் தான் அவற்றிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை எப்படிச் சரிப்படுத்த லாம் என்றெண்ணுகிருர்கள். அதற்காக வருந்தாமல் அவர வர்கள் வந்த வழி என்பதோடு சிலர் நின்றுவிடுகிருர்கள். ஒரு சிலர் 'ஏன் மாற்றியமைத்தால்'என்ற விஞவோடு நின்று விடுகி ருர்கள். சிலர் மாற்றுவதற்கு என்னவழி என்ற கேள்வியோடு நின்று விடுகிருர்கள். சிலர்மாற்ற நினைத்தால் 'ஜபமாலை ஒப்புக் கொள்ளாதே, நமக்கேன் அந்த பொல்லாப்பு' என்ற

அளவோடு நின்றுவிடுகிறார்கள். அந்த ஜபமாலையை அவர்கள் கையில் கொடுத்தவன் யார், என்று கேட்கிறார்கள் சிலர். ஆண்டவன் கொடுத்தான் என்கிறார்கள் பக்திமான்கள். அந்த ஆண்டவனின் கடமையென்ன? என்று கேட்கிறார்கள் சில சிந்தனையாளர்கள். ஆண்டவனே நம்மையெல்லாம் படைத்திருக்கும்போது அவனையே இந்த கேள்வி கேட்கலாமா என்று நினைக்கிறார்கள் சில சந்தேகப் பிறவிகள். ஆண்டவனே நம்மைப் படைத்திருந்தால் ஆண்டவன் இப்படி மனித சமூகத்தை ஏற்றத் தாழ்வாக நடத்த முடியாதே, கூடாதே ஆக இப்படிப்பட்ட ஓரவஞ்சனையுள்ளவன் ஆண்டவனாக இருக்க முடியாது. ஆகையால் ஆண்டவனை யாரோ படைத்தார்கள், என்ற விடை வருகிறது. ஒன்று உண்மையான ஆண்டவனாக இருந்து, அவன் படைத்த குழந்தைகளாக நாம் இருப்போமானால், பல குழந்தைகளை ஈன்ற தாய் தந்தையருக்கும் இருக்கும் கருணைகூட ஆண்டவனுக்கு இல்லையே ஏன்? என்று கேட்கிறபோதுதான் 'ஐயோ நாத்திகம் கிளம்பி விட்டதே ஒடுக்குங்கள்' மாமன்னர்களே, என்று மடாலயத்தில் அபாயச் சங்கு ஊதப்படுகிறது. ஒரு மனிதன் தன் உரிமையை கேட்கும்போது அவனை நாத்திகன் என்ற ஒரே சொல்லால் அடக்கிவிட முடியுமென்றால், ஒடுக்கப்பட்டவன் 'நாத்திகம் வாழ்க' என்று சொல்லாமல், ஓங்கார பிரணவ மந்திரமா சொல்லிக் கொண்டிருப்பான். கடவுள் என்று ஒன்றிருந்து அது எல்லாரையும் ஒரு சமமாக பாவித்து நடத்தாதபோது அதன் மேல் வெறுப்பு வராமல் என்ன செய்யும்.

அரசனைக் கடவுள் அவதாரம். இரண்டாம் கடவுள் என்று மதவாதிகள் சொல்வதற்கு என்ன காரணம் என்றும் கடவுளைக் காட்டமுடியாது, யாராவது கடவுளைக் காட்டு என்றால் என்ன செய்வது, ஆகையாலே அரசனைக் காட்டி, இவர்தான் கடவுள் அவதாரம், இரண்டாம் கடவுள் என்று சொல்லிவிடலாம் அல்லவா? அதனால் கடவுள் என்ற சொல்லே மதம் என்ற பேதமையோடு சேர்ந்ததாகும். ஆகையால்தான் மார்க்ஸ் மதம் அபினியைப் போன்றது என்றான்.

உதாரணமாக, ஒரு தொழிலாளி முதலாளியை அணுகி, 'நீர் ஏன் இவ்வளவு செழிப்பாக இருக்கிறீர். நான் ஏன் ஏழையாகவே இருக்கவேண்டும்' எனக் கேட்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அதற்கந்த முதலாளி, 'எனக்கு இந்த பாக்கியத்தைத் தந்தவன் ஆண்டவன்' என்கிறான். அப்போது இந்தத் தொழிலாளி ஆண்டவனை ஒப்புக்கொள்ளுவதாயிருந்தால் முதலாளியை இப்படி அவன் கேட்க முடியாது. ஆகவே தான் அங்கே ஆண்டவன் அல்லது ஆண்டவன் என்ற பெயர்; அவனைக்காட்டி பயமுறுத்துகிற மதத் தலைவர்கள்; அவர்கள்

---

குறிப்பு :— நான் நெல்லை நகர் பக்கத்திலுள்ள பேட்டையில் இருக்கும் இந்துக் கல்லூரியில் பேசச் சென்றிருந்தேன். இந்தப் பேட்டைக்கு இரண்டு முறை வந்திருக்கிறேன். ஒரு தரம் திரு நபிகள் விழாவில் பேச, இரண்டாவது முறை தி. மு. க. கூட்டத்தில் பேச. இந்த இந்து கல்லூரி நெல்லை நகரின் மையத்தில் இருந்தபோது, இந்த கல்லூரி பேட்டைக்கு மாறிய பின் இது முதல் முறை. அந்த மாணவர் பேரவை விழாக் கூட்டத்திற்கு தலைமை வகித்தவர் ஒரு பொது உடமைத் தோழர் என்றார்கள். இருக்கட்டும், அதனாலென்ன என்று என் பேச்சைத்தொடங்கி பேசிக்கொண்டே வந்து கடைசியில் சொன்னேன், இந்தக் கூட்டத்தின் தலைவர் ஒரு பொது உடமைக் கட்சியைச் சேர்ந்தவர் என்று கேள்விப்பட்டேன், மெத்த மகிழ்ச்சி. ஏனெனில் அவர் கடவுளை ஒப்புக்கொள்ள முடியாதவர். காரணம் பொது உடமைவாதிகள் பச்சை நாத்திகராகத்தான் இருந்து தீரவேண்டும். ஏன் கடவுள் மேல் இவர்களுக்கு கோபமா, இல்லை. ஏன்? கடவுள் என்று ஒன்று இல்லை என்கிறபோது கோபித்துக்கொள்வது யார் மேல், கடவுளைப் பற்றி இந்த ஆராய்ச்சி வருவதற்குக் காரணமென்ன? மாணவ நண்பர்களே, இங்கே நீங்கள் ஒன்றை சிந்திக்கவேண்டும். ஒரு பொது உடமைவாதி நாத்திகராகத் தான் இருக்கவேண்டுமென்பது நான் சொன்ன கருத்தாக ஏற்றுக் கொள்வதைவிட இந்த விவகாரத்திலுள்ள சிக்கல்களை தெரிந்துக் கொள்வது நல்லதுஎன்று பேசினேன்.

உன்னை சபித்து விடுவேன் என்று உருட்டிக்காட்டும் ஜெப மாலை; ஜெபமாலை கைநழுவாமல் பார்த்துக் கொள்வோம் என்ற உத்திரவாதத்தைக் கொடுத்த அரசாங்கம்; ஆக அவ்வளவுக்கு விடைதந்தனுப்ப வேண்டியவனாகிறான்; அல்லது மறுக்க வேண்டியவனாகிறான் என்பதுதான் கார்ல் மார்க்சின் சித்தாந்தம். இனி அறிஞன் கார்ல் மார்க்சின் வரலாற்றைக் கவனிப்போம்.

## கார்ல் மார்க்ஸ் பிறப்பு

பிறநாடுகளில் சில சீர்திருத்தப் பாதையில் அடியெடுத்து வைக்கத் தொடங்கிய காலத்தில் கூட, தன்னிலையிலிருந்து கொஞ்சமும் மாறாமல், மாதா கோவில்கள் என்ன, மதத்தலை வர்கள் என்ன, வைதீகர்களின் பெருமைமிகுந்த வாழ்க்கை என்ன, பக்திமான்கள் கூட்டமென்ன, ஒன்றும் குறைவற்ற ஒரு மதக் கோட்டையாகவே இருந்த ட்ரியர் என்ற ஊரிலே தான் மார்க்சின் பெற்றோர்கள் பிறந்தார்கள். இந்த ஊர் ஜெர்மனியின் மேற்கு எல்லையும், பிரான்சின் கிழக்கு எல்லையும் சந்திக்கின்ற இடத்தில் இருந்த காரணத்தால் ஜெர்மனியின் கலையோ பிரான்சின் நாகரிகமோ இந்த ஊரைத் தீண்டவே யில்லை. 16, 17 நூற்றாண்டில் இந்த ஊர் இதே நிலையில்தான் இருந்தது. இவ்வளவு வைதீக மேகங்கள் சூழ்ந்த ஊரில்தான் கடவுளையும், மதத்தையும் செல்வச் சீமான்களையும் தொழிலதி பர்களையும் சந்திக்கிழுத்து, தொழிலாளர்கள் முகத்தில் ஒரு ஜீவகளையை உண்டாக்கித் தந்த கார்ல் மார்க்ஸ் பிறந்தான். அநேகமாக எல்லா ஊர்களிலும் இப்படி மதத்தின் பேரால் நடக்கின்ற அநியாயங்களை நேரில் பார்க்கிற வாய்ப்பு பெற்ற வர்களில் சிலர் பகுத்தறிவு வாதிகளாக மாறுவதில் வியப் பில்லை. கார்ல் மார்க்ஸ் கழுத்தை அவர்கள் ஜபமாலை அறுக்க வில்லை. தொழிலாளர்களின் மலர்மாலைகள் அலங்கரித்தன. இப்படி பேசுகிறவர்கள், நினைக்கிறவர்கள் முன்பெல்லாம் கூட பேசியதுண்டு. ஆனால் அப்படிப் பேசியதால் சிரச் சேதம் செய்யப்பட்டதும் உண்டு. ஆனால் என்றும் அழிக்கமுடியாத

ஒரு வலிமை மிக்க ஜார் அரசாங்கத்தை அழிக்கக் காரண மாயிருந்த கார்ல் மார்க்சை ஒன்றும் செய்யமுடியவில்லை. நான்கைந்து முறை நாடு கடத்தியதைத் தவிர. அவன் வெளி யிட்ட பத்திரிகைகளை வாங்காமல் விட்டதைத் தவிர வேறொன்றும் அவனை வாட்டியதில்லை. ஆனால் வாழ்க்கையின் வறுமையை எவ்வளவு ஆழமானது என்பதை அறிய, அதன் அடிவாரத்திற்கே இறங்கியவன் மார்க்ஸ். மனைவி மிகுந்த செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவள், என்றாலும் ஏழ்மை தந்தையோ வழக்கறிஞன், என்றாலும் வறுமை. சில பத்திரிகை களுக்கு எழுதியதில், அதாவது அமெரிக்காவிலிருந்து வெளி வந்த ஒரு சில பத்திரிகை முதலாளிகள் அனுப்பிய சிறிய தொகைதான் அவனது வருமானம்.

நான்கு குழந்தைகளைப் பெற்றெடுக்கின்ற வரையில் வறுமை. நாம் படித்த வரலாற்றில் இவ்வளவு வறுமையை அனுபவித்தவர்கள் யாரையும் காணோம். அறிஞன் ரூசோ கூட, தான் பெற்ற ஐந்து குழந்தைகளை மருந்துவ மனையிலும், அனாதைவிடுதியிலும் விட்டுவிட்டு வந்தான் என்று படிக் கிறோம். அவனுக்குக் கூட இவ்வளவு வறுமை வந்ததில்லை. எந்தத் தொழிலாளர்களின் வறுமையைப் போக்க வந்தானோ அந்த வறுமைகள் எல்லாம் சேர்ந்து இவனைப் பற்றிக்கொண்ட தென்றே சொல்லலாம்; தன் மெல்லிய கரங்களால் பலர் கண்ணீரைத் துடைத்தான். ஆனால் இவன் கண்ணீரைத் துடைக்க ஒருவனே முன்வந்தான். அவன்தான் சீமான் மகனாயிருந்தும், மான்செஸ்டரில் ஒரு நூற்பாலையின் சொந்தக் காரனாயிருந்தும் கருணை உள்ளம் கொண்ட ஏஞ்சில்ஸ்.

கார்ல்மார்க்ஸ் தந்தையின் பெயர் ஹிர்ஷெல், தாய் ஹென்ரிட்டே. இவன் ஒரு யூதன். வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தான். அதில் முன்னேற்றமில்லை, காரணம் இவன் ஒரு கைதேர்ந்த வழக்கறிஞனாயிருந்தும் யூதன் என்ற ஒரே காரணத்தினால் கட்சிக்காரர்கள் நிறைய வழக்குகளைக் கொண்டுவருவதில்லை. ஏனெனில் யூதர்களுக்கு எந்த நாட்டி லும் எந்த நாளிலும் தொல்லைதான். யூதர்கள் என்றாலே ஒரு

வெறுப்பு. அதனால் இவர்கள் பின்பற்றி வந்த யூத மதத்தின் மேல் ஒரு வெறுப்பு. இதன் காரணமாகவும், தன் தொழில் சரியாக நடக்காமல் குடும்பம் கஷ்டப்படுகிறது என்ற கருத்தி லும் யூத மதத்தைவிட்டு கிருத்துவ மதத்தைத் தழுவிவிட் டான். மனைவி இவனைப் பின்பற்றி ஓராண்டு கழித்து கிருத்துவ மதத்தைத் தழுவினாள். மதம் மாறிய பிறகு ஹெர்ஷெல் தன் பெயரை ஹென்றி மார்க்ஸ் என்றும், மனைவி ஹென்ரிட்டே என்றும் மாற்றிக்கொண்டார்கள். இப்படி இவர்கள் கிருத்து வத்தைத் தழுவிய பிறகு தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்டு எல்லா வசதிகளும் பெற்று நிம்மதியாக வாழ்ந்து வந்தனர்.

1818ம் ஆண்டு, மே திங்கள், ஆறும் நாள் இரவு 1–30 மணிக்கு மார்க்ஸ் பிறந்தான். கூடப் பிறந்தவர்கள் மொத்தம் ஏழுபேர். இரண்டு ஆண்கள், ஐந்து பெண்கள். இவர்களில் நான்கு பேர் சிறுவயதிலேயே இறந்து விட்டார்கள். எஞ்சி யிருந்த மூன்று சகோதரிகளுக்கும் திருமணமாகி குடும்பம் நடத்தப் போய்விட்டார்கள். பிறகு மகனைப் பற்றிய கவலை பிறந்தது. மகனும் தன்னைப்போலவே வழக்கறிஞர் தொழிலை நடத்தி, பேரும் செல்வமும் சம்பாதிப்பான் என்று நம்பியிருந் தனர். ஆனால் மார்க்சின் எண்ணம் வேறாயிருந்தது. இவனைப் பள்ளியில் சேர்த்தபோது யாருக்கும் அடங்காத முரடனாயிருந் தான். சுறுசுறுப்புள்ளவனாகவும், பிடிவாதக்காரனாகவும் இருந் தான். ஆனால் இவனுக்கு சிறுவயதிலிருந்தே கவிபாடும் திறமை யிருந்தது என்று தெரிகிறது. ஏனெனில் இவனுடைய பிள்ளை களைக்கூட சில நேரம் கவியின் மூலமே திட்டுவானாம். இலத்தீன், கிரேக்க மொழி, பிரஞ்சு மொழி ஆகியவைகளைக் கற்றுத் தேறினான்.

ஒருசமயம் அவனை, 'ஓர் இளைஞன் ஏதாவதொரு தொழிலுக்குப் போகவேண்டுமென்று எண்ணுவதற்கு முன், 'அவன் மனதில் உதிக்கும் எண்ணங்கள்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதும்படி பணித்திருந்தார்கள். அவன் எழுதிய கட்டுரையைப் படியுங்கள்.

"நாம் எந்தத் தொழிலுக்குத் தகுதியுடையவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, அந்தத் தொழிலில் நாம் அனேகமாக நுழையமுடியாமல் இருக்கலாம். ஏனென்றால், நமக்கும் சமூகத்திற்கும் எந்தவிதமான தொடர்பு இருக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதற்கு முன்பே அது உறுப் பெற்று விடுகிறது."

இதைக் கண்ட ஆசிரியர்கள் வியப்படைந்து இவனை வாயார வாழ்த்தினார்கள். இந்தக் கருத்துக் கொண்ட பெரிய வர்களே அங்கிருந்தார்கள். பிறகு உயர்தரக் கல்வி பயில்வதற் காக, பான் கலாசாலையில் சேர்ந்து சட்டத்தைப் படிக்கத் துவங்கினான். தந்தை ஏதோ வற்புறுத்துகிறாரே என்று அதைப் படித்தானே தவிர நாட்டம் அதில் செல்லவில்லை. அங்கே இருந்த சில சங்கங்களில் சேர்ந்துகொண்டான். அங்கே குடிகார சங்கம் என்று ஒன்று இருந்தது. அதில் உறுப்பினனாகச் சேர்ந்து விரைவில் அதன் தலைவனுமாகிவிட்டான். மதுபானத்தை ஒரு சொட்டாவது சுவைக்காமலிருக்க மாட்டான். ஒருநாள் அதிக மாகக் குடித்துவிட்டு தெருவில் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட தால் ஒருநாள் சிறையில் தள்ளப்பட்டான். இதையறிந்த தந்தை, அவன் பான் கலாசாலையிலிருந்தால் அதிகமாகக் கெட்டுப்போவான் என்றெண்ணி இவனை பெர்லின் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்குபோய்ச் சேர்ந்தான்.

கோடை விடுமுறையை தன் சொந்த ஊரில் கழிப்பதற் காக அங்கே சென்றிருந்தபோது, பக்கத்து வீட்டிலிருந்த ஜென்னி என்பவளைக் காதலித்தான். ஜென்னி அழகுள்ளவள். இவன் அழகில்லாதவன்; ஆனால் அறிவாளி. இங்கே அழகும் அழகும் காதலிக்கவில்லை; அழகும் அறிவும் காதலித்தது என்று சொல்லலாம்.

அவனுக்கு வயது 18. ஜென்னியின் வயது 22. குடும்ப அந்தஸ்தில் ஜென்னி குடும்பத்தைவிட இவன் குடும்பம் அவ்வளவு சிறப்பானதல்ல. இன்னும் அவ்வளவு அழகுள்ள

அதாவது ஜென்னியை திருமணம் செய்து கொள்ளத்தக்க அழகனுமல்ல. ஆனால் அந்தக் காதலர்களுக்குள் மார்க்ஸ், தான் சுயமாகச் சம்பாதிக்கிறவரையில் திருமணம் செய்துகொள்வதில்லை என்று ஏற்பட்டாயிருந்தது. அப்போது ஜெர்மனியில் ஹெகலிசம் பரவியிருந்த காலம்.

பிழைக்கும் வழி தேடவேண்டுமே என்பதற்காக ஒரு பத்திரிகையைத் தொடங்கினான். இந்த ஊர்தான் ஜெர்மனியிலே செழிப்புள்ள நகரம். பத்திரிகையும் நின்றுவிட்டது. அதன்பிறகு பிரான்சிலிருந்து நாடுகடத்தப்பட்டு, பக்கத்திலிருந்த மிக நாற்றம் வீசும் சிற்றூருக்குக் குடியேறினான். இதற்கிடையே என்ன செய்வதென்று தெரியாமல் கடைசியில் லண்டனுக்குச் சென்று குடியேறினான். அதுதான் இவன் குடும்பத்திற்கு நிரந்தரமான இடமாக அமைந்துவிட்டது. நியூயார்க் பத்திரிகைக்குக் கட்டுரைகள் அனுப்பிக் கொண்டிருந்தான். அங்குதான், தான்எழுதப்போகும் காபிடல் என்ற நூலுக்குக் குறிப்புகளைச் சேகரிக்க நூல்நிலையங்களுக்குச் சென்று, காலை முதல் இரவு வரை அங்கேயே கழித்தான்.

ஏஞ்செல்ஸ் என்பவன் நண்பனாயிருந்து சில உதவிகளைச் செய்துகொண்டிருந்தான். 1873ம் ஆண்டு ஏஞ்செல்ஸ் மனைவி இறந்துவிட்டாள். இதையறிந்த மார்க்ஸ் அவனுக்கு ஒரு அனுதாபக் கடிதம் எழுதி, அதில் தன் வறுமையைச் சொல்லியிருந்தான். ஏஞ்செல்ஸ் வருத்தப்பட்டான். இதனால் ஏஞ்செல்சின் மனப்புண்ணை மாற்றுவதற்காக மறுபடியும் எழுதும்போது "நான் வருந்துகிறேன். துக்கம் விசாரிக்க எழுதும்போது என் வறுமையைச் சொல்லி எழுதியிருக்கக் கூடாது" என்று வருத்தம் தெரிவித்துக் கொண்டான். இதனால் இருவர் நட்பும் குறைந்து விடவில்லை.

வறுமையின் காரணமாக தட்டுமுட்டு சாமான்களை அடகு வைத்திருக்கிறான். குழந்தைகளின் விளையாட்டு பொம்மைகளைக்கூட விற்றிருக்கிறான். இறந்துவிட்ட குழந்தைக்கு ஒரு சவப்பெட்டி வாங்குவதற்குக் கூட பணமில்லாமல் இவன்

மனைவி தெரிந்தவர்களிடம் மூன்று பவுன் கடன் வாங்கியிருக்கிறாள். பால் வாங்கக் காசில்லாமல் தானே மார்பு வலியையும் முதுகு வலியையும் தாங்கிக்கொண்டு பால் கொடுத்திருக்கிறாள் குழந்தைகளுக்கு ஜென்னி. என்றாலும் இவ்வளவு வறுமையிலும் கணவனைப் போற்றவே செய்தாள்.

1847ல் லண்டனில் நடந்த மாநாட்டில் மார்க்சும் ஏஞ்செல்சும் கலந்துகொண்டனர். ஏஞ்செல்ஸ் தயாரித்த அறிக்கை அவ்வளவு சரியாயில்லை என்று, ஒரு அறிக்கையை மார்க்ஸ் தயாரித்தான். அதுதான் கம்யூனிஸ்ட் மானிஃபெஸ்டோ (Communist manifesto) என்பது. இந்த அறிக்கை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

மக்கள் சமூகத்தின் வரலாறு இது. சமூகம் போராட்டமாகவே இருக்கிறதென்றும், ஒருவரையொருவர் அடக்கியாள்வதற்காகவே இருக்கிறதென்றும், இதன் மூலம் தற்காலத்து முதலாளி, தொழிலாளர் கூட்டம் எப்படி வளர்ச்சியடைந்தது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. இதனால் பழையகாலத்தில் தொழில்கள் எல்லாம் நசுக்கப்பட்டுப் போகின்றன. புதிய தொழிகள் தோன்றி பழைய தொழில்களை அப்புறப்படுத்தி விடுகின்றன. இந்தப் புதிய தொழில்களை புகுத்துவதாலேயே அந்தந்த நாகரிக நாடுகளும் இருப்பதா இறப்பதா என்ற கேள்வி பிறக்கிறது. இந்தப் புதிய தொழில்கள் அந்தந்த நாட்டு மூலப்பொருள்களை பயன்படுவதில்லை. வெகுதூரத்திலிருந்து வரவழைத்துப் பயன்படுத்துகின்றன. அப்படியே உற்பத்தியான பொருள் உள்நாட்டிலேயே செலவாவதில்லை. தூர நாடுகளுக்குச் செல்கின்றன. இதனால் ஒரு நாடு, மற்ற நாடுகளை நம்பி வாழவேண்டியிருக்கின்றது. இந்த உற்பத்தி முறையில் காட்டுமிராண்டி நிலையிலிருந்த மக்கள் நாகரிகமடைகிறார்கள். நகரம் சிறப்படைகிறது. கிராம நாகரிகம் நாளாவட்டத்தில் ஒடுங்கிவிடுகிறது. உற்பத்திப் பொருள்கள், சாதனங்கள் எல்லாம் ஒருசிலர் கையில் சேர்ந்து விடுகின்றன. அவர்கள் அவற்றைத் தங்கள் சொந்த நலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் அதிகப் பொருள்கள்

உற்பத்தியாகின்றன. போட்டி ஏற்படுகிறது. அதனால் முதலாளித்துவத்திற்கு அழிவு காலமும் தொடங்குகிறது. அதனால் தொழிலாளர் வர்க்கம் என்ற ஒன்று தனியாகத் தோன்றுகிறது. பல ஊர்களில் சிதறிக்கிடந்தவர்கள் ஒரு நகரத்தில் தோன்றுகிற பெரிய பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாகத் திரளுகிறார்கள். தங்கள் உரிமையைக் கேட்கிறார்கள். முதலாளிகள் தர மறுக்கிறார்கள். இதனால் அடிக்கடி போராட்டங்கள் நடக்கின்றன.

இரண்டாவது பகுதி: பொதுவுடைமை வாதிகளுக்கும் மற்றத் தொழிலாளர்களுக்கும் இருக்கின்ற தொடர்புகள். பொதுவுடைமையின் நோக்கங்கள் அவைகளுக்குக் காட்டப் படும் எதிர்ப்புகளுக்குத் தரப்படும்விளக்கங்கள், தொழிலாளர் கள் கைக்கு அதிகாரம் வந்தால் என்னென்ன சட்டதிட்டங் கள் செய்வார்கள் என்று கூறப்படுகிறது.

மூன்றாம் பகுதி: அபேத வாதம் என்றும் பொதுவுடைமை என்றும் சொல்லிக்கொண்டு தோன்றியுள்ள பல போலி சங்கங்களுக்கும், நூல்களுக்கும் மறுப்பு கூறப்படுகின்றன. பொதுவாக ஒரு சமூகத்தின் பொருள் உற்பத்தி முறையை ஒட்டியே அரசியல் அமைப்பு இருக்கின்றது. முரண்பட்ட பல சக்தியின் போராட்டத்திற்கிடையே ஆக்கம் அழிவுஇவைகளைக் கொண்டே சமூகம் வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. முதலாளித்துவம் தன்னையே அழித்துக் கொள்ளும் சக்தியை தன்னிடத்திலேயே கொண்டிருக்கிறது. தொழிலாளர்களின் ஆதிக்கத்தின் கீழ்தான், சமூகப் பிரிவினையில்லாத சமுதாயம் அமையும். இவைபோன்ற மார்க்சியத்தின் அறிக்கையைத் தான் பொதுவுடைமைத் தத்துவம் என்று வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

## ஹெகலிசம். (HEGALISM)

இங்கே ஹெகல் என்பவன் மக்களுக்கு சுட்டிக்காட்டியிருந்த சில கருத்துக்களை சொல்லியாக வேண்டும். ஏனெனில்

அன்றிருந்த ஜெர்மன் மக்கள் எதற்கெடுத்தாலும் ஹெகலி சத்தை மேற்கோள் காட்டுவார்கள்.

**அதன் தத்துவம் :** அவனுடைய ஆராய்ச்சியில் நாட்டைப் பற்றி அவன் வெளியிட்டிருந்த கருத்துக்கள், மனிதன், அவனுடைய மனம், கடவுள், நாடு எண்ணத்தின் வளர்ச்சி, பொருள்களின் வளர்ச்சி, காரண காரிய தொடர்பு ஆகிய எல்லாம் அடங்கியிருந்தது. நாட்டைப் பற்றி அவன் வெளியிட்ட கருத்துக்கள் அக்காலத்து ஜெர்மனியின் கொடுங் கோலாட்சியை ஆதரிப்பதாய் இருந்தது. அதாவது அரசு என்பது தெய்வீகத் தன்மை வாய்ந்தது. அது மக்களிடத்தி லிருந்து பிறக்கிறதென்ருலும் அதற்கென்று சக்தி ஒன்று தனியாக உண்டு. அந்தச் சக்திக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது மக்களின் கடமை. ஏனெனில் அது செய்கிற எதுவும் தவருயிருக்காது. இந்தக் கருத்துக்கள் எந்த எதேச் சாதிகார அரசுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்குமல்லவா. எது இப்போதிருக்கிறதோ அது தேவையானதால்தான் இருக்கிற தென்றும், அதனல் அதுதான் நியாயம் என்றும் முதியவர் களான தேசபக்தர்கள் கூறிஞர்கள். எது நியாயமோ அதுவே தான் இருக்கவேண்டுமென்று இளைஞர்கள் கூறிஞர்கள். அத ஞல் முதிய ஹெகலியர்கள் என்றும் இளைய ஹெகலியர்கள், இருவகையினர் இருந்தனர். முதியவர்கள் உள்ளதை உள்ள வாறே நிலைநாட்டப் பார்த்தார்கள். இளைஞர்கள் உள்ளதை மாற்றப் பார்த்தார்கள். மார்க்ஸ் இளைஞர் கட்சியில் சேர்த்து கொண்டான். ஆனல் பிந்திய கார்ல் மார்க்சின் கருத்துக்கள் ஹெகலிசத்தின் பக்கம் சாயாமல், தொழில், தொழிலாளர் மூலதனம், உழைப்பு, பங்கீட்டுமுறை ஆகியவைகளையே மைய மாகக் கொண்டு ஓடின. படிப்படியாக திருத்தலாம் என்ற நோக்கத்தோடு இளைஞர் ஹெகலிசகட்சியில் சேர்ந்திருக்கலாம்.

இதுவரை திருமணம் செய்துகொள்ளாமலே இருந்த இவனுக்கு, இவனுடைய அழகில்லாத உருவத்தையே திருமணம் செய்துகொள்ளுவேன் என்று பிடிவாதமாகவும், காதலியாகவும் இருந்த ஜென்னிக்கும், 1843 ஆண்டு ஜூன்

மாதம் 13ம் நாள் கிராஷியனுக் என்ற ஊரில் திருமணம் நடந்தது. இவன் இலக்கியத்தில் டாக்டர் பட்டம் பெற்றிருந் தும், கொள்கைப் பிடிப்பும் சதா சிந்தனையிலும் மூழ்கியிருந்த தால், ஒரு நிரந்தரமான வேலையைத் தேடாமலேயே பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியனுப்புவதும், ஆங் காங்கே சங்கங்களை தோற்றுவிப்பதும், அவற்றிற்குத் தலைமை வகிப்பதும், அகில உலக தொழிலாளர் மகாநாடு கூட்டுவதும், அரசாங்கத்தால் தடைசெய்யப்படுவதும், பல பத்திரிகைகளைத் தொடங்குவதும், ப்ரஸ்ஸல்ஸ், பிரான்சு முதலான ஊர்களில் சிறு குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு அலைவதும், இவன் சொந்தப் பொருளையும் ஜென்னியின் பொருளையும் செலவழிப் பதும், மிகக்கொடிய வறுமையால் வாடுவதும், குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்றாக இறப்பதும், அவற்றைப் புதைக்கக்கூட சவப்பெட்டி வாங்கமுடியாமல் தவிப்பதுமாகவே காலம் கடத்தி விட்டான். ஆயினும் எந்த நோக்கம் ஈடேற வேண்டு மென்று நினைத்தானோ அவற்றிற்கு நேரம் கிடைத்த போதெல்லாம் குறிப்புகள் எடுத்திடத் தவறியதேயில்லை.

கார்ல் மார்க்ஸ் லண்டனுக்கு வந்து பன்னிரெண்டு ஆண்டு கள் ஓடிவிட்டன. அந்தக் காலத்தில்தான் இவனுடைய படைப் பாகிய 'காபிடல்' என்ற நூல் தோன்றியது. இதற்காக இவன் படித்த நூல்கள் சுமார் ஆயிரத்தி ஐநூறுக்கும் அதிகமாகவே இருக்கும். .876ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ம் நாள் காபிடல் அச்சாகி முதல் பிரதி வெளியாகிவிட்டது. அன்று விடியற் காலை இரண்டு மணிக்கு ஏஞ்செல்ஸுக்கு கீழ்வருமாறு எழுதினான்.

அன்புள்ள ஏஞ்செல்ஸ்,

இந்த முதல்பாகம் முடிந்தது. இதற்கு நீ ஒருவனே காரணம். என் நன்றியை ஏற்றுக்கொள். எனக்காக நீ தியாகம் செய்திராவிட்டால், இந்த நூலின் மூன்று பாகங்களை யும் நான் தயாரிக்கவே முடியாது. வந்தனத்தோடு உன்னை

ஆலிங்கனம் செய்து கொள்கிறேன். என் அரிய உண்மையான நண்பனே, உன்னை வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
கார்ல் மார்க்ஸ்
16–8–1867

மற்ற இரண்டு பாகங்கள் மார்க்ஸ் இறந்தபிறகு ஏஞ்செல்ஸினால் வெளியிடப்பட்டன, மார்க்ஸ் படித்துக்கொண்டிருந்த அறைவெளிச்சம் நிறைந்த அறை. தோட்டத்தின் பக்கமாக ஒரு ஜன்னல் இருந்தது. அதற்கு எதிர்புறத்தில் ஒரு கணப்புச்சட்டி. அதன் அருகில் புத்தக அலமாரிகள். அதன்மேலே பத்திரிகைக் கட்டுகள், சுவர்ப்பலகையின் மீது புத்தகங்கள். பக்கத்தில் ஒரு மேசை. அதில் சுருட்டுத் துண்டுகள், தீப்பெட்டிகள். போட்டோ படங்கள், குறிப்பு எழுதும் சிறியசிறிய நோட்டுப் புத்தகங்கள். இவற்றை ஒழுங்காக அடுக்கி வைப்பதற்கும் விடமாட்டார், இதுதான் அவர் ஆராய்ச்சி செய்த இடம். கம்யூனிஸ்ட் அறிக்கையில் சொன்ன பத்து திட்டங்கள் வருமாறு:—

1. நிலத்தின் மீதுள்ள தனிச் சொத்துரிமையை ரத்து செய்துவிடல். நிலவரிப் பணத்தைப் பொதுக் காரியங்களுக்காகப் பயன்படுத்துதல்.

2. அதிகமான அல்லது படிப்படியாக உயர்வுடைய வரி விதித்தல்.

3. பரம்பரை, பாத்யதை, சொத்து என்பவற்றை ரத்து செய்தல்.

4. நாட்டைவிட்டு வெளியேறியவர்கள், நாட்டுக்கு விரோதமாகக் கலகம் செய்கிறவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்.

5. லேவாதேவி தொழிலை அரசாங்கத்தின் சொந்தத்தின் கீழ் கொண்டு வருதல். இதற்காக அரசாங்கத்தின் மூலதனத்தைக் கொண்டு ஒரு பாங்கி ஏற்படுத்துதல்.

6. போக்குவரத்துச் சாதனங்களை அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்படுத்துதல்.

7. தொழிற்சாலைகள், பொருள் உற்பத்திச் சாதனங்கள் முதலியவற்றை அரசாங்க மயமாக்கி அவற்றைப் பெருக்குதல். தரிசு நிலங்களைச் சாகுபடிக்குச் கொண்டுவருதல், பொதுவான ஒரு திட்டம் வகுத்து, அதன்படி நிலத்தைப் பயன்படுத்திப் பலன்பெறுதல்.

8. எல்லோரும் வேலைசெய்யக் கடமைப்பட்டவர்கள் என்ற விதியை அனுசரித்து தொழிற் சேனை ஒன்றை நிறுவுதல்.

9. விவசாயத்தையும் உற்பத்தித் தொழில்களையும் ஒன்று படுத்துதல். மெதுவாக நாட்டுக்கும் நகரத்திற்குமுள்ள வேற்றுமையை ஒழித்தல். இதற்கு அனுசரணையாக மக்களைக் கிராமங்களில் குடியேறச் செய்தல்.

10. அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் எல்லா குழந்தை களுக்கும் இலவச கல்வி அளித்தல். பிள்ளைகளைத் தொழிற் சாலைகளில் அமர்த்தி வேலை வாஙகுவதை ஒழித்தல். கல்வியை யும் பொருள் உற்பத்தியையும் ஒன்று படுத்துதல்.

இந்த முறைதான், ரஷ்யாவில் லெனின் அவர்களால் கொண்டுவரப்பட்டு நடைமுறையில் இருக்கின்றது. இன்னும் விரிவாக விளக்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் கார்ல் மார்க்சின் காப்பிடலைப் படித்துத்தான் தெரிந்து கொள்ளவேண்டும்.

மார்க்சும், ஜென்னியும் எந்தவிதமான வாழ்க்கை வாழ்ந் தார்கள் என்பதை ஜென்னியின் வாயால் கேட்போம். "ஒவ் வொரு நாளும் எங்கள் வாழ்க்கை எப்படி நடந்து கொண்டி ருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு நாள் வாழ்க்கையை மட்டும் சொல்கிறேன்."

"குழந்தைக்குப் பால் கொடுக்க ஒரு தாதியை அமர்த்திக் கொள்வோம் என்றால் அதற்கு இங்கு செலவு அதிகம். ஆகை யால் என் மார்பு வலியையும் பொருட்படுத்தாது, முதுகு வலி

யையும் பொறுத்துக்கொண்டு நானே பால் கொடுத்து வந்தேன். அந்தக் குழந்தை எவ்வளவு என்னிடம் பால் குடித்ததோ அவ்வளவு துக்கத்தையும் சேர்த்துக் கொடுத்து விட்டு இறந்துவிட்டது. ஒரு நாள் தவறுமல் கடன்காரர்கள் வந்து கொண்டேயிருப்பார்கள். என் குழந்தைகள் அவர் வீட்டிலிருந்தால்கூட இல்லை என்று சொல்லிவிடும். எல்லா வற்றையும், படுக்கை முதற்கொண்டு விற்றுக் கடன்காரர் களுக்குக் கொடுத்துவிட்டு தரையில் கடுங்குளிரில் படுத்தோம். இதையெல்லாம் அறிந்த ஏஞ்செல்ஸ் 300 பவுன்கள் அனுப்பிய பிறகு ஒரு பெருமூச்சே வந்தது இதுதான் எங்கள் வாழ்க்கை." உலகத் தொழிலாளர்களை வாழவைக்கத் தன் வாழ்வை சிதைத்துக்கொண்ட மாபெரும் சிந்தனையாளன் கார்ல் மார்க்ஸ்.

ஜென்னி 1883 சனவரி 11ம் நாள் இறந்துவிட்டாள். 1883 மார்ச் திங்கள் 14ம் நாள் உலகப் பேரறிஞன் மார்க்ஸ் கண்களை மூடிவிட்டான்.

மார்ச் 13ல் சிந்திப்பதை நிறுத்திவிட்டான். 'கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். அந்த இரண்டே இரண்டு நிமிடங்கள் தான் தனியாக விட்டிருந்தோம். அந்த இரண்டே நிமிடத்திற்குள் ஆவி பிரிந்துவிட்டது' என்றனர் தோழர்கள்.

ஜெர்மனியில் பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு மக்களிடை யில், பிறர் உழைப்பில் சிலர் உன்னதமான வாழ்வு வாழ்வதா? என்ற எண்ணம் மக்களிடையே சிறுசிறு சலசலப்பை உண்டாக்கி வந்தது.

அந்த விளக்கில் எண்ணெய்யூற்றி ஒளி பெரும் முறையில் முதன் முதலில் தோன்றியவன் விச்கால் என்பவன். அவன் ஒரு துண்டு அறிக்கையை வெளியிட்டிருந்தான்.

அதில் உள்ளது: "எல்லா செல்வங்களுக்கும் மூலமாயிருப் பதுதான். ஆனால் லட்சக்கணக்கான மக்களுக்கு உழைப்பு, உழைக்கும் சக்தியைத் தவிர்த்து வேறு எவ்வித மூலதனமு

மில்லை. பணக்காரர்கள் எல்லாவித சலுகைகளும் அனுபவிக்கிறார்கள். உழைப்பாளிகளோ ஒன்றுமில்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் உழைப்பாளிகள் எப்பொழுதும் போராடிக் கொண்டே இருக்கவேண்டியதிருக்கிறது. பணக்காரர்களுடைய நிலைமை எவ்வளவுக்கெவ்வளவு சிறப்படைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உழைப்பாளிகள் நிலைமை மோசமடைகிறது.''

வாழ்க அவன் திருப்பெயர்

---

குறிப்பு: ''இதனால்தான் உழைப்பில்லாமல் மூலதனம் இயங்க முடியாது. ஆனால் மூலதனம் இல்லாமல் உழைப்பு இயங்கமுடியும். இதை நாட்டுப்புறங்களிலே காட்டு பகுதியிலே விறகு வெட்டி கொண்டு வருபவர்களிடம் காணலாம். அவர்களுக்கு உழைப்பு தான் மூலதனமே தவிர, வேறுமூலதனம் தேவையில்லை. வேண்டுமானால் ஒழுங்கான அரசாங்கம் அமைந்த பிறகு, காட்டிலகா என்ற ஒன்று தோன்றிய பிறகு, காட்டில் கட்டை வெட்டுபவர்கள் பத்து இருபது காசுகள் செலுத்திவிட வேண்டும் என்று சொல்லப்படலாம். ஏனெனில் கண்டபடி வெட்டவிட்டால் விலையுயர்ந்த சந்தன மரங்களையும் தேக்கு மரங்களையும் வெட்டி விட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தின் காரணம் மாத்திரமல்ல, அரசாங்கத்தின் பொருள் தேவைக்கும் அது ஒரு வருவாயாக இருக்கலாம். ஏடுகளில் பொதுவுடைமை நாடுகளைத் தவிர மற்ற நாடுகள் எல்லாம் பொருளாதார அடிப்படையில் இயங்குகின்றன அல்லவா? அதனால்தான் அமெரிக்காவில் நடப்பதை Capitalistic Democracy முதலாளித்துவ ஜனநாயக நாடு என்று அழைக்கிறோம்.

டெமாக்ரசி என்பது கிரேக்க வார்த்தை. டெமா— என்றால் மக்கள் என்று பொருள். கிரசி—என்றால் எண்ணம் என்பது. மக்களின் எண்ணபபடி அமைகிற ஆட்சி டெமாக்ரசி என்பதாகும்.

# 5

## கரிபால்டி

1807ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4ம்நாள், நைஸ் என்னுமிடத்தில், இத்தாலிய தாய் தந்தையருக்குக்குத் தனையனாகப் பிறந்தார் கரிபால்டி. அப்பொழுது இத்தாலி பிரான்சு நாட்டின் அரவணைப்பில் இருந்து வந்தது. கரிபால்டி ஏழு வயது சிறுவனாக இருந்தபொழுது, இத்தாலி அந்நியர்களால் பல்வேறு துண்டங்களாக்கப்பட்டு, ஆளப்பட்டு வந்தது. போப்பும், அவரது மத குருக்களும் மக்களை அறியாமை என்னும் இருளில் மூழ்கடித்திருந்தார்கள். ஆச்சிபீடத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்தி வந்த மதகுருமார்களுக்கு விரும்பத் தகாத செயல்களில் ஈடுபட்டோரையும், தன்னுரிமை வேண்டி துணிந்து பேச முயல்வோரையும் கண்காணிப்பதற்கென இரகசியப் படை, தன்னுடைய ஈனச்செயலை ஜனநாயகத்திற்கெதிரான சதிவேலையில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தது.

கரிபால்டியின் தாய் தந்தையர் கடலோரத்தில், வாழ்க்கையின் வரவுக்கும் செலவிற்கும் இடையே உழன்று, வாழ்ந்து வந்தனர். கரிபால்டியோ பள்ளியை மறந்து, கடனாகப் பெற்ற துப்பாக்கியுடன் மலைகளில் வேட்டையாடுவதும், கடற்கரையில் நங்கூரமிட்டுள்ள கப்பல் மாலுமிகளுடன் வார்த்தையாடுவதுமாகக் காலங்கழித்துவந்தான்.

பள்ளி வாழ்க்கை கசந்தது. ஜெனேவா சென்று பொருள் ஈட்ட வேண்டும் என்ற எண்ணம் இளம் வயதிலேயே உதித்தது. ஒரு படகை எடுத்துக்கொண்டு தன் நண்பர்களுடன் தாய் தந்தையருக்குத் தெரியாமல் ஜெனேவாவை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டான். ஆனால், ஒரு பாதிரி தந்த தகவலின் படி, அப்பயணம் கரிபால்டியின் தந்தையால் தடுக்கப் பெற்று, கரிபால்டி சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

காலம் அவனைக் கப்பலில் பணியாற்றும் பையனாக ஆக்கியது. பல பெரிய துறைமுகங்களைக் காணும் அரிய வாய்ப்பினை இதனால் பெற்றான். ஓடிசா, ஜிப்ரால்டர், கனரீஸ், கான்ஸ்டாண்டி நோபிள் போன்ற பெரிய துறைமுகங்களைக் காணும் வாய்ப்பையும், அவன் தன் தந்தையின் கப்பலில் டைபர் நதியில் சென்றுகொண்டிருக்கும்போது, ரோம் நகரத்தைக் காணும் வாய்ப்பினையும் பெற்றான். ரோம் நகரத்தை கண்டதும் தன் மனதில் தோன்றிய எண்ணத்தை, பிற்காலத்தில் கரிபால்டி எழுதுகிறான்: 'என்னுடைய இளம் உள்ளத்தில் தோன்றிய கற்பனையாக, வருங்காலத்தில் ஒருங்கிணைந்த இத்தாலியின் தலைநகராக ரோமைக் கண்டேன்' என்கிறான். ரோம் நகரமே இதாலியாகும்.

பிறகு இதாலியின் தனி உரிமைக்காக, இதாலிய நாட்டுப் பற்றுகொண்ட, தியாகிகள் கொண்ட யங்இடாலி என்ற சங்கம் இயங்கி வந்தது அச்சங்கத்தில் ஒரு அங்கத்தினராக கரிபால்டி சேர்ந்து, இதாலியின் ஒருங்கிணைப்பிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான்.

தூய உள்ளமும், நாட்டைச் சுதந்திர நாடாகக் காண வேண்டும் என்ற உயர்ந்த எண்ணமும் கொண்ட, நாட்டின் அமைதியைக் கெடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாடு கடத்தப்பட்டு, மார்சேல்ஸ் என்னுமிடத்தில் வாழ்ந்து வந்த மாஜினியைக் காணச் சென்றான். தாகத்தோடு இருக்கும் ஒருவன் நீர் ஊற்றைநோக்கிச் செல்வதைப் போல, நாட்டின்

விடுதலைக்காக பாடுபடும் வழிகாட்டியை நாடிச் சென்றேன் என்று கூறுகிறான் கரிபால்டி. ஜோசப் மாஜினியை தன் நண்பராகவும், ஆசானாகவும் கரிபால்டி கருதினான். நம்மைச் சுற்றி யாவரும் உறங்கிக்கொண்டிருக்கும்பொழுது, மாஜினி மட்டும் தான் விழிப்புடனிருந்து நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டார் என்று குறிப்பிடுகிறான் கரிபால்டி.

இளம் இதாலியப் படை முதலில் இதாலிய மன்னனாண்ட சவாய் என்னும் நகரத்தை நோக்கி முன்னேறியது. அந்நியர்களான ஆஸ்திரியர்கள், நேப்பிள்ஸின் போர்பன்ஸ் இவர்கள் ஆண்ட பகுதிகளின்மீது படையெடுக்காமல், இதாலிய மன்னன் ஆண்ட பகுதியை படையெடுத்ததற்குக் காரணம், அம்மன்னன் மதகுருக்களின் ஆணைகளுக்குட்பட்டு, முற்போக்குக் கொள்கைகளை முளையிலேயே கிள்ளி எறியவேண்டுமென்ற ஒரே எண்ணத்தில், மக்களுக்குப் பெருந்தீங்கினை விளைவித்தான். எங்கும் உளவாளிகளின் நடமாட்டம். மாஜினி மேல் சாட்டப்பட்ட குற்றம், அவர் சிந்தனையில் ஆழ்ந்து, இரவிலே உலாவுவதும் சிந்திப்பதும் கூடாதாம்!

இப்படையெடுப்பில் கரிபால்டிக்கு அளிக்கப்பட்ட பங்கு, ஜெனோவாவை நோக்கிச்சென்று, ஜெனோவாவிலுள்ள படைகளைத் தம் பக்கம் அழைத்துக்கொள்வதுதான். ஆனால் இத்திட்டம் பலன் அளிக்கவில்லை; எதிரிப் படைகள் இவனைச் சூழந்துகொண்டன. தன்னுடைய சாமர்த்தியத்தைப் பயன்படுத்தி, பழம்விற்கும் பெண்ணின் உதவியால், விவசாயி உடையணிந்து, ஜெனோவாவிலிருந்து நைசுக்கு ஓடி, பிறகு நைசிலிருந்து பிரான்சு நாட்டை அடைந்தான். பிரான்சு நாட்டிலுள்ள மார்சேல்ஸ் அடைந்தபொழுதுதான் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும், தான் எங்கு காணப்படினும் சுட்டுத் தள்ளப்படவேண்டும் என்னும் அரசாணையை பத்திரிக்கையிலே படித்தான். முதன் முதலாகத் தன்னுடைய பெயர் பத்திரிக்கையிலே பொறிக்கப்பட்டுள்ளதை கண்டு பெருமகிழ்ச்சியடைந்தான்.

பிறகு தென் அமெரிக்காவை அடைந்தபோது, போர்த்துகீசிய ஆதிக்கத்தை எதிர்த்து, ரியோ கிராண்ட்டோ சுல் என்ற மாநிலம் கிளர்ச்சியில் ஈடுபட்டு, தன்னை ஒரு குடியரசு நாடாகப் பறைசாற்றியது. சில இதாலியர்கள் விலங்கிடப்பட்டு இழுத்துச் செல்வதைக் கண்ட கரிபால்டி, தானும் அந்தப் போரில் பங்கேற்று, அம்மாநிலத்தின் சுதந்திரத்திற்குப் பாடு பட்டான். பிரேசில் நாட்டின் கடற்கரைப் பகுதியில் கரிபால்டியின் பெயர் ஒருவித திகிலை உண்டாக்கியது. ஒரு முறை காலேகுவே கவர்னர் இவனைக் கைது செய்து, இரண்டு மணி நேரம் கைகளைக் கட்டி சிறையில் தொங்கவிட்டு சித்திரவதை செய்ததை விவரித்துக் கூற இயலாது என்று கரிபால்டியே கூறுகிறான்.

பிறகு ரியோ கிராண்ட் இராணுவத்திலிருந்து விலகி, உருகுவே தலைநகரான மாண்ட் விடியோ என்னும் நகரை அடைந்தான். இந்த மாண்ட் விடியோவில் நாட்டின் விடுதலைக்காக நாடு கடத்தப்பட்ட இத்தாலியர்களே அதிகம். இவர்களைக்கொண்டபடை ஒன்றைத் திரட்டினான். அக் கப்பற்படையின் கொடி கறுப்பு நிறமுடையது. கொடியின் மத்தியில் எரிமலை இருந்தது. இது இதாலி துயரத்தில் ஆழ்ந்திருப்பதாகவும், அதன் உள்ளத்தில் புனிதத் தீ எரிந்துகொண்டிருப்பதாகவும் விளக்குவதாக அமைந்தது.

அக் கப்பற்படையினரின் சீருடை சிகப்பு நிறமுடையது. உலகத்திலுள்ள எல்லா தங்கத்தையும் என்னிடம் கொடுத்தாலும், இந்த இதாலிய சுதந்திரப்படையை நான் அவர்களுக்கு அளிக்கமாட்டேன் என்று கரிபால்டி பெருமையோடு கூறிக்கொள்கிறான்.

இப்படை வெற்றிக்கு மேல் வெற்றியடைந்து, அதன் புகழ் ஐரோப்பாவிலும், இதாலிக்கும் பரவியது. இத்தாலியில் உள்ள நாட்டுப் பற்றுகொண்டோர் கரிபால்டியின் சேவையைப் பெரிதும் வேண்டினர்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கரிபால்டி தன் நாட்டை இழந்து, அந்நிய நிலங்களில் அலைந்து திரிவதற்குக்

காரணமாக இருந்த, கரிபால்டியின் மரண சாசனத்தை எழுதியவனே சார்லஸ் ஆல்பர்ட், கரிபால்டியின் சேவையை வேண்டினுன். கரிபால்டியை தாய் நாடு, நைஸ், கோலாகலமாக வரவேற்றது. கரிபால்டி வாய்மை தவருமல் தன்னுடைய வாளை மன்னனிடம் அளித்தான். மன்னனே, பழைய துரோகி கரிபால்டி என்ற எண்ணத்தில், கரிபால்டியை, போர் அமைச்சருடன் அனுப்பினுன். அமைச்சனே, 'பீட்மாண்டில் உனக்கு வேலை இல்லை, நீ மீண்டும் உன் கப்பற்கொள்ளைத் தொழிலை மேற்கொள்ளலாம்' என்று அறிவுரை புகட்டினுன்.

மனம் நோந்து, அவமானப்படுத்தப்பட்ட கரிபால்டி, மிலன் என்னும் மாநிலத்தை அடைந்தான். அம்மாநில அரசு கரிபால்டியை பணியில் அமர்த்தி, சரிவர ஆயுதமில்லாமலும், உடையில்லாமலும் கொண்ட, சிறிய படையைக் கொடுத்து, பெர்கமோ மீது படையெடுக்கும்படி ஆணையிட்டது. செய்தி அறிந்தவும், 3000க்கு மேற்பட்ட தொண்டர் படையினர் அவனைச் சுற்றி வட்டமிட்டனர். ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்திலிருந்து ஆஸ்டிரியாவுடன் போரிட்டான். ஆனுல் ஆஸ்டிரியப் படை இவனை தோற்கடிக்கு முன்னர், தான் எடுத்துக்கொண்ட முயற்சி மக்களின் நலன் கருதியே அன்றி வேறில்லை என்னும் எண்ணம், தன்னுடைய நாட்டு மக்களின் உள்ளத்தில் பதியுமாறு செய்தான். திடீரென்று ஜுரம் கண்டதால், கரிபால்டி தன்னுடைய படையைக் கலைத்துவிட்டு, தன் பகுதியான நைசுக்குத் திரும்பினுன். ஆனுல் ஓய்வெடுக்கும் எண்ணம் அவனுக்கில்லை.

ரோமக்னுவை படையெடுக்கு முன்னர், மக்களின் மனதை அரசிற்கு எதிராக மாற்றும் வல்லமை பொருந்திய கரிபால்டியை தடுத்து நிறுத்தினுன், போப்பாண்டவரின் அமைச்சன் ரோஸி. பிறகு அமைச்சன் ரோஸி கொலை செய்யப்பட்டதை அடுத்து, விவசாயி போல் மாறுவேடமணிந்து, கயேடா என்னுமிடத்திற்கு ஓடினுன்.

கரிபால்டியினர் ரோமை முற்றுகையிட்டனர். போர் தன்னுடைய மக்கட் புரட்சியினை மதிக்கவில்லை. எவ்வகையிலா

பது மக்களைப் பிரதிநிதிகளாகக் கொண்ட அரசு அமைய வேண்டும் என்பதற்காக, மாஜினியின் தலைமையில் சட்டம் இயற்றும் பாராளுமன்றம் கூடியது. எதிரிகள் தங்களைச்சூழ்ந்து கொண்டிருந்த நேரம். வாயிற்படியில் எதிரிகள் நின்று கொண் டிருக்கிறார்கள். நாம் அவசரமாக, ஆனால் நிலையான குடியரசை அமைக்கும் வகையில் செயல்படவேண்டுமென்றான், மாஜினி.

நோவாராவில் அடைந்த தோல்வியில், சார்லஸ் ஆல்பர்ட் முற்போக்குக் கொள்கையினை வெகு காலங்கழித்து அறிய முடிந்தது. தன்னுடைய மகன் விக்டர் இம்மானுவலுக்கு இடம் கொடுத்து, தன் முடியைத் துறந்தான். ஆஸ்டிரியாவின் தாக்குதலை பிரான்சின் துணைகொண்டு, இளவயது அரசன் பீட்மான்டை காத்துக்கொள்ள முடிந்தது. இருப்பினும் போப் ஆட்சியை நிறுவவேண்டி, கத்தோலிக்க நாடுகளுடன் சேர்ந்து ஆஸ்டிரியாவும் பீட்மாண்ட் குடியரசைத் தகர்க்கும் எண்ணத் துடன் போருக்கு ஆயத்தமாயின. முற்போக்குக் கொள்கையை உலகுக்குப் பறைசாற்றிய பிரான்சும்,லூயிநெப்பேலியனின் தீய கொள்கைகளினால், குடியரசிற்கு எதிராகவும்,போப் ஆட்சியை நிறுவவும் பாடுபட்டது. மாஜினி, கரிபால்டி, இம்மானுவல் மூன்றுவீரர்களின் தலைமையிலான படை, பிரான்சின் எதிர் பலத்தின் முன் நிற்கமுடியவில்லை. இப்போர் கரிபால்டி தலைமையில் நிகழாவிட்டாலும், லொம்பார்ட் படையுடன் சரிசமமாக நின்று, தன்னுடைய புத்திசாமர்த்தியத்துடன் சிகப்புசட்டை படைபலத்தை எதிரிகளுக்கு எடுத்தியம்பினான். இது குறித்து தன்னுடைய பழைய நண்பன் மாஜினிக்கு எழுதும்பொழுது குறிப்பிடுகிறான் கரிபால்டி:

“நான் கட்டுப்பாடு இல்லாத அதிகாரங்கள் கொண்ட சர்வாதிகாரியாகவோ அல்லது ஒரு சாதாரண சிப்பாய் யாகவோ இருக்க விரும்புகிறேனேயல்லாமல், இக் குடியரசிட மிருந்து வேறு ஒன்றும் நான் விரும்பவில்லை.

இத்தாலிய ஒருமைப்பாட்டில் அவனுக்கிருந்த அக்கறை சொல்லி முடியாது. பெரும்போர் நடந்தது. கரிபால்டியின்

சாதுரியமான போர் நடவடிக்கைகள், எதிரியைத் திக்குமுக்காட வைத்தன. எதிரிகளின் ஆணவத்தைப் பாருங்கள்: கரிபால்டி சரண் அடைந்தால் கரிபால்டிக்கு இலவசமாக அமெரிக்கா செல்ல வசதி செய்வதாக செய்தி அனுப்பினார்கள். அச் செய்திக் கடிதம் கரிபால்டியால் கிழித் தெரியப்பட்டது. என் சொந்த உயிரைப் பொருத்தவரையில் நான் யாருடனும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கில்லை: என்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தும் இத்தாலியைவிட்டு நகராது என்று கூறினான் கரிபால்டி.

பல சகோதர படையினரை ஆஸ்டியரிடம் சரண் அடையச் செய்துவிட்டு, நன்றியுள்ள 200 படையினருடன் வெனிஸ் நகரை நோக்கிச் சென்றான். அவர்களுள் 162 பேர் எதிரிகளால் மூழ்கடிக்கப்பட்டனர். கரிபால்டி தன் மனைவியைக் கையில் ஏந்திவனவனைய் கரை சேர்ந்தான். ஆஸ்டிரியர்கள் தொடர்ந்து இவர்களை எதிர்த்தார்கள். எதிரியின் படைத்தலைவன் கூறியதாவது: "தோண்டுங்கள் ஒன்பது சவக்குழிகள்; அடக்கம் செய்யுங்கள் இவர்களை" என்று கூறி சுட்டுப்பொசுக்கினான். கரிபால்டி தன் மனைவியுடன் தப்பி, ஒரு விவசாயின் கருணையினால் அவன் வீட்டில் மறைந்துகெண்டான். சேற்றைத் தவிர வேறொன்றுமில்லாத அப்பிரதேசத்தில் தண்ணீர், தண்ணீர் என்று கூறிக்கொண்டே, கரிபால்டியின் மனைவி, அவன் மார்பில் சாய்ந்து உயிர் நீத்தாள். அங்கு கூடியிருந்த, விவசாயப் பெருமக்கள், 'இவன் பேசுவதைப் பார்த்தால் கரிபால்டியைப் போலல்லவா தோன்றுகிறான்' என்றனர். தன் மனைவியை முழுமையாக அடக்கம் செய்வதையும் பார்க்க இயலாத நிலை. எதிரிகள் கண்டுவிடுவார்களோ, அல்லது குற்றமில்லா இவ் விவசாயிகள் தனக்கு உதவி செய்ததற்காக எதிரிகளால் தீங்கிழைக்கப்படுவார்களோ என்றஞ்சி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

பல்வேறு மாறுவேடங்களில் கரிபால்டியும், அவர் நண்பர் விக்கியரோவும், அநேகமாக நாற்பது நாட்கள் அலைந்து திரிந்து

மரோம என்னுமிடத்தை அடைந்தனர். அவர்களுக்கு ஒரு ரகசிய செய்தியும் படகொன்றும் காத்திருந்தது.

அரசியல் கனவுகள், நோக்கங்கள், யாவும் சீர்குலைந்து ஒரு குப்பை மேடாகிவிட்டன என்ற நிலையில், அவர்கள் நைஸ்ஸை அடைந்தார்கள். அங்கிருந்து டியூனிஸ்க்கு பயணமானுன். பிரான்சின் துர்போதனையினால், கரிபால்டிக்கு டியூனிஸ் வாழ்வளிக்க மறுத்தது. ஜிப்ரால்டரில் அந்நாட்டின் கவர்னர் கரிபால்டியை ஒரு கணமும் இருக்கக் கூடாது என்று ஆணை யிட்டான். அங்கிருந்து சொக்கட்டன் காய் கட்டத்தை விட்டு கட்டம் மாறுவதுபோல், அமெரிக்கா பயணமானுன். சில காலம் அங்கு மெழுகுவர்த்தி செய்து உற்சாகமாகக் காலத்தைக் கழித்தான்.

காலத்தை எதிர்நோக்கி இருங்கள்; இதுதான் அவன் அறிந்த பாடம். 1859ஆம் வருடம் தக்க தருணம் வந்தது.

கவூர் என்னும் ராஜதந்திரி விக்டர் இம்மானுவல் பீட்மாண்ட் பிரஜைகளின் விருப்பத்திற்கு எதிராக, இதாலியை அந்நியர்கள் ஆதிக்கச் சங்கிலியிருந்து விடுவிக்க எண்ணி, பிரான்சுடன் நட்பு கொண்டான். பிரான்சின் நட்புடன் ஆஸ்டிரியாவை எதிர்க்கப் புறப்பட்டான். டியூரினுக்கு அழைக்கப்பட்ட கரிபால்டியும் முழு ஆதரவு அளிக்க உடன் பட்டான். கவூரின் நட்பு, உண்மை நட்பு இல்லை என்பதை கரிபால்டி அறிவான். இருந்தும் நாட்டின் ஒற்றுமைக்காக 5000 தொண்டர்களுடன் (அத் தொண்டர் படைக்குப் பெயர் ஆல்ப்ஸ் மலையின் வேடர்கள் என்பதாகும்.) 'இச்சமயம் நாம் வெற்றி பெறுவது உறுதி, நான் பெருந்தலைவர்களையெல்லாம் திருப்தி படுத்திவிட்டேன்.' என்று கூறி போருக்குப் புறப் பட்டான். பீட்மாண்டின் படை 75,000. இதற்கு எதிராக ஆஸ்டிரியப்படை 2,00,000 கொண்டது. 1,60,000 போர்வீரர் கள் கொண்ட பிரெஞ்சுப் படை பீட்மாண்டிற்கு உதவி செய்ததில் மஜெண்டா, சொல்பெரிநோ என்னுமிடங்களில் நிகழ்ந்த இரண்டு போரில் வெற்றி கிட்டியது. போரில்

அடைந்த வெற்றி வாகைக்கிடையில், இதாலியை ஒரே நாடாக்கும் எந்த ஒரு நோக்கத்திற்கும், தான் உடந்தையாக இருக்கப்போவதில்லை என்று பிரான்சு அறிவித்து, தோல்வியடைந்த ஆஸ்டிரியப் படையுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு, பீட்மாண்டையும் ஆஸ்டிரியவுடன் ஒப்பந்தம் செய்யத் தூண்டியது. இவ்வொப்பந்தத்தால், கரிபால்டியின் சொந்த இடமான நைசை ஆஸ்டிரியாவுக்கு கொடுக்கும்படியாயிற்று. கவூர் தாய் நாட்டையே காட்டிக்கொடுத்துவிட்டான்; இதாலி அவனை மன்னிக்கவே மன்னிக்காது என்று முழங்கினான் கரிபால்டி.

வில்லாப்ராங்கா ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட கொந்தளிப்பு சிசிலியின் நாட்டுபற்றுள்ளோர், ஆஸ்டிரியாவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். எங்களுக்கு உங்களுடைய ஒத்துழைப்பைத் தாருங்கள் என்றனர். கரிபால்டி அவர்களுடன் ஒத்துழைப்பதை தடுக்க முயற்சித்தான். ஆயினும் விக்டர் இம்மானுவலின் முயற்சியால் கரிபால்டி, சிசிலியின் உதவிக்குச் சென்றான். 'கரிபால்டி அங்கு போவதால் நமக்கு ஏதாகிலும் நன்மை கிட்டும்; நாம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டியதில்லை. நம்முடைய தப்பான செயல்களினால் விளைந்த கேடுகளுக்குக் காரணங்களை நாமே அறியமாட்டோம்' என்று இம்மானுவல் கூறி கரிபால்டியை போகவிட்டான்.

கரிபால்டியின் படை வெறும் 1000 வீரர்களே கொண்டதாயினும், இக்காலப் பெரும்படையினையும் இகழ்ந்து பேசும் அளவிற்கு, வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு இடத்தைத் தேடித் தந்துவிட்டது.

தன்னுடைய சிறு படகுகளின் உதவியால், ஜெனோவாவிலுள்ள வில்லா ஸ்பினோலா கடற்கரையிலுள்ள இரண்டு கப்பல்களை தன்வசப்படுத்தி, அக்கப்பல்களிலுள்ள மாலுமிகளையும் தன்னுடன் சேரும்படிச் செய்தான். கரையில் பெருந்திரளான மக்கள் கும்மிருட்டில் அவனை வரவேற்றனர்.

போருக்குப் புறப்படுவதற்கு முன் தன்னுடைய மன்னனுக்கு ஒரு கடிதம் எழுதினான். "என்னுடைய கூட்டாளிகளின் தைரியத்தினாலும், தொண்டினாலும், நான் அவசியம் இந்த பயங்கரமான போரில் வெற்றிகொள்வேன்; அப்படி தோல்வியடைந்தால் நாட்டின் ஒற்றுமைக்காகவேயின்றி, தன்னுடைய சொந்த நலன் கருதி கரிபால்டி படையெடுத்தான் என்று இதாலியும், முற்போக்குள்ள ஐரோப்பாவும் ஒருகாலும் எண்ணாது என நிச்சயமாக நம்புகிறேன். நான் வெற்றியடைந்தால், என்னுடைய நாட்டிற்கு ஒரு விலைமதிக்கவொண்ணா ஒளிமிகு அணிகலனை ஈட்டித் தருவதோடு, அதையும் விரோதிகளுக்குக் கொடுத்துவிடுமாறு ஆலோசனை நல்கும் துற்புத்தி படைத்த உன்மத்தர்களின் வழியில் மீண்டும் செல்லமாட்டீர்கள் என நம்புகிறேன்." மார்சலா குடிமக்கள் கரிபால்டியை கடவுளாக போற்றி வரவேற்றனர். அந்நகர மன்றம் கரிபால்டியை அத்தீவின் சர்வாதிகாரி என்று பறைசாற்றிற்று. கரிபால்டியும் தன்னுடைய அரசனுக்காகவும், அவன் பேரிலும் அப்பட்டத்தை ஏற்றுக்கொண்டான்.

படை முன்னேற முன்னேற, குடிமக்களும் போர்வீரர்களுடன் சேர்ந்துகொண்டு, படை பெரும்படையாகத் திரண்டது. மூன்று நாள் கடும் சண்டை பாலெர்மோ தெருக்களில் நடந்தது. பாலெர்மோ கரிபால்டி வசமாயிற்று. பாலெர்மோ வெற்றிக்குப் பிறகு, பல நகரங்கள் இவன் வசமாயின. இதாலியின் பிரதான நிலப் பகுதியை எதிர்க்கும் போது, கவூரும், இம்மானுவலும் கரிபால்டியை அவ்வாறு செய்யதாபடி அறிவுறுத்தினர். கரிபால்டியை கவூரின் நயவஞ்சகச் செயல்களை அறிவான். தன் பணியினைத் தொடர்ந்து செய்தான். பல கோட்டைகள் இவன் வசமாயின; கோட்டைக்குள்ளிருந்து வெடிமருந்துகளும், துப்பாக்கிகளும் இவன் மேற்கொண்ட புனிதப் பணியில் பெரும் துணையாக இருந்தன. இவனுடைய படைக்கஞ்சி பெர்டினன்டோ தலைநகரை விட்டு கவூர் ஓடினான். சிசிலியில் இறங்கிய நான்கு மாதங்களில் நேப்பிள்ஸ் கரிபால்டி வசமாயிற்று. எதிரிகள் ஒழிந்தனர், சரியாக பகல் 3

மணியளவில் தன்னுடைய வாளை, அரசன் விக்டர் இம்மானு வலின் பிரதிநிதி பர்சனோவிடம் ஒப்படைத்தான். கரிபால்டி யின் பேருதவியால் விக்டர் இம்மானுவல் ஒருங்கிணைந்த இதாலியின் பேரரசனுன்.

கவூரின் துற்போதனையால், கரிபால்டி தன் நாட்டிற்காகச் செய்த பேருதவியையும் மறந்து இம்மானுவல் ஒரு நன்றியும், தெரிவிக்காமல், தான் அங்கு அமைதி நிலைநாட்டச் செல்வ தாகக் கூறினுன்.

இம்மானுவல் கரிபால்டியை மட்டும் வரவேற்ருன். கரிபால்டியின் படையை வெறுத்தான். இதைக் கேட்ட கரிபால்டியின் படையினர் பொருமி எழுந்தனர். புரட்சி செய்யவும் ஆயத்தமாயினர். "பொருத்திருங்கள்; நான் உங்கள் நன்மைக்கே பாடுபடுவேன்," என்ருன் கரிபால்டி. கடைசியில் அரசன் நிலையை அறிந்து, கரிபால்டியை அவனது படையுடன் நேப்பிள்ஸ் நகரை நோக்கிச் செல்லும்படி ஆணை யிட்டான். அந்நகர மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர்.

நாட்டிற்காகச் செய்த நற்பணிக்காக நாடு தனக்களித்த கடாலாபியீ இளவரசன் என்ற பட்டத்தையும், 5,00,000 பிராங்குகள் கொண்ட பென்ஷன் உதவியையும் உதறித் தள்ளினுன். அவன் வேண்டியதெல்லாம் தன்னுடன் போராடிய 1000 வீரர்கள் கொண்ட படை ஏழ்மையில் உழலக் கூடாது; அவர்களை இந்நாடு மறக்கக்கூடாது.

அவன் அவர்களைவிட்டுப் பிரியும்போது, அப்போர்வீரர்கள் கண் கலங்கினர்; கதறினர்; இவ்வளவு குறுகிய காலத்தில், அளவிற் பெரிய காரியத்தை சாதித்துவிட்டோம் என்று அவர் களுக்கு மறுமொழி கூறினுன்.

தன்னுடைய இரு கண்களும், விழித்திருக்க, தன்னுடைய வீட்டு சன்னல்கள் திறந்திருக்க, அக்கண்கள் பறந்த கடலை உற்று நோக்கியவாறு, தன்னுடைய எழுபத்தி ஐந்தாவது வயதில் இறந்துபட்டான். தனிப்பட்ட பெறும் நோக்கத் திற்காக எவனொருவனும் கரிபால்டியைப் போல் தன்னுடைய வாழ்நாளை வீணடித்திருக்கமாட்டான்.

# 6

## கலோனல் ஆர். ஜி. இங்கர்சால்.

உலக வரலாற்றின் பெரும்பகுதியில் பெருவாரியான சீர் திருத்தவாதிகள் மதத்தலைவர்களின் குழந்தைகளாகவே பிறந் திருக்கிறார்கள். அது ஏன் என்று முடிவாகச் சொல்ல முடிய வில்லை" என்கிறார் வரலாற்றாசிரியர். அந்த வகையில் இங்கர் சாலும் ஒருவர்.

இங்கர்சால் ஐக்கிய அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் டிரெண்டன் என்ற நகரத்தில் 1833ம் ஆண்டு, 11ம் நாள் பிறந் தார். 1862ம் ஆண்டு பிப்ரவரி 13ம் நாள் ஈவாபார்க்கர் என்ற அம்மையாரை மணந்தார்.

சிறுவனாக இருந்தபோது வழியில் போய்க்கொண்டிருந்த போது ஒரு முதியவர் மேல், புளிப்பான பண்டம் ஒன்றை வீசி விட்டார். அந்தக் கிழவர் 'அட! போக்கிரிப் பையலே' என்று திட்டிக் கொண்டே போய்விட்டார். மார்க்ட்வெயின் என்பவர் எழுதிய "ஒரு நல்ல பிள்ளையினுடைய கதை" என்ற நூலைப் படித்த பிறகுதான் துடுக்குத் தனத்தை மாற்றிக் கொண்டான். கல்லூரியில் படித்ததாகவும் தெரிய வில்லை. ஆனால் அளவு கடந்து இவ்வுலகத்தைப் பற்றிப் படித்தான் என்று தெரிகிறது. ஏனெனில் பிற்காலத்தில் இவன் ஓரிடத்தில் குறிப்பிடுகிறான்; "கல்லூரி படிப்பென்பது

கூழாங்கற்களைப் பட்டை தீட்டி மங்கலான வைரம் என்று சொல்வதைப்போன்று இருக்கிறது.'' அப்படிச் சொன்னவன் விடியவிடியப் படிப்பான். அப்போது கல்வி சம்பந்தமாக ஐரோப்பாவிலிருந்த கண்டிப்பு அமெரிக்காவில் இல்லை.

1857ல் தன் சகோதரனோடு சேர்ந்து ஒருவனாக நிறுவனத்தைத் தொடங்கி இருபது ஆண்டுகள் நடத்தினான். இதற்கிடையில் சட்டங்களைப் படித்துக் கொண்டே வந்தான். அங்கே சொலிசிட்டார் வழக்கறிஞர், (solicitor) என்பதற்கும் லாயர் என்பதற்கும் அதிக வேறுபாடில்லை என்பதால் இரண்டிலும் தேர்ச்சி பெற்றான். அதோடு வழக்காடும் திறமையால் விரைவிலே நாட்டுக்கு அறிமுகமாய்விட்ட காரணத்தால், கட்சிகாரர்கள் தங்கள் வழக்குகளை வாதிக்க இவனையே நாடிக் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கினர்.

நினைவாற்றலில் இவனுக்கு மிஞ்சியவர்கள் இல்லை என்று சொல்லலாம். இவன் ஒரு வழக்குக்காக நீதி மன்றத்திலே தோன்றுகிறான் என்றால், எதிர்த்து வழக்காட ஒப்புக்கொண்ட வழக்கறிஞர் கூட இவனை எப்படி வெல்லுவது என்று அஞ்சுவார்கள். வாதங்களைக் கோர்வையாக, நீதிபதிகள் மனதில் பதியுமாறு ஒன்றையும் விட்டுவிடாமல் எடுத்துச் சொல்வதில் நிகரற்ற செல்வாக்கைப் பெற்றிருந்தான். இவனுடைய வாதத் திறமையைக் கண்டு ஜூரிகள் எல்லாம் கூட இவன் பக்கம் பேசுவதைத் தவிர வேறு வழியில்லாமல் மயங்கினார்கள்.

கவர்னர் பதவிக்காகத் தேர்தலில் நின்றான். ''நான் உம்மை எதிர்த்துப் போட்டியிடுவதில்லை'' என்று எந்த நண்பன் வாக்குறுதி தந்திருந்தானோ அவனே இவனுக்குப் போட்டியாக நின்றான். போட்டியிட்டவன் சொன்ன காரணங்கள் தான் வேடிக்கையாக இருந்தன. அவன் சொன்னான், ''நான் இங்கர்சாலை எதிர்க்கவில்லை. அவன் வைத்துக் கொண்டி

---

குறிப்பு: அமெரிக்காவில் கவர்னர்கள் கூட தேர்தலில் நின்று தான் வரவேண்டும்.

ருக்கிற பகுத்தறிவுக் கொள்கையை எதிர்க்கிறேன்" என்றான். தேர்தல் பிரசாரத்தில் கூட இவன் தன் கொள்கையை விட்டுக் கொடுக்கவில்லை. ஆகையாலே தோற்கடிக்கப்பட்டான். தேர்தலில் தோற்ற பிறகு இராணுவத்தில் சேர்ந்து கலோனல் என்ற படையின் ஒரு பிரிவுத் தலைவன் என்ற நிலைக்கு உயர்ந் தான். ஒரு சிறிய படைக்குத் தலைமை வகித்துப் போர் முனைக்குப் போய் பலமுறை போராடி எதிரிகளிடம் சரண டைய வேண்டி வந்தது. இவனுடைய திறமை குறைவுதான் தோல்விக்குக் காரணம் என்று சொல்லி பதவியிலிருந்து நீக்கி விட்டார்கள். பிறகு நேராக ஐரோப்பியாவிற்குப் போய் 1875 முதல் 1878 வரையில் டிக்கன்ஸ், பர்னஸ், ஷேக்ஸ்பியர் இவர்களது நூல்களையெல்லாம் படித்து தன் பேச்சாற்றலை வளர்த்துக்கொண்டு, அங்கிருந்த நெப்போலியன் சிலைக்கு முன்னால் நின்று அந்த மாவீரனின் வெற்றிகளும், இறுதியில் அவன் அடைந்த பரிதாபமான முடிவையும் எண்ணிப்பார்த் தான். அந்தச் சிந்தனை அவன் மனதைச் கலக்கிவிட்டது. அங்கே திராட்சைத் தோட்டச் சொந்தக்காரன் ஒருவன் வீட்டில் தன் குடும்பத்தோடு மனைவி மக்களோடு கவர்ச்சி கரமான வாழ்க்கை நடத்திவந்தான்.

யாராவது ஒருவர் இங்கர்சாலைப் பற்றி நினைப்பார் களானால், அவன் கொள்கைகள் எப்படியிருந்தாலும் நல்ல நண்பர், யோக்கியமானவன், எதிரிகளைப் பேச்சுவன்மையால் திணர அடிப்பவன்; உண்மை, விடுதலை, நேர்மை நீதி ஆகிய வைகளையே வணங்கி வந்தான் என்று சொல்வார்கள். ஒரு நாள் இவருடைய அருமை நண்பனான பீசர் என்பவனுக்கு ஒரு உலக உருண்டையைக் காட்டி, "இதை யார் படைத்தது? கடவுளா படைத்தான்" என்ற பொருளில் கேட்டான், "ஓ! இதை யாரும் செய்யவில்லை; உண்டானது" என்றான் பீசர். சொற்பொழிவாளன் என்ற முறையில் மிக உயர்ந்த வியப் பான இடத்தைப் பெற்றிருந்தான் இங்கர்சால்.

கொட்டும் பனியிலும், பெய்யும் மழையிலும் இவனுடைய சொற்பொழிவைக் கேட்கத்திரளாகக் கூடிவிடுவார்கள்மக்கள்,

அந்தப் பேராற்றல் மிகுந்த பேச்சின் மூலம் இவன் சம்பாதித்த தொகை, அமெரிக்க ஜனாதிபதியின் ஊதியத்தைவிட இரண்டு மடங்கு என்கிறார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே இங்கர்சால் இந்த அரங்கத்தில் பேசப்போகிறான் என்று விளம்பரம் செய்யத் தொடங்கிவிடுவார்கள். அவன் இப்படிப் பேசத் தொடங்கிய இருபத்தியைந்து ஆண்டுகளிலே இருபது சொற்பொழிவுகளில் இவ்வளவு தொகை வந்திருக்கிறது. அவன் எப்போதும் தான் ஈட்டிய பெருந்தொகையைப் பற்றிக் கவலைப்பட்டதேயில்லை. கேட்டவர்களுக்கெல்லாம் உதவி செய்தான். தன் பிள்ளைகள் எவ்வளவு சுதந்திரமாக கட்டுப்பாடில்லாமல் விளையாட முடியுமோ அவ்வளவு சுதந்திரமாக விளையாடவிட்டான். வாழ்வை மிகவும் இன்பமாக நடத்தினான். அவனுடைய கருத்துக்களை படித்தவர்கள், நேராகக் கேட்டவர் மறுப்பு சொல்ல முடியாமல் மௌனமாக இருந்தனர். அவனோடு சொற்போர் புரிவதென்பது அவ்வளவு எளிதல்ல. அவனுடைய ரசிகர்கள் அவனை ஷேக்ஸ்பியருக்குச் சமமாக வைத்துப் பேசினார்கள்,

அவனுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிய எட்வர்ட் கார்டின் ஸ்மித் (Edwar Gardin Smith) என்பவர் இங்கர்சாலை உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றுகிறார். கிருஸ்துவ உலகம் அவனை, மிக அசிங்கமான சீர்திருத்தவாதி, பகுத்தறிவு வாதி, நாத்திகன் என்றுதான் தூரத்திலிருந்து தூற்ற முடிந்ததே தவிர வாதத்தில் நெருங்கமுடியவில்லை.

அவன் எண்ணமெல்லாம், மனித இனம் மடமையில் ஆழ்ந்துவிடாமல் நீதியாக, நேர்மையாக இயற்கையும் விஞ்ஞானமும் நம்கண் முன்னால் நிரூபிக்கக்கூடிய பொருள்களை பற்றியதே அன்றி வேறில்லை என்ற பாணியில் அவன் பேச்சும் எழுத்தும் இருந்தன. யார் துணிந்து முன்வந்து, "இங்கர்சாலை நம்பாதீர்கள். அவன் எல்லோரையும் யோக்கியர்களாக, நல்லவர்களாக, அறிவுள்ளவர்களாக, சிந்தனையோட்டம் உள்ளவர்களாக, நிரூபிக்கக் கூடியதை ஒப்புக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கவேண்டுமென்கிறான். அவற்றை நம்பாதீர்கள். அயோக்

கியர்களாக, கெட்டவர்களாக, சொல்வதையெல்லாம் ஏன், எதற்கு என்று கேட்காத மக்குகளாக இருங்கள் என்று எவன் சொல்வான்.'' ஆகையாலே அவன் தர்க்க வாதத்தை முறியடிக்கக்கூடிய வல்லமை எந்த மன்னனுக்குமே, எந்த மடாலயங்களுக்குமே இருந்ததில்லை.

அவன், வலிப்பு வந்து, ஈளையும் இருமலும் வாட்டி, கை கால்கள் விழுந்து, கண்ணும் தெரியாமல், காதுகளும் கேட்காமல் மோசமான மரணத்தில்தான் போவான் என்று கதவுகளை மூடிக்கொண்டு சபித்தனர் மதகுருக்கள். ஆனால் அவன், உண்மை, பேய் பிசாசுகள், புனித விவிலியம், நாம் காப்பாற்றப் படுவது எப்படி, நன்றி சொல்லும் சடங்கு, கடவுள்கள், எப்படி மனித இனத்தைக் காப்பாற்றுவது, கலையும் பண்பாடும் என்பதைப்பற்றி எல்லாம் பேசித் தீர்த்துவிட்டு, தன் குடும்பத்துக்காக ஒரு சிறிய எஸ்டேட்டை வைத்துவிட்டு ஜூலை 28ம் நாள் 1899ம் ஆண்டு, தன் அறுபத்தி ஆறாவது வயதில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே உயிர் விட்டான்.

## இங்கர்சாலின் சொற்பொழிவு

இராபர்ட் இங்கர்சால் அறிவை நம்பியவன். ஆண்டவனைப் பற்றியும், அவனைப்பற்றி சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கள் பற்றியும், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, மதவாதிகள், அவர்கள் செய்த பிரசாரங்கள், அதற்கு மயங்கி பாமர மக்கள் கொட்டிக்கொடுத்த காணிக்கைகள், இல்லாத ஒன்றை, இருக்க முடியாத ஒன்றை இருந்ததாக, இருப்பதாக, அல்லது உலகில் கடைசி மனிதன் அறிவு தெளிவுபெற்றுத் தன்னைத் தானே அறிகின்றவரையில் என்ன நடந்தது, என்ன நடந்து கொண்டிருக்கின்றன, அதனால் மடாலயங்களிலும், மன்னர் மாளிகைகளிலும் குவிந்த பொருள்கள் எவ்வளவு, அதே நேரத்தில் மக்கள் வறுமையால் வாடி சிந்திய கண்ணீர் எவ்வளவு, தூக்கிலேறிய மக்கள் எவ்வளவு பேர், விசாரணை

இல்லாமலே சிறையில் வாடி செத்தவர்கள் எவ்வளவு பேர். ஒரு ஏழை, மதத்தலைவர்களின் பேச்சை நம்ப இவ்வுலக இன்பங்களிலிருந்து, எவ்வளவு தூரம் ஒதுக்கி வைக்கப்பட்டான் என்பதையும், தைரியமாக முன்வந்து ஆண்டவனை சந்திக்கிழுத்தபோது, எந்த ஆண்டவனாவது அவன் முன்னால் தோன்றி 'என்னை இல்லையென்று சொன்னாயாமே! உனக்கு என்ன தைரியம்' என்று இந்த உலகத்தில் யாரையாவது எப்போதாவது கேட்டிருக்கிறானா. ஆண்டவன் ஒருவருடைய கண்களுக்குத் தெரிவான் என்றால், மற்றவர்கள் முன்னால் வர கூச்சப்படுவானேன். காணாத ஒன்றைப் பயமில்லாமல் நான் காணவில்லை என்று சொன்னவனுக்கு, கடவுளைக் கொண்டு வந்து காட்டுவதுதான் யோக்கியபொறுப்பே தவிர, சிறையின் கதவுகளை திறந்துவிட்டு, கைகளில் விலங்கிட்டு உள்ளே தள்ளுவதுதான் கருணை என்றால், உண்மையான கருணை யாரிடத்தில், கடவுளிடத்திலா, இந்த கன்னியவான்களிடத்திலா என்றெல்லாம் கேட்டு, மதப்புரட்டுகளைத் தன் அறிவு எனும் சம்மட்டியால் அடித்து சுக்குநூறாக உடைத்த இராபர்ட் இங்கர்சாலைப் பற்றியது.

அவன் மூலை முடுக்குகளில் உட்கார்ந்து எந்த மதவாதியின் காதுக்கும் எட்டாமல் சொல்லவில்லை. ஊரறிய சொன்னான்; உலகறிய சொன்னான். மடாலயங்கள், மன்னர் மாளிகையின் சுவர்களில் எதிரொலிக்கச் சொன்னான். அவர்களை எதிரில் உட்கார வைத்துக்கொண்டே சொன்னான். அந்த மதவாதிகளுக்கு இவனுடைய ஆணித்தரமான விவாதத்தை இலவசமாகச் சொல்லவில்லை. பணம் பெற்றுக்கொண்டு சொன்னான். அப்படி வாங்கிய பணம் எவ்வளவு? அமெரிக்க குடியரசுத் தலைவர் வாங்கும் ஊதியத்தைப் போல் இரண்டு பங்கு பணம் சம்பாதித்தார். அவர் இன்ன தீவில், இந்த அரங்கத்தில் பேசப் போகிறார் என்று இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பே அறிவிக்கப்படும். விழுந்தடித்து டிக்கட்டுகளை வாங்கி விடுவார்கள். பேசுவது யார். கடவுள் இல்லை என்பவர். டிக்கட்டுகளை விழுந்தடித்துக் கொண்டு வாங்கியவர்கள் யார்,

கடவுள் உண்டு, மதம் உண்டு என்று சொன்னவர்கள் மக்கள் நாட்டின் பல பகுதிகளிருந்தும் வருவார்கள்.

அவன் பேசிய தலைப்புகள் எவை?

உண்மை, கடவுள், புனித ஆவி பயம், இதிலிருந்து மீள நாம் என்ன செய்யலாம், ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரின் விடுதலை, நன்றி செலுத்தும் நாள், பேய்கள், ஆவிகள், மனித இனத்தை எப்படித் திருத்தலாம், கலையும் ஒழுக்கமும் என்பவை களைப்பற்றியதாகும்.

ஒரு தலைப்பைப்பற்றி மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.

## உண்மை

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனிதன் உண்மையை நாடு வதற்குப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் போதே, அவன் அறிவு வளர்ச்சி அடைந்து வருகிறான். என்று எந்த காலத்தில் இந்த முன்னேற்றம் தோன்றியதோ அன்றே மடமை, பொய், பொறாமை ஆகியவை தோன்றின. மடமையும், மதவாதிகளா லும், மன்னர்களாலும் அவர்கள் சுயநலத்திற்காகப் பிள்ளை கள் படிக்கின்ற காலத்திலேயே தொடங்கிவிட்டார்கள். கல்வி யின் பேரால் தவறுகள் அதிசயங்கள், பொறுக்காததன்மை, பழிவாங்கும் உணர்ச்சி, சொல்வதைக் கேட்கவேண்டுமே தவிர, தானாக சிந்தித்து ஒருமுடிவுக்குவருவதோ, அதை வெளி யிடுவதோ, அதை வைத்து தர்க்கம் செய்வதோ, ஆண்டவன் ஆசி பெற்றதாலே அவர்கள் உயர்ந்தவர்கள், அது இல்லாத தாலே நாம் தாழ்ந்தவர்கள் என்று பள்ளியில் கற்பிக்கப் படுகிறான்.

நாம் உண்மையைக் கண்டுபிடிப்பதைவிட சிறந்தது ஒன்று மில்லை. உண்மைதான் உலகத்தின் சொத்து. உண்மைதான் நிலைத்துநிற்கும். உலக இலக்கியங்களை அவன் தெரிந்துகொள் வதற்கு அறிவின் கதவுகளைத் திறந்துவிட வேண்டும். மகா இலக்கியமானதாகவோ, எல்லாரும் படிக்கக்கூடாத

ஒன்ருகவோ எதையும் மறைத்து வைக்கக் கூடாது. எவன் மறு உலகத்தை காட்டுகிறேன் என்று தட்சணை என்ற பெயரால் லஞ்சம் வாங்குகின்ருனே, அவன் மனித இனத்தின் கொடிய பகைவன். ஒவ்வொரு மனிதனும் தன் சிந்தனையை ஆய்வுக் கூடமாக்கிக் கொள்ளவேண்டும்.

இறந்துவிட்டவர்கள் சொன்ஞர்கள் என்பதற்காக நம்புவதோ, இருக்கிறவர்கள் சொல்கிருர்கள் என்பதற்காக மறுப்பதோ இல்லாமல், உண்மையை நாடுங்கள். மனித இனத்தின் ஒவ்வொரு பகுதியும் உண்மையை நாடிச் செல்கின்றன. உதாரணமாக அரசியல்வாதி வரலாற்றைப் படிக்கிருன், பல நாடுகளின் அமைப்பை சேகரிக்கிருன். மண்வள ஆராய்ச்சியாளன் மண்ணைத் தோண்டி, பாறைகளை உடைத்து உள்ளே என்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கிருன். கடலில் போகிருன் பலவிடங்களைச் சோதிக்கிருன். உண்மையைக் கண்டு பிடிக்கிருன். விஞ்ஞானி பல ஆராய்ச்சிகள் செய்து புதிய பொருளின் உண்மையைக் கண்டுபிடிக்கிருன். மருத்துவன் பல பொருள்களை மோதவிட்டு அதிலிருந்து என்ன மருந்து என்று கண்டுபிடிக்கிருன். இறுதியில் ஒரு உண்மையைக் கண்டுபிடித்துப் பலரறிய உலகுக்கு அறிவிக்கிருன். மெகானிக்குகள் யந்திரங்களின் தன்மையைக் கண்டுபிடிக்கிருர்கள். பல பொருள்களின் இயக்கங்கள் மூலம் ஒரு யந்திரத்தையே கண்டுபிடித்து உலக நன்மைக்கு வழங்குகிருன். அவர்கள் எல்லாம் இறந்தவர்கள் சொன்னதையோ, இருப்பவர்கள் 'ஆம்' என்று சாதிப்பதையோ நம்பவில்லை. அவர்கள் அறிவை, திறமையை, முயற்சியை நம்பிஞர்கள். உண்மையைக் கண்டுபிடித்தார்கள். யார் இவற்றையெல்லாம் பொய்யென்று சாதிக்கிருர்களோ, அவர்கள் மனித இனத்தில் விரோதிகள், சிந்திக்கத் தடுப்பவர்கள், அயோக்கியர்கள். எந்த மனிதனின் முயற்சி, யாரால் இந்த உலகம் ஒளிபெற்றது என்பதை ஒப்புக்கொண்டு, அந்த ஒளியிலேயே நின்று கொண்டு இதுவெல்லாம் பொய் என்ருல் எப்படி ஒப்புக் கொள்வது.

மதவாதிகளால் எது புனிதமானது என்று நம்மேல் சுமத்தப்பட்டதோ அது புனிதமானதல்ல. இப்படி ஒப்புக் கொள்ளாதவர்களை மடாலயமும், மாளிகையும் சும்மா விட்டதா. அப்படிச் சொன்னவர்கள் வாய் சீலிடப்பட்டது. அவர்கள் உலகுக்குக் காட்டிய ஜோதியை அவர்கள் இரத்தத் தாலேயே அணைக்கப்பட்டு விட்டது. நமக்கேன் இந்தத் தொல்லை என்று சில சிந்தனையாளர் பயந்து போனார்கள். சிலர் தண்டனை கிடைத்தாலும் பரவாயில்லை என்று துணிந்து சொன்னார்கள். அவர்கள் அடைந்த கதியென்ன?

உண்மையைத் துணிந்துசொன்ன சாக்ரடீஸ் முடிவென்ன? ஜான் ஹெஸ் கதி என்ன? புரோனிவின் பரிதாப முடிவென்ன? சவனரோயாவின் முடிவென்ன? ஏன் இயேசுவின் கதி என்ன? சிலுவையில் அறைந்து அவர் இரத்தத்தை ஆண்டவனுக்கு கொடுத்தாலன்றி, ஆண்டவன் கோபம் தணியாது என்பதுதானே அவர்கள் வாதம். இயேசுவின் இரத்தம் மாத்திரமா, எத்தனை பேர் இரத்தத்தை குடித்திருக் கிறார் ஆண்டவர், இன்னும் அவர் தாகம் தீரவில்லை.

உண்மை ஆராய்ச்சி செய்யச் சொல்கிறது. யோக்கியனாக யிருக்கச் சொல்கிறது. ஏன் நாம் ஆராயவேண்டும். யோக் கியனாயிருக்க வேண்டும். ஏன் இவற்றையெல்லாம் ஊருக்குச் சொல்லவேண்டும். உலக நன்மைக்காக. நோய் வருவது எதனால்? மனிதன் கண்டுபிடித்தான். அதை குணப்படுத்துவது எப்படி, மனிதன் கண்டுபிடித்தான். வேகமாக பயணம் செய்வது எப்படி? மனிதன் கண்டுபிடித்தான். நீராவியின் வேகமென்ன? மனிதன் கண்டுபிடித்தான். ஒளி, ஒளிக்கதிர் களின் தன்மை, பயன் என்ன? மனிதன் கண்டு பிடித்தான். இவற்றில் ஒன்றுமே கண்டுபிடிக்காமல் பரலோகத்தில் சிங்கா தனத்தில் வீற்றிருக்கும் கடவுள்களைக் கீழே தள்ளுங்கள். அந்த சிங்காதனங்களை உடைத்தெறியுங்கள். அங்கே ஒரு குண்டம் எரிந்துகொண்டிருக்கிறது என்கிறார்களே, அதை அணையுங்கள். பக்தியுள்ள பிச்சைக்காரர்கள் யோக்கியர்களாக பிழைக்க வழி தெரிந்தவர்களாக மாறட்டும். நம்முடைய விலையுயர்ந்த

உயிரை மூடத்தனத்திற்கும் முட்டாள்தனத்திற்கும் பலியிட வேண்டாம்.

அவர்கள் சொல்வதெல்லாம் பயத்தைப் படியுங்கள். படியுங்கள்; இல்லையானால் நாசமாக்கப்படுவீர்கள்; சொல்வதை நம்புங்கள்; அப்போதுதான் உங்களுக்கு அருள் கிடைக்கும். இல்லையானால் நாசந்தான். ஒரு நீதிபதியை சரியான தீர்ப்பு சொல்லாமலிருக்கவும், குற்றவாளியை விடுவிக்கவும் லஞ்சம் வாங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். இருக்கின்ற சாட்சிகள் வாக்குமூலப்படி நீதி வழங்குவாரே தவிர, லஞ்சம் வாங்கிக்கொண்டு முறை தவறி நீதி வழங்க முடியுமா. அப்போது சாட்சிகள்தான் நம் கண்களுக்கு தெரியுமே தவிர அவர் வாங்கிய லஞ்சம் கண்களுக்குத் தெரியுமா?

ஒருவேளை நான் பூமியின் மத்தியிலே நூறு மைல் சுற்றளவுக்குக் கீழே வைரம் இருக்கிறது, அதற்காக எனக்கு பத்தாயிரம் டாலர் கொடுங்கள் என்று கேட்டால் யார் தருவார்கள். யோக்கியமானவர்கள் இனும் கேட்க மாட்டார்கள். காரணம் கேட்பார்கள்.

சமய சித்தாந்தம் (Theology) என்பதே ஒரு அயோக்கியத் தனமான விஞ்ஞானம்.

முடிவாக நாம் யோக்கியர்களாய் இருப்போம். நாம் எண்ணத்தின் வேகத்தை உணர்வோம். கல்வி, குழந்தையின் தொட்டிலிலிருந்து தொடரட்டும்; தாயின் மடியிலிருந்து தொடங்கட்டும். ஆசிரியரும் தாயும் நல்லவர்களாக இருக்கட்டும். ஒவ்வொரு குழந்தையும் சந்தேகத்தைக் கேட்கட்டும். ஆராயட்டும்; காரணங்களைக் கேட்கட்டும்; கல்வியின் நோக்கமே ஐயப்பாடுகளை முன் வைக்கட்டும்; அவர்கள் மூளை வளர்வதற்கான உதவியை கல்வி செய்யட்டும்; எதுவுமே பரிசுத்தமானதல்ல; போற்றத்தகுந்ததல்ல; அறிவுக்கு எட்டாத எதுவுமே ஒப்புக்கொள்ளத் தேவையில்லை.

இயற்கையின் கதவுகள் எல்லோருக்கும் திறந்திருக்கின்றன. சிந்தியுங்கள்.

முற்றும்